294.5535 - [illegible]

[illegible]

[illegible]


469 - 514

147662

ஸ்ரீ

ஸ்ரீ லக்ஷ்மீ வெங்கடேசாய

OFFICE OF THE REGISTRAR OF
14 MAY 1915



ஸ்ரீ

# திருப்பதி பக்தவிஜயம்.

இஃது

ஸ்ரீ ப்ருஹத் வாசிஷ்டபீட சித்தாந்த நிர்த்தாரண
பரம்பராசாரிய ஸ்ரீமத் சுப்பயார்ய சரணாரவிந்த
பிபன்மத்த மனோ ப்ருங்கராகிய

**ஸ்ரீ அரங்கப்பிரகாச சுவாமிகளால்**

இயற்றப்பட்டு,

சென்னை - செந்தமிழ் கழகத்தின் ஸ்தாபகரும்,
தென்மொழியின் விசேடன உபந்யாசகருமாகிய
புது நகர் - வீ. ஆர். கேய்க்வாட் அவர்களால்
பரிசோதிக்கப்பட்டது.

147662

(Second Edition.)

**Madras:**
PRINTED BY GRAVES, COOKSON AND CO.,
1915.

*Registered under the Indian Copyright Act XXV of 1867 and secured under Act III of 1914.*

விலை **0-12-0.**

சென்னை-600 008
147862

ஸ்ரீ

# திருப்பதி பக்தவிஜயம்.

ஸ்ரீமத் ஹத்திராம்பாவாஜீ மட பரம்பராக்தரும், ஸ்ரீ மஹந்து ராம்கிசோர்தாஸ் அவர்கள் சிஷ்ரத்தினமும் ஸ்ரீ மஹந்து ப்ரதிநிதியும், ஸ்ரீ திருப்பதி ஸ்ரீ வெங்கடேசபெருமாள் தேவஸ்தானத்திற்கு அதிகாரியுமான

**ஸ்ரீ ஜீத் ராமலக்மன தாஸ் பாவாஜிசுவாமிகள்.**

உங்கள் புத்தகம் வெகு நன்றாய் இருக்கின்றது! நான் அதை முழுதும் வாசித்துப்பார்த்து மிகுந்த மனக்களிப்படைந்தேன். இதனால் நீர் ஸ்ரீ வெங்கடேஸபெருமாளுக்கு அளவற்ற ப்ரீதியை உண்டாக்கிவிட்டீர்.

15—4—1915.

## சுதேசமித்திரன்.

ப்ருஹுத் வாஸிஷ்ட பீட பரம்பராகத ஸ்ரீ அரங்கப்பிரகாஸ சுவாமிகளால் தெலுங்கு பாஷையில் இயற்றப்பட்டுள்ள திருப்பதி பக்தவிஜயத்தின் தமிழ் மொழிபெயர்ப்புவரப் பெற்றோம். திருப்பதி க்ஷேத்திரத்தின் மகிமை தேசமெங்கும் பரவியுள்ளதாகையால், ஸ்ரீ வெங்கடேசப்பெருமானிடத் தன்பூண்டு பக்திசெய்தவர்களின் கதைகள் யாவராலும் விரும்பிப் படிக்கத்தக்கன. திருப்பதி சம்பந்தமாக எண்ணற்ற கதைகள் கர்ண பரம்பரையாக வழங்கினும், எந்த பக்தர்களிருந்ததைப் பற்றித் திருப்பதியைச் சூழ்ந்த பிரதேசத்தில் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றனவோ அவர்களுடைய சரித்திரங்களே இந்த நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பக்தி ததும்ப எழுதப்பட்டிருப்பது பாராட்டற்பாலது.

28—3—1914.

# ஸ்ரீ வேங்கடேஸ்வர அஷ்டோத்தர சதநாமாவளி.

ஓம் ஸ்ரீ வேங்கடேசாயநம:
ஓம் ஸேஷாத்ரி நிலயாயநம:
ஓம் விருஷத்ருக்கோசராயநம:
ஓம் விஷ்ணவேவேங்கடேசாயநம:
ஓம் சதஞ்ஜனகிரீசாயநம:
ஓம் விருஷபாத்ரிபதயேநம:
ஓம் மேருபுத்ரகிரீசாயநம:
ஓம் ஸரஸ்வாமிதடீசுஷேநம:
ஓம் குமாராகல்பசேவ்யாயநம:
ஓம் வஜ்ரித்ருக்விஷயாயநம:
ஓம் சுவர்சலாஸுதன்யஸ்த ஸேனாபத்யபராயநம:
ஓம் ராமாயநம:
ஓம் பத்மநாபாயநம:
ஓம் சதாவாயுஸ்துதாயநம:
ஓம் த்யக்தவைகுண்டலோகாயநம:
ஓம் கிரிகுஞ்ஜ விஹாரிணேநம:
ஓம் ஹரிசந்தனகோத்ரேந்த்ர ஸ்வாமிநேநம:
ஓம் ஷங்கராஜன்யநேத்ராப்ஜ விஷயாயநம:
ஓம் வஸுபரிசரத்ராத்ரேநம:
ஓம் கிருஷ்ணாயநம:
ஓம் அப்திகன்யாபரிஷ்வக்தவக்ஷஸேநம:
ஓம் வேங்கடாயநம:
ஓம் ஜனகாதிமஹாயோகிபூஜிதாயநம:
ஓம் தேவஜித்பிரமுகானந்த தைத்ய சங்கப்ராணாசினேநம:
ஓம் சுவேதத்வீபவசன்முக்தபூஜிதாங்க்ரியுகாயநம:
ஓம் ஸேஷபர்வதரூபத்வப்ரகாசனபராயநம:
ஓம் ஸானுஸ்தாபிததார்க்ஷ்யாயநம:
ஓம் தார்க்ஷ்யாசல நிவாஸினேநம:
ஓம் மாயாகூடவிமானாயநம:
ஓம் கருடஸ்கந்தவாஸிநேநம:
ஓம் அனந்தசரணாயநம:
ஓம் அனந்த ஸிரஸேநம:
ஓம் அனந்தாக்ஷாயநம:
ஓம் அனந்தசரணாயநம:
ஓம் ஸ்ரீசைலநிலயாயநம:
ஓம் தாமோதராயநம:
ஓம் நீலமேகநிபாயநம:
ஓம் ப்ரம்மாதிதேவ துர்தர்ஷ விஸ்வரூபாயநம:



ஓம் வைகுண்டாகத சத்ஹேம விமானாந்தர்கதாயநம:
ஓம் அகஸ்த்யாப்யர்சிதாஸேஷஜனத்ருக்கோசராயநம:
ஓம் வாசுதேவாயநம:
ஓம் ஹரயேநம:
ஓம் தீர்த்தபஞ்சகவாஸிநேநம:
ஓம் வாமதேவப்ரியாயநம:
ஓம் ஜனகேஷ்டப்ரதாயநம:
ஓம் மார்க்கண்டேயமஹாதீர்த்தஜாத புண்யப்ரதாயநம:
ஓம் வாக்பதி ப்ரம்மதாத்ரேநம:
ஓம் சந்த்ரலாவண்ய தாயினேநம:
ஓம் நாராயண நகேசாயநம:
ஓம் ப்ரம்மக்லுப்தோத்ஸவாயநம:
ஓம் சங்குசக்ரவரானம்ர லஸத்கரதலாயநம:
ஓம் த்ரவன்ம்ருக மதாஸக்த விக்ரஹாயநம:
ஓம் கேஸவாயநம:
ஓம் நித்யயவ்வனமூர்த்தயேநம:
ஓம் அர்திதார்த்தப்ரதாத்ரேநம:
ஓம் விஸ்வதீர்த்தாகஹாரிணேநம:
ஓம் தீர்தசுவாமிஸரஸ்ஸ்நாத ஜனாபீஷ்டப்ரதாயினேநம:
ஓம் குமாரதாரிகாவாஸஸ்கந்தாபீஷ்டப்ரதாயினேநம:
ஓம் ஜானுதக்ன ஸமுத்பூத போத்ரிணேநம:
ஓம் கூர்மமூர்த்தயேநம:
ஓம் கின்னரத்வந்த்வ ஷாபாந்தப்ரதாத்ரேநம:
ஓம் விபவேநம:
ஓம் வைகானஸ முனிஸ்ரேஷ்டபூஜிதாயநம:
ஓம் ஸிம்மாசலநிவாசாயநம:
ஓம் ஸ்ரீமந்நாராயணாயநம:
ஓம் சத்பக்தநீலகண்டார்ச்யாயநம:
ஓம் ந்ருஸிம்ஹாயநம:
ஓம் குமுதாக்ஷகணஸ்ரேஷ்டசேனாபத்யப்ரதாயநம:
ஓம் துர்மேதப்ராணஹர்த்ரேநம:
ஓம் ஸ்ரீதராயநம:
ஓம் க்ஷத்ரியாந்தகராமாயநம:
ஓம் மத்ஸ்யரூபாயநம:
ஓம் பாண்டவாரி ப்ரஹர்த்ரேநம:
ஓம் ஸ்ரீகராயநம:
ஓம் உபத்யகாப்ரதேஷஸ்த ஷங்கரத்யாதமூர்த்தயேநம:
ஓம் ருக்மாப்ஜஸரஸீகூல லக்ஷ்மீக்ருததபஸ்விநேநம:
ஓம் லஸல்லக்ஷ்மீகராம்போஜதத்த கல்ஹாரகஸ்ரஜேநம:
ஓம் ஸாலக்ராமநிவாசாயநம:

ஓம் ஷட்கத்ருக்கோசராயநம:
ஓம் நாராயணார்சிதாசேஷஜனத்ருக்விஷயாயநம:
ஓம் ம்ருகயா ரசிகாயநம:
ஓம் விருஷபாசுரஹாரிணேநம:
ஓம் அன்ஜனாகோத்ரபதயேநம:
ஓம் விருஷபாசலவாஸினேநம:
ஓம் அன்ஜனாசுததாத்ரேநம:
ஓம் மாதவீயாகஹாரிணேநம:
ஓம் ப்ரியங்கூப்ரியபக்ஷாயநம:
ஓம் ச்வேதகோலவராயநம:
ஓம் நீலதேனுபயோதாரா ஸேகதேஹோத்பவாயநம:
ஓம் சங்கரப்ரியமித்ராயநம:
ஓம் சோளபுத்ரப்ரியாயநம:
ஓம் சுதர்மிணி சுசைதன்ய ப்ரதாத்ரேநம:
ஓம் மதுகாதினேநம:
ஓம் க்ருஷ்ணாக்ய விப்ர வேதாந்த தேஷிகத்வப்ரதாயநம:
ஓம் வரஹாசலநாதாயநம:
ஓம் பலபத்ராயநம:
ஓம் த்ரிவிக்ரமாயநம:
ஓம் மஹதேநம:
ஓம் ஹ்ருஷீகேசாயநம:
ஓம் அச்யுதாயநம:
ஓம் நீலாத்ரிநிலயாயநம:
ஓம் க்ஷீராப்திநாதாயநம:
ஓம் வைகுண்டாசலவாசினேநம:
ஓம் முகுந்தாயநம:
ஓம் அனந்தாயநம:
ஓம் விரின்ச்யாப்யர்திதாநீத ஸௌம்யரூபாயநம:
ஓம் சுவர்ண முகரீஸ்நாத மனுஜாபீஷ்டதாயினேநம:
ஓம் ஹலாயுத ஜகத்தீர்த்தஸமஸ்தபலதாயினேநம:
ஓம் கோவிந்தாயநம:
ஓம் ஸ்ரீநிவாசாயநம:
ஓம் ஸ்ரீ வேங்கடேசாயநம:.



## திருவேங்கடம்.

### குலசேகரப்பெருமான் அருளிய பெருமாள் திருமொழி.

1. ஊனேறுசெல்வத்துடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றானடிமைத்திறமல்லால்
கூனேறுசங்கமிடத்தான் றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே.

2. ஆனாதசெல்வத்தரம்பையர்கள்தற்சூழ
வானாளுஞ்செல்வமுமண்ணரசும்யான்வேண்டேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே.

3. பின்னிட்டசடையானும்பிரமனுமிந்திரனும்
துன்னிட்டுப்புகலரியவைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழிவேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டில்பிடித்துடனேபுகப்பெறுவேனாவேனே.

4. ஒண்பவளவேலையுலவுதண்பாற்கடலுள்
கண்டுயிலுமாயோன்கழலிணைகள்காண்பதற்கும்
பண்பகரும்வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந்திருவுடையேனாவேனே.

5. கம்பமதயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமுமிவ்வரசுமியான்வேண்டேன்
எம்பெருமானீசனெழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்குந்தவமுடையேனாவேனே.

6. மின்னனைய நுண்ணிடையாருருப்பசியுமேனகையும்
அன்னவர்தம்பாடலொடுமாடலவையாதரியேன்
தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடாமருந்தவத்தனாவேனே.

7. வானாளுமாமதிபோல்வெண்குடைக்கீழ்மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்துகொண்டாடுஞ்செல்வறியேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயுங்கருத்துடையேனாவேனே.

8. பிறையேறுசடையானும்பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக்குறைமுடிப்பான்மறையானான்
வெறியார்தண்சோலைத்திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்குநிலையுடையேனாவேனே.

9. செடியாயவல்வினைகள்தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவாநின்கோயிலின்வாசல்

அடியாரும்வானவருமரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன்பவளவாய்க்காண்பேனே.

10. உம்பருலகாண்டொருகுடைக்கீழுருப்பசிதன்
அம்பொற்கலையல்குல்பெற்றுலுமாதரியேன்
செம்பவளவாயான்திருவேங்கடமென்னு
மெம்பெருமான்பொன்மலைமேலேதேனுமாவேனே.


11. மன்னியதண்சாரல்வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள்காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேற்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்தமிழ்வல்லார்பாங்காயபத்தர்களே.

## பொருளடக்கம்

| | பக்கம். |
|---|---|
| சராசரங்களின் உற்பத்தி. ... ... ... ... | 1 |
| ஜீவர்கள் பரப்பிரம்ம நிலையிலிருந்து தப்பிப்போதல் ... | 2 |
| ஜீவர்கள் ஈசுவரனைத் தேடுதல் ... ... ... | ,, |
| பரப்பிரம்மத்தை மறுபடியும் அடையும் உபாயம் ... ... | ,, |
| பரப்பிரம்மத்தின் தசாவதார அவிர்ப்பாவம் ... ... | 3 |
| பரப்பிரம்மத்தைப் பார்க்கிலும் ஜீவர்களுக்கு வேறுகதியில்லை .. | ,, |
| எல்லா நாமத்தாலும் ஈஸ்வரன் ஒருவனே கூறப்படுகிறான் ... | ,, |
| ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திவ்விய அவதாரம் ... ... | 4 |
| ஹத்திராம் பாவாஜீ சரித்திரம் ... ... ... | 4 |
| ஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பாள் சரித்திரம் ... ... | 16 |
| கிருஷ்ணய்யன் சரித்திரம் ... ... ... ... | 29 |
| சக்கிலி சுவாமிகள் சரித்திரம் ... ... ... ... | 36 |
| சென்னை தாஸர் சரித்திரம் ... ... ... ... | 45 |
| வெங்கடப்தி சுபேதார் சரித்திரம் ... ... ... | 50 |
| ஸ்ரீ திருப்பதி மங்கம்மாள் சரித்திரம் ... ... ... | 55 |
| நரஹரிதாஸ் சரித்திரம் ... ... ... ... | 61 |
| சிபாய் லக்ஷ்மணதாஸர் சரித்திரம் ... ... ... | 74 |
| மிலேச்ச தாஸர் சரித்திரம் ... ... ... ... | 92 |
| மஹாராஜா வெங்கடதேவராயர் சரித்திரம் ... ... | 102 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1915
MADRAS

ஸ்ரீ



# ஸ்ரீ திருப்பதி பக்தவிஜயம்.

## ஸ்தோத்திரம்.

வந்தேவேங்கட ஸயிலவாஸமனிசம் வந்தேஜெகந்நாயகம்
வந்தேகுண்டல மண்டிதம்ஹரபிரியம் வந்தேகிருபாஸாகரம்
வந்தேதீனதயாநிதிம் பவஹரம் வந்தேகதாதாரிணம்
வந்தேஹம் ஸதபத்ரஜாதஜனகம் வந்தேசதாமாதரம்.

ஸ்ரீ வைகுண்டத்தில் லக்ஷ்மி சமேதராய் ஆதிசேஷனுடைய ஆயிரம் சிரங்களென்னும் மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்ட சகஸ்திரார பிரபையின்பேரில் சயனித்திருக்கும் ஆதிமூல பரபிரம்மமான ஸ்ரீமந் நாராயணன் திருநாபிக் கமலத்தில் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மா பிறந்து சகல சராசரங்களையும் உண்டாக்கினார். விதைக்குள் அடங்கியிருக்கும் மகாவிருக்ஷத்தைப்போலும், தாய் கர்ப்பத்திலிருக்கும் சிசுவைப்போலும், ஜெகதீஸனுடைய கர்ப்பத்திலிருந்த நாமெல்லோரும் சிருஷ்டியினால் வெளிப்பட்டவர்களானோம். சச்சிதானந்த நித்திய நிர்மலமான பரப்பிரம்மத்தில் இருந்தபரியந்தம் நாமெல்லோரும் யாதொரு பயமில்லாமல் நித்தியானந்தர்களாய் இருந்தோம். சிருஷ்டிமாயையினால் வெளிப்பட்டவர்களாயும் நாம் அந்த பரப்பிரம்ம ஞானமிருதத்திலேயே தூக்கத்திலிருந்து எழுந்ததைப்போல் நின்றிருந்தோம். ஆனால், சில காலத்திற்கு அந்தநிலையிலிருந்து தவறிப்போனவர்கள் அவாள்காரியங்களைப் பற்றி க்ஷத்திரியர்களென்றும், வைஸியர்களென்றும், ஸூத்திரர்களென்றும் வர்ணாஸ்ரமதர்ம ஆசாரங்களை அடைந்தார்கள். ஆனால் சிருஷ்டிமாயைக் குட்படாமல் பரப்பிரம்ம நிலையில் அசையாமல் நின்றவர்கள் பிராம்மணர்களென்று பெயருள்ளவர்களாய் மறுபடியும் அந்த பரப்பிரம்மத்தில் பிரவேசித்தார்கள்.

இப்படியிருக்க, மற்றவர்கள் தேவதேவனை மறந்து அவரை விட்டு தூரமாய் ஓடிப்போனதைப்போல் விஷய சுகதுக்க ஜாலங்களில் அகப்பட்டு புத்திர மித்திர களத்திர தாஸ ஜனங்களையும், பொன் பொருள் மண்முதலிய பிரபஞ்சவஸ்துக்களையும் நமது என்று ஆசித்திருக்க பழக்கமுள்ளவர்களாய் கர்மானுசாரத்தினால் அனந்த கோடி ஜன்மங்கள் எடுத்து உலாவுவதற்குப் பழக்கமுள்ளவர்களானார்கள். இப்படியாகிலும் தாங்கள் பூர்வத்திலிருந்த நித்தியானந்தத்தைத் தேடிக்கொண்டே பிரபஞ்ச விஷயங்களில் பொருள்களைச் சேர்த்தும், புத்திரகளத்திரங்களை அன்பு கூர்ந்தும், கீர்த்தியும் கிரீடமும் அனந்த கஷ்டத்தினால் சம்பாதித்தும் அந்த பிரம்மானந்தத்தைக் காணாமல் அலைகிறார்கள். முன் அற்பசுகங்களைக் காட்டி பிறகு மலைகளைப்போன்ற பெருந்துக்கங்களை விளைவிக்கும் பிரபஞ்ச விஷயங்களில் பரப்பிரம்ம நித்தியானந்த சுகத்தை பிரமையினால் ஜீவர்கள் தேடுகிறார்கள். பசுவைவிட்டு நீங்கி வழிதெரியாமல் காடு மேடுகளைச்சுற்றி அலைந்துகொண்டிருக்கும் கன்றைப்போல், தாம் பூர்வத்தில் நின்றிருந்த பரபிரம்ம நித்தியானந்தத்தை மறுபடியும் அடைய முடியாமல் ஜீவகோடிகள் விஷயாதிகளில் அலைகிறார்கள். ஆனால், எவ்வளவு ஞான சூனியமான ஜீவர்களுக்கும் பரப்பிரம்ம நித்தியானந்தத்தைத் தேடுகிற ஸ்வபாவம் ஒன்று மாத்திரம் ஸ்திரமாய் இருக்கிறது.

ஆ! ஹா!! இப்படி திரிந்துகொண்டிருக்கும் ஜீவகோடிகள் மறுபடியும் சர்வேஸ்வரனுடைய பாதகமலங்களை யடைவது எப்படி? யாராகிலும் அந்த பரப்பிரம்மானந்தத்தை மறுபடியும் அடைந்தவர்களுண்டா? கிரீடத்தை தரித்தபோது அரசனென்றும் அது இல்லாதபோது ஸாமன்யனென்கிறதைப்போல் பிரபஞ்ச விஷயங்களை நாடினபோது மாயை ஜீவனென்றும், பரமேஸ்வரனை சரணமடைந்து அவர் தியானாசக்தனானபோது நித்தியானந்தனென்றும் சொல்லப்படுவார். ஆகையால் பூர்வத்தில் நாமிருந்த நித்யானந்தத்தை அடைவதற்கு மறுபடியும் பரப்பிரம்மத்தைநாடி தேடுவதே வழியாய் இருக்கின்றது.

சுலோகம்.

"சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் விரஜ
அஹம்த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷ இஷ்யாமிமாசுசஹ"



சமஸ்த கர்மங்களைவிட்டு என்னை ஒருவனையே ஸரணம் அடைவாய். இப்படி நிக்ஷயமுள்ள உன்னை நான் சமஸ்த பந்தங்களிலிருந்து விடுதலைசெய்வேன் என்கிற பகவத்வாக்கியப் பிரகாரம் சகல சிந்தனைகளையும்விட்டு சர்வேஸ்வரனுடைய திருவடிகளில் சரணமடைந்து அன்னியத்தை எண்ணாமல் அவர் தியானத்தில் நின்றிருப்பதே யவரை மறுபடியும் அடைவதற்கு உபாயம்.

மந்தையிலிருந்து தவறி காடுகளில் திரிந்துகொண்டிருக்கும் ஆடுகளை இடையன் தேடிக்கொண்டுபோய் மறுபடியும் அதை மந்தையில் சேர்த்துக்கொண்டதைப்போல், கருணைக்கடலாகிய கடவுள் தன்னைவிட்டுப் பிரிந்து மாயையில் குருடரைப்போல் உலாவிக்கொண்டிருக்கும் ஜீவர்களை மறுபடியும் தனக்குள் சேர்த்துக்கொள்வதற்கு ஸச்சிதானந்த சித்பிரகாஸ வைபவங்களோடு தசாவதாரங்களை எடுத்தார். அவர் லீலாவதார வைபவங்களைப் பார்த்து வலையில் அகப்பட்ட மச்சங்களைப்போல் அவர் அருளுக்காளாய் அனேக கோடி ரிஷிகளும், முனிகளும், தேவர்களும், மனிதர்களும், பக்தர்களும், பசு பக்ஷிகளுங்கூட மறுபடியும் பூர்வ நிலையை யடைந்து பரப்பிரம்மானந்தத்தைச் சேர்ந்திருக்கின்றார்கள். அப்படி சேர்ந்த மகான்கள் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும் அதிகமாய் இருக்கிறார்கள். அவ்விதமாகவே நாமெல்லோரும் சர்வேஸ்வரனை சரணமடைந்து, விஷய மாயைகளை மறந்து, அவரைத் தியானித்து மறுபடியும் அவர் நித்தியானந்த கர்ப்பத்தில் பிரவேசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அப்படி செய்யாமற்போனால் ஜனன மரணமென்னும் அளவற்ற மகாகடலை தாண்டிப்போவதற்கு வேறு வழியில்லை. நமக்கு திக்கும், கதியும், ரக்ஷகரும், அபயமும் உபாயமும் இல்லை.

சுலோகம்.

"நாராயணாச்சிவோவிஷ்ணு சங்கரஃ புருஷோத்தமஃ
ஏதேஷு நாமபிர்பிரம்மா பரம்புரோக்தம் சனாதனம்"

நாராயணன், சிவன், விஷ்ணு, சங்கரன், புருஷோத்தமன் என்கிற இந்த நாமங்களில் எந்த நாமத்தினாலும் சாசுவத பரப்பிரம்மம் ஒன்றே சொல்லப்படுகிறது.

கடல் ஜலம் ஒன்றே ஏரிகளாகவும், ஆறுகளாகவும், குளங்களாகவுமாயினதைபோல் பரப்பிரம்மம் ஒன்றே பாண்டுரங்கனென்றும்,

ரங்கநாதனென்றும், ஈஸ்வரனென்றும் உலகத்தில் பல விடங்களில் எழுந்தருளினார். ஸ்ரீ வெங்கடாசல மென்னும் திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில் அவதரித்திருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் எல்லா யுகங்களைப்பார்க்கிலும் மாயையில் மேலிட்ட கலியுகத்தில் பாவங்களைப் போக்கி பக்தகோடிகளை ரக்ஷிப்பதற்காக பரிபூர்ண வைபவ பிரகாஸத்தோடு கரத்தில் அபயக்குறிப்பைத் தரித்து எழுந்தருளினார். அவர் திருபொற்பாதங்களில் அசைவற்ற பக்தியை நிறுத்தி இந்த பிரபஞ்ச துக்க மகாகடலை தாண்டிப்போன பக்தசிரோமணிகள் ஆற்றின் மணல்களைப்பார்கிலும் அதிகமாயிருக்கிறார்கள். அந்த மகான்கள் சரித்திரங்களில் சிலதை இங்ஙனம் பக்தகோடிகளுக்கு ஆனந்தத்தை யுண்டாக்கும்பொருட்டு சொல்லப்படுகின்றன.

## ஹத்திராம் பாவாஜி சரித்திரம்.

ஸ்ரீ பரத மகாகண்டத்துக்கு வடக்கில் காஸி மகா க்ஷேத்திரம் முமுக்ஷுக்களுக்கு சகல காமியங்களைகொடுத்து சிறப்பாய் இருக்கையில் தெற்கில் வெங்கடாசல மென்னும் திருப்பதி க்ஷேத்திரம் தர்மார்த்த காமமோக்ஷமெனும் சதுர்வித புருஷார்த்தங்களைக்கொடுக்க கூடியதாய் பக்த ஜனங்களாலும், யோகிகளாலும், ஞானிகளாலும், அஷ்டாங்க யோக நிஷ்டைகளில் சமர்த்தர்களாலும், முனிகளாலும், ரிஷிகளாலும், அணிமாதி சித்தர்களாலும் சேவிக்கப்பட்டு மிகவும் சிறப்புடையதாய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி லக்ஷ்மிதேவி, பூதேவி, நீளாதேவிகளுடன் எழுந்தருளியதால் கலியுக வைகுண்டமென்று நிரம்பவும் பிரசித்தமாய் இருந்தது. அப்பேர்பட்ட திருப்பதி மகா புண்ணியக்ஷேத்திரத்துக்கு ஆர்யாவர்த்தம் முதல் ஹிமாசலம் பரியந்தமிருக்கும் தேசங்களிலுள்ள பக்த ஜனங்களும், யோகாப்பியாசிகளும், முமுக்ஷுக்களும் அரசர்களும், மந்திரிகளும், பண்டிதர்களும், தபோவந்தர்களும், ஆயிரக்கணக்காய் கோவிந்த நாமஸ்மரணை செய்துகொண்டு பூலோகத்தில் நரனாய் பிறந்தால் ஸ்ரீ திருப்பதியில் எழுந்தருளிய ஸ்ரீ வெங்கடேசப்பெருமானை தரிசிக்காவிடில் தன்னியர்களாக மாட்டோமென்று யாத்திரை செய்வார்கள். மேலும் மந்திரசித்தி, யோகசித்தி, ஞானசித்திகளை விரும்பினவர்கள் அந்த தங்கமலைக்கு



வந்து அவ்விடத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து குகைகளிலும், காடுகளிலும், விருக்ஷங்களின் கீழும் சந்ததம் ஸ்ரீ வெங்கடேஸ பரப்பிரம்மத்தை தியானம்செய்துகொண்டு அதே நிஷ்டையில் இருப்பார்கள்.

இந்த புண்ணிய க்ஷேத்திரத்திற்கு அதிகாரியாகவும் கோவில், குளம், மண்டபங்கள், மடங்கள், யோகாலயங்களை அடிக்கடி ஜீர்ணோத்தாரணம் செய்வதற்கும்; தேவஸ்தானத்தில் அன்பர்களால் சுவாமிக்கு சமர்ப்பிக்கப்படும் பொருள்களைக் காப்பாற்றி பிரமாதி தேவகணங்களால் ஏற்படுத்திய பிரம்மோற்சவ, ரதோற்சவ, தீர்த்தோற்சவங்களை வருஷந்தோறும் கிரமமாய் நடத்துவதற்காகவும், யோகாப்பியாசிகளுக்கும், பிரம்ம வேதியர்களுக்கும், பகவானன்பர்களுக்கும் இடம், போஜனம், வஸ்திரம், முதலியவைகளைக் கொடுத்து ரக்ஷிப்பதற்கும், யாத்திரை வாசிகளுக்கு சகல சௌகரியங்களை உண்டாக்குவதற்கும், தேவாலயத்தில் ஸ்ரீ வராக வெங்கடேஸ மூர்த்திகளுக்கு பூஜாபிஷேக நித்திய போகங்களை நடத்துவதற்காக மகாயோக பக்தி வைராக்கிய ஞானசம்பன்னர்களை மஹந்தென்னும்பேருடன் மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது.

மஹந்துகளுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்கள் என்னவென்றால், ஸ்ரீ வெங்கடேஸ்வரர்பேரில் அசைவற்ற பக்தியும், அவர் பக்த கோடிகளை தகப்பனைப்போல் பாவிப்பதும், அன்பும் அவர் பூஜைகளில் இடைவிடாத பக்தியும், யாத்திரை வாசிகளுக்கு சிநேகிதனைப்போலும், பந்துவைப்போலும், சாதுக்களுக்கு சகோதரனைப்போலும் இருக்கவேண்டியது. இதல்லாமல் பிரம்மநிஷ்டையுள்ளவனாய் சகல ஜீவாந்திரயாமியாகிய ஸ்ரீ வெங்கடேஸ பரதத்துவத்தை தெரிந்தவனாகவும், பூர்ண ஆத்ம ஞானம் உள்ளவனாகவும், சச்சிதானந்த பரப்பிரமத்தை தரிசிப்பதால் பரிசுத்தமான அந்தக்கரணமுள்ளவனாகவும், பிரம்மச்சாரியாகவும், சத்தியமும், சுசியும் சர்வஜீவர்களிடம் சமதிருஷ்டியுடையவனாகவும் இருக்கவேண்டும். இப்படி நற்குணங்களுள்ள மஹந்துகள் அநேகம்பேர் இருந்தார்கள். அவர்களில் மிகுந்த சிறப்புடையவரும், பக்தியோக ஞானத்தில் மிகுந்தவருமாகிய ஓர் மஹந்து இருந்தார். அவர் பேர் ஹத்திராம் பாவாஜி என்பார்கள். ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்துக்கு வரும் யாத்திரை

வாசிகள் ஸ்ரீ வெங்கடேஸ பெருமான் தரிசனம் செய்தபிறகு ஹத்திராம் பாவாஜி சுவாமிகளையும் தரிசித்துப் போவார்கள். ஸ்ரீநிவாஸ மூர்த்தியின் அந்தரங்க பக்தனென்றும், யோகிகளுடைய அன்பனென்றும், பக்தஜனங்களுடைய பந்துவென்றும், தபோவந்தர்களுடைய ரக்ஷகனென்றும், அவர் தரிசனமே பாபவிமோசனமென்றும் யாத்திரை வாசிகள் அவரை அநேகவிதமாய் கொண்டாடிக் கொண்டு கூட்டங்கூட்டமாய்வந்து ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தரிசிப்பார்கள்.

மஹந்து பட்டம் உண்டானபிறகு ஹத்திராம் சுவாமிகள் கடலில் உண்டான ஒரு பெரும் அலையைப்போல பரப்பிரம்மத்தில் பக்தகோடிகளைக் காப்பாற்றுவதற்காக ஸ்ரீ வெங்கடேச பெருமானாய் எழுந்தருளிய ஜெகதீஸனை தரிசிக்க மிகவும் ஆவலுள்ளவராய், சுவாமி சன்னதிக்கு வடக்கில் ஒரு மைல் தூரத்தில் ஓர் தபோ மந்திரத்தை ஏற்படுத்தி தாபத்திரயங்கள் இல்லாமலிருப்பதற்கு தூனி என்கிற ஓர் அக்னிகுண்டத்தை உண்டாக்கி, பன்னிரண்டு வருஷ காலம் பசி எடுத்தபோது அல்லிபத்திர மென்னும் ஓர் மூலிகையை சாப்பிட்டுக்கொண்டு மிகுந்த வைராக்கியத்துடன் பரம தயாநிதியாகிய ஸ்ரீமந்நாராயணன் பாதபத்மங்களை சிந்தித்துக்கொண்டு இரவு பகல் தெரியாமலும், பிரபஞ்சஞாபகம் இல்லாமலும், மானாபிமானங்களைவிட்டுத் தியாகியாய் அதே நிஷ்டையில் இருந்தார். இப்படியிருக்க ஒரு நாள் மெலிந்த தேகமுள்ள ஓர் கிழவன் அவர் ஆஸ்ரமத்துக்குள் வந்து ஹத்தி ராமா! என்று கூப்பிட்டார். பன்னிரெண்டு வருஷகாலம் மனிதர்களின் வார்த்தையும், சஞ்சாரமும் தெரியாமல் காட்டு மிருகங்களையும், பக்ஷிகளையும், தன்னைப் போல் ஜீவர்களென்று பார்க்கப் பழக்கப்பட்டிருந்த மஹந்து ஆச்சரியத்துடன் கண்திறந்து பார்க்கையில் நூறு கோடி சூரிய பிரகாஸத்தோடும், ஞானிகளென்னும் கடலுக்கு சந்திரனைப்போலும், மகத்தாகிய பிரபாவத்தோடும், சங்கு சக்கரங்களை தரித்துக்கொண்டு திருமூர்த்தி சொரூபமாகிய ஸ்ரீ வெங்கடேச பெருமான் தரிசனம் கொடுக்கையில், அந்த தேஜோன்மயமாகிய பரப்பிரம்மத்தைக்கண்டு அமிர்தக் கடலில் மூழ்கினவராய், பரவசமடைந்து, பிறகு ஹரியைப் பார்த்து, ஓ தகப்பனே! சகல ஜீவராசிகளில் அந்தர்யாமியாய் கிரீடித்



துக்கொண்டிருக்கும் பரப்பிரம்மமே! புருஷோத்தமனே! புண்ணியனே! பரிபூரணனே! விஸ்வேஸ்வரனே! அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா வென்று அநேக விதங்களாகக் கொண்டாடப் பரந்தாமன் சில்நேரம் தரிசனங்கொடுத்து அந்தர்த்தானமாய்விட்டார். அந்தநாள் முதல் ஹத்திராம் சுவாமிகள் ஸ்ரீ ஹரியை பார்ப்பதற்கு விரும்பினபோதெல்லாம் சர்வேஸ்வரன் அவருக்கு தரிசனங்கொடுத்து தன் கிருபாமிர்தத்தினால் அவரை சந்தோஷிக்கச்செய்வார். சில காலங்களுக்குள், அவர் பக்தி சிரத்தை மனோபரிசுத்தங்களுக்கு மெச்சி, ஸ்ரீ வெங்கடேச பெருமான் அவரோடு சாமான்ய நரனைப் போல் சம்பாஷணை செய்வார். அவரோடு விளையாடுவார். பூரண சந்திரனைப்போல் மகத்பிரகாஸமான மந்தஹாஸத்துடன் அவரோடு சரசசல்லாபங்களாடுவார். ஹரியும் அவரும் பாச்சிகையாடுவார்கள். ஹத்திராம் சர்வத்தையும் மறந்து பக்தி பூர்வகமாக ஹரி பஜனை செய்கையில் அவர் முன்வந்து நின்று, பகவானும் மெய்மறந்தவராய் நாட்டியம்செய்வார். பக்தியோடு சமர்ப்பித்த பலகாரங்களை புசிப்பார். உள்ளன்போடு ஏற்படுத்திய படுக்கையின்பேரில் சயனிப்பார். அவர் நினைத்த மாத்திரத்தில் பிரத்தியக்ஷமாய் அவர் முன் இருப்பார்.

அநேக ஆயிரம் வருஷங்கள் அன்னபானங்களையும், நித்திரை சஞ்சாரங்களையும் விட்டு, மூடிய கண்களை திறக்காமல் தீவிர வைராக்கியத்துடன் தபம் செய்துக்கொண்டிருக்கும் மௌனிகளும் காணமுடியாத ஜகதீசன் மஹந்துவின் பூர்வ புண்ணியபலத்தாலும், பரிசுத்தாந்தரங்கத்தாலும் ஹத்திராம் சுவாமிகளுக்கு நிழலைப் போலப் பிரத்தியக்ஷமாய் அருகாமையில் இருந்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் மஹந்தும் சுவாமியும் பாச்சிகை யாடுகையில், பழக்கமாய் பகவானே ஜெயமடைந்துகொண்டு வருகிறபடியால் அன்றையதினம் ஏதோ ஒரு ஆட்டத்தில் சுவாமி அபஜெயமடைந்தார். அப்போது மஹந்து மிகுந்த சந்தோஷமுள்ளவராய் இது நல்ல சமயமென்றெண்ணி ஹரியைப்பார்த்து, சுவாமி! உம்மை நான் ஜெயித்தேன். ஆகையால் அதற்கு என்ன சொல்லுகிறீர். தகுதியான சமாதானம் சொல்லும்பரியந்தம் வேறு ஆட்டம் தொடங்கக்கூடாதென்றார். அதைக்கேட்டு சர்வேஸ்வரன் பிரேமாதிசயத்தி

னால் பகபகவென்று சிரித்துக்கொண்டு ஓ குமாரனே! உனக்கென்ன வேணுமென்றார். அதற்கு மஹாந்து சுவாமீ! நீர் என்ன கொடுப்பீர் என்று கேட்டார். ஹரி ஓங்கார நாதம் மேலிட்டதைப்போல் விசேஷமாய் சந்தோஷித்துக்கொண்டு, உனக்கு இந்த மலை அளவு பொன்னை கொடுக்கிறேன் என்று சொன்னார். என் துரையே! உன் பாதங்களே பெருஞ் சம்பத்தென்று எண்ணியிருக்கும் எனக்கு பொன் எதற்கு என்றார். சுவாமி பூமண்டலாதி பத்தியத்தை கொடுக்கிறேன் என்றார். அதற்கு பாவாஜி க்ஷணத்தில் மாறிப் போகும் இந்த பிரபஞ்ச போகங்கள் எனக்கேன் என்றார். சுவாமி ஆனால் சொர்க்காதிபத்யத்தை கொடுக்கிறேன் என்றார். அதற்கு பாவாஜி சில காலங்களிருந்து நசிக்கும் அந்த போகங்கள் எனக்கேன் என்றார். அதற்கு சுவாமி ஆனால் இந்த பிரம்மாண்ட பாண்டங்களுக்கு பிரபுவாக செய்கிறேன் என்றார். அதற்கு பாவாஜி சுவாமி! இந்த பிரம்மாண்ட பாண்டங்களுக்கு பிரபுவாக இருக்க உமக்கு தகுமேயன்றி எனக்கு தகாது என்றார். அதற்கு சுவாமி ஆனால் உன்னை என் ஸ்தானத்தில் நிறுத்துகிறேனென், ஐயனே! உன் ஸ்தானத்திலிருந்து பக்தர்களை தேடிக்கொண்டுப்போய் அவர்களை சேவகனைப்போலக் கார்க்கும் கஷ்டம் எனக்கேன். பக்தர்களைக்கார்க்க நீரே தக்கவர். அது என்னால் முடியாது என்றார், சுவாமி ஆனால் நான் என்ன கொடுக்ககூடும் என, சுவாமி! என்னாளும் என்னை கைவிடுவதில்லையென்று பிரதிக்னை செய்வீராக. ஒருசமயத்தில் உம்மை நான் விட்டாலும் நீர் என்னை விடக்கூடாது. உம்மை நான் மறந்தாலும் நீர் என்னை மறக்ககூடாது. அவ்விதமாய் இருப்பதற்கு சம்மதமாயிருந்தால் வேறு ஆட்டம் தொடங்கலாம். அல்லாமற் போனால் நீர் அபஜெய மடைந்ததற்கு என்ன சொல்லுகிறீர் என்றார். அந்த அன்பனுடைய வாக்கியங்களைக் கேட்டு ஹரி விசேஷமாய் கலகல வென்று சிரித்து, மிகுந்த ஆனந்தத்துடன் அவரைக் கடைக்கண்ணால் பார்த்து ஓ குமாரனே! அப்படியே ஆகட்டும், உன்னை விடமாட்டேனென்று சொல்லி அவர்களிருவரும் மறுபடியும் பாச்சிகையாட முதல் வைத்தார்கள். இந்த தட்வையும் பகவானை ஜெயித்து விடுவதற்காக எவ்வளவு பாடுபட்டும் மஹாந்துக்கு முடியாமற் போய்விட்டது. அப்போது ஜெயமடைந்த ஹரி மஹாந்



தைபார்த்து, அடா! நீ அபஜெயமடைந்ததற்கு என்ன சொல்லுகிறாய் என்று கேட்டார். அதற்கு மஹாந்து மிகுந்த அவமானத்துடன் பகவானுடைய திருபொற்பதங்கள்மேல் விழுந்து ஓ தெய்வமே! உம் அடிமைக்கும் அடிமையான ஏழையாகிய நான் உமக்கென்ன கொடுப்பேன். என் பிராணன் தவிர என்னிடம் வேறொன்றுமில்லை. வேண்டுமானால் அதை சமர்ப்பித்து விடுகிறேன் என்று சொல்லக்கேட்டு கருணாநிதியாகிய ஸ்ரீ வெங்கடேச பெருமான் உருகின உள்ள முடையவராய் அவரைத் தன் கைகளால் பிடித்து மேலுக்கெடுத்து விசேஷ பிரேமையினால் அவரை சன்மானித்து, அபயம் கொடுத்து சந்தோஷப்படுத்தி, மறுபடியும் எப்பொழுதும்போல் ஆட்டம் ஆடத்தொடங்கினார்கள்.

இப்படி யிருக்கையில், ஹத்திராம் சுவாமிகளுடைய பெருமையும் பக்த பராதீனனான திருவேங்கடப்பெருமான் பெருமையும், பூலோக மெங்கும் நிறைந்து எட்டுதிசைகளிலும் வியாபித்து பரதகண்டமெங்கும் மிகுந்த கீர்த்தி உண்டாய்விட்டது. அந்த காலத்தில் காசி மகாக்ஷேத்திரத்தில் யோகவித்தையில் மகிமை பெற்றவனும், வேதசாஸ்திரங்களைப் படித்து மகாவித்வத் சம்பன்னனுமாய்த் தனக்கு சமானமான வித்தியாவந்தனும், யோகீஸ்வரனும் உலகத்திலில்லை யென்று அநேகவித மொகர்களைப்பெற்ற ஓர் ஹடயோகி இருந்தான். அவன் ஹத்திராம் சுவாமிகளுடைய பெருமையைக்கேட்டு மனம் பொறுக்காமல், கலியுக வைகுண்டமாகிய திருப்பதி மகா க்ஷேத்திரத்திற்கு தான் மஹாந்துவாக இருப்பதற்கெண்ணி அநேக ஆயிரம் சிஷ்யபரிவாரங்களோடு அரசன் யுத்தத்திற்கு வருகிறதைப்போல புறப்பட்டுவந்தான். அதைத் தெரிந்து ஹத்திராம் சுவாமிகள் அவரை தக்க மரியாதையுடன் அழைத்துக்கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு உத்திரவு செய்தார். அவர்கள் அத்தியந்த பக்தியோடு அநேகவித மரியாதைகள்செய்து ஹடயோகியை அழைத்துக்கொண்டு வருகையில், மஹாந்து அவருக்கு சகல சௌகரியங்களையும் நடத்தினார். அதற்கு ஹடயோகி சந்தோஷப்பட்டு குரோதமான எண்ணமில்லாமலிருந்து, சில நேரம் தனக்குள் தான் இவ்விதமாக யோசித்தான். இவரோ சத்புருஷராயிருக்கிறார். இவரோடு விரோதம்

செய்து, இவர் பட்டத்தை ஆசிப்பது தர்மமாயில்லை. ஆனாலும் அவரவர்களுடைய க்ஷேமத்தை அவரவர்களே தேடிக்கொள்ளவேண்டியதாய் இருப்பதால், நல்லசமயம் பார்த்து மஹந்தோடு கலகம்செய்து யோகவித்யமகிமையினால் அவரை கஷ்டப்படுத்தவேண்டுமென்றெண்ணி, நல்ல சமயத்திற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் எல்லோரும் ஒன்றாய்க்கூடி இருக்கும்போது, ஹடயோகி ஒரு உயரமாகிய சூலத்தை பூமியின்பேரில் நிறுத்தி, அதின்பேரில் ஓர் புலி யாசனத்தைப்போட்டு, அதன்பேரில் ஏறி உட்கார்ந்துகொண்டு, மஹந்துவைப் பார்த்து அடா! நீ நல்லவனாய் இருக்கிறாய். உன் பேரென்ன வென்றான். அதைக்கேட்டு மஹந்து என் பேர் ஹத்திராம் என்று பதில் சொன்னார். ஹடயோகி அதைக் கேட்டவுடனே சிரித்து சபாஷ்! ஹத்திராம் என்றால் யானை ராஜனென்பார். இந்த மகா க்ஷேத்திரத்திற்கு யானை மஹந்தாய் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆனாலும் நீ மனிதனோ யானையோ நான் பரீக்ஷிக்கவேண்டும். அப்படி நீ யானையாக இல்லாமற்போனால் உன்னை லேசில் விடமாட்டேன். நான் மஹந்து பட்டத்தை வஹித்து உன்னைச் சிறையில் வைப்பேனென்று சொல்லி, மஹந்துவைப் பந்தித்து கோவில் பிரகாரத்தில் ஒன்றில் போடும்படி தன் சீஷர்களுக்கு உத்தரவு செய்தான். இதல்லாமல் யானை புசிக்கும் கரும்பு சுமைகளும், தென்னமட்டைகளும், அந்த பிரகாரத்துக்குள் போடும்படியாகவும், விசாலமான தொட்டிகளில் ஜலம் வைக்கும்படியாகவும் உத்தரவுசெய்தான். பிறகு அவ்விடத்திற்கு யாரும் வராமலும், ஹத்திராம் தப்பித்துக்கொண்டு போகாமலும் பார்ப்பதற்காக, காவலாள்களை கோவில் சுத்தி நிறுத்தினான். பிறகு ஹடயோகி மிகவும் சந்தோஷித்துக்கொண்டு தான் வந்தகாரியம் நாளை காலைக்குள் முடிந்துவிடுமென்றும், நல்ல யுக்தியினால் மஹந்துவை பந்தித்தேனென்றும், தன்னுடைய யுக்தி சக்திகளுக்கு சமானமில்லையென்றும், சீஷர்களோடு சொல்லிக்கொண்டு விசேஷமாய் பெருஞ்சத்தத்தோடு சிரித்துக்கொண்டு தூங்கினான். இப்படியிருக்கையில் கோவிலுக்குள் தள்ளப்பட்டிருக்கும் மஹந்து எப்பொழுதும்போல் ஸ்ரீமந் நாராயணனை தியானம் செய்துக்கொண்டு, அவர் அனந்தகல்யாண குணங்களை வர்ணித்து ஸ்தோத்திரம் செய்



துக்கொண்டிருந்தார். இப்படியிருக்க, இராத்திரி மூன்று ஜாமம் ஆனபின்பு ஹடயோகியும், அவர் சீஷர்களும் கிடுகிடென்று நடுங்கும்படியாக ஓர் பயங்கரமான யானையின் கூச்சல் கேட்கப்பட்டது. எவ்வளவு தைரியவந்தர்களுடைய இருதயம்கூட சலித்துப் போகும்படியான அவ்வளவு பெருஞ்சத்தமாய் இருந்தது. அதைக்கேட்டு ஹடயோகி மல்ஜலம் தேகத்திலிருந்து வெளிப்பட்டவனாய், தேகஸ்வாதீனம் தவறிப்பயந்து வியர்வை நிறைந்த தேகத்துடன் மேலுக்கெழுந்து, சீஷர்களைப் பார்த்து, ஆ! ஹா! இது என்ன ஆச்சரியம், நாம் இவ்வளவு பெருஞ்சப்தத்தை எப்பொழுதும் கேட்டதில்லை. வானத்தில் இடிகளுடைய சப்தத்தைப்பார்க்கிலும் பயங்கரமாய் இருக்கிறதே. கோவில் பிரகாரத்துக்குள் இவ்விதமான சத்தம் உண்டாவதற்கு என்னகாரணம். பூமி ஆகாயம் உடைந்துபோகிறதைப்போல் கர்ஜ்ஜிக்கக்கூடிய யானையின் ரூபம் எப்படி இருக்கவேண்டுமென்று சொல்லி கிடுகிடென்று நடுங்கிக்கொண்டிருக்கும் ஹடயோகியைப்பார்த்து சீஷர்கள் ஓ சுவாமீ! இது ஹத்திராம் சுவாமிகளுடைய பெருமையன்றி வேறொன்றுமல்ல, அவரையல்லவோ நாம் நேற்றையதினம் மாலையில் கோவிலுக்குள் தள்ளி கதவை மூடினோம், என்று சொல்லக்கேட்டு ஹடயோகி, ஆ! ஹா! நாம் அநேக தேசங்கள் சுற்றி அநேக சாதுக்களையும், சித்தர்களையும் தரிசித்திருக்கிறோம். ஆனால் இப்பேர்ப்பட்ட பிரதாபம் உள்ள மகாத்மாவைக் கண்டதில்லை. ஆனாலும் என்ன செய்யலாம், இந்த இராத்திரியில் கோவில் கதவைத் திறந்தால் என்னவிபத்து நேரிடுமோவென்று சொல்லிக்கொண்டு படுக்கையின்பேரில் படுத்து, அடிக்கடி யானை சத்தம் கேட்டதைப்போல் பயந்து கலவரத்தால் மேலெழுந்துக்கொண்டிருக்கையில், சூரியோதயமாய்விட்டது. அப்போது ஹடயோகி பரிவாரங்களோடு கோவில் கதவைத் திறந்து பார்க்கையில், கரும்பு சுமைகளும், தென்னமட்டைகளும், தொட்டியில் ஜலமும், இல்லாமற்போய் விசேஷமான யானை மூத்திரசாரலும், மல உருண்டைகளும் இருப்பதுகண்டு ஹடயோகி ஹத்திராம் பாவாஜி சுவாமிகளின் பாதங்களின்பேரில் விழுந்து, ஓ தகப்பனே! நீ கடவுளுடைய உண்மையான அன்பனுக்கும். உன்னை சாமான்ய மனிதனென்றெண்ணி பரீக்ஷித்த என் அபசாரத்தை மன்னிக்கவேண்டும். நீயே

இந்த கைவல்ய க்ஷேத்திரத்திற்கு மஹந்துவாய் இருப்பதற்குத் தக்கவன். உன் சேவகனாய் இருப்பதற்கும் எனக்கு தகாது என்று சொல்லி அவர் உத்தரவைப்பெற்றுக்கொண்டு அநேக தேசங்களுக்குப்போய், ஹத்திராம் பாவாஜி சுவாமிகளுடைய பெருமையும், கருணைக்கடலாகிய திருவேங்கட நாயகன் மகத்துவமும் கொண்டாடிக்கொண்டிருந்தான்.

இப்படி யிருக்கையில், ஒரு நாள் ஹத்திராம் சுவாமிகள் பகவானை தியானம் செய்து கொண்டிருந்து, ஹரி ஹரி இந்த உலக வாழ்வு சொர்ப்பனத்திற்கண்ட வேடிக்கைகளுக் கொத்ததாய் இருக்கிறது. பரந்தாமனுடைய பரதத்துவத்தில் சேர்ந்திருப்பதே, சத்தியாகவும், நித்தியானந்தமாகவும் இருக்கிறது. ஆகையால் அவ்வரைச் சேர்ந்திருப்பதே நலமென்றெண்ணி ஸ்ரீ வெங்கடேச பெருமானை தியானிக்க, அவர் மாணிக்க நவரத்தின ஹாரங்களை தரித்துக்கொண்டு, சங்கு சக்கரம் கதை முதலிய ஆயுதங்களை சதுர்ப்புஜங்களில் தரித்துக் கொண்டு, சர்வஜீவ கோடிகளை ரக்ஷிக்கும் கர்த்தனாய், ஆஸரித்தவர்களுக்கு அபயம் கொடுக்கும் தேஜோன்மயமாகிய கடவுள் அவர்முன் எழுந்தருளினார். அப்பெருமான் மகத்பிரகாஸ வைபவ லாவண்ணியங்களைப்பார்த்து பரவசமடைந்து, நல் முத்துகளைப்போல் ஆனந்த பாஷ்பங்கள் கண்களிலிருந்து உருண்டுவர, மஹந்து அவர் திருபொற்பாதங்கள் மேல் விழுந்து, புரண்டுருண்டு, மேலெழுந்து சுவாமியைப் பார்த்து என்னையனே! இந்தப் பிரபஞ்ச விஷய போகங்களில் நான் அலைந்தது போதுமானது. ஆகையால் உன்பாதபத்மங்களில் ஐக்கியப் படுத்திகொள்ள வேணுமென்று பிரார்த்திக்க, அதைக்கேட்டு ஸ்ரீனிவாச மூர்த்தி அவரைப்பார்த்து அன்பனே! நீ ஜன்மார்ஜிதங்களின் பிராப்த துக்கங்களில் சில அனுபவிக்க வேண்டி யிருக்கின்றது. ஆகையால் நீ இன்னும் சில நாள் இவ்வுலகத்தின்கண் இருந்து பிறகு என் சாஸ்வித பிரம்மானந்த பதவியை யடைவாய் என்று சொன்னார். அதைக்கேட்ட மஹந்து சம்மதமில்லாதவராய் குழந்தையைப் போல் அழுதுகொண்டு என் துரையே! இவ்விதமாய் சொல்லுவது உனக்கு தருமமல்ல எவ்விதமானாலும் இக்ஷணமே என்னை உன் திருவுள்ளத்தில் கைக்கொண்டு ஆளவேண்டுமென்று விசேஷமாய் ரோதனம் செய்யத் தொடங்கினார்.



சுலோகம்.

"அவஷ்ய மனுபோக்தவ்வியம் குருதம்கர்ம சுபாசுபம்
னுபுக்தம் க்ஷீயதேகர்ம கல்பகோடிசதைரபிঃ

பிராணிசெய்த புண்ணிய பாவமெனும் கர்மங்களை யெவ்வளவு காலத்திற்காவது அனுபவிக்காமல் முடியாது. அவசியமாய் அனுபவித்தே தீரவேண்டியது. ஆதலால் ஸ்ரீயஃ பதியாகிய ஸ்ரீ வெங்கடேச பெருமான் மறைந்துப் போய்விட்டனர். அதைப் பார்த்து மஹந்து மிகவும் மனஸ்தாபமுள்ளவராய் கடவுளை நோக்கி சுவாமி! என்னை இவ்விதமாக துரோகம் செய்தீரே. நம்பினவனை கைவிட்டு போனீரே. ஆகையால் இனிமேல் உன்னை நினைக்கமாட்டேன். உன் க்ஷேத்திரத்திலும் இருக்கமாட்டேன் என்று சொல்லி அந்த நிமிஷமே புறப்பட்டுப் போய்விட்டார். கொஞ்சம் தூரம் போனதே ஓர் திருடன் எதிரில் வந்து, அவரைப் பார்த்துச் சிரித்து அடா! உன் பொருளை எங்கே வைத்தாய்? ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் சன்னதியில் ஏன் உன் பொருளை வைத்து வந்தாய், அதை எனக்கு வாங்கிக் கொடு, அப்படிக் கொடாவிட்டால் உன்னை விடமாட்டேன் என்று மஹந்துவை அடித்து சுவாமி சன்னதிக்கு துரத்திவிட்டுப் போனான். ஹத்திராம் ஸ்வாமிகள் அதை லக்ஷியம் செய்யாமல் வேறு ஒரு வழியாய்ப் போனார். அப்போதும் சில காட்டு மிருகங்கள் எதிரில் வந்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருக்கோயிலுக்கே அவரைத் துரத்திவிட்டது. இப்படி நேரிடுவதைப் பார்த்து பிரம்மையடைந்து மஹந்து ஒன்றும் தோன்றாமல், யாருக்கும் தெரியாத வேறொரு வழியாய் புறப்பட்டுப் போனார். கொஞ்சம் தூரம் போனபின்பு சில ரக்ஷகசைன்னியங்கள் உருவின கத்திகளை கையில் பிடித்துக் கொண்டு அவர் எதிரில்வந்து, அவரைப் பார்த்து, அடா! நீ திருடனைப்போல் இருக்கிறாய், அப்படி யில்லாமல் போனால் இந்த காட்டு வழியாய் போவதற்கு உனக்கு என்னவேலை என்று சொல்லி மஹந்துவை கால்கைகளைக் கட்டி திருவேங்கடப் பெருமான் சன்னதிக்குக் கொண்டுவந்து விட்டு, இனிமேல் இவ்விதமான வேலை செய்யாமல் இரு என்று சொல்லி விட்டுப் போனார்கள். மஹந்து மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் அழுதுக்கொண்டு மற்றொரு வழியாய்ப்போனார். அப்போது காட்டிலிருந்து ஒரு பெரிய ரிஷபம்

எதிரில் வந்து அவரை ஓடிப்போவதற்கு முடியாமலும், செடிகளின் பேரில் ஏறுவதற்கு முடியாமலும், தள்ளிக்கொண்டு சுவாமி சன்னதியில் கொண்டு போய்விட்டது. அதற்குமேல் மஹந்து ஆ! ஹா! என்ன செய்வேன், நாளையதினம் நான் வேறொரு வழியாய் போவேன், அப்போது எனக்கு எவ்வளவு விபத்துகள் நேரிட்ட போதிலும் பின்வாங்காமல் பிராணனையாவது விட்டு விடுவேனே யொழிய கிருபையில்லாத திருவேங்கடன் க்ஷேத்திரத்துக்கு வரமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்துக் கொண்டு புறப்பட்டார். ஒரே முயற்சியோடு காட்டில் முட்களின்பேரிலும், கூரான கற்களின் பேரிலும், புதைகளின்பேரிலும், மேடுபள்ளங்களிலும், குதிரையைப் போல் ஓடிக்கொண் டிருக்கையில், ஓர் கிழவன் எதிரில் வந்து குழந்தாய்! நீ இவ்விதமாக ஏன் ஓடுகிறாய்? விபரத்தைச்சொல் விபரத்தை சொல்லென்று பின்தொடர்ந்து வந்தான். அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல், மஹந்து ஓடிக்கொண்டே போய் பிறகு ஆயாஸத்தினாலும், பல வீனத்தாலும், பசிதாகம் மேலிட்டதாலும், சகிக்க முடியாமல் கல்லொன்று காலில்பட்டு நடை தவறி கீழே விழுந்துவிட்டார். அப்போது பின் தொடர்ந்து வந்த கிழவன் அவரை மேல் எழுப்பி குழந்தாய்! நீ ஏன் இவ்விதமாக கஷ்டப்படுகிறாய்? விபரத்தைச் சொல்லென்று கேட்க, மஹந்து மௌனத்தை விட்டு பிராணநாதனை ஸ்ரீ வெங்கடாசல பதியோடு தனக்குண்டான மனஸ்தாபத்தையும், அவர் கடினமான உள்ளத்தையும் தெரிவித்து, பிறகு பொறுக்க முடியாத தாபத்தால் அழுதார். அதைக் கேட்ட கிழவன் மறைந்துபோனான். உடனே நவரத்தின கசிதமான சர்வ ஆபரணங்களை தரித்துக் கொண்டு சங்கு சக்கர கதாதிகள் சதுர்ப்புஜங்களில் பிரகாசிக்க ஸ்ரீபூநீளா சமேதராய், கருடாரூடராய், கோடி சூரிய பிரகாசமான தேஜஸுடன் புருஷோத்தமன் தரிசனம் கொடுக்கையில், மஹந்து அதைச் சேவித்து ஆனந்தத்தால் மெய்மறந்து, சாக்ஷாத்காரனை ஸ்ரீயஃபதிக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து முகுளித ஹஸ்தராய் எதிரில் நிற்கையில், ஸ்ரீ வெங்கடேச பரமாத்மா அவரைப் பார்த்து, ஓ அன்புள்ள புத்திரனே! உன் பிராரப்தம் தீர்ந்து விட்டது. இனி என்மாயை உன்னை தொடாது, உன்னை சகல பந்தங்களிலிருந்தும் விடுதலை செய்தேன் இனி என் சாஸ்வித நித்தியானந்த வைகுண்டத்தை யடைவாய் என்று சொல்லி அந்தர்த்தியானமாய் விட்டார். பிறகு மஹந்து சுவாமி சன்னதிக்கு வந்து, தேவதேவனை ஸ்ரீ ஹரிக்கு கேஸரி கஸ்தூரி சேர்ந்ததினால் பரிமளித்துக் கொண்டிருக்கும் க்ஷீரத்தால் அபிஷேகம் செய்து, நவரத்தின ஆபரணங்களினாலும், அநேகவித பரிமள புஷ்பங்களினாலும், சுகந்தத்தாலும் அலங்கரித்து, தியானம் செய்துகொண்டு நின்றார். அப்பொழுது கோவிலில் ஸ்தாபித்திருக்கும் கண்டாநாதம் கோவிந்தா கோவிந்தா என்று ஓசையிட்டுக்கொண்டிருந்தது.



சுலோகம்.

க்ஷீராஜலம் ஜலேக்ஷிப்தம் க்ஷீரேக்ஷீரம் க்ருதேக்ருதம்
அவிஷேஷோ பவேதத்வத் ஜீவாத்மா பரமாத்மனோஃ

அப்போது மஹந்து சர்வேஸ்வரனை மனமுருகப் பூஜித்து, கற்பூர நீராஞ்சனங் கொடுத்து, ஸ்ரீ எம்பெருமான் திருபொற்பாதங்களில் மனதை நிறுத்தி தியானித்துக் கொண்டிருக்கையில், ஓர் மின்னல் உண்டாய்ப் பிரகாசத்தோடு பிரகாசமும், ஜலத்தோடு ஜலமும், காற்றோடு காற்றும், பேதமில்லாமல் சேர்ந்து விடுகிறதைப்போல, அந்த பக்தராஜசிரோமணியாகிய மஹந்து ஹாத்திராம் பாவாஜி ஸ்வாமிகள் கடவுளோடு கடவுளாய், கருணாநிதியாகிய ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் பாதத்துவத்தில் ஐக்கியமாய்விட்டார். அப்பொழுது கோவில் அதிகாரிகள் கோவிந்த நாமபஜனைகள் செய்துக்கொண்டு, அவர் திருமேனியை எடுத்துக் கொண்டுபோய் பூர்வத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் தரிசனத்திற்காக ஹாத்திராம் தபஞ் செய்த இடத்திற்குச் சமீபத்தில் அடக்கம் செய்து சமாதி நிர்மாணஞ் செய்து பக்தி சிரத்தைகளோடுபூஜைகள் செய்துக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் நாளதுவரையும் அவ்விதமாகவே நடந்தேறிவருகிறது. யாத்திரைவாசிகள் ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்துக்கு வந்து ஸ்ரீவராக வெங்கடேச மூர்த்திகளை தரிசித்த பிறகு ஸ்ரீ ஹாத்திராம் பாவாஜி சுவாமிகளின் சமாதியையும் தரிசித்துப் போவார்கள். அந்த சமாதி ஸ்ரீநிவாச மூர்த்தி ஆலயத்திற்கு ஒன்றரை மைல் தூரத்தில் பாபவினாசன தீர்த்தத்திற்குப் போகும் வழியில் இருக்கிறது. அந்த சமாதிக்கருகில் ஹாத்

திராம் சுவாமிகளுடைய தூளி என்னும் அக்கினி குண்டமும் இருக்கிறது. ஸ்ரீ ஹத்திராம் சுவாமிகளுக்கு சிஷராய் இருந்த கிரிதர்தாஸ் என்பவரொருவர் ஹத்திராம் பாவாஜி சமாதிக்கு சமீபத்தில் சமாதி யடைந்திருக்கிறார். ஒரு காலத்தில் ஹத்திராம் பாவாஜி சுவாமிகள் ஓர் ஆலங்குச்சியினால் பல்லை துலக்கிக் கொண்டு அதை பூமியின் பேரில் போட்டார். அவர் எச்சலென்ற அமிர்தத்தில் ஊறின அந்த ஆலங்குச்சி பூமியின் பேரில் விழுந்து அதிலிருந்து மிகவும் பெரிதானதும் விசாலமானதுமாகிய ஓர் ஆல மரம் உண்டாயிற்று. பக்த ஜனங்கள் அந்த மரத்தடியில் ஓர் திண்ணையை உண்டாக்கி, அந்த மரத்திற்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்கிறார்கள். அந்த இடத்தின் மகத்துவத்தை தெரிந்துக்கொண்டு மனோராம் பாவாஜி என்கிற ஓர் மஹந்து, அந்த யிடத்திற் சென்று ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை தியானித்துக் கொண்டிருந்த படியால், அதற்கு மனோராம் திண்ணை என்ற பெயர் உண்டாயிற்று. ஸ்ரீ ஹத்திராம் பாவாஜி சுவாமிகளின் பெருமையும், ஸ்ரீ திருவேங்கடப் பெருமான் மஹத்துவமும் உலகமெங்கும் வியாபித்துக் கேட்ட பக்த ஜனங்களுடைய பாவராசிகளை நசிக்கச் செய்யுமாகையால் கோவிலின் அதிகாரிகள் பக்த ஜனங்கள் பார்த்து சந்தோஷிக்கும் பொருட்டாக கோவில் இரண்டாவது பிராகாரத்தின் வாசற்படியில் ஹத்திராம் ஜெகதீசனோடு பாசி விளையாடுகிறதைப்போல் விக்கிரகங்களை செய்திருக்கிறார்கள். மேலும் படத்தில் எழுதியும் கோவிலில் வைத்திருக்கிறார்கள். மஹந்து மஹாலிலும் படங்களுண்டு.

## ஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பாள் சரித்திரம்.

ஸ்ரீ திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வடமேற்கில் தரிகொண்ட என்ற ஓர் கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திலுள்ள அக்கிரஹாரத்தில் வேதாத்தியயன சம்பன்னர்களும், மகாவித்வான்களுமாகிய பிராமணர்கள் இருந்தார்கள். அந்த பிராமணர்களில் வசிஷ்ட கோத்திரத்தில் பிறந்தவனும், புண்ணிய சாலியுமாகிய கிருஷ்ணய்யன் என்றோர் பிராமணன் இருந்தான். அவனுக்கு நிலம் நீர் தனம் தான்ய ரத்னாபரணசம்பத்துகள் அளவற்றதாயிருந்தது. அவனுக்கு பஞ்சபாண்டவர்களைப் போல் பிள்ளைகளும் இருந்தார்கள். ஆனால் பெண் சந்ததி யில்லாக் குறையினால் திருப்பதியி லெழுந்தருளிய ஸ்ரீ வெங்கடாசலபதியை அநேக வருஷகாலம் பிரார்த்தனை செய்துக் கொண்டிருந்து, சில காலத்திற்குப் பின் அவர் வரப்பிரசாதத்தினால் ஓர் பெண் பிறந்தாள். அந்தப் பெண் லக்ஷ்மி தேவியைப்போல் மகா சௌந்தரியவதியாய் பூர்ண சந்திரனைப் போலொத்த முகாரவிந்தமுள்ளவளாக இருந்தபடியால் அக்குழந்தையை மிகுந்த அன்புடன் வளர்த்துக் கொண்டு வெங்கமாம்பாள் என்று நாமகரணஞ் சூட்டினார். ஐந்து வயதுக்கெல்லாம் அக்குழந்தை சரஸ்வதி தேவியைப் போல் கவிகள் பாடி அமிர்த தாரைகளான சொற்களால் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானைத் துதிக்கத் தொடங்கினாள். அக்குழந்தை ஹரி பஜனை செய்துக்கொண்டும், சர்வாந்திரியாமியாகிய ஜகதீசன் திருநாமத்தை ஜபித்துக்கொண்டும், வயல்களிலும், தோட்டங்களிலும், வீதிகளிலும், வீட்டிலும் மறந்ததேகமுடையவளாய் நிருத்தனஞ்செய்துக் கொண்டிருப்பாள். அதைப்பார்க்குந்தோறும் தகப்பன் மிகவும் சந்தோஷமடைவான். இங்ஙனமிருக்க, சிலநாளில் புத்திமாறி அந்தக் குழந்தையை இம்சைசெய்ய ஆரம்பித்தான். ஆ! ஹா! இது என்ன ஆச்சரியம். பெண் குழந்தை மானாபிமானங்களைவிட்டு ஹரி பஜனை செய்வது நம் குலத்திற்கடுக்குமா? இச்சிறுவயதில் இப்படியிருந்தால் இன்னும் போகப்போக எப்படி யிருக்குமோ வென்று அந்தக் குழந்தைக்குக் கண்டிதமான உத்திரவுகளையளித்து தண்டிப்பதற்கு ஆரம்பித்தான். ஒரு நிமிஷமாவது ஹரியை தியானிப்பதற்கு விடாமல், வீட்டில் பாத்திரங்களைத் துலக்குவதும், வீட்டைப் பெருக்குவது முதலிய வேலைகளைச் செய்யும்படிக் கட்டளை யிட்டான். சிறு வயதுள்ள அந்தக் குழந்தைக்கு இந்த வேலைகள் மிகுந்த கஷ்டமானவைகளாய் விசேஷசிரமம் உண்டாய்விட்டது. இப்படி யிருந்தும் அந்தக் குழந்தை வேலைகளைச் செய்துக்கொண்டும் ஜகதீசனுடைய திருவடிகளில் மனதைச் செலுத்தித் தியானம் செய்துக்கொண்டும், எல்லாவற்றையும் மறந்து தூங்கிவிட்டதைப்போ லிருப்பாள். அதைப் பார்த்து கிருஷ்ணய்யன் ஆ! ஹா! இது என்ன விபரீதம் கல்யாணம் செய்துக் கொண்டு புருஷனுக்கு சேவைகள் செய்ய வேண்டிய கட்டளை

யுள்ள பெண் இவ்விதமாய் ஹ்ரிபக்தி செய்வது தக்கதா வென்றெண்ணி, அந்தக் குழந்தையின் பேரில் கொஞ்சமாவது தயவில்லாமலும், பிரீதி யில்லாமலும், அநேகவித யுக்திகளால் சிக்ஷித்தும், திட்டியும், அடித்தும், ஆகாரம் குறைவு செய்தும் ஹரிபக்தியை மாற்றுவதற்குப் பாடுபட்டான். எத்தனை தடவை யுருக்கின போதிலும் தங்கத்துக்கு பிரகாஸம் மாறாமலிருப்பதைப்போல், அந்தக் குழந்தை தன்னுடைய சுபாவத்தை விடாமல் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை மனோவாக்குக் காயங்களால் ஆராதித்துக் கொண்டிருந்தனள்.

கிருஷ்ணய்யன் தன்னால் சக்தியுள்ள அளவு அந்தக் குழந்தையைத் தண்டித்தும் சுபாவம் மாறாமலிருக்கிறபடியால், விவாகம் செய்தால் பிரபஞ்ச ஆசைகளுண்டாய் அந்தப் பெண்ணுக்கு ஹரிபக்தி விட்டுப்போகுமென்றெண்ணி, விவாக பிரயத்தனங்கள் செய்தான். அந்த பெண்ணினுடைய ரூபலாவண்யங்களைப் பார்த்து அநேகர் விவாகம் செய்துகொள்வதற்குச் சம்மதித்தார்கள். சிலர் இந்தப் பெண் சம்சாரத்திற்குத் தக்கவளல்லவென்று சொன்னார்கள். சிலர் இந்தப் பெண்ணினுடைய பக்தியைப்பார்த்து ஏதோ தேவதை இவ்விதமாய் அவதரித்ததென்றார்கள். சிலர் இந்தப் பெண் பார்ப்பதற்கு நன்றாயிருக்கிறதே யன்றி, குணங்கள் நன்றாயில்லாமற் போவதால் இவளைக் கல்யாணம்செய்துகொண்டால் கஷ்டம் நேரிடுமென்று எண்ணினார்கள். சிலர் இந்த பெண்ணுக்கு ரூபத்தை உண்டாக்கின பிரம்மா ஏன் குணத்தை யுண்டாக்கவில்லையோ என்று யோசித்தார்கள். முடிவில் கிருஷ்ணய்யன் அந்தப் பெண்ணை ஒரு சிறுவனுக்குக்கொடுக்க நிச்சயித்து சகல பந்துமித்திரர்களையும் வரவழைத்து, அகண்ட வைபவத்துடன் கல்யாணம் செய்தான். அந்தப் பெண்ணின் ரூபலாவண்யங்களுக்குப் பிரமித்து மாமன் மாமி முதலிய பந்துக்கள் அந்த பெண்ணின்பேரில் அதிகப் பிரீதியுள்ளவர்களாயிருந்தார்கள். அந்தப் பெண் இவ்வுலக மாயைத் துக்க சொரூபமென்றும், ஸ்ரீஹரி திருவடிகளைத் தியானிப்பது அமிர்த பானத்துக்கு ஒத்ததென்றுமெண்ணி, சதா ஸ்ரீ ஹரிபஜனை செய்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, பந்து ஜனங்கள் ஆ! ஹா! பூர்வத்திலிருந்த பிரகலாதனே இந்த யுகத்தில் ஸ்திரீ ரூபமாய் அவதரித்



தானோ என்று நினைத்து விசாரத்துடன் அந்தக் குழந்தையின் நடவடிக்கைகளை கிருஷ்ணய்யனுடன் சொன்னார்கள். அதைக்கேட்ட கிருஷ்ணய்யன் தலையில் கைகளால் அறைந்துக்கொண்டு, ஐயோ! இனி நானென்னசெய்வேன். விவாகம் செய்தும் இவ்விதமாயிருக்கிறதே யென்று விசாரப்பட்டு, பெண்ணை தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்து அநேக விதங்களாக பிரபஞ்ச விஷயங்களை கவனிக்கும்படி துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்.

சிலநாட் சென்றதும் அந்த பெண் யுக்த வயதடைந்து கமலத்தில் அவதரித்த லக்ஷ்மிதேவியைப்போல் சௌந்தரமுள்ளவளாயிருந்தாள். கிருஷ்ணய்யன் சீக்கிரத்தில் அவளுக்கு நிஷேக முகூர்த்தம் செய்தால் பிரபஞ்ச ஆசைகளுண்டாகுமென்றெண்ணி, தக்க பிரயத்தனங்கள் செய்கையில், அந்தப் பெண்ணை விவாகம் செய்துக் கொண்ட புருஷன் நிஷேக முகூர்த்ததினம் இரவு அவள் சமீபத்தில்வர, அவனைப்பார்த்து ஓ! மூடாத்மாவே! உனக்கென்ன பிரமை பிடித்திருக்கிறது. என் பிராணநாயகனும், பர்த்தாவும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானென்று நீ அறியாயோ? விவாகமாயிருக்கும் என்னை என் தகப்பன் அறியாமல் மறுபடியும் விவாகம் செய்தான். ஆகையால் வேறு விவாகம் செய்துக்கொள்வாய் என்று சொல்லக்கேட்டு, அந்த புருஷன் ஐயோ! கிருஷ்ணய்யன் மகள் வெறி பிடித்தவளென்று சொன்னது மெய்யே. இவள் என்ன கிரகமோ, தேவதையோ அறியாமல் என் தாய் தந்தை இவளை விவாகம் செய்தார்களே யென்று துக்கித்துக்கொண்டிருந்து சில நாளில் மரணமடைந்தான். அதற்குமேல் அந்த அக்கரஹாரத்திலிருக்கும் பிராமணர்கள் குலாசார தர்மப்படிக்கு, அவளுக்கு கூந்தலை சிறைத்து சுயம்பாக வேலைகளில் நிறுத்துவதற்குப் பிரயத்தனப்பட்டார்கள். அவள் அதற்கு சம்மதிக்காமல் தான் நித்திய சுமங்கிலியென்றும், நித்தியமங்களாசாரனை திருவேங்கடத்தான் பாதகமலங்களை தியானித்துக் கொண்டிருப்பதே தனக்கு தர்மமென்றுஞ் சொல்லி வெண்மையான சீலைகளும், புஷ்பங்களும், சுவாசனைகளும், நவரத்தின கசித சுவர்ணாபரணங்களுந் தரித்துக்கொண்டு ஸ்ரீ ஹரிபஜனை செய்துக் கொண்டிருந்தனள். அப்போது அவள் சத்துவகுணத்தை அறியாத பிராமணர்கள் அவளை குலப்பிரஷ்டியென்றும், அகங்காரம்

பிடித்தவளென்றும் தூஷித்துக் குலத்திலிருந்து நீக்கி வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அதற்குமேல் வெங்கமாம்பாள் ஸ்வேச்சையாய்த் திரிந்துகொண்டு இரவு பகலென்பதின்றி எந்த இடத்தில் பார்த்தபோதிலும் ஸ்ரீ ஹரியை தியானம் செய்துகொண்டு, நித்திய மங்கள மூர்த்தியாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான்மீது நவரத்தினங்களொத்த கவிகள்பாடி யலங்கரித்து ஆராதித்துக்கொண்டிருந்தனள். அவள் பெருமையை யறியாத பிராமணர்கள் பிரபஞ்ச வாசனையினால் அவளை தூஷித்தார்கள். கற்களால் அடித்தார்கள். குலத்துரோகி என்றும் விபசாரியென்றும் சொன்னார்கள். சிலர் இப்பேர்ப்பட்ட பக்தியும் கவித்துவமுமுள்ள இந்தப் பெண் சாக்ஷாத் சரஸ்வதியேயன்றி சாமானிய மானவளல்லவென்று புகழ்ந்தார்கள். சிலர் அவளைப் பார்த்து நமஸ்கரித்து அவள் தரிசனம் ஸ்ரீபதியாகிய வெங்கடேசபெருமான் தரிசனத்திற்கு ஒத்ததென்றும், அவள் வாக்கில் சரஸ்வதிதேவி நித்தியமும் தாண்டவ மாடுகிறாளென்றுஞ் சொல்லி அவளுக்கு பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தார்கள். அன்னபானங்களைக் கொடுத்து ஆதரித்தார்கள்.

இப்படி யிருக்கையில் சிலகாலத்திற்குப் பின் அந்த ஊருக்கு ஆதி சங்கராச்சாரிய பரம்பராச்சாரியர்களில் ஒருவர் வந்தார். அப்பொழுது அக்ராரத்திலுள்ள பிராமணர்கள் அவரை தரிசிக்கக் கூட்டங் கூட்டமாய்ப்போனார்கள். அந்த ஊரில் வெங்கமாம்பாள் சங்கதி நன்றாய் தெரிந்திருக்கிறபடியால் பிராமணர்கள் இது நல்ல சமயமென்றெண்ணி, ஆச்சாரியர்களுக்கு அவள் சங்கதியை அர்ஜிகள் எழுதியும், நேரில் சொல்லியும் தெரிவித்து பிராமண ஸ்திரீ இவ்விதமாயிருப்பது உத்தம குலத்திற்கு குறைவானபடியால் அவளுக்குப் புத்திசொல்லும்படி பிரார்த்தித்தார்கள். ஆச்சாரிய சுவாமிகள் பிராமண ஸ்திரீ இவ்விதமாயிருப்பது தரும விரோதமென்று சொல்லி அவளைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு வரும்படி உத்தரவுசெய்தார். அப்பொழுது குருக்களுடைய சேவகர் வெங்கமாம்பாளிடஞ்சென்று அழைக்கையில் அவள் போஜனம் செய்து வருகிறேன் என்று சொன்னாள். இவ்வசனங்களைக்கேட்டு இங்ஙனம் சொன்னவர்களை உலகத்திற் பார்த்ததில்லை யென்று சேவகர்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு குருக்களிடம் வந்து தெரிவிக்கையில்,



அவ்விடமிருந்த சில பிராமணர்கள் மிகுந்த கோபமுள்ளவர்களாய் அவளைப் பலவந்தமாக அழைத்துக்கொண்டு வந்து சுவாமிகள் எழுந்தருளிய சிம்மாசனத்திற்கு முன்னுள்ள திரையின் பக்கத்தில் நிறுத்தினார்கள். அப்பொழுது வெங்கமாம்பாள் சும்மா நின்றிருப்பதைப் பார்த்து அவ்விடத்திலிருந்த பிராமணர்கள் ஜெகத்குருவுக்கு நமஸ்கரிக்கும்படி தொந்தரை செய்தார்கள். சிலர் அவளுக்கு நல்ல காலமில்லை யென்றும், சிலர் இவள் கர்வம் பிடித்தவளென்றும், சிலர் இவள் மேல் கிரகம் இருக்கிறதென்றும் பலவிதங்களாகப் பேசினார்கள். இங்ஙனம் அவ்விடத்திலுள்ள எல்லோரும் சொல்லியும் வெங்கமாம்பாள் சும்மா யிருப்பதால் அவளை நமஸ்கரிக்கும்படி தொந்தரை செய்தும், திட்டியும், அடிக்க ஆரம்பித்தார்கள். அதற்கு மேல் சங்கராச்சாரிய பரம்பரை சுவாமிகள் திரையை நீக்கிவிடும்படி உத்தரவு செய்து, அவளைப் பார்த்து ஓ மூடஸ்திரீயே உனக்கென்ன கர்வம் பிடித்திருக்கிறது, ஏன் நமஸ்கரிக்காமல் இருக்கிறாய் என்று கேட்டார். அதைக்கேட்ட வெங்கமாம்பாள் ஐயா! நீர் அந்த சிம்மாசனத்தை விட்டு அப்புறம் போவீரானால் நமஸ்கரிக்கிறேனென்று சொன்னாள். அதைக்கேட்ட குருக்கள் மிகவும் கோபமுள்ளவராய் ஆ! ஹா! இது என்ன ஆச்சரியம், இப்பேர்ப்பட்ட வார்த்தையை நான் கேட்டதில்லை. என்னுடைய தரிசனம் பகவானுடைய தரிசனமென்றெண்ணி பிராமணர்கள், வித்வான்கள், ஞானிகள் முதலிய சகலமானவர்களும் எனக்கடியேனாய் சரணஞ் செய்துகொண்டிருக்க கேவலம் ஸ்திரீயாகிய நீ என்னை லக்ஷியம் செய்யாமல் இங்ஙனம் புகன்றனை. ஆயினும் பெரிதல்ல. குலதர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு சாந்தந் தரிக்க வேண்டுமாகையால் நான் அப்புறம் போய்விடுகிறேன் நமஸ்காரம் செய்வாயென்று சிம்மாசனத்தைவிட்டு எழுந்துபோனார். அந்தசமயத்தில் மகா புண்ணியவதியும், பக்த சிரோமணியுமாகிய வெங்கமாம்பாள் தன்னிருகரங்களாலும் அந்த சிம்மாசனத்திற்கு நமஸ்கரித்தாள். அச்சமயம் அவிடமுண்டான ஆச்சரியம் இத்தகையதெனமொழியவியலாததாகவேயிருந்தது. ஆ! ஹா! அலைசேர்கடல் பொங்கிற்றோ? இன்றேல் காட்டு மிருகங்கள் ஊரின்பேரில் வந்து விட்டதோ? அல்லது பிரளயகாலமே நேரிட்டதோ வென்று சொல்லத்தக்கதாக

அவ்விடம் கூடியிருந்த பிராம்ணர்கள் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு பசுக்கூட்டங்களைப் போல் ஓடினார்கள். அந்த ஜனங்களுடைய கூச்சல்கள் ஆகாயம் பூமிநிறைந்து விட்டதைப்போல் பெரும் அல்லோலகல்லோலமாயிருந்தபடியால் சுற்றுப் பக்கத்தில் குடியிருக்கும் ஜனங்கள் ஓட்டமாய் வந்து கூட்டங்கூடிப் பார்த்தார்கள், அந்த சிம்மாசனம் அக்கினி ஜுவாலைகளில் அகப்பட்டு படபட வென்று முறிந்து, நிமிஷத்திற்குள்ளாக பஸ்மீகரமாய்விட்டது. மேகங்களைப்போல் புகையும், அக்கினி ஜுவாலையும் அவ்விடம் நிறைந்து விட்டது. அச்சமயம் சுவாமிகள் நடு நடுங்கி ஆ! ஹா! நான் சிம்மாசனத்திலிருந்திருந்தால் என்கதி என்னவாயிருக்கும். இந்த பிராமணர்கள் வார்த்தையைக்கேட்டு மகாபுண்ணியவதியாகிய இந்த நாரீமணியை நான் அவமானமாய்ப் பேசிவிட்டேனென்று சொல்லி, வெங்கமாம்பாள் பாதகமலங்களில் விழுந்து நமஸ்கரித்து ஓ மாதாவே! என்பிராணனை ரக்ஷித்தாய். ஸ்ரீ வெங்கடேச பெருமானுடைய அந்தரங்க பக்த சிரோமணியாகிய உன் பெருமையை அறியாமல் தூஷித்த அபசாரத்தை மன்னிக்க வேண்டுமென்று அநேக விதங்களாகப் பிரார்த்தித்து அதற்குப்பிறகு வெங்கமாம்பாளுக்கு மரியாதைகளும் பிராமண சந்தர்ப்பணையுஞ் செய்து, சகலவித பக்ஷணங்களுடன்கூடிய விருந்துசெய்தார். பிறகு பிராம்ணர்களைப் பார்த்து அநேகவேதவேதாந்த உபநிஷதப் பிரமாணங்களைச்சொல்லி பக்தியுள்ளவனே பெரியவனென்றும், பூஜிக்கத்தக்கவனென்றும், பக்தியில்லாதவன் பிராமணனாய்ப் பிறந்தாலும் பிரயோஜனமில்லையென்றும், அநேக விதங்களாக நிரூபணஞ்செய்து,

**சுலோகம்.**

எதாபம் கேனபம் காம்ப: சுரயாவாசுராவிருத:
பூதஹத்தியாம் தேதைவைகாம் ருயக்யோர் மார்ஷ்ட்ருர்ஹதி:

சேற்றால் சேற்றைக் கழுவினால் சேர்போமோ? கள்பானையை கள்ளால் கழுவினால் கள்ளின் நாற்றம்போமோ? அதுபோல கர்மானுஷ்டானத்தால் கர்மம் ஒழியாது. ஆகையால் கேவலம் ஞானஸ்வரூபியாகிய வெங்கமாம்பாள் உலக கர்மங்களை அனுசரிக்க வேண்டியதில்லையென்று அவள் பெருமையைக் கொண்டாடினார். இதையெல்லாம் கேட்ட பிராமணர்கள் நடுநடுங்கினவர்களாய் அந்தத்



தேவியின் சரணங்களில் விழுந்து, தாய் தன் பிள்ளைகள் செய்த குற்றங்களை மன்னிப்பதுபோல் மன்னிக்கவேணுமென்று பிரார்த்தித்தார்கள். ஆனால், சாயமேற்றிய சீலைகளை எவ்வளவு ஆவியில் வைத்து தோய்த்திடினும் அவற்றின் சாயம் மாறாததைப்போல் அந்தப் பிராமணர்கள் சுவாமிகளைப் பார்த்து, சுவாமி! இவ்வளவு புண்ணியவதியும் ஞானசிரோன்மணியுமாகிய வெங்கமாம்பாள் குலதர்மத்துக்குட்பட்டிருந்தால் பிராமண வம்சத்திற்கும் தரிகொண்ட கிராமத்திற்கும் அளவற்ற கீர்த்தி யுண்டாகு மாகையால், தயவு செய்து கூந்தலைச்சிரைத்துவிடும்படிச் சொல்லிப் பிரார்த்தித்தார்கள். அவ்வார்த்தைகளை சுவாமிகள் தடுத்தும் பிராமணர்கள் கேளாததினால் அந்த லோகமாதாவுக்குத் தெரிவிக்க, அவள் அவ்விதமாகச் செய்வதற்கு ஆக்ஷேபணையில்லையென்றும், ஆனால் மறுபடியும் கூந்தல் முளைக்காதிருக்கும்படி குருக்கள் செய்யவேண்டுமென்றுஞ் சொன்னாள். அதைக் கேட்ட சுவாமிகள் அவள் பாதங்களிற்பணிந்து தாயே! என் மதியீனத்தால் அவ்விதமாகக் கேட்டேன் ஆகையால் மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து பிராமணர்களைப் பார்த்து ஞானசிரோன்மணிகளுக்கு வர்ணாஸ்ரம தர்மாசாரங்களையும் உலகத்தின் மார்க்கத்தையும் கவனிக்க வேண்டியதில்லையென்று அநேக சுருதி ஸ்மிருதிப் பிரமாணங்களைச் சொல்லி தேவியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு தன் சுயதேசம்போய் விட்டார்.

அதுமுதல் சகல ஜனங்களும் அந்தப் புண்ணியவதியை தேவதையாய்க் கொண்டாடி பூஜித்துக்கொண்டு வந்தார்கள். வெங்கமாம்பாள் சதாபிரம நிஷ்டையில் மூழ்கினவளாய் முட்களிலும், புதைகளிலும், வீதிகளிலும், காடுகளிலும், சுத்தாசுத்தவிடங்களிலும், பேதா பேதமின்றி சர்வமும் பிரம்மமயமென்று ஸ்ரீவெங்கடேசப் பெருமானை தியானித்து ஆடியும் பாடியும் பஜனைகள் செய்துக்கொண்டுமிருந்தனள். சின்னாள் தரிகொண்ட க்ஷேத்திரத்திலிருந்த விஷ்ணுவாலயத்தில் சேர்ந்தவளாய் அக்கோவிலிலுள்ளப் பெருமானை தானே யலங்கரித்து பூஜிக்கத் தொடங்கினாள். அதைப் பார்த்து கோவில் அர்ச்சகர்கள் சம்மதமில்லாதவர்களாய் அவள் காரியங்களைத் தடுத்துக்கொண்டு வந்தார்கள். அந்த அம்மை எதையும் லக்ஷியம்

செய்யாமல் தான் செய்யும் காரியங்களை செய்துகொண்டே வந்தனள். பக்தஜன பாரிஜாதனான கடவுள் அந்த அம்மையின் பக்தி தனக்கு மிகவும் பிரீதியானதென்று அவர்களுக்கு அநேக அத்தாக்ஷிகளைக் காட்டினபோதிலும், அந்த பிராமணர்கள் அது உலகத்திற்கொத்தமார்க்கமல்லவென்று, அவளைத் தம்மாலானவரைக்கும் தடைப்படுத்தப் பிரயத்தனப்பட்டு முடிவில் அவள் இருந்த விடத்தைச்சுற்றி ஓர் உயரமான சுவரை எழுப்பி அவளை இப்படி யப்படி போகாமல் தடுத்தார்கள். அன்றையதினமே அந்த புண்ணியவதி அவ்விடத்திலின்றும் மறைந்துபோனவளாய் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் எழுந்தருளிய திருப்பதி க்ஷேத்திரத்திற்கு வந்துவிட்டனள். அவ்விடத்தில் சுவாமியைப்பூசிப்பதற்காக சுவாமி சன்னதிக்கு வடக்கில் ஓர் துளசி வனத்தை யுண்டாக்கி, அதன்சமீபத்தில் ஓர் திருக்குளத்தை யமைக்கவெண்ணி வேலைக்காரர்களுக்கு குளம்வெட்டும்படி உத்தரவு செய்தாள். அவர்கள் அவ்விதமாக வெட்டுகையில் அதில் ஜலம் வராமல் பாறை தோன்றியபடியால் வெங்கமாம்பாள் அந்தக்குளத்தின் நடுவில் போய்நின்று, பரமேஸ்வரனுடைய ஜடா மகுடத்தில் குடிகொண்டிருக்கும் கங்காபாவானியை ஸ்தோத்திரம்செய்ய, அந்தக்குளத்தில் ஜலம் நிறைந்துவிட்டது. இவ்வதிசயத்தைக்கண்ட ஜனங்கள் மகாதேவியே இவ்விதமாய் பூமியில் அவதரித்தாளென்று வெங்கமாம்பாள் பாதாரவிந்தங்களில் பணிந்து பிரதிதினமும் பூஜித்துக்கொண்டு வந்தார்கள்.

பிறகு வெங்கமாம்பாள் அந்தவனத்திலுண்டாகும் துளசிதளங்களால் ஸ்ரீ வெங்கடேசப்பெருமானை யாராதித்துக்கொண்டு வெங்கடாசல மஹாத்மியம் என்னும் ஸ்ரீ திருப்பதி ஸ்தலபுராணத்தை செய்து ஸ்ரீ ஹரிக்கு சமர்ப்பித்தனள். அதன்பின் ஸ்ரீ திருவேங்கடநாயகன் அந்த அம்மையாரது பக்திக்கு மெச்சி நிஜதரிசனங்கொடுத்து நித்யமும் பிரத்தியக்ஷமாய்க்கொண்டிருந்தார். வெங்கமாம்பாள் பெருமை இவ்வுலகமெங்கும் வியாபித்துவிட்டதால் விசேஷமாய் ஜனங்கள் வந்து ஆராதித்துக்கொண்டிருந்தார்கள். அதனால் வெங்கமாம்பாளுக்கு ஜனசமூகத்திலிருக்க பிரியமில்லாமல் சுவாமி சன்னதிக்குப் பதினைந்து மைல் தூரத்திலிருக்கும் தும்பூர் தீர்த்தத்தின் சமீபத்திலுள்ள ஓர் பயங்கரமாகிய குகையில் சேர்ந்திருந்தனள். திடீரென்று அந்த அம்மையார் காணாமற் போனபடியால் ஜனங்கள் ஸ்ரீநிவாசமூர்த்தியுடன் ஐக்கியமாய் விட்டாளென்றெண்ணி, துளசிவனத்தில் ஓர் ஸமாதியை நிர்மாணம்செய்தார்கள். வெங்கமாம்பாள் சேர்ந்த குகையிலிருந்து சுவாமி பாதாரவிந்தங்கள் வரையிலும் பூமிக்குள் ஓர் ரகஸியமானவழி ஏற்பட்டிருந்ததனால், அந்த அம்மையார் அவ்வழியாய்வந்து சுவாமிக்குக் காட்டு புஷ்பங்களினால் அலங்காரஞ்செய்து தான் கொண்டுவந்த கனிகளை யூட்டிப் போவாள். இப்படியிருக்க கோவில் அர்ச்சகர்கள் தாங்கள் சுவாமிக்குச் செய்யும் அலங்காரங்கள் பிரதிதினமும் மாறிப்போவதினால் அவ்விஷயத்தை அக்காலத்திலிருந்த மஹந்துக்குத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட மஹந்து ஆச்சரியப்பட்டு இவ்விரகஸியத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று ஒருநாள் கோவில் மூலஸ்தானத்துக் கதவை மூடுவதற்கு முன்பாக, ஓர் ரகஸிய ஸ்தானத்தில் ஒளித்துக்கொண்டு சுவாமியைப் பார்த்துக்கொண்டிருந்தார். இராத்திரி மூன்று ஜாமமானபின்பு அவ்விடத்தில் ஓர் பரிமளமுண்டாய் தீபங்கள் விசேஷமாய்ப் பிரகாசிக்கத் தொடங்கின. சிலநேரத்திற்குள் சுவாமியின் பாதங்களின் வழியாக வெங்கமாம்பாள் வெளிவந்து தான்கொண்டுவந்த புஷ்பங்களால் கடவுளை யலங்கரித்து கனிகளை சுவாமிக்கு ஊட்டி, பரந்தாமனை யாலிங்கனம்செய்துக்கொண்டு முத்தமிட்டு ஸ்தோத்திரங்கள்செய்து கொண்டாடி, கற்பூர நீராஞ்சனம், மங்கள ஆலத்தி முதலியன கொடுத்து, பொழுதெழுமுன் மறைந்துபோனாள். இதையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த மஹந்து பயந்தவராயும், அந்தக் காக்ஷியைகண்ட ஆனந்தத்தினால் மெய்மறந்தவராயும், ஆ! ஹா! இது என்ன ஆச்சரியம். வெங்கமாம்பாள் எவ்விடத்திலேயோ யிருக்கிறாள். இக்கலியுகத்தில் இப்பேர்ப்பட்டபக்தியைநாம்கண்டதும் கேட்டதும் இல்லை. என்ன மஹத்துவம் என்று ஆச்சரியத்துடன் கதவைதிறந்தபின்பு வெளியில்வந்து ஒன்றும் சொல்ல வாய்வராமல் தடுமாறி அர்ச்சகர்களால் தைரியப்படுத்தப்பட்டதும் இரவு நடந்த வெங்கமாம்பாள் மஹத்துவத்தைத் தெரிவித்தார். அதுமுதல் ஜனங்கள் காடுமேடுகளைச் சுத்தி அந்த அம்மையாரைத் தரிசிக்கப் பாடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த அம்மையிருக்குமிடம் கண்டுபிடிக்க ஒரு

வராலும் முடியாது போயிற்று. அன்று முதல் வெங்கமாம்பாள் சுவாமி கோவிலுக்கு வருகிறதுமில்லை. ஆகையால் தேவதேவனான ஸ்ரீ வெங்கடேசபெருமான் தானே வெங்கமாம்பாள் எழுந்தருளிய குகைக்கு ஓர் கிழவனைப்போல் வந்து தாயே! எனக்குப் பசி எடுக்கிறதென்பார். காட்டுக்கனிகளை வெங்கமாம்பாள் கொடுக்க அதைப் புசிப்பார். சில சமயங்களில் தாயே! நான் அநேக அன்பர்களின் இடங்களுக்கு போனதினால் என் பாதங்கள் வலிக்கிறதென்று சொல்லுவார். வெங்கமாம்பாள் தன் கைகளால் சுவாமியின் பாதங்களைப் பிடித்து உபசாரம் செய்வாள். அவள் கடவுளைப் பூசிக்க எண்ணினவுடனே பெருமான் திருக்கோயிலில் எழுந்தருளிய சுயரூபத்தோடு தரிசனம் தருவார். அப்போது வெங்கமாம்பாள் அவரைக் காட்டுப் புஷ்பங்களாலும், துளசிமாலைகளாலும் அலங்கரித்துப் பூசித்து, பஜனை செய்து, திருவேங்கடன் லீலாவதார பெருமைகளைக் கொண்டாடிப் பாடியாடி சுவாமியை யாலிங்கனம்செய்து அவர் திருவடிகளை முத்தமிட்டு, மங்கள ஆலத்திக்கொடுத்து துதிகள் பாடுவாள். அவள் குடியிருந்த விடத்தில் புலி, சிங்கம், யானை, கரடி முதலிய காட்டுமிருகங்கள் அவள் அருகில்வந்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாலும் அவைகளைப்பார்த்து பயப்படாமல் எல்லாவற்றிலும் திருவேங்கடனே அந்தர்யாமியா யிருக்கிறாரென்று நினைத்துக்கொண்டிருப்பாள். அவள் பக்கத்தில் காட்டு சர்ப்பங்கள் முதலிய கொடிய விஷ ஜந்துக்கள்மேல் வீழ்ந்துப் போய்க்கொண்டு ஹரி ஓம் என்கிறதைப்போல் சுவாசம்விட்டுக்கொண்டிருக்கும். இதுவன்றி மயில், குயில், கிளி, அன்னம் முதலிய பக்ஷிகள் அவள் அருகில்வந்து "வேங்கடேசா, தீனரக்ஷகனே" யென்று சொல்லுகிறதைப்போல் மனோகரமான குரலால் பாடிக்கொண்டிருக்கும்.

இங்ஙனமிருக்க, பெரியவியாதியினால் பாதைப்பட்டுக்கொண்டிருந்த ஒருவன் பிள்ளைகளாலும், பந்துக்களாலும் அவன் வியாதியைப்பார்த்து சகிக்காமல் விலக்கப்பட்டதனால் மனவருத்தமுள்ளவனாய் திருமலைக்குச்சென்று அவ்விடத்தில் தர்மார்த்தமாய் கொடுக்கும்படியான பிரசாதங்களைப் புசித்தாவது சுகமாயிருக்கலாமென்று எண்ணி, தட்டித் தடுமாறிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேசப் பெருமான்



சன்னதியைவந்து சேர்ந்தான். அவ்விடத்திலுள்ள மனிதர்கள் அவன் வியாதியைப்பார்த்து சகிக்கமாட்டாமல் கோவிலுக்குத் தூரமாய் துரத்திவிட்டார்கள். அதைப்பார்த்து அவன் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு கடவுளை நோக்கி ஓ தெய்வமே! உலகத்தாரும் என்னை துரத்த நீயும் ஆதரிக்காமற்போனால் இனி யார் எனக்கு துணையென்று பெருங்குரலோடு அழுதுக்கொண்டு இனி காட்டுக்காவது சென்று மிருகங்களுக்கு இரையாய் விடுகிறேனென்று காட்டுக்குள் வெகு தூரம்போய் ஓரிடத்தில் தங்கி பசியினாலும், அசக்தியினாலும் கடவுளைநோக்கி முறையிட்டுக்கொண்டிருக்க, அவ்விடத்திற்குச் சமீபத்திலிருந்த வெங்கமாம்பாள் அவன் முறைகளைக்கேட்டு ஓர் தங்கத்தட்டில் தேவப்பிரசாதங்களை வைத்துக்கொண்டு அவன் எதிரில்வந்து நின்று, அடா! இதைப் புசித்து பசியாற்றிக்கொள்ளென்று சொல்ல, அந்த நோயாளன் மிகுந்த சந்தோஷத்துடன் அதையுண்டு அந்ததேவிக்கு பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்துநின்றான். வெங்கமாம்பாள் அவனைப்பார்த்து அடா! நான் இவ்விடத்தி லிருப்பதாகவும், உனக்கு பிரஸாதங்கள் கொடுத்ததாகவும் ஒருவரிடமும் சொல்லவேண்டாம். அப்படி மீறிசொன்னால் உன் சிரசுபிளந்து ஆவி நீங்கிவிடும். கண்ணைமூடு திறவென்று சொல்லிக்கொண்டே அந்தர்த்தியானமாய் விட்டனள். அப்போதந்த நோயாளன் திருவேங்கடப்பெருமான் சன்னதிக்கு சமீபத்திலிருக்கும் சுவாமி புஷ்கரணியில் அலையைப்போல் மோதிக்கொண்டு வெளியில் வந்தான். அந்த குளத்தில் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள் எல்லாரோகங்களுமற்று தங்கத்தைப்போல் மின்னிக்கொண்டிருக்கும் அவன் மேனியைப்பார்த்து இவரும் ஓர் கடவுளாயிருக்க வேண்டுமென்றெண்ணி, அவனைப் பூஜித்து பலகாரங்கள், வஸ்திரங்கள், காணிக்கைகள் முதலியன சமர்ப்பித்துக்கொண்டு வந்தார்கள். அவன் சில நாள் மௌனமாயிருந்து பிறகு தனக்குள் தான் நானே கடவுளைப் போல் ஆராதிக்கப்பட்டுக் கொண்டிருக்க, வெங்கமாம்பாள் சங்கதி வெளியில் சொல்வதனால் என்ன துன்பமேற்படுமென்றெண்ணி, ஜனங்களோடு வெங்கமாம்பாள் இருப்பிடமும் தனக்கு தங்கமேனி யுண்டான பெருமையும் சொன்னான். அப்படி சொன்னவுடனே பெருமரம் முறிந்ததைப்போல் அவன் தலை

பிளந்து பிராணன் போய்விட்டது. கோவில் அதிகாரிகளும் பக்த ஜனங்களும் வெங்கமாம்பாள் இருப்பிடத்திற்குப்போய் தரிஸனம் செய்ய வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கையில், திரிகால ஞான சம்பன்னளாகிய அந்த லோகமாதா இனி உலகத்தார் கண்ணில் பட்டக்கூடாதென்றெண்ணி அந்தக் குகையின்வழியாகவந்து ஸ்ரீ திருவேங்கடபெருமான் திருவடிகளில் ஐக்கியமாய்விட்டனள். அந்தப் புண்ணியவதி அந்த குகையில் ஜீவித்திருந்தபோது அந்தக் காட்டில் தபம் செய்துக்கொண்டிருக்கும் மஹான்கள் கண்களுக்கு ஏதோ ஒரு காலங்களில் காணப்படுவாள். அவர்கள்அது சுபதினமென்றெண்ணி அந்த லோகமாதாவின் பெருமையைக் கொண்டாடுவார்கள். ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்துக்கு வரும் யாத்திரை வாஸிகள் ஸ்ரீ வெங்கடேசபெருமான் சன்னதிக்கு சமீபத்தில் வடக்கில் இருக்கும் தரிகொண்ட வெங்கமாம்பாள் துளஸிவனத்தை தரிசித்து, அவ்விடத்திலுள்ள சமாதிக்குப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்வார்கள். வெங்கமாம்பாள் ஏற்படுத்திய திருக்குளத்தின் தீர்த்தத்தை சிரத்தின் பேரில் புரோக்ஷித்துக் கொள்ளுவார்கள். சகல ஏரிகளும் ஆறுகளும் ஊத்துகளும் கோடை காலத்தில் வற்றிப்போனாலும், வெங்கமாம்பாள் வரவழைத்த கங்கையுள்ள திருக்குளம் எப்பொழுதும் வற்றாமல், அந்த தேவியினுடைய பிரபாவத்தை இன்றைக்கும் பிரகாசிக்கச் செய்கிறது. ஸ்வாமி க்ஷேத்திரத்திற்கு 15 - மைல் தூரத்தில் இருக்கும் தும்புரு தீர்த்தத்தில் பங்குனிமீ சுக்லபக்ஷம் பௌர்ணமி தினம் ஸ்நானம் செய்வது பெருத்த சுபத்தை யுண்டாக்கு மாகையால், அக்காலங்களில் பக்த ஜனங்கள் கூட்டமாய்ப் போய் அந்த தீர்த்தத்தின் சமீபத்திலிருக்கும் ஸ்ரீ வெங்கமாம்பாள் குகையை தரிசித்தும், அந்த அம்மையார் பஜனை செய்துக்கொண்டிருந்த ஓர் திண்ணையையும் பார்த்து, பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து வருவார்கள். ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்திற்கு மேற்கில் வாயல்பாடு என்கிற கிராமத்திற்கு நான்கு மைல் தூரத்தில் தரிகொண்ட க்ஷேத்திரம் இருக்கின்றது. அவ்விடத்தில் இன்றைக்கும் வெங்கமாம்பாள் பிரபாவம் எல்லோருக்குந் தெரிந்த விஷயமாயிருக்கிறது. ஸ்ரீ திருப்பதி மகா க்ஷேத்திரத்தில் இன்றைக்கும் ஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பாள் ஆலத்தி தினந்தோறும் நடந்தேறி வருகிறது.

## கிருஷ்ணய்யன் சரித்திரம்.

பரதக்கண்டத்தில் தென்தேசத்தை ஆற்காட் நவாப் ஆண்டுக்கொண்டிருந்த காலத்தில் அவர்களிடம் கிருஷ்ணய்யனென்கிற ஓர் சேவகன் இருந்தான். அவனுக்கு தினந்தோறும் நவாபு வீட்டில் நேரிடும் சில்லரைச்செலவுகளை எழுதிவைக்கும் உத்தியோகமாக இருந்தது. அவனுக்கு அந்த உத்தியோகத்தில் சொற்ப வருமானம் வந்து கொண்டிருந்தது. அவன் தகப்பன் ஸ்ரீ வெங்கடாசலபதியின் பேரில் மிகுந்த பக்தியுள்ளவனாகையால், மரணத்தருவாயில் புத்திரனை சமீபத்திலழைத்து அப்பா! உனக்கு நான் கொடுத்துப் போவதற்கு என்னிடம் பொன் பொருள் கிடையாது. என்னைப் போல் நீயும் இனிமேல் நம் குலதெய்வமாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமானது திருநாமத்தைப் பிரதிதினமும் ஜபித்தாவது, எழுதியாவது பிறருக்குச் சொல்லியாவது நூறு தடவை சிந்தனை செய்து கொண்டிருப்பாய். தவிர வருஷந்தோறும் அந்த ஜகதீசனுடைய திருமலைக்குச் சென்று, அவர் தரிசனம் செய்துக் கொண்டு வருவாய். இவ்விதமாய் நடப்பாயாகில் அவர் என்னைக்காட்டிலும் ஆயிரங் கோடிபங்கு ஆபத்பந்துவாய் உன்னை ரக்ஷிப்பார். அவர் நம்பினவரை ஆதரிப்பார். தேடுகிறவரை தேடுவார். நினைப்பவரை நினைப்பார். அவர் சகல புவனங்களுக்கும் பிரபு. ராஜாதிராஜன். தேவதேவன். சகலமும் அவர் அதிகாரத்துக்குட்பட்டிருக்கின்றன. பொம்மைகளை ஆட்டுகிறவன் ஒளிந்து கொண்டு கண்களுக்குத் தென்படாமலிருந்து ஆட்டுகிறதைபோல் அவர் இந்த லோகங்களை நடத்துகிறார். எல்லாம் அவர் செயல் என்று அறியாத மூடர்கள் நான் பிரபு. இந்த வீடுவாசல் தோட்டம் துறவு பசுக்கள் பெண்பிள்ளை சேவர்கள் எனது. இந்தப் பொருள் என்னால் சம்பாதிக்கப்பட்டது. நான் அரசன் என்று பிரமை அடைந்திருப்பார்கள். ஆகையால் நீ அவரை மறவாமல் தியானித்து கொண்டிருப்பதே உன் க்ஷேமத்திற்கு காரணமாயிருக்கிறது. இது தான் உனக்கு ஆஸ்தி என்று சொல்லி பிராணனை விட்டு வைகுண்ட நாயகனுடைய திருவடிகளைச் சேர்ந்தான். தகப்பனுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளை சரிவர பந்து ஜனங்களுடனிருந்து செய்து [illegible]ன் தனக்கு தந்தையால் சொல்லப்பட்ட வாக்கியங்களை

மனதிலெண்ணி, "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை" யென்னு முதுமொழிக் கிணங்க, பிரதிதினமும் ஸ்ரீ வெங்கடேசப்பெருமானை தியானம் செய்துக்கொண்டுவந்தான். ஓர் சமயத்தில் நாவாப்வீட்டு கணக்குகளை எழுதும்போது, வேறொரு ஓலையின்மீது சப்தகோடி மகாமந்திரங்களுக்கு சாரமாகிய ஜெகதீசன் திருநாம மந்திரத்தை எழுதிக்கொண்டுவந்தார். நவாப்புவீட்டில் துலுக்க மதவிஷயங்களைத் தவிர வேறுமதவிஷயங்களை எழுதினாலும் சொன்னாலும் படித்தாலும் அவன் சிரத்தைக் கொய்துவிடும்படி நவாப்பினுடைய உத்தரவாக யிருந்தது. ஆகையால் கிருஷ்ணய்யனோடு உத்தியோகம் செய்யும் துலுக்கர்கள் அடிக்கடி இவர் ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருப்பதைக் கேட்டு கோபமடைந்தவர்களாய் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு நல்ல சமயம் பார்த்து கிருஷ்ணய்யனை தண்டிக்க வேண்டுமென்று எண்ணி யிருந்தார்கள். ஓய்வுவேளையில் கிருஷ்ணய்யன் ஹரிநாமத்தை ஓலையின்பேரில் எழுதிக் கொண்டு வருவதினால் அன்றையதினம் சும்மாயிருந்து மறுநாள் கிருஷ்ணய்யன் வேலைக்கு வந்த பிறகு அவரைப் பார்த்து அடா! துன்மார்க்கனே! உன்னை இதுபரியந்தம் யோக்கியனென்று எண்ணியிருந்தோம். நீ எங்கள் மதவிரோதமான கடவுளைத் துதிக்கலாமா? ஆ! ஆ! நீ என்ன வேலை செய்கிறாய். இது துலுக்கருடைய வீடென்றும் நவாப்புதர்பார் என்றும் உனக்கு கொஞ்சமாவது பயமில்லாமல் போய்விட்டதல்லவா? நவாப்பு இந்த சங்கதியைக்கேட்டால் கத்தியினால் ஒரே வெட்டாக வெட்டி இரண்டு துண்டாகச் செய்து விடுவாரே. இந்த துர்ப்புத்தியை உனக்கு யார் உப்தேசித்தார்கள். துலுக்கர் உப்பையுண்டு அவர்களுக்கே துரோகம் செய்தாய். இனிமேல் இந்த மாதிரி செய்யவேண்டாம். இந்த தடவை உன்னை மன்னித்தோம். "கபர்தார்" என்று சொல்லி மிரட்டினார்கள். அதைக் கேட்டு கிருஷ்ணய்யன் கொஞ்ச நேரம் சும்மாயிருந்து பிறகு "குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனைப் பார்த்து என் தியானத்தில் அசையாமல் இருப்பவர்களை நான் சகல துக்கங்களிலிருந்து காத்தருளுவே"னென்று சொன்ன எம்பெருமான் தன்னை ரக்ஷிக்காமல் போவானோ வென்றெண்ணி, துலுக்கர்களுடைய வார்த்தைகளை லக்ஷியம் செய்யாமல் சந்ததமும் திருவேங்கடப் பெருமான் திருவடிகளை



மிகுந்த பக்தி சிரத்தையோடு தியானித்துக்கொண்டு வந்தார். ஆகையால் மகம்மதியர்கள் தாம் சொல்லியும் கேளாமல் இருப்பதைப்பார்த்து கிருஷ்ணய்யன் பேரில் உத்தண்ட கோபம்கொண்டு கிருஷ்ணய்யன் வெளியில்போயிருந்த சமயம் பார்த்து, கூட்டமாய் நவாப்பிடஞ்சென்று பிரியாது செய்தார்கள். நாவரப்பு அதைக்கேட்டு பொறுக்க முடியாத கோபமுள்ளவனாய் திருப்பதிக் கடவுளை நம்முடைய மாளிகையில் நினைக்கும்படியான காரணமென்ன? அப்பேர்ப்பட்ட துன்மார்க்கனுடைய சிரத்தை நூறுதுண்டுகளாக வெட்டிவிடவேணுமென்று நிச்சயித்து, ஆஸ்தான பண்டிதரான மௌல்வீ சாயபுவை வரவழைத்து கிருஷ்ணய்யன் எழுதிய ஓலைகளைப் பரிசோதிக்கும்படி உத்தரவு செய்தான். பண்டிதர் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டு அந்த ஓலைகளை கண்களில் ஒத்திக்கொண்டு பிஸ்மில்லாஹி, பிஸ்மில்லாஹி, என்று சொல்லிக் கொண்டு முட்டிக்கால் போட்டு கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்யத் தொடங்கினான். அதைப் பார்த்து நவாப்பு அடா என்னவேலை செய்கிறாய். நான் சொன்னதென்ன? நீ செய்கிறதென்னவென்று கேட்க, பண்டிதர் அரசனை நோக்கி துரையே! இது ஆதிமகம்மத் பக்த கோடிகளுக்கு உபதேசித்த குரான் மந்திரங்களாக விருக்கின்றன. இதை எழுதினவன் மகாபுண்ணியசாலியாய் இருப்பானென்று சொன்னான். அதைக்கேட்டு அரசன் பண்டிதரை நோக்கி, அடா! புத்திசுவாதீனத்துடன் பேசுகிறாயா? சுவாதீனம் தவறிப் பேசுகிறாயாவென்று கேட்டார். அதற்குப் பண்டிதர் கண்களை நன்றாய் துடைத்துக்கொண்டு ஓலைகளை மறுபடியும் கவனித்துப் பார்த்து பாதுஷாவே! நான் புத்திசுவாதீனத்துடனே சொல்லுகிறேன். இது அல்லாசாயபு மந்திரங்கள் என்றார். அந்த வார்த்தைகளைக்கேட்டு அரசன் அந்த ஓலையைத் தானும் பரிக்ஷித்துப் பார்த்து கண்களில் ஒத்திக்கொண்டு கண்ணைமூடிக் கடவுளின்பேரில் மனதை வைத்து தியானம் செய்து அந்த ஓலைகளை அவ்விடம் பிரியாது செய்ய வந்திருக்கும் துலுக்கர்களுக்கும் காட்டி அடா பாபிகளே! கடவுளின் அன்பர்களின் பேரில் எப்பொழுதும் குற்றம் சொல்லவேண்டாம். அதனால் உங்களுக்கு பெருத்த ஆபத்துகளை கடவுள் நேரிடச் செய்வாரென்று சொல்லி, இந்தத்தடவை உங்

களை மன்னித்தேன் மற்றொரு தடவை இவ்விதமான பிரியாது வரும் பக்ஷத்தில் உங்கள் பிராணனை உடலிலிருந்து பிசைந்து வெளிப்போகச் செய்வேனென்று சொல்லி துலுக்கர்களை திரஸ்காரம் செய்து, கிருஷ்ணய்யனை வரவழைத்து அநேகவித மரியாதைகள் செய்து மாதந்தோறும் இரு பங்கு சம்பளம் அதிகமாய்க் கொடுக்கும்படி உத்தரவு செய்தான். அதைப்பார்த்து துலுக்கர்கள் ஆ! ஆ!! இது என்ன அநியாயம். இத்தனைபேர் நாம் பார்த்தது பொய்யாய் விட்டதே. பண்டிதன் ஏதோ தந்திரம் செய்து விட்டான். இப்பேர்ப்பட்ட துரோகிகள் உலகத்தின்கண் இருப்பதனாலல்லவோ இஸ்லாம் மதம் உலகத்தின் மதமாகாமலிருக்கின்றதென்று சொல்லிக்கொண்டும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும் புலிவாயிலகப்பட்ட ஆடு தப்பித்துக் கொண்டதைப் போல் பயத்தினால் நடுநடுங்கிக் கொண்டு, ஆனாலும் பரவாயில்லையென்றிருந்தார்கள்.

இப்படியிருக்க கிருஷ்ணய்யன் வருஷந்தோறும் நவாபுக்கு ஏதோ ஒரு போக்குக்காட்டி விடுமுறை பெற்றுக்கொண்டு, திருப்பதிக்குச் சென்று ஸ்ரீ வெங்கடேசப் பரப்பிரம்மத்தைத் தரிசித்துக் கொண்டு வருவார். அப்படிப் போவதற்கு உத்தியோகத்தில் ரஜா வேண்டியதாயிருப்பதினால் அவர் நவாப்பிடம் சென்று ஏதோ ஒரு போக்குச்சொல்லி ரஜா பெற்றுக்கொண்டு போவார். ஆனால் கிருஷ்ணய்யன்பேரில் நவாபினிடம் துலுக்கர்கள் பிரியாது செய்த நாள் முதல் நவாபு கிருஷ்ணய்யன்பேரில் அன்பும் பிரியமுமுள்ளவனாய் அவர் சொன்னபடிக்கெல்லாம் ஒத்துக்கொண்டிருந்தார். ஆகையால் ஒருநாள் கிருஷ்ணய்யன் திருப்பதிக்குச் சென்று திருவேங்கடமுடையானை தரிசிக்க நிச்சயித்து நவாபிடம் சென்று ஊரில் ஒருவர் இறந்துவிட்டாரென்றும் அதற்குப் போகவேண்டியிருப்பதால் ரஜாவேணுமென்றுங் கேட்டார். அதைக் கேட்டு நவாபு புன்சிரிப்புடன் கிருஷ்ணய்யனைப் பார்த்து, ஓ கடவுளின் அன்பனே! உனக்கு எத்தனை நாள் ரஜாவேணுமோ அத்தனை நாள் ரஜாவெடுத்துக்கொண்டு உமக்கு இஷ்டமானபோது வாரும். இதோ செலவுக்கு ஆயிரம் வராகனை யெடுத்துக் கொண்டு போம் என்று சொல்லி ஓர் பை பணத்தை அவர் கையில் கொடுத்து நவாபே சலாம்செய்து அனுப்பினான். அதை யெல்லாம் பார்த்



துக்கொண்டிருந்த துலுக்கச் சேவகர்கள் பொறாமையினால் தடுமாறிக் கொண்டு ஆ! ஹா! இது என்ன அநியாயம். நவாபே கேவலமாகிய இந்து நவுகருக்கு சலாம் செய்கிறாரே. துலுக்கரைப் பார்த்த மாத்திரத்தில் நடுநடுங்க வேண்டிய இந்துக்களுக்கு நவாபு மரியாதை செய்தால் இனி மகம்மதியர்களுக்கு யென்ன மரியாதையிருக்கிறதென்று நினைத்துக்கொண்டு ஏதாவது தப்புகளைக் கண்டுபிடித்து கிருஷ்ணய்யனைத் தண்டிக்க வேண்டுமென்றெண்ணி யிருந்தார்கள். கிருஷ்ணய்யன் திருவேங்கட மலைக்குச்சென்று சுவாமி புஷ்கரணியில் நீராடி ஜெகதீசனை தரிசனம் செய்துக்கொண்டு தான தர்மங்களும் சாது சந்தர்ப்பணையும் செய்துக்கொண்டு ஆனந்தத்தோடிருந்தார்.

இஃதிங்ஙனமாக, இவர் பொய்யான சாக்குகளைச்சொல்லி ராஜாங்க விரோதமான இந்து தேவாலயங்களுக்குப் போனாரென்று தெரிந்து துலுக்கர்கள் சந்தோஷமுள்ளவர்களாய் ஆ! ஹா!! நம்முடைய எண்ணம் கைகூடிவிட்டது. வலையில் அகப்பட்ட மீனைப் போல் கிருஷ்ணய்யன் அகப்பட்டுவிட்டானென்று சொல்லிக்கொண்டு தக்க விசாரணை ஊரில்செய்து சாக்ஷிகளோடும் நல்ல ருஜுவுகளோடும் நவாபிடம் பிரியாது செய்தார்கள். அவன் அதை எவ்வளவு சொல்லியும் நம்பாமல் பிறகு அநேக நூறு சாக்ஷிகள் சொல்லக் கேட்டு சந்தேகமுள்ளவனாய், கிருஷ்ணய்யன் அவ்விதமாகத் திருப்பதிக்குப் போனது உண்மையானால் அவன் மறுபடியும் வீட்டுக்குள் புகுமுன்பு அவனை யிவ்விடம் அழைத்துக்கொண்டு வாருங்கள். நான் நேரில் விசாரணை செய்கிறேன் என்று சொன்னான். அதன்பிரகாரம் செய்வதற்காக துலுக்கர்கள் ஊரெங்கும் காவலாளிகளை நியமித்து கிருஷ்ணய்யனை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். திருப்பதிக்குச்சென்ற அந்த பக்தசிரோமணி ஜெகதீசன் தரிசனம்செய்து திரும்பிவருகையில், மடியில் மாவு பிரசாதமும், துளசிதளமும் வைத்துக்கொண்டு வந்தார். ஊருக்கு அருகே வந்தவுடனே துலுக்கர்கள் அவரைப்பிடித்து மடியைச் சோதித்துப் பார்க்க, மாவுபிரசாதமும் துளசியுமிருக்கக்கண்டு, ஆ! ஹா!! பழைய நாள் எலி இன்றைக்கு அகப்பட்டதென்று சொல்லி தொடைகளைத் தட்டிக்கொண்டு பிரசாதமுள்ள மடி அவிழ்ந்து போகாவண்ணம் மடி

துணியை பிகுவாய்க்கட்டி அவரை நவாபிடம் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஓர் ஹாஜியைப்போல் வேடம் பூண்டு நீண்ட தாடியோடும், ஏகாண்டமான அங்கியோடும் தலைப்பாகையோடும் கையில் ஜபமாலையைத் தரித்துக்கொண்டு நித்தியமுக்தர்களையும் ஹாஜீகளாகச் செய்து அழைத்துக்கொண்டு அடிக்கடி "பிஸ்மில்லாஹி பிஸ்மில்லாஹி" என்று சொல்லிக் கொண்டு நவாப்பிடம் வந்தார். அவரைக் கண்டவுடனே நவாப்பு எழுந்து சலாம் செய்து அவருக்கு மரியாதை செய்து க்ஷேமலாபங்களை விசாரித்தார். அதற்கு ஹாஜீ இன்றைத் தினம் தான் மக்காமதீனா முதலிய புண்ணியஸ்தலங்களை தரிசித்துத் திரும்பி வருகிறேனென்று சொல்லி வலதுபுறம் திரும்பி கிருஷ்ணய்யனைப்பார்த்து அஸ்ரத் நீங்கள் மக்காவிலிருந்து எப்போ வந்தீர்களென்று கேட்டுக்கொண்டே எழுந்து சலாம் செய்தார். அதைப்பார்த்து நவாப்பு திக்பிரமையடைந்தான். சாக்ஷி சொல்ல வந்த கூட்டங்களும் வாயைத் திறந்துக்கொண்டு கண்ணூட்டாமல் இடி விழுந்ததைப்போல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நவாப்பு ஹாஜீயைப் பார்த்து சுவாமி! நீர் கிருஷ்ணய்யனை அறிவீராவென்று கேட்டான். அதற்கு ஹாஜீ, ராஜாவே! நான் அறிவேன். இவர் மக்காவுக்கு வந்து சர்வேஸ்வரனை அல்லாவைப் பூஜித்து புண்ணிய ஸ்தலங்களைப் பார்த்துத் திரும்பி வந்தாரென்று சொன்னார். அப்பொழுது கூடவந்த ஹாஜிகள் எழுந்து "சச்சீபாத்" சத்தியமான வார்த்தையென்று சொல்லி மறுபடியும் உட்கார்ந்து விட்டார்கள். இப்படி சொன்னவுடனே நவாப்புக்கு அளவற்றகோபமுண்டாய் கண்களில் தீப்பொறிபறக்க சாக்ஷிகள் பக்கம் திரும்பிப்பார்த்து தன் உறையிலிருந்த கத்தியைக் கையில் பிடித்தான். அப்பொழுது சாக்ஷிகளில் சிலருக்கு பயத்தினால் கண்களில் நீர் ஆறாகப்பெருகிற்று. சிலருக்கு கண்களில் இரத்தமே துளி துளியாய் வடிந்துக்கொண்டிருந்தது. சிலருக்கு மல ஜலங்கள் உடலத்திலிருந்து வெளிப்பட்டுவிட்டது. சிலருக்கு வியர்வை தேகமெங்கும் நிறைந்துவிட்டது. சிலருக்கு பிராணன் வெளிபோய்விட்டது. சிலருக்கு கால் கைகள் மரத்துப் போய்விட்டது. சிலருக்கு விழித்த கண்கள் மறுபடியும் மூட்முடியாமல் போய்விட்டது. இங்ஙன மிவர்கள் தடுமாறி யிருக்கினும்



அந்த நூறு சாக்ஷிகளில் தைரியமுள்ள ஒருவன் பிரபுவே! எங்கள்மீது இவ்விதம் கோபித்துக் கொள்வது நியாயமல்ல. இவன் மக்காவுக்குப் போகவில்லை. திருப்பதிக்குப்போய் வெங்கடேச பெருமானை தரிசனம் செய்துக்கொண்டு வந்தான். இவன் மடியைச் சோதித்தால் வெங்கடேசனுக்கு ஆராதனைசெய்த மாவும், துளசியுமிருக்கின்றது. அதுவே அத்தாக்ஷி பாருங்கள் என்று உறுதியாய்ச் சொன்னான். அதைக்கேட்டு நவாப்பு கிருஷ்ணய்யன் மடியை தானே சோதித்துப் பார்க்கையில் மக்காவில் அல்லாவின் பேரில் அலங்கரித்த மல்லிகைப் புஷ்பமும், பாத்தியாசெய்த சர்க்கரையுமிருந்தது. அதைப்பார்த்து நவாப்பு ரௌத்திராகாரமான கோபமுள்ளவனாய் அந்த சாக்ஷிகள் எல்லோரையும் தூக்கில் போட்டுக்கொல்லும்படி கட்டளையிட்டு கிருஷ்ணய்யனுக்கு ஓர் பெரிய ஜாகீரை இனமாய்க் கொடுத்து புத்திர பௌத்திர பாரம்பரியமாக அனுபவித்துக்கொண்டிருக்கும்படி உத்தரவு செய்தான். கடவுளுடைய அன்பர்கள் யாராயினும் அவர்கள்மீது குற்றம் சொல்லத்தகாது. அப்படி சொல்லும் குற்றம் எவ்வளவு நியாயமானதாயிருந்தாலும், முடிவில் நவாப்பிடம் சொல்லவந்த சாக்ஷிகளுக்கு உண்டான கதியைப்போல் சிக்ஷையை யுண்டாக்கும். பாகவத அபசாரத்தால் உண்டாகும் துன்பங்கள் இப்பேர்ப்பட்டதென்பதற்கு இதுவே திருஷ்டாந்தம். பிறகு நவாப்பு ஹாஜீகளுக்குத் தக்க மரியாதைகள்செய்து அவர்களால் ஆசீர்வாதம்பெற்று அவர்களை யதாஸ்தானங்களுக்கு அனுப்பினான். அப்போதவர்கள் "ஹல்லாஹா பாத்ரகே" வென்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். கிருஷ்ணய்யன் சகல ஐஸ்வரியபோகங்களையு முடையவனாக வெகுகாலம் திரிகரண சுத்தியாய்க் கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்து முடிவில் கருணைக்கடலாய் அன்பர்களின்பேரில் ஆகாயத்தைப்போன்ற பெருந்தயையும் ஆசையுமுள்ள அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருப்பொற்பாதங்களைச் சேர்ந்தார்.

# சக்கிலி சுவாமிகள் சரித்திரம்.

திருப்பதி மகாக்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் ஓர் கிராமம் இருந்தது. அந்த கிராமத்தில் ஓர் சக்கிலியன் பாதரக்ஷைகளைச்செய்து ஜனங்களுக்கு விற்பனைசெய்தும், அதனால் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு தன் மனைவியுடன் ஜீவனம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு ஓர் வீடும், கொஞ்சம் நிலமும் இருந்தது. எவ்வளவு மஹான்களாயினும் பிராரத்துவத்தை யனுபவித்தே தீரவேண்டுமாகையால், அந்த சக்கிலியனுக்கு பூர்வ ஜன்ம கர்மவசத்தால் ஓர் கொடுமையான வாதரோகம் உண்டாகியதனால் அவன் விசேஷ துன்பப்பட்டுக்கொண்டிருந்தான். பலவித ஔஷதங்களை யுட்கொண்டும் அநேக சிகிச்சைகள் செய்தும் அவனுக்கேற்பட்ட வியாதி தீராமலேயிருந்தது. இங்ஙனமிருக்க, ஒரு நாள் அந்த சக்கிலியன் குடியிருக்கும் வீதியாகத் திருமலைக்குப்போகும் ஓர் ஜனசமூகம் கோவிந்தநாமஸ்மரணைசெய்துக்கொண்டு சென்றார்கள். சக்கிலியர் அதையறிந்து தன் மனைவியைக் கூப்பிட்டு என் அவர்கள் அவ்விதமாக ஹரித்தியானம்செய்துக்கொண்டு போகிறார்கள். அதை விசாரித்து தனக்கு சொல்லவேண்டுமென்று கேட்க, அவள் அதை விசாரித்துக்கொண்டு புருஷனிடம்வந்து "ஓ பிராண நாயகா! ஆறு சக்கரங்களென்னும் ஆதாராதி ஆறு மலைகளை தாண்டி ஏழாவது மலை என்னும் சகஸ்ரார பீடத்தில் சர்வ பாவங்களைப்போக்கி பக்தகோடிகளை ரக்ஷிக்க எழுந்தருளிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் இருக்கிறாராம். அவர் ஒருவரே குழந்தைகளுக்கு காலில் குத்திக்கொண்ட முட்களை குழந்தைகளால் நீக்கமுடியாமல் தாயினால் நீக்கப்படுவதைப்போல், பக்தகோடிகளுடைய ஆகாமிய சஞ்சித பிராரப்தங்களைப்போக்கி ஞானமிர்தத்தையூட்டி ரக்ஷிக்கும் பிரபுவா யிருக்கின்றாராம். ஆகையால் அந்த ஜனங்களுக்கு உண்டான பிராரப்த துன்பம் அவரருளால் நீங்கினமையால் பிரார்த்தனை செலுத்துவதற்காக திருமலைக்குப் போகிறார்களாம்" என்று சொல்லக்கேட்ட சக்கிலியர் ஆ! ஹா!! இது நல்ல விசேஷமாய் இருக்கிறது. என்னுடைய பாதை தீர்ந்துவிட்டால் நானும் என் பிரார்த்தனையைச் செலுத்துகிறேனென்று ஸ்ரீ வெங்கடேசப்பெருமானை மனதில் நினைத்துக்கொண்டு ஓ தெய்வமே! பாவங்களென்னும் பனிக்கு உன் அருளே சூரிய



னலாயிருப்பது நிஜமாயின் என்னுடைய ரோகத்தைப் போக்கி ஆரோக்கியத்தை தருவாய். அதற்கு பதில் உன்னுடைய திருபொற்பாதங்களுக்கு மிகவும் உறுதியான நல்ல பாதரக்ஷைகளைச்செய்து சமர்ப்பிக்கிறேன். நான் செய்யும் பாதரக்ஷைகளுடைய உறுதியைப் பாரும். முதல்தரமானதாயிருக்கும். நீர் அதை தரித்துகொண்டு உமது திருமலையின்பேரில் நன்றாய் நடக்கலாம். சுவாமி! என் குறையை தயவுசெய்து கேட்டு சுகத்தைத் தருமென்று பிரார்த்தித்துக்கொண்டான். சிலநாளைக்குள் அவன் ரோகம் க்ஷீணச்சந்திரனைப்போல் குறைந்துபோய் ஆரோக்கியம் அதிகரித்தபடியால் அவன் ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் செய்த நன்றியை மனதில் எண்ணினவனாயும், அன்பும் பக்தியும் சினேகமும் உறுதியாய்க்கொண்டவனாயும், மனைவிக்கும் அண்டை யயலிலிருக்கப்பட்டவர்களுக்கும் தனக்குண்டான சுகுணத்தைச் சொல்லிக்கொண்டு ஹரியை மிகவும் புகழ்ந்துக்கொண்டிருந்தான்.

பிறகு ஒரு நாள் சுவாமிக்கு பிரார்த்தனை செலுத்துவதற்காகக் காலையில் எழுந்து ஸ்நானம் செய்துக்கொண்டு பரிசுத்தமான உள்ளத்தோடு பரந்தாமனை மனதிலிருத்தி அவர் திருநாமத்தை ஜபித்துக்கொண்டு நல்ல சர்மங்களையும் புதிய ஆணிகளையும், கயிற்றையும், சரிகைக் குச்சுகளையுமெடுத்து ஸ்ரீ ஹரிக்கு பாதரக்ஷைகளை செய்யத்தொடங்கினார். அப்பொழுது ஸ்ரீ ஹரியின் பாதங்களின் அளவு அவருக்குத் தெரியாததனால் விசாரப்பட்டுக்கொண்டு ஓ சுவாமி! உம்மை நான் எப்பொழுதும் பார்த்ததில்லை யாதலால் உன் பாதங்கள் சிறிதோ பெரிதோ எனக்குத்தெரியாது. நீர் குட்டையானவரோ உயர்ந்தவரோ என்பதும் எனக்கு தெரியாது. ஆனால் எப்படியாவது உமக்கு பாதரக்ஷைகள்செய்து சமர்ப்பிக்க வேண்டுமே யென்னசெய்வேனென்று அழுதுக்கொண்டு பரவசனாய்ப் படுத்துத் தூங்கிவிட்டான். அப்பொழுது அவன் சொர்ப்பனத்தில் நீலவர்ணமுள்ள ஓர் மனிதன் ஊர்த்துவ புண்டரங்களைத் தரித்துக்கொண்டு தரிசனம்கொடுத்து அடே! நீ யேன் விசனப்படுகிறாய்? ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் என்னைப்போலிருப்பார். என் காலுக்குச்சரியான பாதரக்ஷைகள் அவர் பாதத்துக்கும் சரியாயிருக்கும். ஆகையால் என் பாதத்தை பாரென்று சொல்லி அளவைக்காட்டிச்

சென்றார். சக்கிலியர் நித்திரையினின்றுந் திடீரென்று விழித்துக் கொண்டு சொர்ப்பனத்திற்கண்ட அளவுக்கே பாதரக்ஷைகள் செய்து முடித்து அதற்கு அநேகவித வர்னங்களைக்கொடுத்து குச்சுகளைக் கட்டி, சிருங்காரங்கள்செய்து, அதைத் தன் சிரமீது வைத்துக் கொண்டு ஸ்ரீ ஹரிக்கு அர்ப்பணஞ்செய்வதற்காகத் திருவேங்கடத் திற்குப் புறப்பட்டார். வழியில் ஸ்ரீ ஹரி நாமபஜனை செய்துக்கொண்டு வேறு எண்ணங்களின்றி நடந்துபோய். திருமலையின் சமீபத்தில் சேர்ந்தார். உலகத்தின் நிர்ப்பந்தத்தால் தான் ஜாதி ஈனனென் றும், திருமலையில் ஏறக்கூடாதென்று மறிந்து மிகவும் விசனித்த வராய் மலைபடிவாரத்திலேயே உட்கார்ந்துக்கொண்டு ஜெகதீசனை நோக்கி முறையிடத் தொடங்கினன்.

ஸ்லோகம்.

"சுவபசோபி மஹிஷால விஷ்ணு பக்தோ திவிஜாதிபஹ
விஷ்ணுபக்தி விஹீனஸ்து திவிஜோபி ஸ்வபசா தமஹ."

நாய் மாமிஸத்தை யுண்ணுஞ் சண்டாளனுயிருந்தாலும் விஷ்ணுபக்தியுள்ளவன் த்விஜர்களாகிய பிரம்மக்ஷத்திரியவைசியர்களுக்கும் சிரேஷ்டமானவனுவான். விஷ்ணுபக்தி யில்லாதவன் த்விஜனுயிருக்கினும் நாய் மாமிஸத்தைச் சாப்பிடும் சண்டாளர்களுக்கும் தாழ்ந்தவனென்று பிரமாணங்களிருக்கினும், உலகத்தார் கேவலம் உலகவாசனையினுல் அந்த பக்தசிரோமணியை மலைமீது செல்லா வண்ணம் ஆக்ஷேபித்தார்கள். ஆகையால் அந்த சக்கிலியர் கடவுளை நோக்கி சுவாமீ! நீரேவந்து இதை எடுத்துக்கொண்டுபோம். நான் உமது திருமலைமீது ஏறக்கூடாதபடியால் என்ன செய்வேன். அது என் குற்றமல்ல என்று சொல்லிக்கொண்டிருக்கையில் பொழுது போய்விட்டபடியால், அந்த மலையின் அடிவாரத்தில் பாதரக்ஷைகளை வைத்து ஹரியை அவ்விடம்வந்து அதை எடுத்துக்கொண்டுபோகும்படி பிரார்த்தித்துக்கொண்டிருந்தார். இராத்திரி இரண்டு ஜாமமாகியும் சுவாமி அவ்விடம் வாரதபடியால், சக்கிலியர் ஓ! ஹோ!! நான் தாழ்ந்த ஜாதியானென்று என் கண்முன்பாக வரமாட்டீர் போலும். ஆயினும் பாதகமில்லை. இதோ யிவ்விடம் பாதரக்ஷகளை வைத்தேன், வந்து எடுத்துக்கொண்டுபோமென்று சொல்லி



தூரமாய்ப்போய் அதே கலவரமாய் சிலநேரமிருந்து பிறகு தூங்கி காலையில் எழுந்து ஸ்நானம்செய்துகொண்டு திரிகரணசுத்தியாய் அவ்விடம்வந்து பார்க்கையில் பாதரக்ஷகள் வைத்த விடத்திலேயே இருப்பதினுல் சக்கிலியருக்கு மிகவும் சங்கடமுண்டாய் கடவுளை நோக்கிமுறையிடலானுர். சுவாமி! நீர் ஏன் நான் அர்ப்பணம்செய்த பாதரக்ஷகளை எடுத்துக்கொண்டு போகவில்லை. என்மேல் உமக்கென்ன கோபமா? மலையேறிகொடுக்கவில்லையென்று மனஸ்தாபமா? பாதரக்ஷகள் நன்று யில்லையென்று உமது மனதிற்கு குறையா? எந்த விபரமும் என்னுடன் சொல்லக்கூடாதா? மௌனமாய் இருந்தால் நான் எப்படி யறிவேன்? ஆனுலும் நான் என்ன செய்யகூடும்? என் பிரார்த்தனை செலுத்தி முடிக்கவேண்டும் இல்லாவிட்டால் என் பிராணனை இவ்விடம்விட்டுப்போகவேண்டும். ஆகையால் ஓ சுவாமி! இன்றையதினமாவது வந்து பாதரக்ஷகளை யெடுத்துக்கொண்டு போம்: பகற்காலத்தில் வர வெட்கமாயிருந்தால் இரவிலாவது வந்து எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொல்லி அந்த சக்கிலியர் அன்னபானங்களில்லாமல் ஹரியை எதிர்பார்த்துக்கொண்டு தூரமாய்ப்போய் ஓரிடத்தில் படுத்துத் தூங்கி மறுநாட் காலையில்வந்து பார்க்கையில், அந்த பாதரக்ஷகள் வைத்தவிடத்தில் அப்படியே இருந்ததால் அவருக்கு விசனம் கடலைப்போல் மேலிட்டது. அவர் குழந்தையைப்போல் அழுதுக்கொண்டு சுவாமி! என் ஜன்மம் மகா பாபமானதென்று யோசித்தீரா? அல்லது பொன் பொருள் ஆபரணங்களைக் கொடுக்காமல் பாதரக்ஷகளைக் கொடுக்கிறனென்று கோபத்துடன் தொடாமல் இருக்கிறீரா? எப்படி யிருந்தாலும் இன்றையதினம் இராத்திரிக்குள் நீர் வந்து இந்தப் பாதரக்ஷகளை யெடுத்துக்கொண்டு போகாமற்போனுல் இதோ யிருக்கும் பாறையின்பேரில் என் தலையை யுடைத்துக்கொண்டு சாவேன். இவ்வளவுதான் என் பிரதிக்கினையென்று சொல்லி மிகவும் மனஸ்தாபத்தோடு அழுதுக்கொண்டு ஓரிடத்தில் படுத்துத்தூங்கி காலையில் பார்க்கவந்தார். முன் ராத்திரியில் அந்த மகாவைபவேஸ்வரன், பக்தி பூர்வமாகச்சமர்ப்பித்த பாதரக்ஷகளைத் தரித்துக்கொண்டு திருவேங்கடமலையில் ஒரு தடவை திரிந்துவந்து மறுபடியும் ஏதா ஸ்தானத்தில் விட்டுப்போனுர். ஆகையால் பாதரக்ஷகள் மிகவும் ஜீரணமா

யிருப்பதைக்கண்டு சக்கிலியர் அளவற்ற சந்தோஷமுள்ளவராய் பாதரக்ஷைகளையெடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டும், சிரசின் பேரில் வைத்துக்கொண்டும், ஹரிநாமபஜனை செய்துக்கொண்டாடி ஹரி! உனக்கு இவ்வளவு தயவு உண்டாய்விட்டதே. நேற்றையதினம் உம்மைக்கல்நெஞ்சமுள்ளவரென்று எண்ணியிருந்தேன். உலகத்தாரெல்லோரும் ஜாதி பேதத்தால் என்னைத் திரஸ்காரம் செய்தாலும் நீர் அவ்விதமாகச்செய்யாமல் ஏழையால் அர்ப்பணஞ் செய்யப்பட்ட பாதரக்ஷைகளை யங்கீகரித்தீர். ஆகையால் இன்றுமுதல் பிரதிதினமும் நூதன பாதரக்ஷைகளைச் செய்து உமக்குக்கொடுப்பேனென்று பிரதிக்ஞை செய்துக்கொண்டு வீட்டிற்குப்போய் புதிய பாதரக்ஷைகளைசெய்து மறுபடியும் சமர்ப்பித்தார். அநேககாலமாக இவ்விண்ணம் செய்துக்கொண்டுவர, ஜகதீசன் கிருஷ்ணவதாரத்தில் குசேலரால் கொடுத்த அவலை அத்யந்த சந்தோஷமாய் கிரகித்ததைப்போல் தினந்தோறும் வந்து அந்த பக்தசிரோமணியால் சமர்ப்பிக்கப்படும் பாதரக்ஷைகளைத் தரித்துக்கொண்டு ஏழுமலைகளையும் ஓர் பிரதக்ஷணம்செய்து மறுபடியும் ஏதாஸ்தானத்தில் அதைவிட்டுப்போவார்.

இங்ஙனமிருக்க ஒரு நாள் சக்கிலியர் உலகத்தை மறந்தவராய் தன் மனதை திருவேங்கடசுவாமியின் செந்தாமரைகளொத்த பாதங்களில் நிறுத்தி ஆனந்த பரவசராய் ஹரிக்குச் சமர்ப்பிப்பதற்காக பாதரக்ஷைகளை செய்துக்கொண்டிருக்கையில் ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் சாமான்ய நரனைப்போல் கையில் ஓர் பை பணத்தைவைத்துக்கொண்டு சக்கிலியின் வீட்டுக்குவந்து சக்கிலி சுவாமி! என்று கூப்பிட்டார். அப்பொழுது சர்வத்தையும் மறந்திருக்கும் சக்கிலியர் வேணுநாதனாகிய திருவேங்கடத்தான் குரலைக் கேட்டமாத்திரத்தில் எழுந்து வெளியில்வந்து நிற்கையில் அவரைப் பார்த்து பரந்தாமன், அடா! உன்னிடம் நல்ல பாதரக்ஷைகளிருக்கிறதா? நான் வெய்யிலில் திரிந்துவந்து மிகவும் தாபத்தை யடைந்திருக்கிறேன். ஆகையால் சீக்கிரமாய் ஏதாவது பாதரக்ஷைகள் கொடு. இதோ இந்தப் பையிலிருக்கும் ஆயிரம் வராகன்களையும் நீ எடுத்துகொள்ளென்று கொடுக்கவந்தார். அதைக்கேட்ட சக்கிலி சுவாமி, ஐயா! நான் ஸ்ரீ வெங்கடேசப்பெருமானுடைய அடிமையாகும். அவர் வேலைதவிர வேறொருவர் வேலையைச்செய்கிறதில்லை. என்னிடம் பாதரக்ஷைகள்



கிடையாது. வேறெவ்விடமாவது போய் வாங்கிக்கொள்ளுமென்று பணிவுடன் சொன்னார். அதைக்கேட்ட மாயபுருஷன் ஓ வெறிபிடித்தவனே! ஆயிரம்வராகன் கொடுக்கவரும் எனக்குக் கொடாமல் ஏதோ பயித்தியம்பிடித்த வார்த்தைகள் சொல்லுகிறாய். சுவல்பவிலையுள்ள பாதரக்ஷைகளுக்கு ஒரு பை பணத்தை யார் கொடுப்பார்கள்? யோசித்து பாதரக்ஷைகளைத் தருவாய். ஆலசியம் செய்யவேண்டாமென்று சொல்ல, சக்கிலியர் அவரைப்பார்த்து ஐயா! எனக்கு ஆயிரம் வராகன்கள் எதற்கு? பூமண்டலாதிபத்தியமாகிலும் வேண்டேன். நித்தியம் என் பிராணநாதனான ஸ்ரீ வெங்கடேசனுடைய சேவை யொன்றேபோதுமானது என்று சொல்ல மாயபுருஷன் அவரை நோக்கி, ஓ மூடமதியே! நீ அறிவில்லாதவனாயிருக்கிறாய். இந்தப் பொருளைக் கைக்கொண்டு உலகத்தில் சுகமாய் ஜீவிக்கலாமே. இரத்னசுவர்ணாபரணங்களை வாங்கலாமே. தனவானென்றும் கனவானென்றும் உலகத்தில் பிரசித்தி யடையலாமே. வீடு வாசல் நிலம் நீர் தோட்டங்கள் முதலானவைகள் உண்டானவனாய் அளவற்ற சுகங்களை யனுபவிக்கலாமே. அப்படியிருக்க நீ ஏன் அறிவில்லாமல் இவ்வித வார்த்தைகளைச் சொல்லுகிறாய் என்றார். சக்கிலியர் அதற்கு ஐயா! எனக்கு காலஹரணமாகிறது. தங்கமலையின்பேரில் எழுந்தருளிய என் பிரபுவுக்குப் பாதரக்ஷைகள் சீக்கிரத்தில் முடிக்கவேண்டியதாயிருக்கிறது. நீர் போய்வாரும். நீர் சொன்ன சுகங்கள் உமக்கே யிருக்கட்டும். மூன்று நாள் போகங்கள் எனக்கேன்? கடவுளின் சேவையைப்பார்க்கிலும் சுகமானது ஒன்றுமில்லை. யென்று சொல்லித் திரும்புகையில் அந்த மாய புருஷனும் வேண்டாமா, வேண்டாமா, வேண்டாமா யென்று மூன்றுதரம் கேட்டுப்பார்த்து பிறகு திரும்பிப்போனார். அப்பொழுது ஓர் மின்னல் உண்டாய் சக்கிலியர் கண்களுக்கு கோடிசூரிய பிரகாஸமான சங்கு சக்கரங்கள் காணப்படுவதும், அண்டபிண்ட சராசரங்களை அளந்ததுவும், நாரத சுக சௌனக புண்டரீக வியாஸாம்பரீஷ மகா முனிவர்களாலும், ராஜரிஷிகளாலும் முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் நித்தியம் தொழுதுகொண்டிருக்கப்பட்டதும், ஆதிசேஷனுடைய தேகத்தின் பேரில் வைத்திருக்கப்பட்டதும், நம்பினோர்களை ரக்ஷிக்கப்பட்டதும், சர்வபாவ துக்கசம்சார மாயைகளைப்போக்கி சாஸ்

6

வித பிரம்மானந்தத்தை யுண்டாக்குவதும், வெண்டாமரைகளைப் போல் மிகவும் மிருதுவானதும், மகா அழகானதும், தரிசிக்கமுடியாததுமாகிய தேவதேவனுடைய திருப்பொற்பாதத்தைக்கண்டு பிரம்மானந்த சாகரத்தில் மூழ்கினவராய் சக்கிலியர் மூர்ச்சையடைந்தார். பிறகு சில நேரத்திற்குள் மூர்ச்சைதீர்ந்து பாற்கடலின் அலைகளைப்போல் மனதில் ஆனந்தம் பொங்க சக்கிலியர் அந்த பாதத்தின் அளவை மனதில் நிதானம் செய்துக்கொண்டு பாதரக்ஷைகளை செய்து ஸ்ரீ வெங்கடேசப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்துக்கொண்டுவர தன் கண்ணுக்கு கோசரமாய்க் கொண்டுவரும் ஹரியின் பாதம் சிறுகச்சிறுக வளர்ந்துக்கொண்டு பிரதிதினமும் பெரிதாய்த் தோன்றிக்கொண்டுவந்தது.

ஆகையால், சக்கிலியர் இவ்வளவு பெரிதான பாதத்திற்குப் பாதரக்ஷைகள் செய்யப் பொருளில்லாமல் திகைத்து ஹரி ஹரி என்ன செய்வேன். இன்றையதினம் நீ எவ்விதமாய் திருமலையின் பேரில் உலாவுவாய், உன் மிருதுவான பாதங்களில் முள்தைத்துக் கொள்ளாதோ? கடினமான கற்கள் பட்டால் நோயுண்டாகாதோ? என்னசெய்வேன் என்று பொருளுக்காக வீதியில் பிச்சை எடுத்தார். ஒருவரும் பிச்சை போடாததினால் அப்பா! உன் பாதங்களுக்கு நோயுண்டானால் நான் எப்படிப்பொறுப்பேன். ஆகையால் என் பிராணனைப் போக்கடித்துக்கொள்ளுகிறேனென்று ஓர் கிணற்றில் விழுவதற்குப் போய்க்கொண்டிருந்தார். அந்த கிணற்றுக்கருகே ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் ஓர் ராஜனைப்போல் வேடம் பூண்டு குதிரையின் பேரில் ஏறிக்கொண்டு தங்கவராகன் நிறைந்த ஓர் பையை கையில் வைத்துக்கொண்டு வந்து சக்கிலியைப் பார்த்து அடா! நீ ஏன் இவ்விதமாய் விசனப்படுகிறாயென்று கேட்க, சக்கிலியர் அவரை நோக்கி ஓ ராஜனே! என் துரையாகிய ஸ்ரீ வெங்கடேசபெருமான் தங்கமலையின்பேரில் எவ்விதமாய் நடப்பார். அவர் கமலங்களொத்த பாதங்களுக்கு முட்களும் கற்களும் படாதோ. ஆகையால் அவர் பாதங்களுக்குத்தக்க பாதரக்ஷைகளை செய்யமுடியாத இந்த ஜன்மமிருந்து என்ன? இல்லாமற் போயென்ன? ஆதலால் இந்தக் கிணற்றில் விழப்போகிறேனென்றார். அதைக்கேட்ட இலக்ஷ்மிகாந்தன் பூர்ண சந்திரனைப்போல் புன்னகைசெய்து அடா! நீ நிரம்பவும் நல்ல



வனாயிருக்கிறாய், இதோ இந்தப் பையிலிருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு உன் இஷ்டப்படிசெய்வாயென்றார். சக்கிலியர் அதை வாங்கிக்கொண்டு பெரிய சர்மங்களை வாங்கி தேவதேவனுக்கு வழக்கம்போல் பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்துக் கொண்டு வந்தார். ஆனால் அந்த விஸ்வேஸ்வரனுடைய பாதங்கள் மென்மேலும் பெரிதாய் வளர்ந்துக் கொண்டு மறுபடியும் உலகத்தை அளவிடுகிறதைப்போல் அவ்வளவு பெரிதாய்க் கொண்டுவந்தபடியால், பொருளிருந்தும் சர்மங்கள் அகப்படுவது மிகவும் கடினமாய்விட்டது. ஆகையால் சக்கிலியர் தன்னால் கூடியவரைக்கும் தேடிப்பார்த்தும் சர்மங்கள் அகப்படாமல் போனபடியால் இனி நான் ஜீவித்திருப்பதில் யாதொருபயனுமில்லை. திருவேங்கடனுடைய மலையடிவாரத்திலேயே என் பிராணனை விட்டுவிடுகிறேன். ஒருக்ஷணமாவது நான் சகிக்கமாட்டேன். என்னப்பனுடைய பாதங்கள் நோய்பட நான் எப்படிப் பொறுப்பேன் என்று அழுதுக்கொண்டு மானாபிமானங்களை விட்டு, ஓசையுடன் முறையிட்டு அன்னபானங்களின்றி அப்பா! நான் எப்படிப் பொறுப்பேனென்று திருமலையடிவாரஞ் சேர்ந்து அலண்டு கீழ்விழுந்து அப்படியே தூங்கிவிட்டார். பக்தபராதீனனான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் அந்த முறைகளைக் கேட்டு பரிதாபமுள்ளவராய் மலையினின்று மிழிந்துவந்து சக்கிலியர் படுத்திருக்குமிடத்திற்குச் சமீபத்தில் நின்று அவர் முதுகின் பேரில் சர்வஜீவகோடிகளுக்கும் அபயஸ்தமான தன் வலது கையினால் தட்டினார். சக்கிலியர் உடனே எழுந்து பார்க்கையில் கோடி சூரியப்பிரகாசமான ஒருஜோதி கண்களுக்குத் தென்பட, அதை ஆச்சரியத்துடன் கண்கொடாமல் பார்த்துக் கொண்டிருக்கையில், அதில் திருவேங்கடப் பெருமானுடைய பாதம் சிறியதாய் தோன்றுகிறதைக் கண்டு ஆ! ஆ!! இவ்வளவு சிறிய பாதத்துக்கு பாதரக்ஷைகளைச்செய்ய சாமான்கள் அகப்படுமே. நான் ஏன் இவ்விதமாய் பிரமித்தேனென்று யோசித்து, வீட்டிற்குத் திரும்பிவந்து புதிய பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்தார்.

இப்படி செய்து கொண்டுவர, சிலநாளைக்குப்பிறகு சக்கிலி சுவாமிகளுக்கு ஹரியை தரிசிக்கவேணுமென்றும், அவர் சமீபத்தில் எந்நாளுமிருக்கவேணுமென்றும், அவரை விட்டு ஒருக்ஷண

மாவது பிரிந்திருக்கக் கூடாதென்றும் அளவற்ற ஆவலுண்டானபடியால் தினந்தோறும் அவர் மிகுந்த தாபத்தால் அழுதுக்கொண்டிருந்து, ஒருநாள் புறப்பட்டு ஸ்ரீ திருவேங்கடமலை யடிவாரம் சேர்ந்து ஹரியை நோக்கி என்பிதாவே! உன்னைக் காணாமல் நான் எப்படியிருப்பேன். ஜாதி ஹீனனென்று என்னை மலையேறாமல் செய்வதும், உன்னைக் காணாமல் செய்வதும் தர்மமோ? உன்னைக் காணாமல் இனி நான் பூமியில் வாழமாட்டேன். என்கண்குளிர உன்னை தரிசித்துத் தீரவேண்டும். இல்லாவிடில் என் பிராணனை இவ்விடத்திலேயே பரித்தியாகம் செய்துக் கொள்ளுகிறேனென்று அழுதுக் கொண்டிருக்கையில், அவர் மனம் புத்தி பிராணன் அசையாமல் நின்றுவிட்டன. ஆதார சக்கரத்திலிருந்து ஓங்காரம் பயப்பட வேண்டாமென்று சொல்வதைப்போல் மேலெழுந்து பிரணவ மண்டலத்தை தெரியும்படி செய்தது. அதில் அனந்த கோடி நக்ஷத்திரங்களும், சூரியசந்திரர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நவரத்தின பிரகாசங்களும் தோன்றியது. ஆறுமலைகளைத் தாண்டி ஆக்ஞாசக்கரத்தில் சகஸ்ரார சிகரம் அகண்ட வைபவத்தோடு கண்களுக்குத் தோன்றியது. அதன் சமீபத்தில் பிராகாரங்களும், துவஜஸ்தம்பமும், தங்கச்சிகரங்களும் பளபளவென மின்னிக்கொண்டிருந்தது. கண்டாநாதம் கோவிந்தா நாராயணா வென்று ஓசையிட்டுக் கொண்டிருக்க, சுவாமி புஷ்கரணி தீர்த்தம் பொன்கலையோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ்விடம் கோடி தீபங்களும், நவரத்தின காந்திகளும், பஞ்சபூதங்களினுடைய ஒளியும், அர்ச்சகர்களும், பக்தசிரோமணிகளும், பிரம்மவேதியர்களும் இருந்தார்கள். யோகிகளும் தபோநிதிகளும் மூடின கண்களைத் திறக்காமல் கைகளில் ஜபமாலையைத் தள்ளிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லக்ஷ்மிதேவி பத்மாவதி பூதேவி நீளாதேவிகளோடு கோடி சூரியப் பிரகாசராய்ப் பாதங்களில் சக்கிலி சுவாமிகளால் முன்னாள் அர்ப்பணஞ் செய்யப்பட்ட பாதரக்ஷைகளைத் தரித்துக் கொண்டு வேதவேத்தியரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் நின்றிருந்தார். அந்த பரப்பிரம்மத்தை சக்கிலியர் கலிதீர தரிசித்து அமிர்தக் கடலில் அழுந்தினதைப்போல் தேகமெங்கும் ஆனந்தத்தால்



நிரம்பியவராய், அக்ஷய பரப்பிரம்மத்தில் கடவுளோடு கடவுளாய்க் கலந்துவிட்டனர்.

சக்கிலி சுவாமிகளுடைய சந்ததியார் இன்றைக்கும் அந்தக் கிரமம் தவறாமல் பாதரக்ஷைகளைச் செய்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு பிரதிவருஷமும் சமர்ப்பித்து வருகிறார்கள். சக்கிலி சுவாமிகள் உலகநிபந்தனையால் மலையேறாமல் அடிவாரத்தில் ஓர் சிலையாய் விட்டதைப்போல் நிச்சயித்து பக்தஜனங்கள் அவ்விடம் சாஷ்டாங்க தண்டனிட்டுக் கொண்டிருக்கும் ஓர் சிலைக்கு ஆராதனை செய்கிறார்கள். சக்கிலி சுவாமிகள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருபொற்பாதங்களுக்கு பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்த மலைக்கு "பாதரக்ஷைமலை" யென்று பெயர். அவ்விடத்தில் ஓர் ஆலயமும் விசேஷமான பாதரக்ஷைகளும் இருக்கின்றன. யாத்திரை வாசிகள் மலையேறுவதற்கு முன்பாக அவ்விடத்திற்கு வந்து பாதரக்ஷைகளை மகத்பிரஸாதமென்று சிரமீது வைத்துக் கொண்டு சக்கிலி சுவாமிகளுடைய பெருமையை இன்றைக்கும் கொண்டாடுகிறார்கள்.

## சென்னை தாஸர் சரித்திரம்.

திருப்பதி க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் சென்னைக்குச் சமீபத்தில் ஓர் கிராமமிருந்தது. அந்த கிராமத்தில் வசித்து வந்த ஓர் தம்பதிகளுக்கு ஹரிபக்தியுள்ள ஓர் புத்திரனிருந்தான். அவனுக்கு யுக்த வயது வந்தவுடனே விவாகம் செய்து தாய் தந்தைகள் சகல சௌக்கியங்களையும் நடத்திக் கொண்டு வந்தார்கள். குமாரனோவெனில் எந்நேரமும் ஸ்ரீ ஹரிபஜனைகள் செய்வதும், ஹரிகதைகளைச் சிரவணஞ் செய்வதும், ஹரிபூசை செய்வதும், ஹரித்தியானத்தில் மிகவும் கவனமுள்ளவனாயிருந்தான். ஆதலால், அவருக்கு வேலை செய்து ஜீவிப்பதற்கு இஷ்டமில்லாமல் போய்விட்டது. சில காலத்திற்குள் தாய் தந்தைகள் "பிராரப்தம் போகதோ நஸ்யதி" பிராரப்தம் தீருமானால் அழிந்து போகுமென்கிறதைபோல் ஒருவர் பின்னொருவராய் இறந்துபோனார்கள். அந்த ஹரிதாஸனுக்கு விசேஷமான புத்திரசந்தானம் உண்டாயிருந்தது. தாய் தந்தைகள் வைத்த பொருளெல்லாம் செல

மாவது பிரிந்திருக்கக் கூடாதென்றும் அளவற்ற ஆவலுண்டானபடியால் தினந்தோறும் அவர் மிகுந்த தாபத்தால் அழுதுக்கொண்டிருந்து, ஒருநாள் புறப்பட்டு ஸ்ரீ திருவேங்கடமலை யடிவாரம் சேர்ந்து ஹரியை நோக்கி என்பிதாவே! உன்னைக் காணாமல் நான் எப்படியிருப்பேன். ஜாதி ஹீனனென்று என்னை மலையேறாமல் செய்வதும், உன்னைக் காணாமல் செய்வதும் தர்மமோ? உன்னைக் காணாமல் இனி நான் பூமியில் வாழமாட்டேன். என்கண்குளிர உன்னை தரிசித்துத் தீரவேண்டும். இல்லாவிடில் என் பிராணனை இவ்விடத்திலேயே பரித்தியாகம் செய்துக் கொள்ளுகிறேனென்று அழுதுக் கொண்டிருக்கையில், அவர் மனம் புத்தி பிராணன் அசையாமல் நின்றுவிட்டன. ஆதார சக்கரத்திலிருந்து ஓங்காரம் பயப்பட வேண்டாமென்று சொல்வதைப்போல் மேலெழுந்து பிரணவ மண்டலத்தை தெரியும்படி செய்தது. அதில் அனந்த கோடி நக்ஷத்திரங்களும், சூரியசந்திரர்களும், முப்பத்து மூக்கோடி தேவர்களும், நவரத்தின பிரகாசங்களும் தோன்றியது. ஆறுமலைகளைத் தாண்டி ஆக்ஞாசக்கரத்தில் சகஸ்ரார சிகரம் அகண்ட வைபவத்தோடு கண்களுக்குத் தோன்றியது. அதன் சமீபத்தில் பிராகாரங்களும், துவஜஸ்தம்பமும், தங்கச்சிகரங்களும் பளபளவென மின்னிக்கொண்டிருந்தது. கண்டாநாதம் கோவிந்தா நாராயணாவென்று ஓசையிட்டுக் கொண்டிருக்க, சுவாமி புஷ்கரணி தீர்த்தம் பொன்கலையோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ்விடம் கோடி தீபங்களும், நவரத்தின காந்திகளும், பஞ்சபூதங்களினுடைய ஒளியும், அர்ச்சகர்களும், பக்தசிரோமணிகளும், பிரம்மவேதியர்களும் இருந்தார்கள். யோகிகளும் தபோநிதிகளும் மூடின கண்களைத் திறக்காமல் கைகளில் ஜபமாலையைத் தள்ளிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லக்ஷ்மிதேவி பத்மாவதி பூதேவி நீளாதேவிகளோடு கோடி சூரியப் பிரகாசராய்ப் பாதங்களில் சக்கிலி சுவாமிகளால் முன்னாள் அர்ப்பணஞ் செய்யப்பட்ட பாதரக்ஷைகளைத் தரித்துக் கொண்டு வேதவேத்தியரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் நின்றிருந்தார். அந்த பரப்பிரம்மத்தை சக்கிலியர் கலிதீர தரிசித்து அமிர்தக் கடலில் அழுந்தினதைப்போல் தேகமெங்கும் ஆனந்தத்தால்



நிரம்பியவராய், அக்ஷய பரப்பிரம்மத்தில் கடவுளோடு கடவுளாய்க் கலந்துவிட்டனர்.

சக்கிலி சுவாமிகளுடைய சந்ததியார் இன்றைக்கும் அந்தக் கிரமம் தவறாமல் பாதரக்ஷைகளைச் செய்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு பிரதிவருஷமும் சமர்ப்பித்து வருகிறார்கள். சக்கிலி சுவாமிகள் உலகநிபந்தனையால் மலையேறாமல் அடிவாரத்தில் ஓர் சிலையாய் விட்டதைப்போல் நிச்சயித்து பக்தஜனங்கள் அவ்விடம் சாஷ்டாங்க தண்டனிட்டுக் கொண்டிருக்கும் ஓர் சிலைக்கு ஆராதனை செய்கிறார்கள். சக்கிலி சுவாமிகள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருபொற்பாதங்களுக்கு பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்த மலைக்கு "பாதரக்ஷைமலை" யென்று பெயர். அவ்விடத்தில் ஓர் ஆலயமும் விசேஷமான பாதரக்ஷைகளும் இருக்கின்றன. யாத்திரை வாசிகள் மலையேறுவதற்கு முன்பாக அவ்விடத்திற்கு வந்து பாதரக்ஷைகளை மகத்பிரஸாதமென்று சிரமீது வைத்துக் கொண்டு சக்கிலி சுவாமிகளுடைய பெருமையை இன்றைக்கும் கொண்டாடுகிறார்கள்.

## சென்னை தாஸர் சரித்திரம்.

திருப்பதி க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் சென்னைக்குச் சமீபத்தில் ஓர் கிராமமிருந்தது. அந்த கிராமத்தில் வசித்து வந்த ஓர் தம்பதிகளுக்கு ஹரிபக்தியுள்ள ஓர் புத்திரனிருந்தான். அவனுக்கு யுக்த வயது வந்தவுடனே விவாகம் செய்து தாய் தந்தைகள் சகல சௌக்கியங்களையும் நடத்திக் கொண்டு வந்தார்கள். குமாரனோவெனில் எந்நேரமும் ஸ்ரீ ஹரிபஜனைகள் செய்வதும், ஹரிகதைகளைச் சிரவணஞ் செய்வதும், ஹரிபூஜை செய்வதும், ஹரித்தியானத்தில் மிகவும் கவனமுள்ளவனாயிருந்தான். ஆதலால், அவருக்கு வேலை செய்து ஜீவிப்பதற்கு இஷ்டமில்லாமல் போய்விட்டது. சில காலத்திற்குள் தாய் தந்தைகள் "பிராரப்தம் போகதோ நஶ்யதி" பிராரப்தம் தீருமானால் அழிந்து போகுமென்கிறதைபோல் ஒருவர் பின்னொருவராய் இறந்துபோனார்கள். அந்த ஹரிதாஸனுக்கு விசேஷமான புத்திரசந்தானம் உண்டாயிருந்தது. தாய் தர்தைகள் வைத்த பொருளெல்லாம் செல

மாவது பிரிந்திருக்கக் கூடாதென்றும் அளவற்ற ஆவலுண்டானபடியால் தினந்தோறும் அவர் மிகுந்த தாபத்தால் அழுதுக்கொண்டிருந்து, ஒருநாள் புறப்பட்டு ஸ்ரீ திருவேங்கடமலை யடிவாரம் சேர்ந்து ஹரியை நோக்கி என்பிதாவே! உன்னைக் காணாமல் நான் எப்படியிருப்பேன். ஜாதி ஹீனனென்று என்னை மலையேறாமல் செய்வதும், உன்னைக் காணாமல் செய்வதும் தர்மமோ?. உன்னைக் காணாமல் இனி நான் பூமியில் வாழமாட்டேன். என்கண்குளிர உன்னை தரிசித்துத் தீரவேண்டும். இல்லாவிடில் என் பிராணனை இவ்விடத்திலேயே பரித்தியாகம் செய்துக் கொள்ளுகிறேனென்று அழுதுக் கொண்டிருக்கையில், அவர் மனம் புத்தி பிராணன் அசையாமல் நின்றுவிட்டன. ஆதார சக்கரத்திலிருந்து ஓங்காரம் பயப்பட வேண்டாமென்று சொல்வதைப்போல் மேலெழுந்து பிரணவ மண்டலத்தை தெரியும்படி செய்தது. அதில் அனந்த கோடி நக்ஷத்திரங்களும், சூரியசந்திரர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நவரத்தின பிரகாசங்களும் தோன்றியது. ஆறுமலைகளைத் தாண்டி ஆக்ஞாசக்கரத்தில் சகஸ்ரார சிகரம் அகண்ட வைபவத்தோடு கண்களுக்குத் தோன்றியது. அதன் சமீபத்தில் பிராகாரங்களும், துவஜஸ்தம்பமும், தங்கச்சிகரங்களும் பளபளவென மின்னிக்கொண்டிருந்தது. கண்டாநாதம் கோவிந்தா நாராயணாவென்று ஓசையிட்டுக் கொண்டிருக்க, சுவாமி புஷ்கரணி தீர்த்தம் பொன்கலையோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ்விடம் கோடி தீபங்களும், நவரத்தின காந்திகளும், பஞ்சபூதங்களினுடைய ஒளியும், அர்ச்சகர்களும், பக்தசிரோமணிகளும், பிரம்மவேதியர்களும் இருந்தார்கள். யோகிகளும் தபோநிதிகளும் மூடின கண்களைத் திறக்காமல் கைகளில் ஜபமாலையைத் தள்ளிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லக்ஷ்மிதேவி பத்மாவதி பூதேவி நீளாதேவிகளோடு கோடி சூரியப் பிரகாசராய்ப் பாதங்களில் சக்கிலி சுவாமிகளால் முன்னாள் அர்ப்பணஞ் செய்யப்பட்ட பாதரக்ஷைகளைத் தரித்துக் கொண்டு வேதவேத்தியரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் நின்றிருந்தார். அந்த பரப்பிரம்மத்தை சக்கிலியர் கலிதீர தரிசித்து அமிர்தக் கடலில் அழுந்தினதைப்போல் தேகமெங்கும் ஆனந்தத்தால்



நிரம்பியவராய், அக்ஷய பரப்பிரம்மத்தில் கடவுளோடு கடவுளாய்க் கலந்துவிட்டனர்.

சக்கிலி சுவாமிகளுடைய சந்ததியார் இன்றைக்கும் அந்தக் கிரமம் தவறாமல் பாதரக்ஷைகளைச் செய்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு பிரதிவருஷமும் சமர்ப்பித்து வருகிறார்கள். சக்கிலி சுவாமிகள், உலகநிபந்தனையால் மலையேறாமல் அடிவாரத்தில் ஓர் சிலையாய் விட்டதைப்போல் நிச்சயித்து பக்தஜனங்கள் அவ்விடம் சாஷ்டாங்க தண்டனிட்டுக் கொண்டிருக்கும் ஓர் சிலைக்கு ஆராதனை செய்கிறார்கள். சக்கிலி சுவாமிகள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருபொற்பாதங்களுக்கு பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்த மலைக்கு "பாதரக்ஷைமலை" யென்று பெயர். அவ்விடத்தில் ஓர் ஆலயமும் விசேஷமான பாதரக்ஷைகளும் இருக்கின்றன. யாத்திரை வாசிகள் மலையேறுவதற்கு முன்பாக அவ்விடத்திற்கு வந்து பாதரக்ஷைகளை மகத்பிரஸாதமென்று சிரமீது வைத்துக் கொண்டு சக்கிலி சுவாமிகளுடைய பெருமையை இன்றைக்கும் கொண்டாடுகிறார்கள்.

## சென்னை தாஸர் சரித்திரம்.

திருப்பதி க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் சென்னைக்குச் சமீபத்தில் ஓர் கிராமமிருந்தது. அந்த கிராமத்தில் வசித்து வந்த ஓர் தம்பதிகளுக்கு ஹரிபக்தியுள்ள ஓர் புத்திரனிருந்தான். அவனுக்கு யுக்த வயது வந்தவுடனே விவாகம் செய்து தாய் தந்தைகள் சகல சௌக்கியங்களையும் நடத்திக் கொண்டு வந்தார்கள். குமாரனோவெனில் எந்நேரமும் ஸ்ரீ ஹரிபஜனைகள் செய்வதும், ஹரிகதைகளைச் சிரவணஞ் செய்வதும், ஹரிபூசை செய்வதும், ஹரித்தியானத்தில் மிகவும் கவனமுள்ளவனாயிருந்தான். ஆதலால், அவருக்கு வேலை செய்து ஜீவிப்பதற்கு இஷ்டமில்லாமல் போய்விட்டது. சில காலத்திற்குள் தாய் தந்தைகள் "பிராரப்தம் போகதோ நஸ்யதி" பிராரப்தம் தீருமானால் அழிந்து போகுமென்கிறதைபோல் ஒருவர் பின்னொருவராய் இறந்துபோனார்கள். அந்த ஹரிதாஸனுக்கு விசேஷமான புத்திரசந்தானம் உண்டாயிருந்தது. தாய் தந்தைகள் வைத்த பொருளெல்லாம் செல

மாவது பிரிந்திருக்கக் கூடாதென்றும் அளவற்ற ஆவலுண்டானபடியால் தினந்தோறும் அவர் மிகுந்த தாபத்தால் அழுதுக்கொண்டிருந்து, ஒருநாள் புறப்பட்டு ஸ்ரீ திருவேங்கடமலை யடிவாரம் சேர்ந்து ஹரியை நோக்கி என்பிதாவே! உன்னைக் காணாமல் நான் எப்படியிருப்பேன். ஜாதி ஹீனனென்று என்னை மலையேறாமல் செய்வதும், உன்னைக் காணாமல் செய்வதும் தர்மமோ? உன்னைக் காணாமல் இனி நான் பூமியில் வாழமாட்டேன். என்கண்குளிர உன்னை தரிசித்துத் தீரவேண்டும். இல்லாவிடில் என் பிராணனை இவ்விடத்திலேயே பரித்தியாகம் செய்துக் கொள்ளுகிறேனென்று அழுதுக் கொண்டிருக்கையில், அவர் மனம் புத்தி பிராணன் அசையாமல் நின்றுவிட்டன. ஆதார சக்கரத்திலிருந்து ஓங்காரம் பயப்பட வேண்டாமென்று சொல்வதைப்போல் மேலெழுந்து பிரணவ மண்டலத்தை தெரியும்படி செய்தது. அதில் அனந்த கோடி நக்ஷத்திரங்களும், சூரியசந்திரர்களும், முப்பத்து மூக்கோடி தேவர்களும், நவரத்தின பிரகாசங்களும் தோன்றியது. ஆறுமலைகளைத் தாண்டி ஆக்ஞாசக்கரத்தில் சகஸ்ரார சிகரம் அகண்ட வைபவத்தோடு கண்களுக்குத் தோன்றியது. அதன் சமீபத்தில் பிராகாரங்களும், துவஜஸ்தம்பமும், தங்கச்சிகரங்களும் பளபளவென மின்னிக்கொண்டிருந்தது. கண்டாநாதம் கோவிந்தா நாராயணாவென்று ஓசையிட்டுக் கொண்டிருக்க, சுவாமி புஷ்கரணி தீர்த்தம் பொன்கலையோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ்விடம் கோடி தீபங்களும், நவரத்தின காந்திகளும், பஞ்சபூதங்களினுடைய ஒளியும், அர்ச்சகர்களும், பக்தசிரோமணிகளும், பிரம்மவேதியர்களும் இருந்தார்கள். யோகிகளும் தபோநிதிகளும் மூடின கண்களைத் திறக்காமல் கைகளில் ஜபமாலையைத் தள்ளிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லக்ஷ்மிதேவி பத்மாவதி பூதேவி நீளாதேவிகளோடு கோடி சூரியப் பிரகாசராய்ப் பாதங்களில் சக்கிலி சுவாமிகளால் முன்னாள் அர்ப்பணஞ் செய்யப்பட்ட பாதரக்ஷைகளைத் தரித்துக் கொண்டு வேதவேத்தியரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் நின்றிருந்தார். அந்த பரப்பிரம்மத்தை சக்கிலியர் கலிதீர தரிசித்து அமிர்தக் கடலில் அழுந்தினதைப்போல் தேகமெங்கும் ஆனந்தத்தால்



நிரம்பியவராய், அக்ஷய பரப்பிரம்மத்தில் கடவுளோடு கடவுளாய்க் கலந்துவிட்டனர்.

சக்கிலி சுவாமிகளுடைய சந்ததியார் இன்றைக்கும் அந்தக் கிரமம் தவறாமல் பாதரக்ஷைகளைச் செய்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு 'பிரதிவருஷமும் சமர்ப்பித்து வருகிறார்கள். சக்கிலி சுவாமிகள் உலகநிபந்தனையால் மலையேறாமல் அடிவாரத்தில் ஓர் சிலையாய் விட்டதைப்போல் நிச்சயித்து பக்தஜனங்கள் அவ்விடம் சாஷ்டாங்க தண்டனிட்டுக் கொண்டிருக்கும் ஓர் சிலைக்கு ஆராதனை செய்கிறார்கள். சக்கிலி சுவாமிகள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருபொற்பாதங்களுக்கு பாதரக்ஷைகளைச் செய்து சமர்ப்பித்த மலைக்கு "பாதரக்ஷமலை" யென்று பெயர். அவ்விடத்தில் ஓர் ஆலயமும் விசேஷமான பாதரக்ஷைகளும் இருக்கின்றன. யாத்திரை வாசிகள் மலையேறுவதற்கு முன்பாக அவ்விடத்திற்கு வந்து பாதரக்ஷைகளை மகத்பிரஸாதமென்று சிரமீது வைத்துக் கொண்டு சக்கிலி சுவாமிகளுடைய பெருமையை இன்றைக்கும் கொண்டாடுகிறார்கள்.

## சென்னை தாஸர் சரித்திரம்.

திருப்பதி க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் சென்னைக்குச் சமீபத்தில் ஓர் கிராமமிருந்தது. அந்த கிராமத்தில் வசித்து வந்த ஓர் தம்பதிகளுக்கு ஹரிபக்தியுள்ள ஓர் புத்திரனிருந்தான். அவனுக்கு யுக்த வயது வந்தவுடனே விவாகம் செய்து தாய் தந்தைகள் சகல சௌக்கியங்களையும் நடத்திக் கொண்டு வந்தார்கள். குமாரனோவெனில் எந்நேரமும் ஸ்ரீ ஹரிபஜனைகள் செய்வதும், ஹரிகதைகளைச் சிரவணஞ் செய்வதும், ஹரிபூஜை செய்வதும், ஹரித்தியானத்தில் மிகவும் கவனமுள்ளவனாயிருந்தான். ஆதலால், அவருக்கு வேலை செய்து ஜீவிப்பதற்கு இஷ்டமில்லாமல் போய்விட்டது. சில காலத்திற்குள் தாய் தந்தைகள் "பிராரப்தம் போகதோ நஸ்யதி" பிராரப்தம் தீருமானால் அழிந்து போகுமென்கிறதைபோல் ஒருவர் பின்னொருவராய் இறந்துபோனார்கள். அந்த ஹரிதாஸனுக்கு விசேஷமான புத்திரசந்தானம் உண்டாயிருந்தது. தாய் தந்தைகள் வைத்த பொருளெல்லாம் செல

வழிந்து போனபடியால், அவர் சம்சாரத்தைப் போஷிப்பதற்காகச் சென்னைக்குவந்து ஓர் உத்தியோகத்தில் சேர்ந்தார். வெகு சுவல்ப வருமானம்வர செலவுக்குக் கஷ்டமாய் விட்டது. அநேகவிதமான கஷ்டங்களைச் சம்சாரத்தில் அனுபவித்துக் கொண்டுவந்தார். எவ்வளவு கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் சகல துக்கங்களையும் போக்கி ரக்ஷிக்கும் கருணைக்கடலாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை பிரதி தினமும் ஆராதித்துக் கொண்டுவந்தார். பதிவிரதையாகிய அவர் மனைவி அவரோடு சேர்ந்து சகல கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தாள். இப்படியிருக்க அவருக்குக் காலையில் எழுந்தது முதல் இரவில் தூங்கும் பரியந்தம் குழந்தைகளாலும் சம்சாரத்தினாலும் உத்தியோகத்தினாலும் அபாரமாகிய மனக்கிலேசமும், சிந்தனையும், விசாரமும் உண்டாயின. சிலவேளைகளில் அவர் மிகவும் ஏழை யாகையால் ஒரு வேளை புசித்தும், சிலவேளைகளில் புசிப்பில்லாமலும் தேக மிளைத்து சம்சாரமென்கிற கட்டில் அகப்பட்ட துரும்புபோல் தத்தளித்து அடியில் கண்ட வண்ணம் யோசிக்கத் தொடங்கினார். நான் சம்பாதிப்பது உண்டிக்குப் போதாமவிருக்கிறது. சம்சாரத்தில் கஷ்டமோ கடலைப்போல் பெரிதாயிருக்கிறது. ஆகையால், துக்கமென்கிற மிருகத்திற்கு என்மனோ காயங்களை இறைகொடுப்பதில் என்ன பிரயோஜனம். கடவுளின் பேரில் எல்லா பாரங்களையும் வைத்து அவரே கதியென்று நம்பி அவர் தியானத்திலிருந்து காயத்தைப் போக்கிவிடுகிறேனென்று மனதைத் திடஞ்செய்துக் கொண்டு மறுநாள் காலையில் எழுந்து ஸ்னானாதி அனுஷ்டானங்களை முடித்துத் திரிகரணசுத்தியாயுட்கார்ந்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பாதபத்மங்களில் மனதை நிறுத்தி கடவுளே நீரே கதியென்று அப்படியே தன்னைமறந்து நிஷ்டையில் இருந்தார்.

இப்படி தினந்தோறும் செய்துக்கொண்டு வந்தபடியால் அவர் சம்சாரத்திற்கு வேறுசகாயம் இல்லாததினால் சம்சாரம் நடந்தேறுவது வெகுகடினமாயிற்று. அவர்மனைவி நகைகளை விற்று சில நாளும், வீட்டுசாமான்களை விற்று சிலநாளும் புருஷனையும் குழந்தைகளையும் போஷித்து வந்தாள். எல்லாம் செலவாய் விட்டபடியால் உஜ்ஜீவிப்பதற்கு வகையின்றி மிகவும் வருந்தியவளாய் சிறு



குழந்தைகளை யெடுத்துக்கொண்டு அண்டை யயல்களி லிருக்கும் வீடுகளுக்குப்போய் வேலைசெய்து கிடைப்பதைக் கொண்டு குழந்தைகளைப் போஷித்து புருஷனுக்கும் கொடுத்து மீதியானபோது தான் புசித்தும் மீதியில்லாதபோது கடவுளே எல்லாம் உன் செயலன்றி என் செயலால் ஆகிறதில்லை யென்று பசியைச் சகித்துக் கொண்டு முகத்தில் துக்கக் குறியின்றி கடவுளுக்கு நாட்களை ஒப்பித்துக் கொண்டு வந்தாள். இப்படியிருக்க மற்றக்குழந்தைகள் வீதிகளில் திரிந்துக்கொண்டு ஐயா! பசியெடுக்கிறதென்று பிச்சையெடுத்துக் கொண்டு யாராகிலும் கொஞ்சம் அன்னம் கொடுத்தால் அவர்களே தாய்தந்தையர்களென்றெண்ணி அவர்கள் பின் சுணங்கனைப்போல் ஓடிக்கொண்டு காலம் போக்கிக் கொண்டிருந்தார்கள். ஹரிபக்தியில் மூழ்கி யிருந்த தாஸர் ஒருநாள் சம்சாரத்தைப் பார்க்கையில் குழந்தைகள் வீதியில் படும்பாடுகளையும் மனைவி சிறுகுழந்தைகளைப் போஷிப்பதற்கும், தனக்காகவும் அவளுக்காகவும் படும்பாடுகளையுமறிந்து ஆற்றொணாத் துக்கமுடையவராய் கடவுளை நோக்கி ஓ தெய்வமே! இனி நான் பூலோகத்திலிருப்பது நலமல்ல. உன் திருவடிகளைச் சேருவதே நன்றாயிருக்கிறது. ஆகையால் புத்தியையும் முக்தியையும் கொடுக்கும் ஓ வெங்கடேசபெருமானே! உன் திருமலைக்கு வந்து உன் திருவடிகளில் பிராணனை விட்டுவிடுகிறேன். இந்த துக்கத்தைச் சகிக்க என்னால் முடியாதென்று சொல்லி அந்த க்ஷணமே திருமலைக்குப்போக புறப்பட்டார். நடந்து போய்க்கொண்டிருக்கையில் அவருக்கு பசி அதிகமாய் விட்டது. பசி பாதையைச் சகிக்காமல் ஹரிதாஸர் கடவுளைநோக்கி அழுதுக் கொண்டு முட்களின்பேரிலும் கற்களின் பேரிலும் நடந்து மிகவும் அலண்டு பொறுக்க முடியாத ஓய்ச்சலினால் கீழ்விழுந்தும், மேலெழுந்தும் சமீபத்திலுள்ள கிராமங்களுக்குப் போய் பிச்சைகேளாமல் ஸ்ரீ வெங்கடேசா! தீனதயாளா! ஆபத்பாந்தவா! உன்னை ஒருவனையே பிச்சை கேட்பேன். நீ ஒருவனே எனக்கும் சகலலோகங்களுக்கும் ரக்ஷகனும் பிரபுவும் தாதாவும். எந்தவழிவிட்டாலும் நீயே கதி, நீயே துணையென்று விசேஷமாய் முறையிட்டுக்கொண்டு மழைத்துளிகளைப் போல் கண்களிலிருந்து ஜலம் பெருக அழுதுக் கொண்டு பசியும் தாகமும் ஓய்ச்சலும் அதிகரித்து மகா அரண்யமாகிய வழியில் கீழேவிழுந்து அப்படியே தூங்கிவிட்டனர்.

இரவானதும் இருள் சூழ்ந்துக் கொண்டது. பனி அவர் தேகசிரமத்தைத் தீர்ப்பதைப்போல் குளிர்ந்த நீர்முத்துகளால் அவர் மேனியை யலங்கரித்தது. இரவு இரண்டு ஜாமமான பின்பு திருமலையில் எழுந்தருளிய கருணைக் கடலாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பட்டையாக நாமங்களைத் தரித்துக் கொண்டு ஓர் பிராமணனைப்போல் வேடம்பூண்டு மணம் பொருந்தி சூடான பிரசாதங்களை ஓர் தட்டில் ஏந்திக்கொண்டு அவ்விடத்திற்குவந்து கோவிந்தா வென்று சப்தம் செய்துக்கொண்டு அவர் பக்கத்தில் உட்கார்ந்தனர். அலண்டு தூங்கிக் கொண்டிருந்த ஹரிதாஸர் தனக்கு வெகு இன்பமாகிய கோவிந்த நாமாமிர்தத்தைக் கேட்டமாத்திரத்தில் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு கண்களைத் திறந்துப் பார்க்க பிராமணன் அவரை நோக்கி, அடே! பேயா! பயங்கரமாகிய காட்டில் ஏன் இவ்விதமாய்த் தூங்குகிறாயென்று கேட்டார். ஹரிதாஸர் அவரை யன்புடன் பார்த்து சுவாமி! எனக்கு பூலோகத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் தவிர வேறு தாய் தந்தைகளும் ரக்ஷகரும் பந்துக்களும் அன்பர்களும் துணையும் நிழலும் கிடையாது. ஆகையால் சம்சார துன்பத்தைப் படமுடியாமல் திருமலைக்குப் போய் அவர் சன்னதியில் பிராணனை ஒப்புவித்து விடுவதற்குப் போகிறேன். பிரயாண அலைச்சலால் இவ்விடத்தில் தூங்கினேன் என்று சொல்ல, பிராமணன் புன்சிரிப்பாகச் சிரித்து, ஆனால் இந்தத் தட்டிலிருக்கும் பிரசாதத்தைப் புசித்து போவென்று சொல்லி, உடனே எழுந்துபோய் விட்டனர். ஹரிதாஸர் அதைப் புசித்து மிகவும் சந்தோஷமுள்ளவராய் கோவிந்தா! நான் ஜன்மம் எடுத்தது முதல் இவ்வளவு திருப்தியான போஜனம் உண்டதில்லை. மேலும் இது சூடாயிருப்பதற்கு என்ன காரணமோ! ஆ! ஹா! அந்தப் பிராமணன் சர்வேஸ்வரனான ஸ்ரீ வெங்கடேசப்பெருமானாய்த் தான் இருக்கவேண்டும். நான் தேடிக்கொண்டு போகும் கடவுள் வழியில் அகப்பட்டும் விட்டு விட்டேனே! என் மூடபுத்திக்கு என்ன செய்வேனென்று சிந்தித்து சிலநேரத்திற்குள் ளெழுந்து யானையைப் போல பலமுடையவராய் மிகுந்த ஆனந்தத்தோடு "ஹரிநாராயண ஹரிநாராயண" வென்று பஜனைசெய்துக் கொண்டு ஆடியும் பாடியும் தேவதேவனைக் கொண்டாடிக் கொண்டு சம்சாரதுக்கத்தை



யும், பிரயாண கஷ்டத்தையும் மறந்து வெகு சுலபமாய் மலைமீதேறி புஷ்கரிணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ வெங்கடேச பெருமான் எழுந்தருளிய மூலஸ்தானத்திற்கு நேராய் வந்துநின்று புஷ்பசரங்களைப் போன்ற ஸ்தோத்திரங்களை கடவுளுக்குச் சூட்டி தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி யிருக்க முன்னாள் இரவில் மஹாந்துவினுடைய சொர்ப்பனத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பிரசன்னராய் பக்த! என் அன்பன் கோவில் வாசலில் வந்திருக்கிறான், நீ அவனை தக்க மரியாதைகளோடு வரவழைத்து சகல சௌக்கியங்களை நடத்து. அவன் சந்தோஷித்தால் நான் சந்தோஷிப்பேன். அவனுக்குக் குறையுண்டானால் எனக்குக் குறையுண்டாகுமென்று உத்திரவளித்துச் சென்றபடியால் காலையில் எழுந்தவுடனே மஹாந்து பல்லக்கைதயார் செய்துக் கொண்டு கோவில் வாசலில் வந்து பார்க்கையில் யாரோ ஒரு சாமான்ய நரன் ஹரியைப் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். இவன் கடவுளுடைய அன்பனாயிருப்பானாவென்று சந்தேகித்து சிலநேரம் யோசித்து, பிறகு அவ்விடத்தில் வேறொருவரும் காணாமற் போனபடியால் ஹரிதாஸர்கள் எப்படி யிருப்பார்களோ வென்று நினைத்து அவருக்குத் தெண்டனிட்டு அவரை பல்லக்கின் பேரில் எழுந்தருளச் செய்து, தன் நிவாஸஸ்தலத்திற்கு அழைத்துச் சென்று, அரசனுக்கு நடத்துவதைப்போல் சகல சௌக்கியங்களை நடத்தியும், சகல தீர்த்தங்களுக்கு போகச் செய்தும், ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தை தினந்தோறும் தரிசிக்கச்செய்தும், அநேக விதங்களாக சன்மானம் செய்து மறுபடியும் ஸ்ரீனிவாஸ மூர்த்தி சொர்ப்பனத்தில் கட்டளை யிட்டபடி ஹரிதாஸருக்கு ஏழுமூட்டை தங்கவராகன்களைக் கொடுத்து பல்லக்கிலேற்றி பரிவாரங்களுடன் அவர் ஊருக்கு அனுப்பிவிட்டனர். ஹரிதாஸர் ஊரைச்சேர்ந்து தன் மனைவியையும் பிள்ளைகளையும் வரவழைத்துக் கொண்டு ஏகசக்கிராதிபதியைப்போல் சகல சுகபோகங்களையு மனுபவித்துக் கொண்டு தினந்தோறும் ஹரிபஜனைகள் விசேஷமாய் செய்துக் கொண்டிருந்தார். இ[illegible]திவ்வண்ணம் நடந்துக்கொண்டேவர ஒருநாள் அநேக பக்தஜனங்கள் பஜனைக்கு வந்திருந்தபோது தாஸர் தம் காலில் கெஜ்ஜைகளை கட்டிக்கொண்டும், ஊர்த்துவ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டும், ஹரிபஜனை

செய்துக்கொண் டிருக்கையில் அவருக்கு ஞானநேத்திரமுண்டாய் கோடி சூரியபிரகாசராகிய ஸ்ரீவெங்கடேச பெருமான் பரஞ்சோதியாய் தரிசனம் கொடுத்து, ஆறுகள் கடலில் சேர்ந்து நாமரூபங்களில்லாமல் மறைந்து போகிறதைப்போல் தனக்குள் ஐக்கியம் செய்துக்கொண்டனர். அவ்விடத்தில் சேர்ந்திருந்த பக்தஜனங்கள் அன்பர்களை ரக்ஷிப்பதே வேலையாயிருக்கும் ஸ்ரீவெங்கடாசலபதி பெருமையைக் கொண்டாடிக் கொண்டு அந்தப் புண்ணிய புருஷனுடைய சரீரத்தைச் சகலவித மரியாதைகளோடு ஹரி பஜனை செய்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பிருந்தாவன மிது தானென்கிறதைப்போல் அனந்தவைபவ பிரம்மானந்தத்தோடு சுடலைக்கு எடுத்துக்கொண்டு போய் தகனம் செய்து விட்டுவந்தனர். இம்மாஹான் வெகு காலம் சென்னையில் இருந்தபடியால் சென்னை தாஸர் என்று அவருக்கு பேரளித்து அவர்பக்தி மகிமைகளை ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டு அநுதினமும் கருணாநிதியாகிய ஸ்ரீவெங்கடேசப் பெருமானை பக்தி பூர்வகமாகத் தியானம் செய்துக்கொண்டிருந்தார்கள்.

## வெங்கடபதி சுபேதார் சரித்திரம்.

இம்மண்ணுலகத்தில் எவராலும் கொண்டாடக் கூடியதும் பூதேவிக்குத் * திலதம் போன்று மாக்ஷிமையுடன் விளங்குவதும் அநேக சாதுக்களைத் தனக்கடிமையாகக் கொண்டதுமாகிய பண்டரிபுரம் என்னும் திவ்வியக்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் ஓர் கிராமத்தில் ஹரிபக்தியுள்ள தம்பதிகளிருந்தார்கள். அவர்கள் பாரம்பரியமாய்ப் பட்டாளத்தில் சிபாய்களாயிருந்ததால் தைரிய சௌரியத்தில் மிகவும் மேன்மையடைந்தவரா யிருந்தார்கள். ஆகையால் அவர்களை பட்டாளத்தார் என்று சொல்வதுண்டு. அவர்களுக்கு அநேக காலம் புத்திரசந்தானமில்லாமலிருந்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் வரப்பிரசாதத்தினால் ஓர்புத்திரன் பிறந்தான். அந்தக் குழந்தைக்கு வேங்கடபதியென்று பேரளித்து தாய்தந்தைகள் மிகவும் பிரீதியுடன் வளர்த்துக்கொண்டு வந்தார்கள். அந்தக்குழந்தை வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து மகா தைரியமுள்ளவனும் சூக்ஷ்மபுத்தியுள்ளவனும், தினந்தோறும் ஸ்ரீ ஹரிநாமத்தை ஜபித்துக்கொண்டு ஹரிகதைகள் சொல்லு மிடங்களுக்குப்போய் பக்தியுடன் சிரவணஞ் செய்துக்கொண்டு மிருந்தான். ஹரிநாம பஜனை செய்யும் ஹரிதாசர்களைப் பார்த்தபோது அவர்களுக்கு தண்டனிட்டு தன்னாலியன்றளவு அவர்களைச் சன்மானம் செய்வான். அவருக்கு யுக்தவயது வந்தபோது பொம்பாய் காலாட்படையில் சிபாயாகச் சேர்க்கப்பட்டு தேகாப்பியாச முதலியன சரிவரப்பயின்று மிகுந்த சாமர்த்திய சாலியாய் விளங்கியதுடன் தனக்கேற்பட்ட வேலைகளைச் சரிவரசெய்து வருவதைப்பார்த்த அதிகாரிகள் அவரை மெச்சி யவருக்கிருக்கும் தீவிரபுத்தியைக் கண்டுமகிழ்ந்து அவருக்கு சுபேதார் என்னும் சேனாதிபதி பட்டமளித்தனர். அது முதல் அவருக்கு வெங்கடபதி சுபேதார் என்று மிகவும் பிரசித்தியான பெயருண்டாயிற்று. அநேக பயங்கரமாகிய யுத்தங்களுக்குப் போய் யாதொரு விபத்தும் நேரிடாமல் ஜெயமடைந்து வருவதால் இவர் மிகவும் பராக்கிரமசாலி யென்று படையாட்களால் புகழப்பட்டு இராணுவப் பிரபுக்களால் அநேக தைரியக் குறிகளையும கௌரவ சின்னங்களையும் கொடுக்கப் பெற்றார். அவர் பட்டாளத்தில் இருக்கும் சிபாய்களெல்லோருக்கும் காயம் அநித்தியமென்றும், கடவுளை துதிசெய்வதே மனிதனாய்ப் பிறந்ததற்கு சாதகமென்றும் தைரியம் பக்தி பராக்கிரமம் வைராக்கியமிருக்கப்பட்டவர்களுக்கு இகபர லோகங்களில் சகலசுகங்கள் உண்டாகுமென்றும் அநேகவித உபந்நியாசங்கள் செய்து அவர்களை தைரியப்படுத்தி முடியாத காரியங்களையுங் கூட சாமர்த்தியத்தினால் முடிக்கச் செய்து பெரும்யுத்தங்களிலும் வென்று வரும்படி செய்வார். காலைமாலையிலும் ஓய்வு

* உலகமானது எவ்வளவு விரிவாய்க் காணப்படினும் இவ்வளவு பெரிய உலகத்தை உண்டாக்கியது கடவுளே யன்றோ? இத்தகைய சிருஷ்டியை இச்சாமாத்திரத்தில் உண்டாக்கும் ஸாக்ஷாத் காரண பூதனாகிய பரந்தாமன் "உலகெலாம் பரந்துளான்" எனினும், பக்தர்களுக்காக வேண்டியே பூமிசை குடிகொள நேர்ந்ததென்பது புராணேதிகாசங்களின் துணிபுபற்றி இம்மண்ணுலகையோர் மங்கையாக மதித்து உயரிய தலங்களை யதற்குத் திலகமெனக் கொள்வர் பெரியோர். ஆனால் ஒவ்வொரு நூலாரும் அங்ஙனம் சொல்லப்புகுந்தால் எங்ஙனம் திலதமென வமைக்கவியலும். பல நூல்களையும் ஒருங்கே வைத்துப் பரிசோதிக்கு மிடங்களில் அவை யொத்திராவெனினும் மனம் சலனமற்றதா யிருக்கும் சமயம் எல்லாம் ஒன்றுபோற் றோன்றுவது ஞானிகளுக்கு மாத்திரமேயன்றி பாமரர்களுக்கு அவ்வண்ணமிராது. ஆனது பற்றியே மேற்கண்டவாறு புண்ணிய க்ஷேத்திரங்களை யுலகத்திற்குத் திலதமென உரைப்பதாகும்.

பரிசோதகர்.

காலத்திலும் ஹரிபஜனைகள் செய்யும்படி சிபாய்களுக்கு உத்திரவு செய்து துவாபரயுகத்தில் நாம் கண்ணால் பார்க்காத கோகுல பிருந்தாவனத்தை இப்பொழுது பார்க்கிறோமென்கிறதைப்போல் சிபாய்களுடைய பஜனைகூடங்களும், கோஷ்டிகளும் பார்ப்பதற்கு அவ்வளவு அற்புதமாயிருக்கும்படி நடத்திக்கொண்டு வந்தார்.

சிலநாட்களுக்குப் பிறகு கடவுளைத் தியானம் செய்துக்கொண்டே காலத்தைக் கழிக்கவேணு மென்றெண்ணி உத்தியோகத்திற்கு ராஜிநாமா கொடுத்துவிட்டு தெற்கேயுள்ள பாலக்காடென்னும் ஊருக்குப்போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் ஹரிபஜனை மந்திரம் ஒன்றை ஸ்தாபித்து தன்னோடு அநேக பக்த ஜனங்களைச் சேர்த்துக் கொண்டு திரிகரண சுத்தியாக நித்தியகல்யாண மங்களாகாரனாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளை பஜித்து ஆடி பாடி கொண்டாடி மெய்மறந்து தேகம் அசைவற்று நிற்பார். அண்டை அயலிலிருக்கும் ஜனங்களும் அவர் பெருமையைக் கேட்டு கூட்டமாய் வந்து அவரை தரிசிப்பார்கள். எவ்வளவு கடவுளை சிந்தனை செய்கிறோமோ, சர்வேஸ்வரனுக்கு அவ்வளவு சமீபத்தில் போகிறோமென்றும், அவரை நினைக்காமல் எவ்வளவு மறந்திருக்கிறோமோ இயமனுக்கு அவ்வளவு சமீபத்தில் போகிறோமாகையால், பக்த ஜனங்களே! கோவிந்தனைத் தியானம் செய்யுங்கள். அவர் திருவடிகளை மறக்காமலிருங்களென்று அவர் அடிக்கடி சொல்லுவதைக்கேட்டு பக்தியில்லாத அநேகர் ஹரிபக்தியுள்ளவர்களாய் அவரோடு பஜனை செய்யத் தொடங்கினார்கள். சில ஹரிதாஸர்கள் அவரைப்பார்த்து இவர் பட்டாளத்தில் சிபாய்களுக்கு சேனாநாயகராயிருந்ததைப் போல், பக்தஜனங்களுக்கும் பக்தநாயகராய் இருக்கத்தக்கவர் என்று சொன்னார்கள்.

மேலும் அவர் பிரதி வருஷமும் தவறாமல் பக்த ஜனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பொருளுள்ள உண்டியை எடுத்துக் கொண்டு முன்னூறுமைல் தூரத்திலுள்ள ஸ்ரீவெங்கடேசப் பெருமான் திருமலைக்குச் சென்று புஷ்கரணியில் ஸ்நானம் செய்து பரப்பிரம்ம சொரூபமாகிய திருவேங்கடப் பெருமானை தரிசனம் செய்து பொருளைச் செலுத்தி மறுபடியும் வருவார். அவர் ஸதா கடவுளையே மனதில் தியானித்து வருவதால் அவர் தேகம் காற்றில்பறக்கும்



பஞ்சுப்போல் லேசாய் விட்டபடியால் முன்னூறு மைலிலுள்ள திருமலைக்குப் போவதும் வருவதும் அவருக்கு சுலபமாயும் ஆனந்தமாயுமிருந்தது. வருஷந்தோறும் அவர் திருவேங்கடபதி சன்னதிக்குப் புறப்படுவதற்கு முன்பாக, பக்தஜனங்களுள்ள வீதிகளில் ஹரிபஜனை செய்துக்கொண்டு பிரதக்ஷணமாய் சுற்றிவருவது முண்டு. அவர் பெருத்த சரீரம் உள்ளவராகையால் ஊர்த்துவபுண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டும், கண்டத்தில் துளசிமாலைகளைப் போட்டுக்கொண்டும், கைகளில் தம்பூரும், தாளமும் எடுத்துக்கொண்டும், பாதங்களில் கெஜ்ஜைகளைக் கட்டிக்கொண்டும் "ஹரி கோவிந்தம் பஜகோவிந்தம்" என்று பஜனை செய்துக்கொண்டும் வர அவர் பிரபாவமுள்ள உருவத்தைப் பார்த்து இவரே சாக்ஷாத் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானென்று நினைத்து பக்த ஜனங்கள் அவருக்கு கர்ப்பூர நீராஞ்சனங்கள் கொடுத்தும், ஆலத்திகொடுத்தும், காணிக்கைகள் கொடுத்தும், தேங்காய் உடைத்தும் அடியேன்களாய் தண்டனிட்டு, புருஷர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும், விருத்தாப்பியர்களும் கோவிந்தா வென்று சொல்லிக்கொண்டு அவர்பின் செல்லுவார்கள். அவர் திருமலைக்குப் போகும் போதெல்லாம் அவரோடு ஓர் அன்பன் உண்டிப் பெட்டியைக் கையிலேந்திக் கொண்டு அவரோடு ஹரித்தியானம் செய்துக்கொண்டு போவதுண்டு. ஒரு வருஷம் அவன் சம்சார சந்தர்ப்பத்தாலும் பந்துக்களுடைய ஆக்ஷேபணையினாலும் போகாமல் நின்றுவிட்டான். ஆகையால் சுபேதார் சுவாமிகள் அவனை வீணாக எதிர்ப்பார்த்து பிறகு தானே உண்டிப் பெட்டியை எடுத்துக்கொண்டு வெங்கடேசப் பெருமான் ஒருவனே சத்தியம், இவ்வுலகவாழ்வெல்லாம் பொய்யென்று நினைத்துக்கொண்டு கொஞ்சதூரம் போனார். இவர் இங்ஙனம் சென்று கொண்டிருக்க வீட்டில் நின்றுவிட்ட அன்பன் காற்று மழையைப்போல் குளிர்காய்ச்சல் உண்டாய் படுக்கமுடியாமல் பிரண்டுருண்டுக் கொண்டு உபாதையடைந்தான். அதைப்பார்த்து பந்து ஜனங்கள் வைத்தியர்களை வரவழைத்து தம்மாலானவரை உபசரணைகள் செய்தும் பாதை தீராமல் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டு வந்தது. அந்த அன்பன் அவர்களைப் பார்த்து ஓ பாவிகளே! உங்களுடைய ஆக்ஷேபணையினால் எனக்கு இந்த விபத்து

நேரிட்டது. நான் கடவுளுக்கு அபசாரம் செய்தவனாயினேன். நீங்கள் உடனே ஓடிப்போய் சுபேதார் சுவாமிகளை இவ்விடம் அழைத்து வாருங்கள். இல்லாவிட்டால் என் பிராணன் போய் விடுமென்று ஓசையிட்டு அழ, பந்து ஜனங்கள் திகிலடைந்து ஓட்டமாய்ப் போய் வெங்கடபதி சுபேதார் பாதங்களில் விழுந்து வருந்திக் கூப்பிட அவர் திரும்பிவந்தார். அந்த அன்பன் அவரைக் கண்டவுடனே அவர் பாதங்களின்மேல் விழுந்து சுவாமி! நீர் கடவுளுடைய உண்மையான அன்பனாகும். நீர் க்ஷமித்தால் கடவுள் என்னை க்ஷமிப்பார். என்னைக் கார்க்கவேணுமென்று பிரார்த்திக்கையில், வெங்கடபதி சுபேதார் நான் வைத்தியனல்லவென்றும், கடவுளுடைய அடிமையென்றும், என்னிடம் சுவாமி துளசியும் தீர்த்தமும் தவிர வேறொன்றுமில்லை யென்றும், ஓர் துளசிதளமும் ஓர் உத்திரணி தீர்த்தமுங் கொடுத்தார். அவ்விடம் சேர்ந்திருந்த ஜனங்கள் யாவருக்கும் ஆச்சரியமுண்டாகும் வண்ணம் அந்த அன்பனுடைய ரோகம் உடனே நீங்கிப்போக, அவன் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு அவரோடு சென்று திருமலையேறி திரிவேணி சங்கமாகிய புஷ்கரணியில் ஸ்நானம் செய்து மூவுலகபூஜிதமான ஸ்ரீ வெங்கடேசப் பரப்பிரம்மத்தை தரிசனம் செய்து திரும்பிவந்தான். சுபேதார் அவர்கள் பூஜா கிரகத்தில் ஸ்ரீவெங்கடேசப் பெருமான் தங்கவிக்கிரகத்தை எழுந்தருளச்செய்த பீடத்தை ஸ்பரிசித்தவர்களுக்கு சர்வபாவங்கள் நசித்து வித்யுத்சக்தி ஆக்ரஷணையைப்போல் கடவுளுடைய பக்திநிலை யேற்பட்டு வந்தது. அதைப் பூசித்தவர்களுக்கு சகல ரோகங்கள் தீர்ந்தும், விபத்துகள் மாண்டும், தரித்திரம் ஒழிந்தும், திருவேங்கடாசலபதி அருளினால் சகல காரியங்களும் கைகூடி வந்தன. சின்னாட்களுக்குப் பின் வெங்கடபதி சுபேதார் ஸ்ரீ ஹரிபஜனை செய்துக்கொண்டு அதேதியானத்திலிருந்து ஸ்ரீ வைகுண்ட நாயகன் திருவடிகளைச் சேர்ந்தனர். அவர் திருமேனியை பக்த ஜனங்கள் பாலக்காட்டிற்கு அருகாமையில் சமாதிசெய்தார்கள். சிலகாலத்தில் அந்த சமாதியில் ஹரிபஜனைகளுடைய ஓசை கேட்டபடியால் அருகிலிருந்த ஜனங்கள் அவர் மகாபுண்ணியவானாயிருக்க வேண்டுமென்றெண்ணி, அந்த சமாதிக்குப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் முதலியன செய்து உலகத்தில் மேலான சுகங்களை யனுபவித்துக்



கொண்டுவந்தார்கள். காலவசத்தால் சிலநாளைக்குள் அந்த இடம் ஓர் மகம்மதியனுடைய சுவாதீனமாய் விட்டதால் அவன் அந்த சமாதியை இடிக்கத் தொடங்கினான். அப்பொழுது அவன் திருஷ்டி பார்க்க முடியாவண்ணம் குருடாய் விட்டது. அவன் தேகம் பெருவியாதியினால் பீடிக்கபட்டு புழுக்கள் சேர்ந்து அழுகி துண்டு துண்டுகளாய் முறிந்து விழுந்தது. வெங்கடபதி சுபேதார் சந்ததியார் இன்றைக்கும் அந்த தேசத்திலிருக்கிறார்கள். அவர் பஜனை மந்திரமும் இருக்கின்றது. வெங்கடபதி சுபேதார் உண்டி யென்று காணிக்கை வருஷந்தோறும் ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்திற்கு வருகின்றது.

## ஸ்ரீ திருப்பதி மங்கம்மாள் சரித்திரம்.

ஸ்ரீ திருப்பதி புண்ணியக்ஷேத்திரத்தில் வசித்து வந்தவர்களில் புண்ணிய மிகப்பொருந்திய ஓர் சதிபதிகள் மனமொத்து வாழ்ந்திருந்தனர். அவர்களுக்கு ஓர் பெண் இருந்தாள். ஸ்ரீவெங்கடேச பெருமான் மார்பில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் லக்ஷ்மிதேவி தாமரை கமலத்தில் அலமேலு மங்கை யென்ற பேருடன் அருகாமையிலிருக்கும் திருச்சானூரில் எழுந்தருளியதால், தான் பெற்ற பெண்ணுக்கு மங்கை என்றும் அலமேலு மங்கை யென்றும் பேரளித்து, அந்த பெண்ணுக்கு தக்கவயது வந்தகாலத்தில் அந்த ஊருக்கடுத்திருக்கும் ஓர் கிராமத்தில் சுகுணமுள்ள ஓர் சிறுவனுக்கு சம்பிரமமாக விவாகம் செய்துக் கொடுத்தார்கள். அந்தப் பெண் சுபாவமாக சாதுக்களையும், கடவுளுடைய அடியார்களையும் பார்த்தபோதெல்லாம் அவர்களுக்கு உண்டிமுதலிய வளித்து, சேவகன் யெஜமானனுக்கும், சீஷன்குருவுக்கும் சேவை செய்கிறதைப்போல் உபசரணை செய்துக்கொண்டு வந்தாள். தினந்தோறும் திரிகரண சுத்தியாக வேங்கடமலையில் எழுந்தருளிய கடவுளின்பேரில் பக்தி செலுத்தி எந்நேரமும் தியானஞ் செய்துக்கொண்டு வந்தாள். வீட்டுவேலைகள் முடிந்த பிறகு ஒரு நிமிஷகாலமாவது வீண்போக்காமல் ஹரிபஜனை செய்துக்கொண்டும், சாதுக்களுக்கு சேவைசெய்துக்கொண்டு மிருந்தாள். சிலவேளைகளில் அந்த ஊரில் யாராவது சாதுக்கள் வந்திருக்கிறார்களாவென்று தேடிக்கொண்டு போய், அவர்களுக்கு பலகாரங்களைக் கொடுத்து சேவைசெய்து வீட்டுக்கு

அழைத்துக்கொண்டு வந்து சன்மானம் செய்வாள். இப்படி செய்துகொண்டு வருகிறது பக்தர்களில் அநேகருக்கு சம்மதமில்லை யென்ருலும், புருஷனுக்கு மனம் திருப்தியா யிருந்தது. அவன் மாணிக்கங்களை பத்திரம் செய்திருக்கும் பெட்டிகளைப்போல், கடவுளுடைய அன்பர்களே கடவுள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சொரூபங்களென்றும், எவ்வளவு சுகங்களை யனுபவித்தபோதிலும் பிரபஞ்ச வாழ்க்கை நசித்துப்போகுமென்றும், கடவுளை நாடுவதே விவேகிகளுடைய சிந்தனை யென்றெண்ணி தன்மனைவிபோகும் வழிக்கு தானும் அனுகூலமாயிருந்தான். அவாள் வீட்டில் தினந்தோறும் ஓர் ஹரிதாசருக்கு புசிப்பைக் கொடாமல் புசிக்கிறதில்லை. இப்படி வெகு காலமாய் நடந்தேறிவர ஒருநாள் மங்கம்மாள் அவ்வூரில் யாராவது சாதுக்கள் வந்திருக்கிருர்களாவென்று பார்ப்பதற்குப் புறப்பட்டுப் போய் யாரையும் காணுமல் அவ்வூருக் கருகிலிருக்கும் ஓர் விஷ்ணுகோவிலுக்குள் பிரவேசித்து சுவாமியை தரிசனம் செய்யலாமென்று எண்ணினுள். அப்பொழுது அவ்விடத்தில் கோபிசந்தனத்தை முகத்தில் தரித்துக்கொண்டு மேகவர்ணத்தைப்போன்ற தேகமுள்ளவனுய் கையில் ஓர் தடியை பிடித்துக் கொண்டிருக்கும் கிழவனைக் கண்டாள். அந்த மாயபுருஷன் சாதுவாயிருக்க வேணுமென்றெண்ணி அவர் பாதங்கள் பேரில் விழுந்து நமஸ்காரம் செய்து அவரை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் ஸ்நானம் செய்துவைத்து அநேகவித பலகாரங்களோடு போஜனம் வைத்தாள். அப்பொழுது அந்தசாது அன்னத்தில் கையை வைத்து அவர்களைப் பார்த்து ஓ தம்பதிகளே! மறுபடியும் நான் இவ்விடம் வந்தால் இன்னும் ஓர் தடவை போஜனம் வைக்க வேணும். அதற்கு சம்மதமிருந்தால் சுவர்ணமலையில் எழுந்தருளிய கடவுளின்பேரில் சத்தியம் செய்துகொடுங்கள்.' அப்படி யில்லாவிட்டால் இதை நான் புசிக்கமாட்டேனென்று சொல்லி எழுந்தார். அப்பொழுது தம்பதிகள் அவரை உட்காரும்படி செய்து அப்படியே அந்தக் கடவுளின் பேரில் ஆணையாக போஜனம் வைக்கிறோம். நீங்கள் புசியுங்களென்று பிரார்த்தித்தார்கள். அந்த சாது ஓர் பிடி அன்னத்தை புசித்து சொல்லாமல் எப்படியோ போய் விட்டார்.



சிலநாட்களுக்குள் அந்த ஊரில் விபரீதமாகிய பஞ்சம் உண்டாயிற்று. பக்ஷிகளுக்குங்கூட தானியங்கள் அகப்படாமல் போகும்படியான கஷ்டகாலம் நேரிட்டது. அப்பொழுது மங்கம்மாளும் அவள் புருஷனும் வீட்டிலிருந்த வஸ்துக்களை ஒன்றின்பின் னென்ருய் விற்றுப் புசித்துவிட்டார்கள். கையிலிருந்த பொன்னும் பொருளும், வீட்டிலிருந்த சகல வஸ்துக்களும் செலவாய்விட்டது. பிறகு இரண்டு நாள் புசிப்பில்லாமலிருந்து சதிபுருஷர்களிருவரும் ஏகோபித்து யோசனை செய்து நாளை காலை மங்கிலியத்தையாவது விற்று போஜனம் செய்யவேணுமென்று நிச்சயித்தார்கள். ஆகையால் மறுநாள் காலையில் மங்கம்மாள் மங்கிலியத்தைக் கையில் வைத்துக்கொண்டு, ஜெகதீசன் பேரில் சகல பாரங்களையும் போட்டு, எல்லாம் அவன் செயலென்றெண்ணி, நேரிட்ட துன்பகளைச் சகித்துக்கொண்டு, நடைத்தெருவாய்ப் போனுள். அப்பொழுது ஓர் கடைக்காரனுகிய செட்டி அவளைப் பார்த்து அம்மா! உன் கையில் 'என்னவென்று கேட்டான். அதற்கு மங்கம்மாள் மங்கிலியமென்றும், மூன்றுநாளாய் போஜனம் இல்லாததினுல் விற்கவந்தேனென்றும் சொன்னுள். அதைக்கேட்ட செட்டி சந்தோஷப்பட்டு மனதில் துராலோசனை யுள்ளவனுய் அவளைப் பார்த்து ஓ சுந்தரியே! உலகத்தில் உன்னைப்போல் அழகுள்ள ஸ்திரீகள் மிகவும் கொஞ்சமாயிருக்கிருர்கள். உன் ரூபலாவண்ணியுங்களுக்கு இக்கஷ்டம் உனக்கு வரத்தகாது. ஆகையால் என்னோடு சேர்ந்து வாழ்வதற்கு உனக்கிஷ்டமானுல் உன்மங்கிலியம் உன்னிடமே யிருக்கட்டும். இப்பவே உனக்கு ஆயிரம் வராகன் கொடுக்கிறேன். கொடாவிட்டால் ஏண்டா கசடா வென்று கேளென்று சொன்னுன். அதைக் கேட்ட மங்கம்மாள் மிகவும் அவமானத்தோடு மனவருத்தமடைந்து வாடிய முகத்துடன் கீழ் நோக்கியவண்ணம் ஐயா! ராவணன் முதலியவர்கள் பரஸ்திரீகமனத்தால் பட்டபாட்டை நீர் கேட்டதில்லையா? உன் துர்ப்புத்தியைவிட்டு கடவுளுடைய பக்தியை மனதில் சிந்தித்து சன்மார்க்க பிரவர்த்தி யுள்ளவனுயிருந்தால் சுகப்படுவாயென்று சொன்னுள். அதைக்கேட்ட செட்டி இவள் கடவுளுடைய பக்தியுள்ளவளாய் இருக்கிருள். நான் தெரியாமல் அபசாரவார்த்தை சொல்லி விட்டேனென்றெண்ணி மங்கம்மாளுக்கு

நமஸ்காரம் செய்து மங்கிலியத்தை வாங்கிக்கொண்டு புத்துபணம் கொடுத்து அனுப்பினன். அந்தப்பொருள் இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக செலவாய் விட்டபடியால், அவர்களுக்கு மறுபடியும் கஷ்டம் அதிகமாய்நேரிட்டது.

மூன்றுநாள் வரையில் ஓர் துளி ஜலமாவது புசியாமல் பட்டினியால் ஒவ்வொருவர் ஒவ்வொரு மூலையில் உட்கார்ந்துக்கொண்டு கடவுளே! இனி யென்னசெய்வோம். நீயே கதியென்று திருவேங்கடாசல பெருமானை தியானித்துக் கொண்டிருக்கையில், பூர்வத்தில் வந்த கோபிசந்தன சாது வந்தார். அவரைப் பார்த்தவுடனே மங்கம்மாள் மேலெழுந்து அவரை யழைத்து பரிசுத்தமான ஜலத்தால் அவர் பாதங்களை சுத்தம் செய்து ஓர் திவ்யமாகிய ஆசனத்தின்மீது எழுந்தருளச் செய்தாள். அந்தசாது பசிமிகுந்தவராயும், வெகு தூரத்திலிருந்து வந்தபடியால் தேகம் அலண்டதாலும் மங்கம்மாளைப் பார்த்து, தாயே! நான் வெகு பசியாயிருக்கிறேன். முன் நீங்கள் திருவேங்கடப் பெருமான் பேரில் ஆணையிட்டபடிக்கு சீக்கிரமாய் பொசிப்பைத் தருவாய் என்று சொன்னார். மங்கம்மாள் உடனே அப்புறம்போய் புருஷனோடு சொல்ல, இருவரும் சிலநேரம் ஒன்றுந் தோன்றாமல் மரம்போல் அசைவற்று நின்று கண்களில் மாத்திரம் சிறு ஆற்றோட்டத்தைப்போல் ஜலம் பெருகிவர விசனத்துடன் நின்றிருந்தார்கள். இப்படி சிலநேரமிருந்து மங்கம்மாள் புருஷனை நோக்கி பிராணநாயகா! இனி நாம் செய்வதென்ன? என்மனதில் ஓர் யோசனை மாத்திரம் நேரிட்டது. அது உங்களுக்கு சம்மதமானல் தெரிவிக்கிறேனென்று சொன்னாள். அதைக் கேட்டு புருஷன் தக்ஷணமே சொல்லும்படி கட்டளையிட்டான். மங்கம்மாள் தேகாபிமானத்தை விட்டு கடைத்தெருவில் ஓர் செட்டி யிருக்கிறானென்றும் அவன் தன்னை மோகித்தானென்றும், அவனிடம் போனல் பொருள் அகப்படுமென்றும் சொன்னாள். அதைக்கேட்ட புருஷன் பிரமையடைந்து சிலநேரம் நின்றிருந்து பிறகு மனைவியைப் பார்த்து அப்படியே செய். திருவேங்கடப் பெருமான்மேல் வைத்த ஆணை வீணாகப் போகக் கூடாது. மானம் போனாலும் பெரிதல்ல. பிராணன் போனாலும் பெரிதல்ல வென்று சொன்னான். உடனே மங்கம்மாள் புறப்பட்டு



அந்த செட்டி வீட்டுக்கு வந்து அவனைப்பார்த்து ஐயா! உமதிஷ்டப்படி யிருக்க சம்மதித்து வந்தேன். என் வீட்டில் திருவேங்கடப் பெருமானைப்போல் ஓர் சாது வந்திருக்கிறார். அவருக்கு போஜனம் வைக்கவேண்டி யிருக்கிறதால் பொருளைத் தாரும். நான் அவரை சன்மானித்து அனுப்பிவிட்டு உடனே உன் வீட்டிற்கு வருகிறேன் என்று சொன்னாள். அதைக்கேட்ட செட்டி ஆச்சரியப்பட்டுக் கொண்டு, இது என்ன பக்தி, இப்பேர்ப்பட்ட பக்தியை கலியுகத்தில் செய்கிறவர்களுண்டா? இந்தப் புண்ணியவதி வீட்டுக்கு வந்திருக்கும் சாது எப்பேர்ப்பட்டவராய் இருக்கவேண்டும். சாக்ஷாத் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானே வந்திருப்பாரென்று மனதில் எண்ணி மங்கம்மாளை நோக்கி தாயே! நீ மகாபுண்ணியவதியாய் இருக்கிறாய். உனக்கு நான் செய்த அபசாரத்திற்கு இந்த மாய வுலகத்தில் எத்தனை ஜன்மங்கள் புழுக்களாய்ப் பிறந்து துன்பப்படவேண்டி யிருக்கிறதோ நானறியேன். நீ என்னை க்ஷமித்து என்னைதோஷம் தொடரா வண்ணம் ஆசீர்வதித்தால் போதுமானது. இதோ ஆயிரம் வராகன் எடுத்துக்கொண்டுபோ அம்மாவென்று கீழ்விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். உடனே மங்கம்மாள் பொருளை எடுத்துக் கொண்டு காற்றுவேகமாக சகல பதார்த்தங்களையும் வாங்கிக் கொண்டு வீட்டிற்குபோய் சமையல் செய்யத் தொடங்கினாள். புருஷனும் அவளோடு கூட சகாயமாயிருந்து சகல பதார்த்தங்களும், பலகாரங்களும் செய்து முடித்தான். அதற்கு பிறகு பெரிய வாழை இலையைப் போட்டு போஜன பதார்த்தங்களை வட்டித்து சாதுவை அழைக்கையில் அவர் கோபஞ் செய்துக்கொண்டு இவ்வளவு நேரமாய் பசியோடு வைத்தபடியால் இனி யிவ்விடத்தில் புசிக்கமாட்டே னென்று பிடிவாதமாய்ப் பேசினார். அப்போது தம்பதிகளிருவரும் அவர் பாதங்கள் பேரில் விழுந்து வேண்டி கெஞ்சிக்கொண் டிருந்தார்கள். இவர்களிவ் விதமிருக்க, கடை செட்டி மங்கம்மாளை தரிசனம் பண்ணினது முதல் சத்துவகுணமுள்ளவனாய் தான் செய்த அபசாரத்திற்குத் தக்க தோஷநிவாரணம் செய்துக்கொள்ளவேணுமென்றும், சாதுக்களைத் தரிசித்து அவர் சகவாசம் செய்யவேணுமென்றும், திருவேங்கடப் பெருமான் திருவருளுக்கு ஆளாகவேண்டுமென்று மெண்ணி

யிருந்தான். மேலும் மங்கம்மாள் வீட்டில் வந்திருக்கும் சாதுவைப் பார்ப்பதற்கு மிருந்த ஆவலுள்ளவனாய் அநேகவித கனிகளை வாங்கிக் கொண்டு புறப்பட்டு வந்தான். மங்கம்மாள் வீட்டில் சாது மிகவும் முரட்டுத் தனம் செய்துக்கொண்டு தடியை கையில் பிடித்துக்கொண்டு புறப்பட்டார். மங்கம்மாள் மிகவும் கெஞ்சிக் கொண்டு அவர் தடியை தானும் ஒரு பக்கத்தில் பிடித்துக்கொண்டு என் ஐயனே, புசிக்காமல் போவது தர்மமாவென்று பின்தொடர்ந்து போனாள். புருஷனும் பின்தொடர்ந்தான். சாதுவைப் பார்க்க வந்த செட்டி அவ்விடம் நடக்கும் விசேஷங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டு தானும் அவர்கள் பின்தொடர்ந்தான். அந்த சாது என்ன சொன்னபோதிலும் கேளாமல் சிறுகச் சிறுக பசுவைப்போலும், பிறகு அஸ்வத்தைபோலும், பிறகு காற்றைப் போலும் ஓடத்தொடங்கினார். அவர் ரூபம் பஞ்சபூத பிரகாசமாய் பரப்பிரம்ம ஒளி நிறைந்ததாயிருந்தது. மங்கம்மாள் அவர் தடியை விடாமல் சஸ்வரூபதியான முள்ளவளாய், என் துரையே! என் அறிவே! என் அன்பே! என்று கூவிக்கொண்டு ஓடினாள். அந்த சாது சுறுசுறுப்பாய்ப் போய் திருமலையேறி மேடு பள்ளங்களிலும், முட்கள் கற்கள் பேரிலும் இல்க்ஷியமில்லாமற் போய் தங்கமயமாகிய திருவேங்கடப் பெருமான் திருக்கோயிலுக்குள் புகுந்து, மூலஸ்தானத்தில் எழுந்தருளிய சாக்ஷாத்காரனான ஸ்ரீ வெங்கடேச பரப்பிரம்மத்தோடு பரப்பிரம்மமாய் நிறைந்து விட்டனர். மங்கம்மாளும் தடியை விடாமல் லக்ஷ்மிதேவி ஹரியினது மார்பில் குடியிருக்கிறதைப்போல் சர்வேஸ்வரனுடைய அகண்ட கர்ப்பத்துக்குட் பிரவேசித்து ஐக்கியமாய்விட்டாள். பின்தொடர்ந்து வந்த புருஷன் முன்போன இரண்டு பேரையும் காணாமல் மங்கா! மங்கா! வென்று கூவிக்கொண்டு ஹரிமாயை யிவ்விதமாய் நேரிட்டதென்றும், தன் மனைவி பரிபூரண பக்தியினால் ஜகதீசனுடைய திருவுள்ளத்தில் பிரவேசித்தாளென்றும் எண்ணி தன் மனைவியை கூப்பிட்டுக் கொண்டு வர, காட்டில் ஓசை ஏன், ஏன், என்று கேட்டது. அந்த ஓசை யுண்டாகும் திக்கை நோக்கி கூப்பிட்டுக் கொண்டே வந்து ஜெகதீசனுடைய திருக்கோயிலில் பிரவேசித்து மங்கா! வென்று கூப்பிட, ஏன், ஏன், ஏன், என்று



மூன்று தடவை பதில் சத்தம் உண்டாகி மறுபடி எத்தனை தடவை கூப்பிட்ட போதிலும் பதிலில்லாமற் போய்விட்டது. அதற்கு மேல் அவன் வீட்டிற்கு வந்து அனுதினமும் திருவேங்கடப் பெருமானை தியானித்துக்கொண்டு ஐயனே! மங்கையை கைக்கொண்டதைப்போல் என்னையும் ரக்ஷிக்கவேண்டுமென்று முறையிட்டுக் கொண்டிருந்து சிலநாளில் பரமபதத்தை யடைந்து நித்ய முக்தனாய் வாழ்ந்தான். கடைசெட்டி சிலதூரம் ஓடிவந்து கூரான ஓர் முள் காலில் தைத்துக் கொண்டதினால் கீழே உட்கார்ந்து பாதைப் பட்டுக்கொண்டு அப்பா! அப்பா! போதுமானது இப்பேர்பட்ட முரட்டு சாது உலகத்தில் கிடையாது. இவரோடு கூட ஓட யாரால் முடியும் என்று முறையிட்டுக் கொண்டு மறுபடியும் வீட்டைச் சேர்ந்து மற்ற ஜீவிதகால மெல்லாம் திருவேங்கடப் பெருமான் தியானத்திலும், சாதுக்களை சன்மானிப்பதிலும் தர்மகாரியங்களிலும் சத்கர்மங்களிலும் ஈடுபட்டு முடிவில் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருவடி நிழலை யடைந்தனன்.

## நரஹரிதாஸ் சரித்திரம்.

ஸ்ரீ வேங்கடசைல மென்னும் திருப்பதிக்கு வடமேற்கிலிருக்கும் குஜ்ராத்த மென்கிற தேசத்தில் சகல சம்பத்துகளால் நிறைந்தவரும் ஹரிபக்தியில் மிகுந்தவருமாகிய ஓர் ஸதிபதிகளிருந்தனர். அவர்களுக்கு ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருஅருளினால் ஓர்புத்திரன் பிறந்தான். ஸ்ரீமந் நாராயணனது வரத்தினால் பிறந்த இக்குழந்தைக்கு நரஹரி என்று நாமகரணஞ் சூட்டி மிகவும் பிரீதியுடன் வளர்த்துக் கொண்டு வந்தார்கள். தினந்தோறும் தகப்பன் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானைத் திரிகரண சுத்தியாய் ஆராதித்து சிலநேரம் அநேகத்தியானத்தில் நிஷ்டைசெய்வதுமுண்டு. சில வேளைகளில் ஹரிபஜனை செய்வதுமுண்டு. குழந்தையாகிய நரஹரி ஐந்து வயதானபின் தகப்பன் செய்வதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து தானும் அவ்விதமே செய்ய நிச்சயித்து தகப்பன் ஹரித்தியானத்தில் உட்கார்ந்த பின்பு தானும் ஓர் மூலையில் பத்மாஸனாரூடனா யுட்கார்ந்து கண்களைமூடி சர்வரக்ஷகனாகிய கட

வுளின் பேரில் மனதை நிலைநிறுத்தித் தியானம் செய்யத் தொடங்குவான். இங்ஙனம் பிரதிதினமும் செய்துக் கொண்டே வருவதினால் சிறுவனுக்கும் பக்தியதிகப்பட்டுவிட்டது. இவ்விதமாய் நடந்துக்கொண்டு வர ஒருநாள் தகப்பன் நிஷ்டை தீர்ந்தெழுந்து புத்திரனைத் தேடிக் கொண்டுவந்து ஒரு மூலையில் தன்னைமறந்து ஹரித்தியானத்தில் மூழ்கினவனாயிருக்கும் குழந்தையைக்கண்டு ஆச்சரியத்தோடு ஆ! ஹா! இது என்ன விசித்திரமாயிருக்கின்றது. நான் அநேக வருடங்களாய் ஹரித்தியானம் செய்கிறேன். ஆனால் இவ்வளவு நிர்மலமாக மனம் நின்றதில்லை. இந்த குழந்தைக்கு இவ்விதமான பக்தி அமைந்திருப்பது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டு தன் மனைவியை யழைத்துக் குழந்தையைக் காட்டி இருவருமாக சந்தோஷப் பட்டுக் கொண்டு நாம் பூர்வத்தில் செய்த புண்ணிய வசத்தால் நம் குழந்தைக்கு இவ்விதமான ஹரிபக்தி யுண்டாயிற்றென் றெண்ணி, அன்றுமுதல் அக்குழந்தையைக் கடவுளைப்போல் பாவித்து உபசாரம் செய்துக்கொண்டு வந்தார்கள். கர்மம் தீர்ந்தவுடனே காயம் நிற்காதென்கிறதைப் போல் சிலவருடங்களுக்குள் தாய் தந்தையர் ஒருவர்பின் னொருவராக பரகதி யடைந்தனர். பிறகு நரஹரியை அம்மான் அழைத்துக் கொண்டு போய் வளர்த்துக்கொண்டிருக்கையில் நரஹரியின் நடவடிக்கை அம்மான் மனதிற்குச் சரிப்படாததினால் அவனாலானவரைக்கும் நரஹரிக்குப்புத்திமதிகளை சொல்லிக் கொண்டு வந்தான். எவ்வளவு சொல்லியும் கேளாமல் நரஹரி கடவுளைத் தியானம் செய்துக் கொண்டிருக்கும் தன்னுடைய போக்கு சரியான போக்கென்றும், தாமரை இலையின்மீது தத்தளித்துக் கொண்டிருக்கும் நீருக்குச் சமானமானது உலகத்து வாழ்வென்றும் அம்மானிடம் சொல்லிக் கொண்டு வந்தான். சிலநாளில் நரஹரி அம்மான்மீது மனஸ்தாபங் கொண்டு தனக்குள் தான் யோசிக்கத்தொடங்கினார். என் தேகம் மனம் புத்திபிராணன் முதலியவை பிரபுவான வெங்கடேசப் பெருமானைப் பார்க்கினும் பெரியதல்ல. எனக்கு தாய் தந்தை குரு தெய்வம் அவரன்றி வேறு யார் இருக்கின்றார்கள். ஹே! பக்த பராதீனா! உன் திருவடியை நாடி உன் அன்பனா யுலகத்தின்கண் யாசகனா யிருக்கினும் போது



மானது. உன்னுடைய பக்தியின்றியும் உன்னை சரணமடையாமலும் பிரபஞ்சத்தில் ஏகசக்கராதிபதியா யிருந்தாலும் என்ன பயனிருக்கின்றது. ஆகையால், என் தாய் தந்தைகளால் வைத்த பொருள்களையெல்லாம் என் அம்மானே யனுபவிக்கட்டும். எனக்கு உன் பக்தி ஒன்று மாத்திரம் ஸ்திரமாயிருந்தால் போதுமானது. உன்னை நான் விடாமல் துதிக்க எனக்கு மதியளிக்கக் கோருகிறேன். என்னை நீ விடாமல் காக்கக் கோருகிறேன். இனி உன் பக்திக்கு விரோதமான நடவடிக்கையுள்ள வீட்டிலிருக்க நான் சம்மதப்பட மாட்டேன். உன் திருமலைக்குவந்து உன்னை யவ்விடத்தில் தரிசனஞ் செய்துக் கொண்டு உன் பக்த ஜனங்களுடைய பாததூளியை என் சிரசில் தரித்துக் கொண்டு அவர்களுக்குப் பணிவிடைகள் செய்துக் கொண்டு உன் பக்தனாய், உன் னடிமையாய், உன் சரணமேகதியென்றிருப்பேன் என்று மனோதிடஞ் செய்துக்கொண்டு ஸ்ரீசைலமென்னும் திருப்பதிக்குப் போகத் தீர்மானித்து, வீட்டில் ஒருவரோடுஞ் சொல்லாமல் உடுத்தியிருக்கும் வஸ்திரத்தோடு புசிக்கவும் ஒன்றுமில்லாமல் ஐந்நூறுமைல் தூரமுள்ள திருவேங்கடமலைக்கு பாதசாரியாகப் போகப் புறப்பட்டான். பன்னிரெண்டு வயதுள்ளவனும் இளமைப்பருவமும் உடையவனாய் நரஹரியானவன் எள்ளளவாகிலும் பயமின்றி பயங்கரமான காட்டு வழியாய்ப் புறப்பட்டு நடந்துக்கொண்டு சர்வம் நாராயணமயமென்று தியானம்செய்துக்கொண்டு திருவேங்கடன் திருவடிகளில் நிலைநிறுத்திய மனம் புத்தியுள்ளவனாய் காட்டு வழியாய் முட்களின்பேரிலும், கூரான கற்களின்பேரிலும், மேடுபள்ளங்களிலும், மலைச்சாரல்களிலும், ஏரி, குளம், தடாகம் முதலிய வழிகளிலும் நடந்துக்கொண்டு பூமியில் வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் திருவேங்கடனை யழைத்துக் கொண்டும், ஆதரியுமென்று கைகளைக் காட்டிக் கொண்டும், கருடனேறி வருகிறானோ வென்று தலையெடுத்து மேல் பார்த்துக்கொண்டும், நல் முத்துகளைப் போல் ஆனந்த பாஷ்பங்கள் இரண்டு கண்களிலும் சொரிய ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் மனதை நிலைநிறுத்தி சகலத்தையும் மறந்து தேகாபிமான மில்லாமல் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் ஜகதீசனுடைய அருளென்றும் அமிருதத்தைப் புசிக்கிறாரோ வென்று சொல்லத் தக்கதாக பசிதாகம்

இளைப்பு முதலிய சரீரதாபத் திரயங்கள் இல்லாதவராயும் பிரபஞ்சதியானமில்லாமலும் ஹரிதியானத்திலேயே ஆழ்ந்த அறிவுடையவராய்ப் போய்க் கொண்டிருந்தார். அந்தக் காட்டில் புலி, கரடி, சிங்கம் முதலிய கோரமான மிருகங்கள் எதிரில் வந்தபோது அவர் அவைகளைப் பார்த்து தன்னைப்போல் அவைகளும் ஜீவராசிகளென்றும், சூரியன் ஒருவனே தன்னை பிரகாசிக்கச் செய்துக் கொண்டு சகலத்தையும் பிரகாசிக்கச் செய்கிறதைப்போல் சுயம்பிரகாச வைபவமூர்த்தியாகிய வெங்கடேசப் பெருமான் எல்லா ஜீவர்களிலும் அந்தர்யாமியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதனால் பயங்கரமான மிருகங்களைப் பார்த்து பயப்படுவது எதற்கென்றும், பயமின்றியவனாய் அந்த மிருகங்களின் பக்கமாகவே போய்க்கொண்டிருந்தார். அந்த காட்டு மிருகங்களும் அவரைப் பார்த்து தன்னைப்போல் அவரும் ஓர் ஜீவனென்றெண்ணி அவருக்கு யாதொரு தொந்தரவும் செய்யாமல் போய்க் கொண்டிருந்தது. இங்ஙனம் போய் கொண்டிருக்கையில் இடை வழியில் ஸ்ரீ வெங்கடேச பரமாத்மாவாகிய ராமனை பஜனை செய்துக்கொண்டு திருபதிக்கு யாத்திரை போகும் ஓர் பைராகிகளுடைய கூட்டத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டே நரஹரி அவர்களுக்கருகில் சென்று ஓ சாதுக்களே! நீங்கள் எவ்விடம் போகிறீர்களே என்று கேட்டார். அதற்கு பைராகிகள் புன்னகை கொண்டு ஓ சிறுவனே! நாங்கள் திருப்பதிக்குச் சென்று ஸ்ரீ பாலாஜியை தரிசிக்கப் போகிறோம். நீ இந்தக் காட்டு வழியாய் எவணிருந்து வருகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு நரஹரி அய்யா சர்வம் ஜெகதீஸனுடைய மயமேயன்றி வேறொன்றுமில்லை நான் வந்ததும் அவரிடத்திலேயே நான் போவதும் அவரிடத்திற்கேதானென்றும் சொன்னான். இவ்வசனங்களைக்கேட்டு மிகுந்த ஆவல்கொண்டு சிறுவனாயினும் சலனமற்ற மதியுடையவனென மதித்து சாதுக்கள் அவரை தம்மோடு கூட அழைத்துக் கொண்டு ஜகதீசனான வெங்கடேஸ்வரருடைய சன்னதியைச் சேர்ந்தார்கள். நரஹரி தினந்தோறும் சுவாமி தரிசனஞ் செய்துக்கொண்டு அவ்விடத்திலிருக்கும் தபஸிகளுக்கும், பிரம்ம வேதிகளுக்கும் தொண்டு செய்துக்கொண்டு வந்தார். அந்த க்ஷேத்திரத்தின் அதிகாரியாகிய மஹந்துவினிடம் வந்து அவ



ரைக் கடவுளாயெண்ணி வேலைக்காரர்களோடு சேர்ந்து தானும் ஓர் சேவகனாய் மிகவும் பக்தி சிரத்தையோடு பணிவிடை செய்துக் கொண்டுவந்தார். இங்ஙனமிருக்க, ஓர்நாள் மஹந்து அந்த சிறுவனைப் பார்த்து, ஓ சிறுவனே! இவ்விடம்வா நீ யார்? உன் தாய் தந்தைகள்யார்? ஏன் இவ்விடம் வந்திருக்கிறாயென்று கேட்டார். அதைக் கேட்டவுடன் நரஹரிதாஸ் நெருங்கிவந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து நின்று, சுவாமி! சர்வம் பிரம்மமயமாயிருக்க நான்மாத்திரம் வேறாயிருப்பேனா? ஜெகதீசனுடைய மஹத் பாவத்தில் நானோ .ரணுவாயிருக்கிறேன். தாய்க்கர்ப்பத்திலிருந்தபோது அவள் பூதேவியினால் கொடுக்கப்பட்ட வஸ்துக்களைப் புசித்து அந்த சாரத்தை எனக்கும் கொடுக்க அதனால் நான் வளர்ந்து பத்து மாதத்திற்குப் பின்பு பூமியின்பேரில் விழுந்து அந்தப் பூமியிலுண்டாகும் வஸ்துக்களைப்புசித்து பெரியதேகமுடையவனானேன். ஆகையால், எனக்கும் சமஸ்த ஜீவகோடிகளுக்கும் புசிப்பை யளிக்கும் பூதேவி எனக்கும் எல்லோருக்கும் தாயாயிருக்கிறாள். அப்பூதேவிக்கு நாயகனாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் தகப்பனாயிருக்கிறார். பக்ஷியானது காடுமேடுகளும் தேசங்களும் பறந்து திரிந்தபோதிலும் தன் கூட்டை யடையாதிருக்குமா? அதுபோல் அநேக ஜன்மங்களெனும் காடு மேடுகளைச் சுற்றித் திரிந்துக்கொண்டிருந்த நான் சர்வாந்திரியாமியாகிய தேவதேவனைச் சேராமலிருப்பேனோ? ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் அருளுக்காளாகவெண்ணி இவ்விடம் வந்திருக்கிறேன். நீர் என்னை சிஷனாகக் கொண்டு அந்தப் பரந்தாமனுடைய பரதத்துவ நிஷ்டையில்நிருத்தி இரக்ஷிக்க வேணுமென்று பிரார்த்தித்தார். அதைக் கேட்டு மஹந்து மிகவும் ஆச்சரியத்துடன் ஆ! ஹா! குழந்தைகளுக்கும் இத்தகைய பக்தி யுண்டாயிருக்கிறதாவென்று சொல்லி யந்த பக்தசிரோமணியை யாசீர்வதித்துச் சேவகர்களைப் பார்த்து, இனிமேல் இச்சிறுவனைத் தன்னைப்போலெண்ணி சகல உபசாரங்களுஞ் செய்ய வேண்டுமென்றாஞ்ஞாபித்தார். அவர்களும் அன்றுமுதல் நரஹரியை இரண்டாவது மஹந்தென்றெண்ணி, பணிவிடை முதலியன சரிவர செய்துக்கொண்டு வந்தார்கள். சின்னாளில் மஹந்துக்கு அந்திய காலமுண்டானபடியால் அம்பலையிலிருக்கும் சாதுக்கள்,

பைராகிகள், தபஸிகள், யோகாப்பியாஸிகள், பெரியோர்கள் முதலானவர்களை வரவழைத்து, ஓ சாது ஜனங்களே! இது வரையிலும் என்னை கௌரவித்ததுபோல் இனிமேல் நரஹரியை கௌரவிக்க வேண்டுமென்றும், தனக்குப் பின் நரஹரிக்கே மஹந்து பட்டம் கொடுக்கவேண்டுமென்றுஞ் சொல்லி நரஹரியை சமீபத்திலழைத்து திரிவிததீக்ஷைகள் செய்து, பிரம்மநிஷ்டையின் இரகஸியத்தைப் போதித்து தான் பத்மாஸனஸீலனா யுட்கார்ந்து தனக்குள் பிரகாஸித்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவைத் தரிசனஞ் செய்துக்கொண்டு மனம், புத்தி, பிராணன் முதலியவற்றை நிலைநிறுத்தி சர்வவியாபகராகிய ஸ்ரீ வெங்கடேசப் பரப்பிரம்ம தத்துவத்தில் ஐக்கியமாய் விட்டார். அவ்விடம் கூடியிருந்த மஹான்களெல்லோரும் பிறகு நரஹரிதாசருக்கு விசேஷ வைபவத்தோடு மஹந்து பட்டாபிஷேக மகோற்சவத்தை நடத்தி அவரவர் இருப்பிடஞ்சேர்ந்தனர். நரஹரிதாஸ் மஹந்து ஆனபின்பு ஸ்ரீ வெங்கடேசப் பெருமானைத் தரிசிக்க எண்ணி கடினதபஞ் செய்தார். அப்பொழுது ஸ்ரீ ஹரியானவர் தரிசனங் கொடுத்து நரஹரியை தன் அருளுக்குப் பாத்திரனாக்கி, அன்று முதல் ஒரு நிமிஷமும் அவரைப் பிரியாமல் அவர் அந்தரங்கத்தில் அகண்டவைபவத்தோடும் தாண்டவமாடிக் கொண்டிருந்தார்.

துவாபரயுகத்தில் காமியவனத்தில் தர்மராஜனைப் பார்த்து கலியுகத்தில் தர்மபுத்தியும், ஜீவகாருண்யமும் குறைந்து போகுமென்றும், பிறர் பொருளை யபகரிப்பதே உலகத்தின் தர்மமாகவும், அரசர்களுடைய முக்கிய அபிப்பிராயமாயிருக்குமென்றும், பசுக்களுக்கும், பிராமணர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் க்ஷீணமுண்டாகுமென்றும், ஜகதீசனுடைய திருக்கோயில்கள் பாழாகுமென்றும் மகரிஷியாகிய மார்க்கண்டேயரால் சொல்லியிருப்பதைப்போல், அந்தக் காலத்தில் துருக்கர்கள் தேசாதிபதிகளாயிருந்ததுடன் தேவாலயங்களை பாழ்செய்வதும், குடிகளை ஹிம்ஸித்து அவர்கள் பொருள்களை யபகரித்துக் கொள்ளுவதும், பசுக்களை ஹிம்ஸிப்பதுமாகிய காரியங்களில் அளவற்ற ஆசையுடையவர்களாயிருந்தார்கள். அதற்காக அவர்கள் தேசத்தில் எந்த இடங்களில் பொருளுள்ள தேவாலயங்களிருக்கிறதென்று தெரிந்து சொல்லுவதற்காக அநேக



தூதர்களை ஏற்படுத்தி அவர்களால் உண்மையறிந்து யுத்தவீரர்களையனுப்பி அவணிருக்கும் பொருள்களை யபகரித்து, விக்கிரகங்களைப் பாழாக்கி பக்தஜனங்களை ஹிம்சித்துக்கொண்டு வந்தார்கள். அந்த மகம்மதிய தூதர்கள் திருப்பதி க்ஷேத்திர பிரபாவத்தைத் தெரிந்து அரசனைப் பார்த்து அவ்விடத்தில் விசேஷ பொருள்களிருக்கிறதென்று சொல்ல, அந்த அரசன் அநேகமாயிரம் மகம்மதியர் பட்டாளத்தை யனுப்பினான். அவர்கள் வருவதை யறிந்து ஸ்ரீ வேங்கடசைலத்திலிருக்கும் பக்தஜனங்களும் சுற்றுப்பக்கத்திலிருக்கும் அரசர்களும் அவர்கள் சைனியங்களை ஒன்றாய்ச் சேர்த்து அந்த மகம்மதியர் சைனியத்தோடு யுத்தம் செய்து அபஜெயமடைந்தார்கள். அதற்குமேல் மகம்மதியர்கள் திருமலையின் மீதேறி அவ்விடத்திலுள்ள பொருள்களைக் கொள்ளையிட்டு மஹந்துவைப் பந்தித்து அர்ச்சகர்களைப் பார்த்து இன்னும் எவ்விடத்தில் பணம் இருக்கிறதென்று கேட்க, அவர்கள் ஓ! யுத்தவீரர்களே! இவ்விடத்தில் பிரார்த்தனை மூலமாய் பொருள் வருகிறதே தவிர வேறு வழியாய் வரும்படி கிடையாது. அந்தப் பொருளை இவ்விடத்திலுள்ள சாதுக்களுக்கு விநியோகஞ் செய்வது பழக்கமாயிருக்கிறதென்று சொல்ல, மகம்மதியர்கள் ஆனால் சரி பூசைகள் எப்பொழுதும் போல் நடத்தவேண்டியது. தினந்தோறும் சேரும் பொருள்களை எங்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டு அவ்விடத்தில் ஓர் மகம்மதியப் பிரபுவை நியமித்துத் தாம் கொள்ளையிட்ட பொருள்களுடன் நவாபு பட்டணம் சேர்ந்தார்கள்.

அந்த மகம்மதிய வீரர்களுக்கு மலஜ்வரம் உண்டாகி கால்கைகள் சிறுத்து வயிறு பெருத்து ஒருவருக்குப் பின்னொருவராய் பரலோகத்தை யடைந்தனர். இங்ஙனமிருக்க திருமலையில் நியமிக்கப்பட்ட மகம்மதியப் பிரபு அவ்விடத்தில் விசேஷமாக கடவுளுக்குச் சமர்ப்பிக்கப்படும் திரவியங்களைப் பார்த்து பேராசை யுள்ளவனாய் நவாபுக்குப் பொருளைக் கிரமமாக அனுப்பாமல் அபகரித்துவந்தான். அதனால் நவாபு வேறொரு பிரபுவை யனுப்பி முன்னிருந்தவனை சிரச்சேதம் செய்து விடும்படி உத்தரவு செய்தான். எவ்வளவு சத்தியமானவர்களைத் திருமலைக்கு அனுப்பின போதிலும் அவர்களையும்பேராசை யென்னும் பேய்பிடித்துக் கொண்டே வருகிறபடியால்

ஒருவர் பின்னொருவராக இராஜ தண்டனைக்காளானார்கள். இப்படியிருக்க இராஜன்முன் கைதியாக்கிக்கொண்டுபோன நரஹரியை நிறுத்த நவாபு அவரைப் பார்த்து, ஓ மூடாத்மாவே! கற்களைக் கும்பிடும் க்ஷேத்திரத்திற்கு பிரபுவாயிருக்கிற உன் அஞ்ஞானத்தையென்ன சொல்லலாம். மகம்மதியனாகி விடுவாயாகில், இப்பொழுதே உன்னை என் சபையில் ஓர் பிரபுவாகச் செய்கிறேன்.' என்ன சொல்லுகிறாயென்று கேட்க, நரஹரி அவனைப் பார்த்து ஓ அரசனே! நாங்கள் கற்களைக் கும்பிடுகிறோமென்று பிரமிக்க வேண்டாம். பழத்துக்குள்ளிருக்கும் சாரத்தைப்போல் சர்வத்திலும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம், தேய்த்த விடத்தில் பிரகாசிக்கும் தங்கத்தைப் போல் அன்பர்கள் உள்ளத்திலும், அவர்கள் குடியிருக்குமிடங்களிலும் விசேஷித்திருக்கிறார். சமபத நிலையனாகிய ஸ்ரீவெங்கடேசப் பரப்பிரம்மம் முத்து ஹாரத்துக் குள்ளிருக்கும் கயிற்றைப் போல் எல்லா மதங்களிலும் நிறைந்திருக்கிறார். ஆகையால் நீ த்வேஷத்தைவிட்டு எல்லா ஜீவகோடிகளையும் ஒன்றென்றெண்ணி சர்வேஸ்வரனுடைய திருவடிகளைத் தியானம் செய்யென்று சொல்ல, அதைக்கேட்ட நவாபு மிகுந்த கோபமுடையவனாய் நரஹரியைச் சிறைச்சாலையில் வைக்கும்படி உத்திரவளித்தான்.

இஃதிப்படியிருக்க, ஸ்ரீ வெங்கடேசரது பொருளை யபகரித்த நாள்முதல் அந்த அரசனுடைய ஊரிலும் வீட்டிலும் வியாதி விசேஷித்துக்கொண்டு வந்தன. அரசனுடைய வீட்டிலிருக்கும் 'எல்லோருக்கும் வியாதிகளேற்பட்டு, மிகுந்த சாமர்த்தியமுள்ள வைத்தியர்கள் பார்த்தும் தீராமல் போய்விட்டன. அரசனுடைய இரண்டு பிள்ளைகளும் ஓர் பெண்ணுங்கூட பரலோகம் அடைந்தார்கள். எந்நேரமும் வியாதி அவர்களைக் கொள்ளை அடிக்கிறதைப்போல் தொந்திரவு செய்துக்கொண்டு வந்தன. அரசனது தேகத்திலும் வியாதி பிரவேசித்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தது. நவாபுக்கு புத்திசலித்து பயங்கரமாகிய சொப்பனங்கள் காணப்பட்டது. நவாபு அளவற்ற பாதைகளை யடைந்துக் கொண்டு படுக்கையின் பேரில் புரண்டுருண்டுக் கொண்டிருந்தான். பந்துக்களைப் பார்த்து துயரமடைந்தான். மித்திரர்களைப் பார்த்து துக்கித்தான். புத்திரகளத்திரர்களைப் பார்த்து கண்ணீர் சொரிந்தான். வைத்தி



யர்கள் ஆயிரக் கணக்காய் வந்து தம்மாலியன்றளவு மருந்துகளைக் கொடுத்து வியாதி குணப்படாததனால் கைவிட்டுப் போயினர். பகீர்களும், மாந்திரீகர்களும் அநேகவித மந்திரங்களைப் பிரயோகஞ்செய்து சாம்பிராணி தூபங்களைக்கொடுத்து மயில் இறகினாற்செய்த தண்டத்தால் நவாபு தேகமெங்கும் துடைத்து வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார்கள். இப்படி எத்தனைபேர் எத்தனையோ விதசிகிச்சைகள் செய்தபோதிலும் அவன் வியாதி குணமாகாமல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு கருநாகத்தின் விஷம் சிரசுக்கு ஏறுவதைப்போல் மேலிட்டுக் கொண்டிருந்தது. இராஜாங்கப் பிரபுக்கள் எல்லோரும் கூட்டங் கூட்டமாய் வந்து அவருக்கு முடிவுகாலம் வந்துவிட்டதென்றெண்ணி விசாரணை செய்தார்கள். நவாபு பாணங்களைக் கொண்டு துளைக்கிறதைப் போல் ஏற்பட்ட வேதனைகளைத் தாளாமல் பெருங்குரலுடன் அழுதுக் கொண்டு அல்லாவே! எனக்கேன் இப்பேர்ப்பட்ட கதியையுண்டாக்கினாய். நான் என்ன செய்வேன். எவ்விதமாய் இந்தக் கஷ்டத்தைப் பொறுப்பேனென்று முறையிட்டுக் கொண்டு அல்லும் பகலும் மிகுந்த வருத்தமடைந்திருந்தான். இங்ஙனம் பலநாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, அலறிக்கொண்டு நவாபு ஒருநாளிரவில் வெகுநேரந் தூங்காமல் துயரப்பட்டுக் கொண்டு அலண்டு கண்களைமூடிச் சிறிதயர்ந்தான். அப்பொழுது அவன் படுத்த ஓர் க்ஷணத்திற் கெல்லாம் அவன் கனவில் ஓர் பெரிய உருவமுள்ள பகீர் தரையில் புரளும் பெருத்த அங்கியைத் தரித்துக் கொண்டும், மிகவும் நீண்ட தாடியை உடையவராயும், பட்டை நாமங்களை விசாலமான முகத்தில் தரித்துக் கொண்டு தரிசனந் தந்தார். அப்பொழுது அந்த மாயமானிடனைப் பார்த்து நவாபு பயந்து அலறி நித்திரையினின்றும் விழித்து உரத்தசத்தமாய் அவ்விடத்திலுள்ள சேவகர்களை தனக்கு சகாயமாக நெருங்கி வந்திருக்கும்படி கூறினான். பிறகு, நவாபு தனக்கேற்பட்ட கனவை யவர்களிடம் சொல்ல, அவர்கள் அதற்கு கனவில் கண்ட புருஷன் சாக்ஷாத் காரணான ஹல்லாவே என்று சொன்னார்கள். அதுமுதல் நவாபு கண்களை மூடினபோதெல்லாம் தகதக வென்று மின்னிக்கொண்டிருக்கும் பட்டை நாமங்களைத் தரித்துக் கொண்டு பகீர் தோன்றிக்

கொண்டே யிருந்தார். அதனால் நவாபுக்கு துயரம் அதிகரித்து தாங்கொணாக் கிலேசமுண்டாயிற்று. சின்னாட்களுக்குப் பிறகு சபையிலிருக்கும் ஓர் உத்தியோகஸ்தன் நவாபிடம் வந்து அந்த ஊருக்கருகில் ஓர் பகீர் இருக்கிறானென்றும் அவனைக் கேட்டால் இதன் காரணம் தெரியவருமென்றும் சொல்ல, அரசன் அந்த பகீரை வரவழைத்து குறிசொல்லும்படி கேட்டான். அந்த பகீர் சிலநேரம் ஹல்லாவைத் தியானஞ்செய்து நவாபைப் பார்த்து, ஓ மன்னவனே நீ கடவுளுக்கு துரோகம் செய்திருக்கிறாய். சாதுக்களுக் குபயோகமாக வேண்டிய பொருளை யபகரித்திருக்கிறாய். கடவுளுடைய பக்தனை சிறையில் வைத்திருக்கிறாய். இந்த மூன்று விததோஷத்தினால் உன் ஆரோக்கியம் போம், உன் பந்துக்களும் பரிவாரங்களும் கலகலத்துப்போம். சிலநாளுக்குள் உன் அரசும்போம். நீ அபகரித்த பொருள் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டு, நித்தியமும் ஜெகதீசனுடைய திருவடிகளைத் தியானித்து கொண்டிருக்கும் அன்பர்களுக்கு உபயோகப்பட வேண்டியதாகையால், அதை யார் அபகரித்த போதிலும் அவர்கள் நோயால் அழிந்து போவார்களென்று சொன்னான். இவ் வாக்கியங்களைக் கேட்ட அரசன், ஓ! ஹோ! இது திருப்பதியிலெழுந்தருளிய பரந்தாமனான வெங்கடேசப் பெருமானது பொருளாயிருக்கவேண்டும். நான் சிறையில் வைத்தது அந்த தேவஸ்தானத்தின் மஹந்துவை யல்லவோ? ஆகையால் அந்த மஹந்துவை இவ்விடம் அழைத்துக் கொண்டு வாருமென்று உத்திரவு செய்தான். சிறையிலுங் கூட ஹரித்தியானஞ் செய்துகொண்டு ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை தரிசனம் செய்துகொண்டு நித்திய சந்தோஷியாயிருக்கும் நரஹரியை இராஜ சேவகர்கள் அழைத்துக்கொண்டு போய் அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். அப்பொழுது அரசன் நரஹரியைப் பார்த்து ஓ சாதுவே! நீ துதிக்கும் கடவுள் மிகவும் கொடூரமானவராயிருக்கிறார். உன் பொருளைக் கொண்டு வந்த நாள்முதல் நாங்கள் படும்பாடுகள் போதும் போதும். என்ன கஷ்டமாயிற்று. என் குழந்தைகள் இறந்து போனார்கள். பந்துக்கள் மடிந்து போனார்கள். தேசத்தில் ஜனங்கள் நசித்து போனார்கள். பயிர்கள் பாழாய் விட்டது. பஞ்சம் அதிகரித்து விட்டது.



எனக்கும் தீராத வியாதிகள் நேரிட்டது. ஆ! ஹா!! இப்பேர்ப்பட்ட கடவுளென்று தெரிந்திருந்தால் என் வீரர்களை ஒருபோதும் அனுப்பியிருக்கமாட்டேன். என் வீரர்களில் அநேக சூரர்களுண்டு, புத்திமான்களுண்டு, பராக்கிரம சாலிகளுண்டு, அப்பேர்ப்பட்டவர்கள் எல்லோரும் மூலை சுரத்தால் மாண்டு போனார்களே. ஆ! ஹா!! இது என்ன அநியாயம் உன் தெய்வத்தைப்போல் கடினபுத்தியுள்ளவர்கள் உலகத்திலிருக்கமாட்டார்கள். இரண்டாம் பேருக்குத் தெரியாமலே எவ்வளவு பெரிய சிக்ஷை விதித்துவிட்டார். அப்பா அந்த பொருளெனக்கு இனி வேண்டாம். என் பொக்கிஷத்திலுள்ள பொருளையுங்கூட கொடுத்துவிடுகிறேன். நீர் எடுத்துக் கொண்டுபோம். எனக்கேற்பட்ட ரோகத்தை நிவாரணஞ் செய்யும் உபாயத்தைச் சொல்லி ஆதரிக்கவேணும். என் ராஜ்யம் க்ஷேமபடும் மார்க்கத்தையும் சொல்லும் என்று மிகவும் பணிவாய்க் கேட்டான். அதற்கு நரஹரிதாஸ் நவாபை நோக்கி ஓ மன்னவனே! நீ பூர்வஜன்மத்தில் கடவுளின் பூசைகள் செய்து இந்த ஜன்மத்தில் அரசனாய் சகல சுகங்களை யனுபவிக்க பிராரப்தமுள்ளவனாயும் கடவுளால் கொடுத்த பொருளுடன் திருப்தி யடையாமல் அதிக ஆசையினால் ஜீவகாருண்ய மின்றி, பிறர் பொருளை யபகரித்தும், தேவாலயங்களை பாழ்செய்தும் சர்வ ஜனங்களுக்கும் சத்வகுண சொரூபமான க்ஷீரத்தைக்கொடுத்து தாயைப்போல் ரக்ஷிக்கும் பசுக்களை கொல்வதுமான பெருத்த பாவங்களைச் செய்துகொண்டு வருகிறாய். ஆகையால் பாவங்களைப் போக்கி அன்பர்களை ரக்ஷிக்கும் வெங்கடேச பரமாத்மாவை சரணமடைந்து நீ செய்த குற்றங்களை க்ஷமிக்கும்படி பிரார்த்தனை செய்துகொண்டு, உன் கர்ம நிவாரணைக்காக காஞ்சனம் கடவுளுக்கு சமர்ப்பிப்பதாக பிரார்த்தனை செய்துகொண்டால் அவர் உன் கர்மத்தை அந்த காஞ்சனத்தின் பேரில் ஆகர்ஷணம் செய்து உன் பாவங்களைப் போக்கி சரணாகதனான உன்னை இரக்ஷிப்பாரென்று சொன்னார். அதைக்கேட்டு நவாபு அவ்விதமே திருவேங்கடப்பெருமானுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு முடிப்பைக் கட்டினான். அன்றையதினமே அவன் வியாதி குறைந்து போகத் தொடங்கிற்று. சூரியவெப்பம்பட்ட பனிக்கட்டி கரைவதைப்

போல் அவன் வேதனைகள் நீங்கிப்போயிற்று. அதற்குமேல் நவாபு ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஒருவனே இக்காலத்தில் பிரத்தியக்ஷதெய்வமென்றும் பாவங்களைப் போக்கும் பிரபுவென்றும் வேதனையைத் தீர்க்கும் வெங்கடாசலபதியென்றும் நிச்சயித்தவனாய் தன்னுயிருள்ளளவும் அந்தக் கடவுளைத் தொழுவேனென்று பிரதிக்ஞை செய்துக்கொண்டான். மேலும் பிரதிதினமும் சர்க்கரை மிட்டாய் வர்க்கங்களை ஸ்ரீ வெங்கடேஸ்வர ஹல்லாவுக்குப் பாத்தியா செய்து அதை ஏழைகளுக்குக் கொடுத்துவந்தான். இப்படி நடந்து வர நவாபுக்கு ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பேரில் மிகவும் பக்தியும் பிரீதியும் நன்றியும் உண்டானபடியால், ஒருநாள் நரஹரியைப் பார்த்து மாயரூபமாய் உலாவிக்கொண்டு சகலத்தையும் நடத்திக்கொண்டு வரும் ஜெகதீஸனைப் பார்க்கவேணுமென்றும் அதற்கென்ன உபாயமென்றும் கேட்டான். இவ்வசனங்களைக் கேட்ட அரசனை நோக்கி, நரஹரி ஓ மன்னவ! துரெண்ணங்களை விடாமலும் மனம் பரிசுத்தமின்றியுமிருந்தால் சர்வேஸ்வரனாகிய திருவேங்கடப்பெருமான் தரிசனம் கிடைக்காதென்று சொன்னார். அதைக்கேட்ட அரசன் ஓ சாதுவே! நான் என்ன செய்தால் என் மனம் பரிசுத்தமாகும். எப்படி அவர் தரிசனம் கிடைக்கும் என்று பணிவுடன் வினவ, நரஹரி தாஸ் நவாபை நோக்கி, ஓ ராஜனே! சர்வமதங்களையும் ஒன்றென்றெண்ணி தர்ம மார்க்கத்தில் நடந்து பேதாபேதமின்றி எல்லோரையும் சமமாய்ப் பாவித்து அரசாக்ஷி செய்து, தினந்தோறும் சிலநேரம் அந்தப்பெருமான் திருமந்திரத்தை வேறு சிந்தனையின்றி ஒரே மனதுடன் ஜபித்துக்கொண்டு அவர் தியானத்திலேயே யிருப்பாயாகில் உனக்கு ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் தரிசனம் கிடைக்குமென்றார். இவ்வசனங்களைக் கேட்டு அரசன் ஆ! ஹா! நான் எப்படியாகிலும் அந்தக் கடவுளைப் பார்க்க வேண்டும். நீர் சொன்ன வண்ணம் செய்கிறேனென்று ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருநாம மந்திரத்தை நரஹரிதாஸரால் ஓதுவிக்கதெரிந்துக்கொண்டு அன்றுமுதல் நவாபு அதே தியானத்திலிருந்தான். இங்ஙனமிருக்க, நவாபு ஒருநாள் தூங்கிக்கொண்டிருக்கையில் முதுகில் பலத்த ஓர் அடிபட்டது. திடீரென்று அலறிக்கொண்டு எழுந்து சேவகர்களைப் பார்த்து, யாரோ திருடன்



வந்து என்னை முதுகில் அடித்தானென்று கூச்சலிட்டான். அதைக் கேட்ட சேவகர்கள் கைகளில் உருவின கத்திகளோடு விளக்குகளை ஏந்திக்கொண்டு அரண்மனையில் எங்கும் தேடினார்கள். அரசன் கூட கையில் கட்கத்தை ஏந்திக் கொண்டு தேடிகொண்டுவர, மூலையில் ஓர் ரூபத்தைப் பார்த்துப் பயந்து பேசமுடியாமல் அசைவற்று நின்றுவிட்டான். நீலவர்ன தேகமுள்ள ஓர் பெரும் புருஷன் நான்கு கைகளோடும் சங்கு சக்கர கதை முதலியவைகளைத் தரித்துக்கொண்டும் துளசி, மல்லி, ஜாதி, இருவாக்ஷி, சம்பங்கி, சண்பகம் முதலிய திவ்விய புஷ்பங்களால் தொடுத்த சுகந்த மாலையை யணிந்துக்கொண்டும், அனந்தகோடி மாணிக்கங்களைப்போல் பிரகாஸித்துக் கொண்டிருக்கும் இலக்ஷ்மிதேவியை மார்பில் அணிந்துக்கொண்டும், ஊர்த்துவ புண்டரங்களைத் தரித்துக்கொண்டு, விசாலமான வக்ஷஸ்தலமும், பிரவர்த்தித்துக்கொண்டிருக்கும் கங்கையுள்ள பாதங்களோடும், தாராளமாய் நீண்டிருக்கும் கைகளோடும் தரிசனமளித்து க்ஷணத்துக்குள் மறுபடியும் மறைந்துவிட்டார். கேவலம் மரத்தைப் போல் பயந்து நின்றிருந்த நவாபு வெகு நேரம் அசையாமல் அப்படியே யிருந்து, பிறகு ஓசையிட்டுச் சேவர்களைக் கூப்பிட்டு சேவகர்களே! என்னை அடித்தது திருடனல்ல. நாம்சிறைச் சாலையில் வைத்திருந்த மஹந்துவினுடைய கடவுளாகும். நான் மகம்மதியனாயிருந்து அநேக ஹிந்து தேவாலயங்களைப் பாழாக்கி, ஹிந்துக்களை மகம்மதியர்களாகச் செய்து ஒரு நாள் கூட அல்லாவைத் தரிசிக்கவில்லை. சிலநாள் மஹந்து சொன்ன திருமந்திரத்தைப் பரிசுத்தமான உள்ளத்தோடு ஜபித்ததனால் திருமலையின் கடவுளைக் கண்ணால் கண்டேனென்று சொல்லி காலையில் நரஹரியை வரவழைத்துத் தன் சிம்மாசனத்தின் பேரில் உட்காரவைத்து, ஓ புண்ணியனே! உன் கடவுளை நான் கண்டேன். சத்தியமான பெருமானென்று நம்புகிறேன். இதோ திருமலையிலிருந்து என் வீரர்கள் கொண்டுவந்த பொருளெல்லாம் மறுபடியும் எடுத்துக்கொண்டு போ. நான் கொடுக்கும் வெகுமதிகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு போ. நான் கடவுளுக்குச் செய்த அபசாரத்திற்காக பத்துலக்ஷம் வராகன் அபராத காணிக்கையாக எடுத்துக்கொண்டு போவென்று சொல்லி முத்துப் பல்லக்கை யலங்காரஞ் செய்து

அதில் மஹந்துவை எழுந்தருளச் செய்து ராஜவீதிகளில் மகர தோரண துவஜாரோகண அலங்காரங்கள் செய்து தைரியமுள்ள வீரர்களை ஆயிரக் கணக்காய் துணைசேர்த்து ஞானிகளால் சேவிக்கப்பட்ட திருவேங்கடசைலத்திற்கு அனுப்பினான். அந்த க்ஷேத்திரத்திற்குப் பிரபுவாயிருப்பதற்கு, துராசைகள் இல்லாத கடவுளுடைய அன்பர்களே தக்கவர்களென் றெண்ணி யவ்விடத்தில் நேமித்திருந்த மகம்மதியப் பிரபுக்களை மறுபடியும் வரவழைத்துக் கொண்டான். நரஹரி சுவாமிகள் திருப்பதியை யடைந்து மிகுந்த பக்தி சிரத்தையோடு ஸ்ரீ வெங்கடேசப் பரப்பிரம்மத்தை ஆராதித்துக்கொண்டு அவ்விடத்திலுள்ள தபஸிகளையும், யோகிகளையும், ஞானிகளையும், பக்தர்களையும், பிரம்மவேதியர்களையும், பைராகிகளையும், சாதுக்களையும் தந்தையைப்போல் பாதுகாத்துக் கொண்டு வெகுகாலம் தீர்க்காயுராரோக்கியமுள்ளவராய் ஏகசக்கிராதிபதியைப்போல் வாழ்ந்து நித்திய சத்திய சாஸ்வத மங்கள பரப்பிரம்மமாகிய ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருவடிகளை யடைந்தார்.

## சிபாய் லக்ஷ்மணதாசர் சரித்திரம்.

ஸ்ரீ பரதகண்டத்தில் சர்வேஸ்வரனுடைய அன்பர்கள் அநேகர் பிறந்து அசைவற்ற பக்தியினால் பரந்தாமனுடைய திருவடிகளை தியானித்து சகல கர்மானுபவங்களைத் தாண்டி சாஸ்வத பரப்பிரம்மத்தை யடைந்துக்கொண்டிருக்க, ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்திற்கு உத்தர பாரிசத்தில் மகததேசத்தில் தர்மசீலனென்கிற அரசன் இராஜ்ய பரிபாலனம் செய்துக்கொண்டிருந்தார். அப்பட்டணத்தில், லக்ஷ்மையனென்கிற ஓர் பக்தர் இருந்தார். அவருக்கு பாதிவிரத்தியமுள்ளவளும், சம்சாரத்தில் சாமர்த்தியமுள்ளவளும் ஹரி பக்தியுள்ளவளுமாகிய ராமாம்பாளென்கிற மனைவி யிருந்தனள். லக்ஷ்மையனுக்கு இராஜனுடைய பட்டாளத்தில் சிபாய் உத்தியோகமாகையால், தினந்தோறும் அரண்மனைக்கருகில் ஏற்படுத்திய ஆயுதசாலைக்கு காவலிருக்கும்படி நேர்ந்தது. இப்படி காலை முதல் மாலை பரியந்தம் உத்தியோகம் செய்தபின்பு வேறொரு சிபாய் அவ்விடம் வந்து அவரை வீட்டுக்குப் போகச்செய்து தான் காவலிருப்பான். ஆகையால் லக்ஷ்மண தாஸர் பிரதிதினமும் இரவில் வீட்டிற்குவந்து மறுநாள்



காலையில் உத்தியோகத்திற்குப் போவார். அவர் போகும் வழியில் ஓர் விஷ்ணு தேவாலயமிருந்தது. அதில் பக்தபராதீனனான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் எழுந்தருளியிருந்தார். லக்ஷ்மையா தினந்தோறும் அந்த வழியாய்ப் போய்க்கொண்டிருந்தும், ஒரு நாளாவது அந்த தேவாலயத்தில் அன்பர்களை காக்க ஆவல்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கடாசலபதியை தரிசித்தவனல்ல. மேலும் அந்த திருக்கோயிற்புறத்திலாவது திரும்பிப்பார்த்தவனுமல்ல. இங்ஙனமிருக்க, ஒரு நாள் உற்சவதினத்தில் அநேக மாயிரம் பக்தர்கள் எறும்புகளைப்போல் கூட்டமாய்ச் சர்வேஸ்வரனுடைய திருக்கோயில் வாயிலில் நின்றுக்கொண்டிருந்தார்கள். லக்ஷ்மையன் அவர்களைப்பார்த்து பரிகாசமாக நகைத்துக்கொண்டு, ஓ வெறிபிடித்தவர்களே ! நீங்கள் ஏன் கூட்டங் கூட்டமாய் சேர்ந்திருக்கிறீர்கள். அந்த கோவிலுக்குள் இனிப்பாகிய சர்க்கரை அல்லது கற்கண்டிருக்கிறதா ? நீங்கள் அதைப் புசிக்கவந்த எறும்புகளா வென்று கேட்டார். இவ்வசனங்களைக்கேட்ட ஓர் பக்தன் லக்ஷ்மையனைப்பார்த்து, ஓ வீரனே ! சர்க்கரையும் கற்கண்டும் வாயில் போட்ட சில நேரத்திற்குள் கரைந்து மறைந்துபோகும். ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் என்கிற இனிப்பாகிய கற்கண்டு ஒரு முறை உருசிபார்த்தால் மறுபடியும் விட்டுவிடமுடியாதது. பாற்கடலைக்கடைந்தெடுத்த அமிர்தத்தைப் பானம்செய்த தேவர்களும் திருப்தியில்லாமல் இதை நித்தியமும் புசித்துக்கொண்டிருக்கப்பட்டது. பிரஹலாத, நாரத, பராஸர, புண்டரீக, வியாசாம்பரீஷ, சுக, சௌனகாதி மஹா முனிவர்களால் ஓர் க்ஷணகாலமாவது இடைவிடாமல் ருசிபார்த்துக்கொண்டிருக்கப்பட்டது. ஈரேழு பதினான்கு லோகங்களில் சமானமில்லாதது. ஸ்ரீ ஹரித்தியானாம்ருதத்திற்காக சக்கிரவர்த்திகள் தங்கள் தங்கள் நாடுகளைவிட்டு காட்டுக்கோடினார்கள். இராஜாதிராஜர்கள் திக்குகள் தெரியாமல் ஓடினார்கள். மகா ரிஷிகள் இரவும் பகலுந் தெரியாமல் அன்னபானாதிகளைவிட்டு ஹரி பக்தியெனும் அமிர்தத்தை மடுத்தவர்களாய் சர்வத்தையும் மறந்திருந்தார்கள். அப்பேர்ப்பட்ட திவ்விய அமிர்தமாகும் ஸ்ரீவெங்கடேசப் பரப்பிரம்மத்தின் மேல்வைத்த பக்தி அன்பு விஸ்வாசம். ஆகையால் இந்த ஜனங்கள் அந்த திவ்யாம்ருத விக்கிரகமூர்த்தியைத் தரிசிப்பதற்காக எறும்புகளைப்போல்

வந்திருக்கிறார்களென்று சொன்னான். அதைக்கேட்ட லக்ஷ்மையன் ஆ! ஹா! இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது. நான் அப்படிப்பட்ட அமிர்தத்தை யெப்போதும் புசித்ததுகிடையாது. ஹரி பக்தி அப்பேர்ப்பட்ட அமிர்தமா? ஏதோ பார்க்கலாமென்று சொல்லி அந்த கூட்டத்திற்குட் பிரவேசித்து பரம கல்யாணமங்களமூர்த்தியை க்ஷணநேரம் தரிசித்துத் திரும்பிப்போனான். அந்தக்ஷணமுதல் ஊசி காந்தத்தில் ஒட்டிக்கொள்வதைப்போல் அவருக்கு ஹரி பக்தி மனதில் குடிகொண்டுவிட்டது. சொர்ப்பனத்தில் சிங்கத்தைக்கண்டு அப்பயத்தால் பலவீனப்பட்டு மிருத்யுவையடையும் யானையைப்போல் அப்பக்தனுடைய மாயப்பாசங்களும், பிடிப்புக்களும், பிரபஞ்சவிஷயங்களும் அந்த பரந்தாமனைத் தரிசித்ததுமுதல் சிறுகச்சிறுக நசித்துப்போய்விட்டது. ஆகையால், ஆகாயத்தில் மேகங்கள் மறைந்து பின்பு சூரியன் ஒருவனே சர்வோத்தம பிரகாசனாய் ஜொலிக்கிறதைப்போல் லக்ஷ்மையனுக்கு ஹரி பக்தி ஒன்றே மனதில் திட்டமாய் நாட்டங்கொண்டு கடவுளை தரிசிக்காமற்போனால் தூக்கம்பிடிக்காமலும், புத்தி ஸ்திரமில்லாமலும் போகிறபடியால் பிரதிதினமும் ஸ்ரீ வெங்கடேஸப் பரப்பிரம்மத்தை தரிசித்துக்கொண்டு வளர்பிறை சந்திரனைப்போல் பக்தியில் விருத்தியடைந்துக்கொண்டு வந்தான். சிலநாட்களுக்குள் அவனுக்கு ஹரி பக்தி யதிகரித்து திரிகாலங்களும் பகவத்தியானம்செய்து பத்மாசனசீலனாய் சகலத்தையும் மறந்தும் தன் புத்தியை சர்வேஸ்வரனுக்கு ஒப்புவித்திருந்தான். இப்படி லக்ஷ்மையன் நடந்துக்கொண்டுவந்தபடியால் ஆயுதசாலைக்குப்போய் காவலிருக்க கிரமமாகப்போக முடியவில்லை. ஆகையால் அவ்விடத்திலுள்ள ஜவான்கள் அரசனிடம்போய் பிரியாது செய்தார்கள். அதற்கு அரசன் லக்ஷ்மையனை வரவழைத்து இனிமேல் உத்தியோகத்திற்குக் கிரமமாய் வராமற்போனால் தண்டிப்பதாக பயமுறுத்தியனுப்பினான். இப்படியிருக்க லக்ஷ்மையன் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தபோதிலும் ஹரித்தியானாம்ருதத்தை யுண்ணுவதற்கு தொடங்கியமாத்திரத்தில் மெய்மறந்து காலங்கழிவது தெரியாமல் உத்தியோகத்திற்குக்கிரமமாய்வரத் தவறிப்போனான். ஆகையால் மறுபடியும் ஜவான்கள் லக்ஷ்மையன்மீது பிரியாது செய்தார்கள் அதற்கு அரசன் லக்ஷ்மையனுக்கு அபராதம் விதித்தார். இனி கிரமமாக



உத்தியோகத்திற்கு வராமற்போனால் தூக்கிடுவதாய்க் கடூரமான உத்திரவு செய்தான். அதன்பின் லக்ஷ்மையன் மிகுந்த மனஸ்தாபமுடையவனாய் சிந்திப்பானாயினான். ஹரி ஹரி எனக்கு எவ்வளவு விபத்துகள் நேரிடினும் உன்னை துதிக்காமலிருக்கமுடியாது. இனி எவ்வளவு ஆபத்துகள் வந்தாலும்சரி. பயந்ததினால் என்ன பயன்? என்றைக்காவது மடியவேண்டிய யிவ்வுயிருக்குக் கடவுளைப்பார்க்கிலும் திக்கு வேறு உண்டோ? அவர் தியானத்தைப் பார்க்கிலும் மேலான அமிர்தமுண்டோ? இயமன் என்கிற யானைக்கு ஹரி பக்தி சிங்கமல்லவோ? ஜன்மதுக்கங்களென்கிற ஏழு கடல்களையும் வற்றிப்போகச் செய்யும் சூரிய ஒளி ஹரி பக்தி யல்லவோ? பாவஹரமும், பயஹரமும், சோகஹரமும், ஆகிய ஹரி பக்தியை நான் கைவிடேன் என்று சொல்லி மனதைத்திடம் செய்துக்கொண்டு தன் மனைவியாகிய ராமாம்பாளை யழைத்து இனிமேல் என்னைப்பற்றி நீ துயரப்படவேண்டாம். நான் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஒருவனே கதி யென்று என் மனம் புத்தி உடல் பொருள் ஆவி யாவற்றையும் அவருக்கு ஒப்படைத்து அவர் தியானத்தில் அசையாமலிருப்பேன். என்னைப்பற்றி இனி நீ கவலைப்படவேண்டாம். ஆபத்துவந்தால் வரட்டும், உத்தியோகத்திற்குக் கிரமமாய் வராவிட்டால் என்னை தூக்குப்போடுவதாய் என்னெஜமானாகிய அரசன் கொடூரமான உத்தரவளித்திருக்கிறான். எனக்கு நேரிடும் விபத்துகளைப்பற்றி நீ யாதொரு மனக்கவலையும் வைக்காமல் உன் சத்கதிக்காக கடவுளைத் துதிசெய்வாய். ஸ்ரீ வெங்கடேஸப் பெருமாள் என்னை ரக்ஷிப்பார். நம்பினோர்கள் யாவராயினும் அவர்களை யவர் கைவிடமாட்டார் என்று சொல்லி ஸ்திரபுத்தியோடும், மேலிட்ட வைராக்கியத்தோடும் பத்மாசனசீலனா யுட்கார்ந்துக்கொண்டு லோகாரக்ஷகமூர்த்தியாகிய ஸ்ரீநிவாசமூர்த்தியை அசைவற்ற மனதுடன் தியானம்செய்துக்கொண்டிருந்தார். இவர் மனைவியாகிய ராமாம்பாள் விசாரப்பட்டுக்கொண்டு தெய்வமே உன்னை நினைக்கப்போய் என்ன விபத்துகள் நேரிடுகிறது. இராஜசேவகர்கள் வந்து புருஷனை பக்கித்து தூக்கில் போடுவார்களே யென்று பயந்து அழுதுக்கொண்டு ஸ்ரீ வெங்கடேஸப் பெருமானை நோக்கி ஏ! தீனதயாளா! கருணைக்கடலே! ஆபத்பாந்தவா! அநாத ரக்ஷகா! நம்பினோர்களை ரக்ஷிக்

கும் தேவ தேவா யென்று அநேக விதங்களாகத் துதித்தும் வேண்டியும் வருந்தியும் பயத்தால் தவித்துக்கொண்டு வெகுநேரம்வரை இராஜ சேவகர்கள் வருவார்களென்றிருந்தாள். ஆனால் அன்றையதினம் அவர்கள் வீட்டுக்கு யாரும் வராமற்போனார்கள். ஆகையால், இந்த ராமாம்பாள் கொஞ்சம் தைரியமடைந்து சர்வரக்ஷகனை கடவுளை நம்பியிருந்தாள். அன்றிரவு லக்ஷ்மையன் உலகப்பிரக்ஞையுள்ளவனாய் மனைவியாகிய ராமாம்பாளைப்பார்த்து யென்ன சங்கதி யென்றுகேட்க, அதற்கு அவள் யாதொரு விபத்தும் நேரிடவில்லையென்றும் ஹரி மாயை யெப்பேர்ப்பட்டதோ தெரிய முடியாதென்றும் சொன்னாள். அதன்பின் புருஷன் சந்தோஷமேலிட்டவனாய் செடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் கனியைப்போல, எவருடைய மனம் ஸ்ரீவெங்கடேஸ பரப்பிரம்மத்தின் செந்தாமரைக்குச்சமதையான பாதங்களை நாடியிருக்குமோ அவர்களுக்கு என்னாளும் குறைவில்லையென்று கூவிக்கொண்டும் சந்தோஷத்தால் இப்படி அப்படி ஓடியும் வெங்கடேஸ்வரனே! வேதசாகரனே! கிருபாநிதியே யென்று கூப்பிட்டுக்கொண்டு, பக்தியால் தேகமெங்கும் ஆனந்தம்பொங்கி மயிர்க்குச்செறிந்து மெய்மறந்து ஜே! வெங்கடவிடலாயென்று ஓசையிட்டுக்கொண்டு சந்தோஷ மேலிட்டிருந்தார். இப்படியே தினங்களாய், மாதங்களாய், ஆறுமாத காலங்களாய்விட்டது. இதனிடையில் ஒரு தினம் அரசன் ஜவான்களைப் பார்த்து, அடா! சேவகர்களே, இப்பொழுது லக்ஷ்மையன் வேலைக்குக் கிரமமாய் வருகிறானாவென்று கேட்டான். அதைக்கேட்ட ஜவான்கள் ஓ! மன்னவனே! நீங்கள் கண்டிதமாய் ஆக்கினைசெய்தது முதல் அவன் ரொம்பவும் கிரமமாய் வருகிறானென்று சொன்னார்கள். அதைக்கேட்டு அரசன் கலகலவெனச் சிரித்து, அடா என் உத்திரவு என்ன வேலை செய்தது. தூக்கைப்போடுகிறேனென்று சொன்னமாத்திரத்தில் அவன் ரோகம் ஓடிப்போய்விட்டது. வேலைக்குக் கிரமமாய் வராத ஒவ்வொருவருக்கும் இந்த மருந்து கைகண்டதாயிருக்கின்றதென்று செப்பினான். இப்படியிருக்க அந்த ராஜ்யத்தின்பேரில் வேறொரு அரசன் அநேகமாயிரம் வீரர்களோடு யுத்தத்திற்கு வருவதாக எவ்விடம் பார்த்தபோதிலும் பிரஸ்தாபமாய்விட்டது. அநேக குடிஜனங்கள் பயந்து ஊரைவிட்டோடிப் போய்விட்டார்கள். அர



சனுக்கும் மந்திரிக்கும் இதைக் கவனிக்கவேண்டிய சிந்தனை அதிகமாயுண்டாயிற்று. ஆகையால் ஓர் சமயம் யுத்தம் நேரிட்டால் ஆயுதங்கள் வேண்டியதாயிருக்குமாகையால் அவைகள் நல்ல ஸ்திதியிலிருக்கின்றதாவென்று பரீக்ஷிப்பதற்காக ஒரு நாள் இருவரும் ஆயுதசாலைக்கு வந்தார்கள். அந்த ஆயுதசாலை துவாரத்தில் கெம்பீரமான ரூபத்துடன் கையில் கட்கத்தைப் பிடித்துக்கொண்டு இடுப்பை சரியாக நிறுத்தி காவலிருக்கும் லக்ஷ்மையனைப் பார்த்தார்கள். பிறகு ஆயுதசாலைக்குள் புகுந்து அவ்விடத்தில் இருக்கப்பட்ட இராணுவ ஆயுதங்களைப் பார்க்குமளவில் ஒவ்வொரு சாமான்களும் மிகவும் நேர்த்தியாயும் பரிசுத்தமாயும் இருப்பதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு லக்ஷ்மையன் இவைகளை எவ்வளவு நல்ல ஸ்திதியில் வைத்திருக்கிறானென்று சந்தோஷப்பட்டு அவனை மெச்சிக்கொண்டு லக்ஷ்மையனைப்பார்த்து ஓ வீரனே! உன்னை சாமான்யனென்றெண்ணியிருந்தேன். நீ எங்களையெல்லாம் ரக்ஷிக்கக்கூடிய தைரிய சௌரிய பராக்கிரமமுள்ள மஹா யுத்தவீரனா யிருக்கிறாய். ஆகையால் உனக்குப் பத்தாயிரம் வராகன்கள் வெகுமதி கொடுத்தேனென்று சொல்லிச்சென்றார்கள். அன்று மாலை அரசனுடைய உத்திரவுபிரகாரம் பத்தாயிரம் வராகன்களை யெடுத்துக்கொண்டு இராஜ சேவகர்கள் லக்ஷ்மையன் வீட்டிற்கு வந்தார்கள். அதைப்பார்த்து லக்ஷ்மையன் மனைவி ஆ! ஹா!! இத்தனைநாள் யாதொரு விபத்தும் வாராதென்று எண்ணியிருந்தேன். இப்பொழுது விபத்து நேரிட்டதேயென்று திகிலடைந்து கண்களில் ஜலம் பெருக பயத்தினால் வெளியில் வராமல் தெருக்கதவைத் தாளிட்டுக்கொண்டு உட்சென்று ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டு ஹரீ! நாராயணா! என்ன விபத்து நேரிட்டது. நீயே கதி, உன்னைவிட எங்கள் குறைகளை கேட்க வேறு திக்கில்லையேயென்று அசைவற்றிருந்தாள். லக்ஷ்மையனும் அந்த சமயத்தில் ஸ்ரீமந்நாராயணன் சரணாரவிந்தங்களில் வைத்த அந்தக்கரணமுள்ளவனாயிருந்தான். அப்படியிருக்க, அரசனுடைய சேவகர்கள் வாசற்படியண்டைவந்து பார்க்கையில் கதவடைத்திருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு ஓ! லக்ஷ்மையனே உன் வெகுமானத்தைப் பெற்றுக்கொண்டு போ. ஏன் கதவை மூடியிருக்கிறாய்? கதவைத் திறந்துக்கொண்டு வெளியில் வா

வென்று சொல்லி, பல தடவை கூப்பிட்டார்கள். அதைக்கேட்டு ராமாம்பாள் கிடுகிடென்று நடுங்கிக்கொண்டு ஓ! தெய்வமே! இவர்கள் என்னவிதமாய் பரிகாசம் செய்கிறார்கள். தூக்குப்போடுகிறேனென்று சொல்லுவதற்குப் பதிலாக வெகுமானம் கொடுக்கிறேனென்று சொல்லுகிறார்களே. என்ன செய்வேனென்று பயந்திருந்தாள். இராஜ சேவகர்கள் எத்தனை தடவை கூப்பிட்டபோதிலும் யாரும் பதில் சொல்லாமலிருப்பதைக்கண்டு அவ்விடம்விட்டு புறப்பட்டுப்போய் இராஜனிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அரசன் மந்திரியை வரவழைத்து லக்ஷ்மையன் நான் அனுப்பிய வெகுமானத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை யாதலால், அக்காரணத்தை விசாரணை செய்யுமென்றும், கொடுத்த வெகுமானம் போதாதென்றால் பத்தாயிரத்துக்குப் பதிலாக இருபதினாயிரம் வராகன் கொடுமென்றும் உத்திரவளித்தனுப்பினார். உடனே மந்திரி இருபதினாயிரம் வராகனை யெடுத்துக்கொண்டு சிப்பந்திகளையு மழைத்துக்கொண்டு புறப்பட்டு லக்ஷ்மையன் வீட்டுக்குச்சென்று கதவு தாளிட்டிருப்பதைப் பார்த்து, கதவைத் தட்டி ஓ! தைரியமுள்ள வீரனே! கதவைத்திறந்துக்கொண்டு வெளியில் வாரும். ஏன் கதவை யடைத்திருக்கிறீர்? உமக்கு மனக்குறையிருந்தால் அதை யென்னோடு தெரிவியும். நான் உமது குறைகளைக் கவனிப்பேன். நீர் மிகவும் அதிர்ஷ்டமுள்ளவராய் இருக்கிறீர். இராஜாவின் கிருபை யுமக்கு மெத்தவுமுண்டு. முன் சொன்ன வெகுமானத்தைப் பார்க்கிலும் இரண்டு பங்கதிகமா யிப்பொழுது அரசன் அனுப்பியிருக்கிறார். இன்னும் உமக்கு சேனாதிபதி உத்தியோகத்தைக் கொடுத்து நூறு மடங்கு சம்பளம் அதிகமாய்க் கொடுப்பதற்கு எண்ணியிருக்கிறாரென்று சொல்லி வெகு தடவை கூப்பிட்டார். யாரும் கதவைத்திறந்து வெளி வராதிருப்பதைப்பார்த்து மந்திரி சிலநேரம் மௌனமாக யோசித்துக்கொண்டிருந்து, ஜவான்களைப்பார்த்து சேவகர்களே! இதென்னமோ ஆச்சரியமாயிருக்கிறது. இதன் காரணத்தை நாம் கண்டறியவேண்டுமாகையால் இந்தக் கதவை யுடைத்து அப்புறம் போடுங்களென்று உத்திரவளித்தார். மந்திரியினுத்திரவைக் கேட்டவுடனே ஜவான்கள் கதவை யுடைத்து அப்புறம் போட்டுவிட்டார்கள். அந்த சமயத்தில் ராமாம்பாளுக்கு நேரிட்டபயம் இத்தகைய



தென்றுரைக்க வியலாததாயிருந்தது. மந்திரியானவர் பரிவாரங்களோடு வீட்டுக்குள் பிரவேசித்தார். அப்பொழுதும் பேசாமலிருப்பதைப்பார்த்து, ஆச்சரியம்பெருக மந்திரி அந்த வீட்டில் ஒவ்வொரு அறையிலும் புகுந்து பரிசோதனை செய்துக்கொண்டிருந்தார். அச்சமயம் பயத்தால் நொந்து தடுமாறிக்கொண்டு ஓர் மூலையில் ஒளிந்திருந்த ராமாம்பாள் அவர் கண்ணுக்குத் தென்பட்டாள். மந்திரி அம்மங்கையை நோக்கி அம்மா! நீ ஏன் இவ்விதமாய் ஒளிந்துக்கொண்டிருக்கிறாய். உன் நாயகன் எங்கே யென்று கேட்டார். ராமாம்பாள் துக்கக்கடலி லாழ்ந்தவளாய் நடு நடுங்கிக்கொண்டு கடவுளை ஸ்மரித்துக்கொண்டு மந்திரியை நோக்கி ஓ! பிரபுவே! என் நாயகன் குற்றத்தை மன்னிக்கவேண்டும். இனிமேல் அவர் உத்தியோகத்திற்குக் கிரமமாய் வருவாரென்று சொல்லி அநேகவிதமாய்ப் பிரார்த்திக்கத் தொடங்கினாள். அதைக்கேட்டு மந்திரி அதிசயமுற்றவனாய் ஓ! அம்மணீ! உமக்கென்ன வெறியுண்டா? என்ன காரணத்தால் நீர் இவ்விதமாய்ப் பேசுகிறீர். இன்றையதினம் காலையில் நானும் மஹாராஜாவும் ஆயுதசாலைக்குப் போயிருந்தோம். அப்போ தவ்விடத்தில் லக்ஷ்மையனைக் கண்டு அவன் காரியங்களை மெச்சிக்கொண்டு பத்தாயிரம் வராகன் வெகுமானம் கொடுத்தனுப்பினோம். இப்பொழுது அதைப்பார்க்கிலும் இருமடங்கு வெகுமானம் மஹாராஜா அனுப்பியிருக்கிறார். ஆகையினால் நான் மன்னிக்கிறது என்ன இருக்கிறது? நீ ஏன் புத்தி சுவாதீனமில்லாமற் பேசுகிறாயென்று கேட்டார். இவ்வசனங்களைக் கேட்டு ராமாம்பாள் ஒன்றுந் தோன்றாமல் மௌனமாய் நின்றிருந்தனள். இதைக்கண்டு மந்திரி இதேதோ விந்தையாயிருக்கிறதென்றெண்ணி, வேறொரு மூலையைப்பார்க்கையில் சர்வத்தையும் மறந்து சர்வேஸ்வரனுடைய திருவடிகளில் மனதை நிலைநிறுத்தி ஸ்ரீநிவாசன் தியானத்தில் குடிகொண்டிருந்த லக்ஷ்மையனைக்கண்டு மனதிலொன்றும் தோன்றாமல் இதென்னமோ பகவானுடைய மாயையாக விருக்கிறதேயன்றி, மனிதர்களுடைய காரியமாயில்லையென்று மனதிலெண்ணிக்கொண்டு மறுபடியும் ராமாம்பாளிடத்திற்குவந்து ஓ! அம்மே! எனக்கு உண்மையை விளக்கும். அச்சங்கொள்ளவேண்டாமென்று தைரியஞ் சொன்னார். இவ்வசனங்களைக்கேட்ட ராமாம்பாள் சிறிது தைரிய

மடைந்து மந்திரியை நோக்கி, பிரபுவே! என் நாயகன் உத்தியோகத்திற்குப்போய் ஆறு மாதமாகிறது. சகல புவனங்களுக்கும் கர்த்தாவாகிய ஸ்ரீ வெங்கடேச மகாராஜ ராஜேஸ்வரன்து திருவடித்தியானமென்னும் உத்தியோக மொன்றையே செய்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது நீங்கள் சொல்லும்விஷயம் ஒன்றும் தெரியாது. ஆகையால் கடவுளைப் பற்றியாவது என் நாயகனை மன்னிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டனள். அதைக்கேட்டு மந்திரி ஆச்சரியத்தால் திக்பிரமையடைந்து, ஆ! ஹா!! இதென்ன மஹத்துவம். பகவானுடைய மகிமையாயிருக்கிறதென்று சிறிதுபோது அசைவற்றிருந்து பின் அவணின்றும் நீங்கி, வேகமாய் அரசனிடஞ்சென்று நடந்ததும் நடந்து கொண்டிருப்பதுமாகிய விஷயங்களையெல்லாம் தெரிவித்தான். அரசன் ஆச்சரியமேலிட்டவனாய் ஓட்டமாய் லக்ஷ்மையன் வீட்டுக்குவந்து திருவேங்கடன் நிஷ்டாரூடனாயிருந்த பக்த சிரோமணியைக்கண்டு நமஸ்காரஞ்செய்து ராமாம்பாளை விசாரித்து ஆச்சரியத்தால் மேல்மூச்சு விட்டுக்கொண்டு ஆ! ஹா! இப்பேர்ப்பட்ட கடவுளின் பெருமையைப் பார்ப்பதும் கேட்பதுமே பாக்கியம். இப்பொழுது நான் ஏற்படுத்திய பத்தாயிரம் வராகன் வெகுமானத்திற்கு ப்தில் 10 லக்ஷம் வராகன் வெகுமானமாய்க் கொடுக்கிறேன் என்று சொல்லி, உடனே பொக்கிஷாதிகாரிகளுக்கு உத்தரவளித்து நாளையதினம் லக்ஷ்மையனுக்காக உத்தியோசம் செய்யவரும் மாய புருடனைக் கண்டுபிடிக்கும்படி அநேகதூதர்களை இரகஸியமான விடங்களில் ஒளிந்துக்கொண்டிருக்கும்படி சட்டளையிட்டு, அந்தப் பெருமானைப் பார்க்க தானும் ஆவலுள்ளவனாய் ஓரிடத்தில் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தான். இவர்கள் இங்ஙனம் காத்திருக்கத் தலைப்பட்டதும் அந்த மாயமானிடன் அதுமுதல் அவ்விடம் வராமற்போய்விட்டனர். மகாராஜா சில நாள் வரையிலும் மாயரூபியாய் வரும் கடவுளைப்பார்க்கக் காத்திருந்தும் சுவாமியின் தரிசனம் கானக்கிடைக்காதபடியால் ஆச்சரியப்பட்டுக்கொண்டு ஆ! ஹா!! கடவுளே! லக்ஷ்மையனுக்காகவந்து உத்தியோகம் செய்தாரே. லக்ஷ்மையனுடைய பக்தி எவ்வளவு உண்மையானதாயிருக்கவேண்டும். கடவுளின்பேரில் உண்மையான பக்தி வைத்தவர்களுக்குக் கடவுள் அருள்பாலித்து ஆண்டருளுவாரென்பது இப்போது அனு



போகத்தில் தெரியவந்ததல்லவாவென்று யோசித்துக்கொண்டு அன்றுமுதல் லக்ஷமணதாசருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துக்கொண்டுவரும்படி ஏற்பாடு செய்துவிட்டார்.

இங்ஙனமிருக்க, லக்ஷ்மண தாஸர் நிஷ்டையிலிருந்து விழித்துக்கொண்டு நடந்த சங்கதிகளெல்லாம் தெரிந்தும் கிடைத்த வெகுமானத்தை யறிந்தும் ஆச்சரியம் பயபக்தியோடு நிரம்பிய மனதுடையவராய் செந்தாமரைக் கண்ணனான கடவுளை நோக்கி, ஓ! ஜெகதீசா! உன்னை நான் கண்டறியாமற்போனாலும் உன் மகத்துவமானகாரியங்களைக்கேட்டு ஆனந்தக் கூத்தாடினேன். நான் உமக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தேன். மகா ஆரண்யமான ஸ்ரீ வேங்கடாசலத்தில் நிர்மலமா யெழுந்தருளி தபசிகளுக்கும், யோகிகளுக்கும், சித்தர்களுக்கும், அன்பர்களுக்கும் தரிசனம் கொடுத்துக்கொண்டிருக்கும் நீ எனக்காக ஆறு மாத காலமாய் உத்தியோகஞ் செய்துகொண்டிருந்த காரணத்தினால் அவர்களுக்கு என்ன மனக்குறை நேரிட்டதோ? நான் அறியேன். விருக்ஷத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் இலைகள், புஷ்பங்கள், காய், கனிகள்போல் உன் திருவடியை சதா மனதில் தியானஞ்செய்துக்கொண்டு ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் அனந்தகோடி பக்தர்களிடம் நீர் போகாதகாரணத்தால் எவ்வளவு கிலேசமுண்டாயிற்றோ நானறியேன். அன்பர்களென்னும் கடலை ரமிக்கச்செய்யும் பூர்ணசந்திரனான மங்களமூர்த்தியே! உமக்கு என்னால் நேரிட்ட கஷ்டத்துக்கு மன்னியும். நான் உமக்கு என்ன கொடுக்கப்போகிறேன். இதோ என்னிடம் இராஜனால் கொடுக்கப்பட்ட வெகுமானமாகிய பத்து லக்ஷம் வராகனிருக்கின்றது. இதை அரசன் உனக்குதான் கொடுத்தார். உன்னுடைய பெருமையினாலேதான் இது கிடைத்தது. ஆகையால் இந்தப்பொருளை உன் திருமலைக்குவந்து உனக்குச் செலுத்திவிடுகிறேன் என்று சொல்லி திருமலைக்குப்போக நிச்சயம் செய்தனர்.

இங்ஙனமாலோசித்துக்கொண்டே லக்ஷ்மண தாஸர் ஓர் சுப தினத்தில் திருமலைக்குப்போக நிச்சயித்தவராய் தன் மனைவியாகிய ராமாம்பாளை யழைத்துக்கொண்டு இராஜனால் கொடுத்த வெகுமதியை எடுத்துக்கொண்டு திருப்பதிக்கு யாத்திரைசெய்யப் புறப்பட்டனர். அந்த ஊரில் பஜனைமடம் ஒன்றை ஏற்பாடுசெய்துக்

கொண்டு வெகு காலமாய் பக்தியோடு ஹரிபஜனை செய்துகொண்டிருந்த மூன்று பக்தர்கள் லக்ஷ்மண தாஸருடைய பக்திப் பிரபாவங்களையும், பெருமையும் கேள்விப்பட்டு அப்பேர்ப்பட்ட பக்த சிரோமணியோடு கூடி திருமலைக்குச்சென்று திருவேங்கடமுடையானை தரிசிப்பது பெருத்த புண்ணியமென்றெண்ணி அவர்களும் லக்ஷ்மண தாஸரோடுகூட புறப்பட்டார்கள். லக்ஷ்மண தாஸரும் ராமாம்பாளும் மூன்றன்பர்களும் புறப்பட்டுப்போகையில் லக்ஷ்மண தாஸர் இலக்ஷணமாய் நாமங்களைத் தரித்துக்கொண்டு கால்களில் கெஜ்ஜைகளைக் கட்டிக்கொண்டு கையில் தம்பூரைப் பிடித்துக்கொண்டு ஜெகதீசா! எல்லாம் உன்மயமே. ஜீவகோடிகளுக்கு உன்னை நாடுவதே சுகம். உன்னைத் தேடாமல் சம்சாரம் முதலிய போகங்களில் அலைவது துக்கம். சரணம் சரணம் எங்களைக் காத்தருளவேண்டுமென்று பஜனைகள் செய்துகொண்டு போனார்கள். அப்பொழுது மூவரும் ப்ரிசுத்தமாகவும், திரிகரண சுத்தியோடு கைகளில் தாளங்களை வைத்துக்கொண்டு லக்ஷ்மண தாஸருடன் பஜனைசெய்துக்கொண்டு போனார்கள். அந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் கூட்டங் கூட்டமாய்வந்து அந்த பக்த சிரோமணிகளைத் தரிசனஞ்செய்து அவர்களின்பேரில் பூமாரிபொழிந்து சுவாமிக்கு அர்ப்பணஞ் செய்வதற்காகத் தம்மாலியன்ற பொருள்களைக் கொடுத்து வெகுதூரம் அவர்களோடுவந்து பிறகு ஹரி பக்தி மனதில் ததும்பியவர்களாய் அவரவர் வீடுகளுக்குத் திரும்பிப்போய்விட்டார்கள்.

இங்ஙனம் இவர்கள் ஐந்துபேரும் ஹரி பஜனை செய்துக்கொண்டுபோகையில், வழியில் ஓர் மகம்மதிய அரசுக்குட்பட்ட தேசத்தின் வழியாய் போகவேண்டியதாய் நேரிட்டது. ஆகையால் அவர்கள் அத்தேசத்தின் வழியாய் யாத்திரை செய்துக்கொண்டிருக்க, அத்தேசத்திலுள்ள சில மகம்மதியர்கள் பார்த்து பரிகாசமாய் நகைத்துக்கொண்டு அவர்களை நோக்கி, அடே! அஞ்ஞானிகளே! நீங்கள் என்ன வேடிக்கையாய் போகிறீர்கள்? இது என்ன வேஷம்? என்ன பஜனை? நாய்கள் குலைப்புக்கு ஒத்திருக்கிறதே? கேவலம் காபர்களாகிய நீங்கள் துலுக்கருடைய ஊரில் இவ்விதம் பஜனை செய்துக்கொண்டுபோவது பெருத்த குற்றமென்றுசொல்லி அவர்கள் ஐவரையும் கைதிகளாகச்செய்து அவர்களையும் அவர்களுடைய மூட்டை



களையும் அந்த தேசத்தையாளும் நவாபிடத்திற்குக் கொண்டுபோனார்கள். அந்த விபத்து நேரிட்டதைப்பார்த்து லக்ஷ்மண தாஸர் மனதிற் கொன்றுந் தோன்றாமல் துக்கித்துக் கடவுளைநோக்கி, சுவாமீ! இவர்கள் எங்களனைவரையும் என்ன செய்வார்களோ? இராஜஸகுணம் மேலிட்டு ஜீவகாருண்யமின்றிய கொடூரமான புத்தியும் சுபாவமுள்ள இவர்கள் எங்களை யென்ன கஷ்டப்படுத்துவார்களோ வென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நவாபு அவர்களைப்பார்த்து அடே! பேய்களே! ஏன் இவ்விதமாய் கோவிந்தா கோவிந்தாவென்று கூக்குரலிடுகிறீர்கள். அவ்விதமாய்க் கூவினதினால் என்ன பிரயோஜனம். உங்களுக்கு என்ன வெறிபிடித்திருக்கிறதாவென்று கேட்டான். அதற்கு லக்ஷ்மையன் நவாபைப்பார்த்து, ஓ! அரசனே! நாங்கள் சர்வேஸ்வரனான ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் சந்நிதிக்கு காணிக்கைகள் செலுத்தப்போகிறோம் என்று சொன்னார். அதைக் கேட்டவுடனே நவாபு அவர்களுடைய மூட்டைகளைப் பரிசோதிக்கும்படியாக சேவகர்களுக்கு உத்திரவுகொடுக்க, அவர்கள் நவாபின் உத்திரவின்படி மூட்டைகளைஅவிழ்த்துப்பார்க்க, அதில் பத்து லக்ஷம் வராகன் இருந்தது. அதைப்பார்த்து நவாபு வெகு சந்தோஷப்பட்டு சபாஷ்! இன்றைக்கு நல்ல அதிர்ஷ்டம். கஷ்டப்பட்டு சம்பாதிக்கவேண்டிய பொருள் தானாகவே நம்மைத் தேடி வந்ததென்று சொல்லி நகைத்துக்கொண்டு அப்பொருளைக் கஜானாவில் சேர்த்துவிடும்படி தனாதிகாரிக்கு உத்திரவுகொடுத்தான். பிறகு நவாபு லக்ஷ்மையனைநோக்கி, அடா! நீ திருப்பதியில் செலுத்தவேண்டிய பொருள்களை இவ்விடத்திலேயே செலுத்திவிட்டாய். ஆனதால் அதற்கு பதில் நான் உனக்கு ஓர் உபகாரம் செய்யவேண்டியிருக்கிறது. அது யாதெனில், உங்களை யெல்லோரையும் நானே திருப்பதிக்கு இன்னும் ஒரு நாழிகைக்குள்ளாக அனுப்பிவிடுகிறேன். உங்களுக்கு அவ்வளவுதூரம் போகும்படியான கஷ்டம் கொடுப்பது நியாயமாயில்லையென்று சொல்லி, ஓர் பெருமரம் கடுங்காற்றினால் இப்படியப்படி அசைந்ததுபோல் தேகமெல்லாம் குலுங்க கல கலவென்று சிரித்தான். அதன்பின் நவாபு லக்ஷ்மையனது முகத்தைப் பார்த்து ஏ! அஞ்ஞானியே! கேவலமான கற்களை கும்பிடும் உங்களுக்குச் சர்வேஸ்வரன் ஏது? சத்திய மதமாகிய இஸ்லாம் மதத்

துக்கு மாத்திரமே சர்வேஸ்வரனான ஓர் கடவுளுண்டு. அப்படியிருக்க, நீ உங்கள் வெங்கடேசப் பெருமான் சர்வேஸ்வரனென்று அஞ்ஞான வார்த்தைகளைப் பேசுகிறாய். உன் தெய்வம் உண்மையான சர்வேஸ்வரனாயிருந்தால் உங்களை காத்தருளட்டும் பார். இந்த தடாகாவென்று அருகில் நின்றிருந்த சேவகர்களைப்பார்த்து, அடே கூடிய சீக்கிரத்தில் ஓர் அக்னிகுண்டத்தைத் தயார்செய்து, அதில் இவர்கள் ஐவரையும் ஈட்டிகளால் குத்தித் தள்ளி நெருப்பில் புரட்டியுருட்டி திருப்பதிக்கு அனுப்புங்களென்று உத்தரவளித்து சபையார்களுடன் பரிகாஸங்களாடத் தொடங்கினான். அதை யெல்லாம் கேட்டு லக்ஷ்மையன் திகிலடைந்து, ஹரி நாராயணா! என்னகதி வாய்த்தது. எங்கள் பிராணன் இவ்விதமாய்நெருப்பில் போவதற்கு பூர்வகர்மத்தினால் விதியுண்டோ? என்னமோ நான் அறியேன். ஆனால், தெய்வமே எங்களனைவரையும் உன் க்ஷேத்திரத்திற்கு வந்து உன்னை தரிசிக்கச்செய்து உனக்குக் காணிக்கைகளைச் செலுத்தி மறுபடியும் வரும்போதாவது இப்பேர்ப்பட்ட துன்பங்கள் நேரிடக்கூடாதாவென்று சிந்தித்தார். ராமாம்பாள் கடவுளைநோக்கி ஓ! ஆபத்பாந்தவா! எங்களை கைவிட்டாயோ? உன்னை நம்பிய நாங்கள் அக்கினியில் மடிவது உனக்குச் சந்தோஷமா? எங்களை ஏன் காக்காமல் விபத்துகளுக் கிரையாக்கிவிட்டாய்? இப்படி செய்வது உனக்குப்பெருமையா? அல்லது நாங்கள்செய்த பாபகர்மங்களுக்குப்பலனா? என்ன செய்வோமென்று துக்கித்தாள். அப்பொழுது கூடவந்த மூவர் பயத்தால் தடமாடிக்கொண்டு ஓ தெய்வமே! லக்ஷ்மையன் பரமபக்தனென்று நம்பிவந்ததற்கு இக்கதி வாய்த்ததேயென்று தாபமடைந்தார்கள். இவ்வண்ணம் எல்லோரும் விசனத்தால் மெலிந்திருக்க, லக்ஷ்மையன் நவாபை நோக்கி, ஓ மன்னவனே என் கோரிக்கை யொன்றிருக்கிறது. அதை தயவுசெய்து கேட்டு அவ்விதமாகவே உத்தரவளியும். என்னை நெருப்பில் தள்ளவேண்டாம். நானே கடவுளை தியானித்துக்கொண்டு நெருப்பில் விழுந்துவிடுகிறேன். மேலும் நான் நீராடுவதற்கும் பரப்பிரம்ம களாசம்பூதமான திரு நாமங்களைத் தரித்துக்கொள்வதற்கும் கடவுளை நிஷ்டாரூடனாய் தியானிப்பதற்கும் உத்தரவளிப்பாய். இதைப்பார்க்கிலும் எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லையென்றுகெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.



அதைக்கேட்டு நவாபு ஆச்சரியத்துடன் நகைத்துக் கொண்டு கர்வமென்னும் மலைபோல் அலக்ஷியமாய் ஜீவகாருண்யம் எள்ளளவாகிலுமின்றி பரிகாசவார்த்தையுடன் அவ்விடத்திலிருந்த சேவகர்களைப்பார்த்து, ஆ! ஹா!! இவனெவ்வளவு வெறியன். யாராகிலும் இவ்வுலகத்தின்கண் தள்ளாமல் நெருப்பில் விழுந்து சாவார்களோ? ஆனாலும் பெரிதல்ல பார்க்கலாம். இந்த தமாஷா அடா நீங்கள் இவன் சீக்கிரமாய் நெருப்பில் பிரவேசிக்காமற் போனால் ஈட்டிகளால் குத்தி நெருப்பில் தள்ளி தடையில்லாமல் திருப்பதிக்கு அனுப்பிவிடுங்கள். சிலாராதன அசத்திய வாதிகளாகிய இவர்களுக்கு இவ்விடம் வேலையில்லை யென்று சொல்லி அச்சங்கதியை ஊரெங்கும் தண்டோரா மூலமாய் தெரிவித்து ஜனங்கள் எல்லோரையும் வரவழைத்துப் பார்க்கச் செய்யுங்களென்று ஆக்யாபித்து தன் அரண்மனைக்குள் போய்விட்டான். நவாபின் உத்திரவைப் பெற்ற இராஜ சேவகர்கள் ஊருக்குட் பிரவேசித்து ஐந்துபேர் நெருப்பில் சாகப்போகிறார்களென்றும், அதில் தமாஷா என்னவென்றால் யாரும் தள்ளாமற்படி யவர்களே நெருப்பில் விழப்போகிறார்களென்றும் தண்டோரா போட்டபடியால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வேடிக்கைபார்க்க வந்திருந்தார்கள். சிலராஜ சேவகர்கள் மலைகளைப் போன்ற அக்கினி ஜ்வாலைகளுண்டாகும் வண்ணம் ஓர் பெரிய அக்கினி குண்டத்தைத் தயார் செய்து அதில் காட்டில் காய்ந்து முறிந்திருக்கும் பருத்தி மரங்களை அப்படியப்படியே போட்டு வெகு தீக்ஷண்யமாகிய அக்கினியை யுண்டாக்கினார்கள். அந்த சமயத்தில் லக்ஷ்மையன் முதலிய ஐவரும் நீராடி நாமங்களைத் தரித்துக்கொண்டு கழுத்தில் துளசிமாலைகளை யணிந்து கண்களை மேல் நோக்கச்செய்து ஜகதீசா! உன் திருவடிகளேசரணம். உன்னைவிட இரக்ஷகன் ஈரேழு லோகங்களிலுங் கிடையாது. உன்னால் ரக்ஷிக்கக்கூடும். சிக்ஷிக்கக்கூடும். சர்வசக்தியுள்ள சர்வேஸ்வரனான ஸ்ரீ வெங்கடேசப் பரப்பிரம்மமே! எங்களைக் காத்தருள்வாயென்று தியானித்துக் கொண்டு நெருப்புக் கருகேவந்து நின்றார்கள். அப்பொழுது துருக்கர்கள் அவர்களைப் பார்த்து அடே! அஞ்ஞானிகளே! ஆகட்டும் சீக்கிரம் காலஹரணமாகிறது. நெருப்பில் விழுந்து திருப்பதிக்குப் போங்கள். இவ்விடம் இன்னுமிருப்பது நியாயமல்ல

வென்று துரித்தப்படுத்தினார்கள். அப்பொழுது லக்ஷ்மையன் தன்னிரண்டு கரங்களை மேலெடுத்து ஓ! கிருபாநிதியே! ஆதரவில்லாத எனக்கு ஆதரவாய் நின்றிருக்கும் தெய்வமே. ஏழுகடல்களைப் போன்ற பெருங்கருணையுள்ள ஸ்ரீநிவாசா! பக்தர்களைக் காக்கும் துரையே! இப்பொழுது நேரிட்டிருக்கும் விபத்திலிருந்து காப்பதற்கு உன்னைவிட வேறு ஆதாரமில்லை. குளிர்ச்சியாய் உன் கடைக்கண்ணால் பார்த்து உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்வாய். சரணம் சரணம் நீயேகதி உன்னைவிட வேறுகதியில்லையென்று தியானித்துக் கொண்டு நெருப்பில் பிரவேசிக்கப் போனார். அப்பொழுது அவர்மனைவியாகிய ராமாம்பாள் பரிதபித்துக் கொண்டு நாயகனைப் பார்த்து சுவாமி நானும் உங்களோடுகூட வருகிறேன். எனக்கும் அந்த கருணாநிதியாகிய திருவேங்கடப் பெருமான் திருவடியேகதி அவனன்றி வேறுகதியில்லை. உமக்காக உத்தியோகம் செய்த பெருமான் இப்பொழுது எந்த பக்தனுக்காகவோ பாடுபட்டுக்கொண்டு நம்முடைய குறைகளைக் கேட்காமல் இருக்கிறார் போல் தோன்றுகின்றது. இப்பொழுது நான் உங்களுடன் சேர்ந்து நெருப்பில் பிரவேசிக்காமற் போனால் இந்த கொடூரமான தூதர்கள் என்னை எப்படியாகிலும் நெருப்பில் தள்ளிக் கொல்லப் போகிறார்கள். ஆகையால் நானும் ஹரித்தியானம் செய்துகொண்டு சாகிறேனென்று சொல்லி நாயகனுடைய வலது கையைப் பிடித்துக்கொண்டனள். இஃதிப்படியிருக்க, மூன்று பக்தர்கள் ஹரிஹரி எங்களுக்கு என்னகதி நேரிட்டது. நாங்கள் ஊரில்சும்மா யிருந்திருந்தால் இன்னும் சிலநாள் ஜீவியவந்தர்களா யிருப்போமே. அனியாயமாய் இப்பொழுது பிராணன் போகப் போகிறதே. கடவுளே! உம்மை தரிசிக்கவந்ததற்கு இத்தகைய நற்பலனைத் தந்தாய். ஆ! ஹா! இந்த நெருப்பில் விழுந்து எங்கள் பிரணன் எவ்விதமாய் தத்தளிக்குமோ? இப்பொழுது நெருப்பில் விழுந்து சாகாமற் போனால் இந்த துருக்கர்கள் லேசாய் விடப்போகிறதில்லை யென்று சொல்லிக் கொண்டு லக்ஷ்மணதாசருக் கருகில்வந்து சுவாமி உம்மை பரமபக்தனென்று நம்பிவந்ததற்கு எங்களுக்கு இந்தகதி வாய்த்தது. நாங்களும் உம்முடனே வருகிறோம். உங்களுக்கான கதி எங்களுக்காகட்டுமென்று சொல்லி அவரது இடது கரத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.



இவ்விதம் கைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் நால்வருடன் லக்ஷ்மையன் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பாதபத்மங்களை தியானித்துக் கொண்டு மனம் புத்தி முதலியவற்றை ஸ்திரப்படுத்தி நீயே கதி வெங்கடாசலபதி என்று பஜனை செய்துக்கொண்டு அக்கினி குண்டத்தை நெருங்கினார்கள். அப்பொழுது துருக்க ஜனங்கள் ஆயிரக்கணக்காய்வந்து அவர்கள் பாதபித்துக் கொண்டிருக்கும் வேடிக்கைகளைப் பார்த்து சந்தோஷித்துக் கொண்டிருந்தார்கள். லக்ஷ்மையன் நெருப்பை நெருங்கி வந்தவுடனே அவ்விடத்தில் சூடான காற்றின்றி பாற்கடலில் வீசுகின்ற குளிர்ந்த காற்றைப் போல் சஞ்சீவிக் காற்று வீசத்தொடங்கியது. மறுநிமிஷத்திற் கெல்லாம் லக்ஷ்மையன் ஹரித்தியானஞ் செய்துக்கொண்டு அக்கினியில் ஒரு அடிவைத்தார். அவர் மனைவியும் மற்ற மூவர்களும் அக்கினியில் பிரவேசித்தார்கள். எல்லாருக்கும் அந்த அக்கினி குளிர்ந்து தேகாரோக்கியத்தையும் மனகளிப்பையு முண்டாக்கக் கூடியதா யிருந்ததால் அவர்களுக்கு ஆச்சரியமும்மனதிற்குப்பிரமையுமுண்டாகக்கூடிய அவ்வளவு விசேஷமுடையதா யிருந்தது. பிறகு லக்ஷ்மையன் எல்லோருடன் பத்து அடிதூரஞ் சென்று அக்கினி குண்டத்தின் நடுவில் நின்றுக் கொண்டிருந்தார்கள். இவ்வதிசயத்தைப் பார்த்த துருக்கர்கள் ஆச்சரியத்தால் தடுமாறிக்கொண்டு ஓட்டமாயோடி நவாபிடம் தெரிவித்தார்கள். கூட்டமாய்ப் பார்க்கவந்த துருக்கர்கள் பெருஞ் சத்தத்தோடு ஆ! ஹா!! இது வென்ன ஆச்சரியம் என்னமகிமை. நம்முடைய நவாபு எத்தனையோ பேர் இந்துக்களை உயிருடன் கொளுத்தி விட்டிருக்கிறார். நாம் கண்ணால் கண்டிருக்கிறோம். ஆனால் இப்பேர்ப்பட்ட ஆச்சரியத்தைக் கண்டதில்லை யென்று பெருங் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வதிசயத்தைக்கேட்ட நவாபு உடல் நடுக்கங் கொண்டு அத்தியாச்சரியமுடன் மனமயங்கி ஒன்றுந் தோன்றாமல் தட்டுக் கெட்டு தடுமாறிக் கொண்டு வந்து பார்த்தான். ஆ! ஹா!! இதென்ன மஹத்துவம். இந்துக்களுடைய தெய்வமும் உண்மையான தெய்வமே யென்று நவாபு சொல்லிக் கொண்டிருக்க, மகம்மதியர்கள் பெரிய விருக்ஷங்களை யந்த நெருப்பில் மேலும்மேலும் தள்ளி மலைக்குச் சமதையான பெருத்த ஜுவாலைகளை யுண்டாக்கினார்கள். அக்கினி எவ்

வளவு அதிகப்பட்டும் அவர்கள் ஐவர்களும் யாதொரு விபத்துமின்றி யிருப்பதைப் பார்த்து நவாபு பயமும் பிரம்மையுமுடையவனாய் அவர்களை நோக்கி, ஓ! புண்ணியர்களே! வாருங்கள். வாருங்கள். நான் உங்களை விடுதலை செய்துவிட்டேன். ஹல்லாஹி, பிஸ்மில்லாஹி, ஸ்ரீ வெங்கடேசப் பெருமானும் சாக்ஷாத்காரனான ஹல்லா கடவுளே என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. அவ்வண்ணமில்லாவிடில் இத்தகைய மஹத்துவம் நேரிடாதென்று சொல்லி அவர்களை அக்கினி குண்டத்தை விட்டு வெளிவரும்படி பிரார்த்தித்தான். நவாபின் வேண்டுகோளுக்கிணங்கி, பக்தர்கள் அக்கினியை விட்டு வெளிவர, நவாபு அவர்களிடஞ் சென்று கைகளைக் கட்டிக் கொண்டு பூமியின்பேரில் முழந்தாளிட்டுக்கொண்டு சர்வேஸ்வரனான ஸ்ரீ வெங்கடேச ஹல்லா சாஹிபை தியானித்துக் கொண்டு ஓ! ஜெகத்ரக்ஷகனான தெய்வமே! உம்முடைய பெருமையையும் உண்மையையும் அறியாமல் உன்னுடைய அன்பர்களிடம் நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு அவர்கள் ஐவரையும் பார்த்து நீங்கள் கடவுளுடைய உண்மையான அன்பர்களாகும். சர்வேஸ்வரன் உங்களிடம் அநுக்கிரகமுள்ளவராயிருக்கிறார். நான் இப்பேர்ப்பட்ட மகத்துவத்தைக் கண்டதுங்கேட்டதுமில்லை. நீங்கள் உங்கள் வழியே போகலாம். மெக்கா க்ஷேத்திரத்துக்குச் சமானமான திருப்பதி மகாக்ஷேத்திரத்திற்குச் சென்று கடவுளை தரிசனம் செய்யலாம். உங்கள் பொருள்களை நீங்களெடுத்துக்கொண்டு போகலாம். நான் கடவுளுச்குச் செய்த அபசாரம் பரிகாரமாவதற்காக இதோ நானும் பத்துலக்ஷம் வராகன் அபராதமாக கொடுகிறேன். இதையுமெடுத்துக் கொண்டு போங்கள். இனிமேல் நானும் என்னுடைய சந்ததியாரும் வெங்கடேஸ்வர ஹல்லாவை மறக்கமாட்டோம். அவரைப் பார்க்கிலும் பிரத்தியக்ஷமான கடவுள் வேறில்லை யென்று சொல்லி அவர்கள் ஐவருக்கும் ஆபரணங்கள், பீதாம்பரங்கள், சால்வைகள்முதலியன சன்மானம் செய்து அனுப்பினான். அப்பொழுது அவ்வூர் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து அவர்கள் ஐவரையும் பார்த்துச் சந்தோஷித்து வெங்கடேசப் பெருமானுக்கு அர்ப்பணஞ் செய்வதற்காக அவரவர் சக்திக்குத் தக்கபடி பொருள்களைக் கொடுத்து ஹல்லாவுக்குப் பிரீதியான மல்லி



கைப் புஷ்பங்களைஅவர்களின் பேரில் பொழிந்து இலாஹி அல்லாஹி வெங்கடேஸ்வர அல்லாஹி பிஸ்மில்லாஹி யென்று சொல்லிக் கொண்டு ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு மேல் விழுந்து வந்து அவர்களைத் தரிசித்துக் கொண்டாடினார்கள்.

இங்ஙனம் சர்வஜனங்களும் கொண்டாடிக் கொண்டிருக்க, அந்த ஐவரும் எல்லாப் பொருள்களையும் பெற்றுக்கொண்டு முன்போலவே ஹரிபஜனைகள் செய்துக்கொண்டு புறப்பட்டுப் போய் திருப்பதி மகாக்ஷேத்திரத்திற்குச்சென்று அவ்விடத்திலுள்ளபாபவிநாசன,ஜாபாலி, பாண்டவ, இந்திர, சனகசனந்தன, ரசாயன, ஆகாஸ கங்கை, தும்பிரு, நாரத, கிருஷ்ண, குமாரதாரிக, சக்கர, ராமகிருஷ்ண, கபில, வில்வ, ஸ்வாமிபுஷ்கரணி முதலிய சகலபுண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி, ரிஷிகளாலும் சித்தர்களாலும் தபசிகளாலும் சித்தவித்யாதர கின்னர கிம்புருட கந்தர்வர் முதலிய முப்பத்து முக்கோடி தேவகணங்களாலும் கொண்டாடப்படும் பெருங்கருணையுள்ள ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை தரிசனஞ் செய்துக்கொண்டு வந்து காணிக்கைகளைச் செலுத்தி பிரம்மானந்த பரிதர்களாய் மறுபடியும் திருவேங்கடப் பெருமான் லீலாவதார மஹத்துவத்தைக் கொண்டாடிக் கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்றார்கள். அவ்வூரரசன் அந்த புண்ணியர்கள் வருவதை யறிந்து ஊரெங்கும் மகரதோரணங்களைக் கட்டி அநேகவித அலங்காரங்கள் செய்து தான் தண்டு தளங்களுடனும், ஹரிபஜனை கோஷ்டிகளுடனும், டங்கா துந்துபி முதலிய வாத்தியங்களுடனும், எதிர் கொண்டுவந்து லக்ஷ்மைய பக்த சிரோமணியைக்கண்டு தண்டனிட்டு அவரை கௌரவம் செய்து கொண்டாடி, நவாபு தேசத்தில் நடந்த விருத்தாந்தத்தை தான் முன்பே கேட்டிருந்த போதிலும், மறுபடியும் அச்சங்கதிகளை லக்ஷ்மையனிடம் நேரில் கேட்டுத் தெரிந்துக் கொண்டு ஆச்சரிய மடைந்தவனாய் தானும் அன்றுமுதல் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பேரில் திடமான பக்தியுள்ளவனாய் திரிகாலங்களிலும் அந்தக் கமலநயனனைத் தியானித்துக் கொண்டு தருமபுத்தியுடன் ராஜ்ய பரிபாலனஞ் செய்துக்கொண்டு வந்தான். மேலும் அந்தப் பட்டணத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் திருக்கோயிலை மிகவும் பெரிதாகக் கட்டி அவ்விடத்தில் எழுந்

தருளிய ஜெகதீஸனை தரிசனம் செய்து சர்வஜனங்கள் தன்யர்களாய் முக்தர்களாக வேணுமென் றெண்ணி, மிகவும் அற்புதமாக பிரம்மோற்சவங்களை நடப்பித்து தினம் தவறாமல் தான் கோயிலுக்குச் சென்று கடவுளை தரிசனஞ் செய்து சகல பாபவிமோசனமுள்ளவனாய் பரிசுத்தாந்தரங்கமுடையவனாய் சுக ஜீவியாயிருந்தான். சிபாயி லக்ஷ்மையன் தேவலோகத்தில் தேவர்களால் கொண்டாடப்பட்ட தேவேந்திரனைப் போல் சகல சாதுக்களாலும் புகழப்பட்டு ஏகசக்ராதிபதியைப் போல் அரசர்களாலும் நவாபுகளாலும் இதரபிரபுக்களாலும் கௌரவிக்கப்பட்டும் ஸ்ரீநிவாஸமூர்த்தியைப்போல் பக்த ஜனங்களால் பூஜிக்கப்பட்டும் சகல போகபாக்கியங்களுடன் சிரகாலம் ஜீவித்திருந்து முடிவில் நித்திய நிரஞ்சன நிராதிசய சச்சிதானந்த பரப்பிரம்மமான திருவேங்கட முடையான் திருவடியைச் சேர்ந்தார். ராமாம்பாளும் மூன்று அன்பர்களும் ஸ்ரீநிவாசப் பெருமான் பேரில் ஸ்திரமான பக்தியுள்ளவர்களாய் துக்கமயமான சம்சார பயங்கரக் கடலைத்தாண்டிப் போனவர்களாய் சாஸ்வத வைகுண்டத்தை யடைந்தார்கள். அந்த தேசத்திலுள்ள ஜனங்களும், நவாபு தேசத்திலுள்ள ஜனங்களும் சிபாய் லக்ஷ்மையனுடைய பிரபாவங்களைக் கொண்டாடிக் கொண்டும், எவ்விடம் பார்த்த போதிலும் செந்தாமரைக் கண்ணனை திருவேங்கடப் பெருமானைக் கொண்டாடிக் கொண்டும் விபத்துகளும், பாதைகளும் நேரிட்டபோது அந்த கிருபாசாகரனுக்குப் பிரார்த்தனைகள் செய்துக்கொண்டும், சுகம் பெற்றவர்களாய் தர்மார்த்த காமமோக்ஷமெனும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்தவர்களா யிருந்தார்கள்.

## மிலேச்ச தாஸர் சரித்திரம்.

ஸ்ரீ பாதமகாகண்டத்திற்கு தென்மேற்காயுள்ள மலையாளப் பிரதேசத்தில் ரமணபுரி என்கிற ஓர் கிராமமிருந்தது. அவ்விடத்தில் ஓர் ஹரிதாசர் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் பேரில் விசேஷமான பக்தி சிரத்தையுள்ளவராய் அநுதினமும் தியானித்துக் கொண்டு அவர் திருவருளுக்கு ஆளாவதற்காக ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்திற்கு வெகு தடவை யாத்திரை செய்து சர்வேஸ்வரனைத்



தரிசித்து ஆனந்தபரிதனாயிருக்கையில், ஒருநாள் வெங்கடேஸ்வரர் அவருக்கு தரிசனம் கொடுத்து இனிமேல் அவர் தரிசனத்திற்காக ஸ்ரீ திருப்பதி க்ஷேத்திரத்திற்கு வரவேண்டிய தில்லையென்றும் அவர் குடியிருக்கும் கிராமத்திற் கருகில் ஓரிடத்தில் ஸ்ரீஹரி விக்கிரகம் இருக்கிறதென்றும் அதைக் கொண்டுவந்து ஆராதித்துக் கொண்டிருக்கும்படியும் உத்தரவளித்துப் போனார். ஆகையால் அந்த பக்தன் ஸ்ரீஹரி அருளிச்செய்த பிரகாரம் போய் தேடுகையில், ஸ்ரீ ஹரிவிக்கிரகம் அகப்பட்டபடியால் அதை தன் வீட்டிற்குக் கொண்டுவந்து அத்தியந்த பக்தி சிரத்தையுடன் தினந்தோறும் அபிஷேக புஷ்ப வஸ்திரகந்த ஆபரண அலங்காரங்களைச் செய்து ஆராதித்துக் கொண்டு வந்தான். அதற்குமேல் கடவுள் அவன் பக்தி சிரத்தைக்கு மெச்சிக்கொண்டவராய் தினந்தோறும் அந்த பக்தனுக்கு தரிசனங் கொடுத்துக் கொண்டும் தன் கிருபாரஸத்தினால் ஆதரித்துக் கொண்டும் அந்த பக்தனால் நிவேதனஞ் செய்யப்படும் பிரசாத கனிவர்க்கங்களைப் புசித்துக் கொண்டும் வந்தனர்.

இவ்வண்ணமிருக்க, அந்த ரகசியம் எப்படியோ அக்கிராமவாசிகளுக்குத்தெரிந்துவிட்டபடியால் அவர்களெல்லோரும் கூட்டங்கூட்டமாய் அந்த பக்தனுடைய வீட்டிற்கு வந்து கடவுளை மிகுந்த பக்தி சிரத்தையோடு ஆராதித்துக்கொண்டும், அந்த பக்தனுடைய பிரபாவங்களைக் கொண்டாடிக்கொண்டும், திருவேங்கடப் பெருமான் ஒருவனே இந்த கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமென்றும், அன்பர்களுக் கன்பனென்றும், புகழ்ந்துக் கொண்டு வந்தார்கள். இப்படியிருக்க அந்த ஊரில் ஓர் மிலேச்சன் அந்த பக்த சிரோமணியின் பிரபாவங்களை யெல்லாம் கேட்டு இவ்விதமாய் ஆலோசிக்கத் தொடங்கினான். ஆ! ஹா!! எனக்கேன் அவ்விதமாய் கடவுளின்பேரில் பக்தி சிரத்தை யுண்டாகக்கூடாது. நானேன் அவனைப்போல் பக்தனாகக் கூடாது. எனக்கேன் கடவுள் தரிசனம் கொடுக்கக் கூடாது. திருவேங்கடன் என்னுடைய வீட்டில் ஏன் புசிக்கக்கூடாது. ஆ! ஹா!! அவர் சிநேகம் உண்டானால் நான் எவ்வளவு தன்னியனாவேன். அவரை நான் கண்ணால் கண்டால் எவ்வளவு களிப்படைவேன். அவர்

புசிப்பதைப் பார்த்தால் என்மனமானது எவ்வளவு சந்தோஷத்தால் பொங்கும். ஆ! ஹா!! நானெவ்விதமானாலும் அவனைப்போல் ஆகவேணுமென்று நிச்சயித்தவனாய் வெகு காலமாக திருவேங்கடனை மனதிலேயே தியானஞ்செய்துக்கொண்டு வந்தான். ஆனால், அவனுக்கு புத்தி திடப்படாமல் முடிவில் திருவேங்கடன் விக்கிரகத்தை ஆராதிப்பதே சுலபமான மார்க்கமென்றும், அவரை பிரேமிப்பதற்கும், அலங்கரிப்பதற்கும், கொண்டாடுவதற்கும், பூஜிப்பதற்கும் விக்கிரகமே சரியானதென்றும் நிச்சயித்தான். ஆனால், அவன் ஜாதியில் தாழ்ந்தவனாகையால் கோவில்களிலும், பஜனை மந்திரம் முதலிய பகவதாராதனை விடங்களில் அவனையாரும் சேர்க்காமல் துரத்துகிறபடியால் அவன் கோவில் முதலிய இடங்களுக்குச் சென்று தூரமாய் நின்று கும்பிடுபோட்டுக் கொண்டு தினந்தோறும் கடவுளை சங்கற்ப பூர்வகமாக தியானித்துக் கொண்டு வந்தான். அப்படி செய்தும் அவன் மனம் புத்தி முதலியன திடப்படாமல் போனபடியால் முடிவில் அவன் பக்தனால் ஆராதித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் விக்கிரகத்தைக் களவுசெய்தாவது எடுத்துக்கொண்டுவந்து விடவேண்டுமென்றும், அதைக் கொண்டு வந்தாலொழிய தன் மனம் திடப்படாதென்றும், அந்த விக்கிரகத்தைப் பூஜித்தால் தன்னுடைய அபிப்பிராயம் கட்டாயம் நிறைவேறுமென்றும், தான் புனிதனாய் தன்னியனாவதற்கு இது ஒன்றே நல்ல உபாயமென்றும், திருவேங்கடனுடைய அருளுக்காளாவதற்கு இதைப்பார்க்கிலும் வேறு உபாயமில்லை யென்றும் நிச்சயித்து எவ்விதமாய் அந்த பக்தன் பூஜித்துக் கொண்டிருக்கும் விக்கிரகத்தைத் திருடிக்கொண்டு வருவதென்றும், அதற்கு எப்போது நல்ல சமயம் வாய்க்குமோ வென்றும் யோசித்துக் கொண்டிருந்தான். அந்த மிலேச்சன் தினந்தவறாமல் அந்த அன்பன் வீட்டிற்குச்சென்று தான் தீண்டாத ஜாதியில் பிறந்தவனானபடியால் வெகு தூரமாய் நின்றுக்கொண்டு அந்த அன்பன் பகவானை ஸ்தோத்திரம் செய்யும் மந்திரங்களைக்கேட்டு தனக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வர விக்கிரகம் கிடைத்தபோது அந்த மந்திரங்களால் அவரை ஆராதனை செய்யவேணுமென்றெண்ணி மிகுந்த கவனத்தோடும் சிரத்தையோடும் கற்றுக்கொண்டு வந்தான். இங்ஙனம் மிலேச்சன் போய்



பகவானுடைய விக்கிரகத்தைப் பார்த்துப் பார்த்து எப்பொழுது அது தன்வசத்தில் அகப்படுமோவென்று சிந்தித்துக்கொண்டு அதே ஞாபகமுள்ளவனாய் பார்ப்பதற்கு பரிதாபமுள்ளவனாய் கவலையடைந்திருந்தான். அவன் அந்த பக்தன் வீட்டுக்கு வந்தபோதெல்லாம் தூரத்தில் நின்றிருந்தபோதிலும் குனிந்து வெகு கவனமாய் இப்படி யப்படி பார்த்துக்கொண்டு விக்கிரகம் தன் கண்ணுக்கு நேரிட்டபோது சாய்வான பார்வைகளால் தரிசித்துக் கொண்டு எப்பொழுது தான் அதையடைய அதிர்ஷ்டம் நேரிடுமோ வென்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, ஒருநாள் ஹரிபக்தன் இரவில் தனியாய் உட்கார்ந்துக்கொண்டு ஸ்ரீ வெங்கடேஸ்வர விக்கிரகத்திற்கு சகல வித அலங்காரங்கள் செய்து கஸ்தூரி, கர்ப்பூர, கேசரி, புனுகு, கந்தலேபனஞ்செய்து தன் முன்வைத்துக்கொண்டு பூஜித்து நித்யகல்யாண பரப்பிரம்மத்தைத் தியானித்து அந்த நிஷ்டையிலேயே மூழ்கினவனாய் அசைவற்று தன்னைமறந்திருந்தான். அந்த சமயத்தில் அவ்விடத்தில் யாருமில்லாமலிருந்தார்கள். இரவு நேரமானபடியால் ஜனநடமாட்டம் குறைந்திருந்தது. அந்த சமயத்தைப் பார்த்து மிலேச்சன் சந்தோஷமுள்ளவனாய் பகவானை மனதில் தியானஞ்செய்துக்கொண்டு அந்த பக்தனுடைய வீட்டுக்குள் தைரியமாய்ச் சென்று இப்படி யப்படி யாராகிலும் வருகிறார்களாவென்று பார்த்துக்கொண்டு, அடிமேல் அடிவைத்துக்கொண்டு அந்த விக்கிரகம் இருக்கும் இடத்திற்குச்சென்று அவ்விடம் நிஷ்டாரூடனாயிருக்கும் பக்தன் விழித்துக்கொண் டிருக்கிறானாவென்று அவன் முகத்தை யுற்றுப் பார்த்து அவன் தன்னை மறந்திருக்கிறானென்று தெரிந்துக் கொண்டு சத்தம்செய்யாமல் தன் இரண்டு கைகளால் அந்த விக்கிரகத்தைப் பிடித்துக்கொண்டு மேலுக்கு எடுத்து முத்தமிட்டு தன் சிரசின்மேல் வைத்துக்கொண்டு அகிலாண்டகோடி பிரமாண்டங்களை யாளும் பிரபுத்வம் நேரிட்டபோது ஒருவனுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ அதைப்பார்க்கிலும் மேலான சந்தோஷ முள்ளவனாய் மறுபடியும் அடிமேல் அடிவைத்துக் கொண்டு வெளியில் வந்து தான் செய்த காரியத்தை யாராவது அறிந்தார்களா வென்று நான்கு திசைகளையும் பார்த்து ஒருவரு

மின்மையால் வாயுவேகமாய் ஓடி தன் வீடடைந்து ஓர் ரகஸியமான இடத்தில் ஸ்ரீ வெங்கடாசலபதி விக்கிரகத்தை வைத்து பசும்பாலால் அபிஷேகத் திருமஞ்சனஞ்செய்து முகபத்மத்தில் பச்சைக்கர்ப்பூர கஸ்தூரி கோபிசந்தன நாமங்களைத் தரிக்கச் செய்து துளசிதளங்களால் கனமாகக்கட்டிய ஆரத்தைக் கண்டத்தில் தரித்து நூறுகோடி சூரிய பிரகாசத்தைப்போல ஜொலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸ பரப்பிரம்மத்தை தான் கற்றுகொண்ட மந்திரங்களால் ஆராதித்துக் காட்டிற்குச் சென்று நற்கனிகளைக் கொண்டுவந்து சுவாமிக்கு நிவேதனஞ்செய்து வீட்டில் சமைத்த போஜன வஸ்துக்களையும் கேசரியினால் நிறைந்த கோக்ஷீரத்தையும் சுவாமிக்கு முன்வைத்து ஓ! துரையே! இந்த கனிகளைப் புசியும். இந்த அன்னத்தைச் சாப்பிடும். இந்த க்ஷீரத்தைக் குடியும். பக்தனுடைய வீட்டில் நீ புசித்தாயே. என் வீட்டில் புசிக்கக்கூடாதாவென்று வெகுநேரம் பிரார்த்தனை செய்துக்கொண்டு பிறகு அவர் புசியாமலிருந்தபடியால் ஓ! தகப்பனே! நீ புதுமையாய் என் வீட்டுக்கு வந்தகாரணத்தால் புசிக்கமாட்டாயோ? அல்லது என்னுடைய வீட்டில் புசிக்க வெட்கமா? அல்லது இடம் மாறிப்போனபடியால் புசிப்பதற்கு சங்கோஜமா? ஆனாலும் பெரிதல்ல இன்றைக்குப் புசிக்காமல் போனாலும் நாளைக்காவது புசிக்காமல் போவாயோ? நீ புசிக்காமல் போனாலும் நான் உன்னை விடுவேனோ? என்று சொல்லிக்கொண்டு தன் மனதிற்குத்தானே சமாதானம் செய்துக் கொண்டு தினந்தினம் விசேடித்த பக்தி, சிரத்தை, ஆசை, பாசம், அன்புகளோடு சச்சிதானந்த பரப்பிரம்மமான திருவேங்கட நாயகனைத் தியானித்துக்கொண்டிருந்தான்.

இவனிங்ஙனமிருக்க, அவண் ஹரிபக்தன் நிஷ்டை தீர்ந்தவனாய்க் கண்திறந்து பார்க்கையில் தன் எதிரிலிருந்த ஸ்ரீநிவாஸ விக்கிரகம் காணாமற் போனபடியால் அலறியெழுந்து அளவற்ற துக்கத்தால் அழுதுக்கொண்டு தெய்வமே! இனி நானென்ன செய்வேனென்று பெருங்குரலோடு அந்த வீட்டிலிருக்கும்படியானவர்களையும், அண்டையயல்களிலுள்ளவர்களையும், ஊர் ஜனங்களையும், அந்த விக்கிரகத்தைப் பார்த்தீர்களாவென்றுகேட்க, அவர்கள் பார்க்கவில்லையென்று சொல்ல துக்கக்கடலில் மூழ்கினவனாய் அன்னபானமின்றி



அழுது பரிதபித்துக்கொண்டு, பிறகு அலண்டு பூமியின்பேரில் விழுந்து தூங்கினான். அப்பொழுது சகல பிராணேஸ்வரனான ஸ்ரீநிவாசமூர்த்தி அவன் கனவில் தோன்றி தான் மிலேச்சனால் ஆராதிக்கப்படுகிறதைப்போல் தரிசனங் கொடுத்தார். அதைப் பார்த்து ஹரிபக்தன் திடீரென்று விழித்துக்கொண்டு தான்கண்ட காக்ஷிக்கு என்ன அர்த்தமோவென்று யோசித்துக்கொண்டு மறுபடியும் தன்னைக் கடவுள் விட்டுப்போனதைப்பற்றி சிந்தித்துக்கொண்டு நினைத்து நினைத்து அழுதுக்கொண்டு பரிதாபமடைந்திருந்தான். கடவுள் மிலேச்சனால் ஆராதிக்கப்படுகிறதைப்போல் தினந்தினம் அவன் கனவில் தோன்றிக்கொண்டு வந்தார். இப்படியிருந்து அந்த பக்தன் ஸ்ரீவெங்கடாசலபதியைப் பார்க்க சகிக்கமாட்டாத ஆவலுடையவனாய் ஸ்ரீ திருப்பதிக்குச் சென்றாவது அவரைக் காணவேணுமென்று புறப்பட்டுப்போனான். வழியில் என்துரையே! என்னையேன் விட்டுப் பிரிந்தாய். உன்னைக்காணாமல் நான் எப்படி ஜீவிப்பேன். பிராணேஸ்வரனே! கோவிந்தா! நான் எப்படி பொறுப்பேனென்று யாருமில்லாத வழியில் பெருங்குரலோடு கைகளை மேலெடுத்து நினைத்து நினைத்து அழுதுக்கொண்டு அக்காக்ஷியைக் கண்டால் எப்பேர்ப்பட்ட கல்மனமும் உருகக்கூடிய அவ்வளவு பரிதாபத்துடன் அழுதுக்கொண்டு அந்தபக்தன் திருவேங்கடப் பெருமான் சந்நிதியைச் சேர்ந்தான். அவ்விடத்தில் சுவாமி புஷ்கரணி திவ்ய தீர்த்தத்தில் நீராடிக்கொண்டு அந்த பக்தன் ஸ்ரீநிவாசமூர்த்தியின் தங்கமயமாகிய திருக்கோயிலுக்குள் பிரவேசித்து சுவாமியைத் தரிசிக்கையில் அவர் துக்கமானது அளவை மீறி வெள்ளம் அதிகமாய் வரும்போது ஏரி பரிக்காமற்போனால் ஜலப்பெருக்கு ஏரியின் கட்டைகளை உடைத்துக் கொண்டு பிரவாகிக்கிறதைப்போல் திருவேங்கடனைத் தரிசித்தமாத்திரத்தில் அன்பனுடைய ஆவலும், துக்கமும், அடக்கமுடியாததாய் விட்டதால் அந்த பக்தன்பெருங்குரலோடு அபிமானத்தை விட்டு அழத்தொடங்கினார். அவர் அழுவதைப்பார்த்து கோவில் அதிகாரிகள் அவர் அழுவதற்கு என்னகாரணமென்று விசாரித்து எவ்வளவு சாந்த வசனங்கள் சொன்னபோதிலுங்கூட அவர் தம் மர்மத்தை யாரோடும் சொல்லாமல் ஸ்ரீ வெங்கடேஸப் பெருமா

னைப் பார்த்துப்பார்த்து விசேஷமாய் அழுதுக்கொண்டு தன் கண் திருஷ்டியை திருவேங்கடனுடைய அபாரமான கிருபையினால் நிறைந்து குளிர்ந்த பார்வையால் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டு அவர் தன்னை விட்டுப்பிரிந்து போனதற்காக பரிதாபமுற்று நிற்கையில், அவர் கண்களிலிருந்து கலகலவென்று ஜலம் பெருகிவர, அது பார்ப்பதற்கு திருவேங்கடனுடைய மனமென்னும் சர்க்கரையைக் கரைக்கவந்த தேனோவென்றெண்ணத் தக்கதாயிருந்தது. அப்பொழுது அந்த அன்பன் திருவேங்கடனை நோக்கி, பிராணேசா! என்னை என் திக்கற்ற பக்ஷியைப் போல் செய்தாய்? நான் எவ்விதமாய் ஜீவிப்பேன்? உன்னைவிட்டு நான் எல்விதமாய் இருப்பேன்? என்று முறையிட்டுக்கொண்டு ஆனந்த நிலையசுந்தரனைகோவிந்தனைப் பார்த்துக்கொண்டிருந்தார். இங்ஙனமிருக்க ஒரு நாள் அந்த பக்தன் கடவுளின் கோவிலுக்குள் புகுந்து ஜகதீஸனை கண்ணுட்டாமல் பார்த்துக்கொண்டிருந்து ஸ்தூல சூக்ஷ்மகாரண மகாகாரண ஹிரண்ய கர்பமென்னும் ஐந்துவித தேகங்களோடு சாஸ்விதமானதும் இருள் மாயை அஞ்ஞானம் துக்கம் குறைவு ஆவரணாதி சக்திகள் அணுமாத்திரமாவது இல்லாததும் சதாநந்தமானதும் அக்ஷய அம்ருதகனியைப் போன்றதும், அமலவிமல நிர்மல நிருபத்ரவமான ஸ்ரீ வெங்கடேஸப்பரப்பிரம்மத்தில் பிரவேசித்தவனாய் சத்திய நித்திய முக்த சச்சிதானந்தனாய் பரமசாந்தியை யடைந்தான். ஆகையால் கோவில் அதிகாரிகள் அந்த புண்ணியன் கோவிலுக்குள் பிரவேசிப்பதைப் பார்த்தார்களே யொழிய, மறுபடியும் அவர் என்னமானாரென்பதை யறிய முடியாவண்ணம் அந்த மகாத்மா மறைந்தாரென் றெண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இவர் விஷய மிங்ஙனமிருக்க, மிலேச்சன் ஸ்வாமியை மிகுந்த பக்திசிரத்தையோடு ஆராதித்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வோர்வித பலகாரங்கள் செய்து ஸ்ரீநிவாசருக்கு முன் வைத்து அவைகளைப் புசிக்கும்படி ஸுவாமியை வேண்டிக்கொண்டும், அநேக விதமாய்க் கெஞ்சிபிரார்த்தித்துக்கொண்டும் வந்தான். அப்படிசெய்துக்கொண்டு வந்துங்கூட ஜகதீஸன் பக்தனுடைய வீட்டில் புசித்ததைப்போல் மிலேச்சனால் சமர்ப்பிக்கப்பட்ட வஸ்துக்களை யுண்



ணாமல் சும்மாயிருந்தார். அதனால் அந்த மிலேச்சன் தான் சமர்ப்பிக்கும் வஸ்துக்கள் நல்லதல்லவென்றும் அந்த காரணத்தால்தான் கடவுள் அதைப் புசிக்கவில்லை யென்று எண்ணிக்கொண்டவனாய் காடுகளெல்லாம் சுற்றித் தேடித்தேடி வெகு பிரயாசையோடு நல்ல புஷ்பங்களையும் கனிகளையுங் கொண்டுவந்து சுவாமிக்கு புஷ்பங்களினால் அலங்காரஞ்செய்து கனிகளை அவர்முன் வைத்து, தெய்வமே! இதைப் புசியும் நான் எவ்வளவு காலம் இவ்விதமாக உன்னை வேண்டிக்கொண்டிருப்பேனென்று வேண்டி வேண்டி அநேகவிதமாய் கெஞ்சி அவரால் முடிந்தவரைக்கும் பாடுபட்டுங்கூட கடவுள் மௌனமாயிருந்தார். பிறகு அந்த மிலேச்சன் மனம் சலித்தவனாய் அழுதுக்கொண்டு கடவுளைப்பார்த்து சுவாமீ! இனி நான் என்னதான் செய்வேன்! என் தலையைத்தான் உடைத்துக்கொள்ள வேண்டும். இந்த அன்னத்தைப் புசிக்காமற்போனாலும், இந்த கனிகளையாவதுபுசிக்கக்கூடாதா? அப்படியில்லையெனில் உமக் கிஷ்டமான தெதுவோ, அதைமாத்திரம் உண்ணக்கூடாதா? யென்று சொல்லி மௌனமாயிருக்கும் கடவுளைப்பார்த்து கவலை மேலிட்டவனாய், கைகளால் தலையின்பேரில் மோதி யடித்துக்கொண்டு கலகலத்த மனதுடனிருந்தான். இங்ஙனம் சிலநாள் கழிய ஒருநாளிரவு அந்த மிலேச்சன்தான் சமர்ப்பித்த வஸ்துக்களை கடவுள் உண்டதைப்போல் ஒரு சொர்ப்பனங்கண்டு திடுக்கென்று விழித்துக்கொண்டு அளவற்ற சந்தோஷத்துடன், இனி தான் சமர்ப்பிக்கும் வஸ்துக்களை ஸ்ரீநிவாஸமூர்த்தி யுண்ணுவாரென்று நிச்சயித்து திவ்வியமான கனிவர்க்கங்களையும், பக்ஷணங்களையும், க்ஷீரம் முதலியவைகளையும் தயார்செய்து, நாராயணன் முன்வைத்து சுவாமீ! புசியும் புசியும் அந்த பக்தனுடைய வீட்டில் புசிக்கவில்லையா? என்னுடைய வீட்டில் புசித்தால் உமக்கென்ன குறைவா? அல்லது வெட்கமா? தயவுசெய்து புசியும். எவ்வளவு வேண்டுவேன். இனி நான் என்ன செய்வேன் கொஞ்சம் புசித்தாலும் போதுமானது என்று மிலேச்சன் மூன்று நாளாக ஹரி உண்ணாமற்போனால் தானும் புசிக்கிறதில்லையென்று வைராக்கியத்துடன் சுவாமி புசிப்பாரென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தும், திருவேங்கடன் முன்போல் மௌனமாகவே யிருந்தார். அதைப்பார்த்து மிலேச்சன் மனம் வெறு

த்துத் தான் எவ்வளவு நல்லதனமாய்ச் சொன்னபோதிலுங்கூட கடவுள் தன் முறைகளைக் கேளாமலிருக்கிறாரென்று கோபங்கொண்டவனாய் புத்தி தடுமாறி கண்கள் சிவக்க திருவேங்கடனை நோக்கி, ஐயா! மரியாதையாக இதைப் புசிக்கிறாயா யென்னசொல்லுகிறாய் பக்தனுடையவீட்டில் நீ புசிக்கவில்லையா? இவ்விடத்தில் நீ ஏன் புசிக்கமாட்டாய்? புசியும் புசியும் என்றுகோபத்துடன் ஓசையிட்டு அடிக்கடி சொன்னான். அப்பொழுதுங் கூட ஜெகதீஸன் மௌனமாகவே யிருந்தபடியால் மிலேச்சன் பொறுக்கமுடியாத கோபத்தால் புத்தி ஸ்வாதீனந்தவறியவனாய் ஓர் தடியை கையிலெடுத்துக்கொண்டு திருவேங்கடன் முன்வந்து, சுவாமீ! என்னசொல்லுகிறாய்? உண்ணுமற்போனால் உன்னை விடமாட்டேன் என்று கோபாவேசத்துடன் ஓசையிட்டான். அப்பொழுதுங்கூட மௌனமாகவேயிருந்த பெருமானைப்பார்த்து மிலேச்சன் உத்தண்ட கோபத்தோடு ஓ! கள்ளனே! என்ன வேஷம் போடுகிறாய்? பக்தனுடைய வீட்டில் உண்டாயே? இப்பொழுது இவ்விடத்தில் ஒன்றும் அறியாத ஊமையைப்போலிருக்கிறாயே? கலிகாலத்தில் நல்ல வார்த்தைக்கு மரியாதை கிடையாது? புசிக்கிறாயா. இல்லையாவென்று கையிலிருந்த தடியால் கொடூரமாக அடித்துக்கொண்டு பொறுக்கமுடியாத ஆத்திரத்தால் ஆ! படவா! இது நல்லோர்களுக்குக் காலமல்ல, நான் எவ்வளவு காலமாக சொல்லுகிறேன். எவ்வளவு நேரம் சொல்லுவேன். பூர்வத்தில், உன் தாய் சொன்ன நல்ல வார்த்தைகளைக் கேட்டாயா? "அடியால் ஆகும் வேலை ஆண்டவனால் ஆகாது" "ஆ! மார் மார்" என்று சொல்லி விசேஷமாக அடிக்கத் தொடங்கினான். அப்பொழுது விக்கிரகாகாரனாயிருந்த திருவேங்கடன் ஆச்சரியகரமாக அசைந்துகொண்டு அந்த மிலேச்சனால் சமர்ப்பிக்கப்பட்ட வஸ்துக்களை சீக்கிரமாகப் புசித்துப்பிறகு மௌனமாயிருந்தார். அதைப்பார்த்து மிலேச்சன் மிகுந்த சந்தோஷத்துடன் கோபத்தைத் தணிக்கச்செய்துக்கொண்டு. சுவாமீ! முன்னமே நீ புசித்திருந்தால் நான் உம்மை அடிக்கவேண்டிய காரணமென்னயிருக்கின்றது? இனிமேல் ஒவ்வொரு நாளும் நான் சமர்ப்பிக்கும் வஸ்துக்களைப் புசித்துக்கொண்டிரும். அவ்வளவே போதுமானதென்று சொல்லிக்கொண்டு புன் சிரிப்புடன்



14762 600 008

பிரகாசித்துக்கொண்டிருக்கும் முகத்தையுடையவரா யிருந்தார். அன்றையதினம் இரவு அந்த மிலேச்சன் சொர்ப்பனத்தில் ஸ்ரீநிவாஸமூர்த்தி தேகமெங்கும் தடியால் அடிக்கப்பட்ட காயங்களுள்ளவராய் தரிசனங் கொடுத்தார். அதைப்பார்த்து மிலேச்சன் தூக்கத்திலிருந்து திடுக்கென்று விழித்துக்கொண்டு ஓசையுடன் அழத்தொடங்கினான். என் துரையே! நான் அடித்ததினால் உமக்கெவ்வளவு நோயுண்டாயிற்றோ? நான் என்ன செய்வேன்? என் அற்பபுத்தியினால் உம்மை யடித்துவிட்டேனேயென்று தான் செய்த அபசாரத்திற்கு விசாரப்பட்டுக்கொண்டு குங்குமப்பூ சேர்ந்ததினால் பரிமளித்துக்கொண்டிருக்கும் கோக்ஷீரத்தினால் அபிஷேக திருமஞ்சனஞ்செய்து, தங்கச் சரிகையும், பட்டுப்சேர்ந்த வெண்மையான வஸ்திரங்களைத் தரிப்பித்து துளசி, மல்லிகை, சண்பகம், தவனம், சம்பங்கி, பாரிஜாதம், செந்தாமரை முதலிய திவ்ய புஷ்பங்களினால் அலங்கரித்துப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் முக கமலத்தில் கோபிசந்தன திருநாமங்களைத் தரிப்பித்து, பரிமளித்துக்கொண்டிருக்கும் கஸ்தூரியை தேகத்தில் பூசி, க்ஷீர பக்ஷிய நாரிகேள பிரசாதங்களை நிவேதனமாகவைத்து சஹஸ்ரநாமங்களினால் பகவானைப் பூசித்து கோடி மன்மத ஜித சௌந்திரியனான திருவேங்கடப்பெருமானது திருமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு துளசீதளங்களால் அர்ச்சனைசெய்து கீர்த்தனங்கள் பாடி ஸ்தோத்திரஞ்செய்து, கற்பூர நீராஞ்சனமங்கள ஆலத்திகளைக் கொடுத்து திருவேங்கடன் திருவடிகளில் மனம், புத்தி, சித்தம், பிராணன் முதலியவைகள் அசையாமல் நிறுத்தி அந்த பிரணவ நிலைய மாணிக்கமணியை தரிசித்துக்கொண்டிருக்க, எரிந்துக்கொண்டிருக்கும் கர்ப்பூரத்தின் ஜ்வாலை காற்றில்லாமல் வஜ்ஜிர ஸ்தம்பத்தைப் போல் நின்றிருந்தது. இப்படி எரிந்துகொண்டிருக்கும் ஜ்வாலை சிலநேரத்திற்குள் படிப்படியாய் குறைந்துக்கொண்டுவர பக்தசிரோமணியான மிலேச்சனும் ஜகன்மோகனமங்கள பரப்பிரம்மமான திருவேங்கடமுடையான் திருவடிகளில் ஐக்கியமடைந்து அக்ஷயமங்கள பிரம்மானந்த வைபவத்தை யடைந்தான்.

ஹரிபக்தனிடத்திலிருந்து மிலேச்சன் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் விக்கிரகத்தைக் கொண்டுபோய்விட்ட சில காலத்திற்குப்

O22:38·216 J
N45

பின் அவ்வூர் ஜனங்களுக்கு அந்த ரகஸியம் தெரிந்துவிட்டபடியாலும் மிலேச்சன் அதைக்கொண்டுபோன நாள் முதல் கடவுளின் பக்தி, பூஜைகளில் மிகுந்த சிரத்தையுடன் உலக ஆசைகளைத் தெரியாமல் திருவேங்கடனுடைய அருளைப்பெறுவதற்கு அநந்தமான பாடுகள் படுவதும் தெரிந்துவிட்டபடியால் ஊரா ஜனங்கள் அந்த மிலேச்சன் பக்திக்கு மெச்சிக்கொண்டு அவர் பரப்பிரம்மத்தில் ஐக்கியமானபிறகு அந்த விக்கிரகத்தை ஓர் புண்ணிய பிரதேசத்தில் பிரதிஷ்டைசெய்து அந்த புண்ணிய ஆலயமிருக்கும் கிராமத்திற்கு வேங்கடரமண புரியென்றும், சுருக்கமாக ரமணபுரியென்றும் பெயரளித்து ஸ்ரீநிவாஸனுக்கு மிலேச்சன் ஆராதனைசெய்ததினால் மிலேச்ச ரமணனென்றும் பிரசித்தமாக பேர் விளங்கச்செய்து அவ்விடத்தில் சனிவாரங்களில் விசேஷமாக ஜனங்கள்கூடி ஹரி பஜனை செய்துக்கொண்டு ஸ்ரீ வெங்கடேளப்பெருமான் அருளுக்குப் பாத்திரர்களாயும் தன்னியர்களாயுமிருந்தார்கள்.

## மஹாராஜா வெங்கடதேவராயர் சரித்திரம்.

ஸ்ரீ திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வடகிழக்குப் பாரிசத்தில் சுமார் முன்னூறுமைல் தூரத்தில் விஜயநகரமென்னும் ஓர் மகத்தான சமஸ்தான மிருந்தது. அங்கு சக்ரவர்த்திக்குச் சமதையான கிருஷ்ணதேவ மகாராயரென்னும் மன்னவர் அரசாக்ஷிபுரிந்துகொண்டிருந்தார். அவர் அரசாக்ஷி யாவரும் அதிசயிக்கத்தக்கதாகவும் மேன்மைபடைத்ததாகவும், துவாபரயுகத்திலிருந்த தருமநந்தனனைப் போன்ற பொறுமையும், தருமபுத்தியும், கடவுள் பக்தியும் ஜீவகாருண்ணியமும் வாய்ந்து மிகவும் புகழ்பெற்றதாயுமிருந்தது. இத்தகைய பெருமையுடைய புண்ணிய புருஷனுடைய சந்ததியார் ஸ்ரீ திருப்பதிக்கு தென் மேற்கில் ஏழுமைல்தூரத்திலுள்ள சந்திரகிரியிலும், வடக்கிலுள்ள கெண்டி கோட்டை முதலிய விடங்களிலும் அரசாக்ஷி புரிந்துகொண்டிருந்தனர். சந்திரகிரி சமஸ்தானத்தில் அரசாக்ஷி புரிந்துகொண்டிருந்த மஹாராஜாக்களின் பெருமை யிந்நிலவுலகில் இரவி யிந்துவும் எழில் தரும் நக்ஷத்திரங்களு முள்ளவரை நிலவிய கீர்த்தியெங்கணும் அழியாது மாக்ஷிமை பெருகியிருந்தது. பெருமையிலும், மேன்மை



யிலும் ஒரு சிறிதும் குன்றாமல் பிரகாசிக்கும் புகழினையுடைய புண்ணிய குலத்தில் தருமமே ஓருருக்கொண்டது போலும், சகல நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவராயும், சம்பத்துக்களில் நிறைந்தவராயும் போகபாக்கியத்தில் மிகுந்தவருமான ஒரு மஹாராஜா யிருந்தனர். அன்னவருக்கு இகலோக செல்வம் எவ்வளவு பொருந்தியிருந்ததோ அவ்வளவுக் கவ்வளவு அவர் மனதில் விசனம் குடியிருந்தது. "மக்களில்லா மனைபாழ்" என்னும் முதுமொழியும் இதற்கொக்கவே எழுந்துலவாநின்றது. மக்களில்லாமனை இடுகாட்டிற்குச் சமானமானதென்பது ஒவ்வொருவரும் அங்கீகரிக்கக் கூடிய விஷயமானது பற்றியே, செல்வத்திற் சிறந்த மன்னர் புத்திரனில்லாமைபற்றி மனக்கவலை கொண்டு மிகவும் வாடியிருந்தார். இங்ஙன மிவர் பன்னாள் வருந்தி படாத பாடுபட்டும் புத்திர பாக்கியமின்மையினால் மனநைந்து பக்தஜன பாரிஜாதனான ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை நினைந்து அன்னவருக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளலானார். அதாவது "தெய்வமே! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! கருணைக்கடலே! தயாநிதீ! குழந்தைகளுக்கேற்படும் குறைகளை அன்னை யறிந்து தீர்ப்பதுபோலும் பக்தர்களுக்கேற்படும் குறைகளை நீயே யறிந்து தீர்ப்பது உனக்கு ஏற்பட்ட தொழிலாயிருக்க, என்னை யிவ்விதம் தவிக்கவிட்டிருப்பது ஒருசிறிதும் பொருத்த முடையதாயில்லை. எம்பெருமானே! திருவேங்கடத்தானே! உன் திருஅருளினால் எனக்கோர் ஆண் குழந்தைப் பிறக்கக் கோருகிறேன். அப்படி பிறக்கும் குழந்தைக்கு நின் திருநாமத்தை யளித்து உன்வரபுத்திர னென்னும் நன்றியை மறவாமல் என்னுயுள்வரையும் துதித்துக் கொண்டிருப்பேன்." என்று வேண்டிக் கொண்டார். அப்படி வேண்டிக் கொண்டும் திருவேங்கடன் திருவருள் தனக்கு எப்போது கிடைக்குமோ வென்று இரவும் பகலும் சிந்தனை செய்துக்கொண்டு அதே ஏக்கமா யிருந்தார். இவனது வேண்டுகோளைக்கேட்ட பரந்தாமன் மனதிரங்கி, ஒருநா ளிரவு அரசனது சொர்ப்பனத்தில் திருமலையின்மீது நீலவர்னசாமள ரூப திரிபுண்டரதாரணனாய்த் தோன்றி "ஓ! அரசரேறே! நீ திருவேங்கட முடையானிடம் சந்ததி விருத்திக்கு வேண்டி மிகவும் முறையிட்டுக் கொண்டதால், உனக்கு சந்

ததி யளிக்கச் சித்தமுவந்தனம். திருவேங்கடத்தான்மீது பக்தி யென்பதொரு சிறிதுமில்லாத பத்து புத்திரர்கள் 'உனக்கு வேண்டுமோ? இன்றேல் திருவாழி மார்பனிடம் பக்தி மிகுந்த ஒரே புத்திரன் வேண்டுமோ?" என்றுக் கூறினர். அரசன் அண்ணவின் பிரதாபம் பொருந்திய உருவத்தினைப் பார்த்து அவருடைய கருணாரசம் பொருந்திய மொழிகளை செவிவழியா யுண்டு சின்னேரம் ஆலோசித்து, "ஐயா! பக்தர் தம் பெருங்குறை யெனும் பனியை யகற்றும் தூய்யவொளி பொருந்திய ரவிக்கும் மேலான மெய்ய! தம்மருளில்லாமலும், தம்மைத்துதியாமலுமுள்ள பிள்ளைகள் நூறு பெறுவதைக் காட்டிலும், தம்மீது குன்றாப்பக்தி நிறைந்த ஒரேயொரு புத்திரன் உதிப்பானாயின் அது என் குலம் விருத்தியாவதற்கு மேன்மையான செல்வமாகும்" என்று பணிவுடன் உரைத்த மாத்திரத்தில் அம்மாய புருடன் மறைந்து போனார். மகாராஜா திடீரென்று நித்திரையினின்றும் விழித்துக்கொண்டு, தன் முன்னின்றவரைக் காணாது தயங்கி தன் பந்து ஜனங்களை நோக்கி மிகவும் சந்தோஷம் பொங்கித் தனக்கேற்பட்ட சொர்ப்பனத்தை விசதமாய் விளக்கி யாவரும் ஒரு விதமான சந்தோஷத்தை யடைந்திருந்தார்கள். அரசனுக்கு மாத்திரம் ஒரு விதமான ஆனந்தம் ஸதாமனதில் குடிகொள்ளத்தக்கதா யிருந்தது. அதாவது, தான் சற்குண சம்பன்னனான புத்திரன் ஒருவன் வேண்டுமென்றதேயாம். சின்னாட்களுக்குப் பின் வெங்கடேசப் பெருமான் திருவருளினால் அவருக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையானது நவரத்தினங்களி னிடையில் பிரகாசிக்கும் மாணிக்கத்தைப் போன்ற ரூபலாவண்ய முடையதாகவும், நக்ஷத்திரங்களுக்கிடையில பிரகாசிக்கும் சந்திரனைப்போலு மிருந்தது. அது வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்துக் கொண்டு அமிர்த கிரணங்களைப் பொழியும் பார்வையுடனும், செந்தாமரைப் போன்ற திருமுகத்துடனும், ஜகன்மோகனாகாரமான புன்சிரிப்புடனும், தாய் தந்தையர்களின் மனதை ரமிக்கச் செய்துக்கொண்டிருந்தது. மகாராஜா அந்தக் குழந்தைக்கு வெங்கடதேவராயரென்று நாமகரணஞ் செய்து ஜெகதீசனை நோக்கி, சர்வரக்ஷகனே! என்குறை தீர்ந்துவிட்டது. இனி குழந்தை உம்முடையதேயன்றி என்னுடைய



தல்ல. இக்குழந்தைக்கு உம்முடைய பக்தியைக் கொடுத்தாண்டருளும். எனக்கும் பக்தியைத் தந்தாண்டருளும். என் பிரஜைகளுக்கும் அங்ஙனமே. பக்ஷிகள் முட்டைகளின் பேரில் உட்கார்ந்த மாத்திரத்திலேயே அவைகள் பக்குவமடைந்து குஞ்சுகள் வெளிப்படுவதைப் போலும், தாய் தந்தைகளுக்கு அன்பும் பிரீதியும் குழந்தைகளிடம் சுபாவமாய் யுண்டாயிருக்கிறதைப் போலும், எங்களெல்லோருக்கும் நீர் குலதெய்வமாகவும், தாய் தந்தையாகவும்; ஆபத்பந்துவாகவும், துணையும் நிழலுமாகவிருந்து ரக்ஷித்துக் காத்தருளுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் தாய் தந்தையர் குழந்தையை கையிலெடுத்துக் கொண்டு ராஜமஹாலின் பேரில் வடபுறமாய் ஸ்ரீநிவாச மூர்த்தியின் மலையைப்பார்த்து வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கையிலிருந்த குழந்தை திருவேங்கடமலையின் திக்கைநோக்கி கைகளை நீட்டிக்கொண்டு அழத்தொடங்கிற்று. அப்பொழுது தாய் தந்தைகள் அந்தக் குழந்தையை எவ்வளவு சாந்தப்படுத்தின போதிலும் அது சாந்தப்படாமல் ஏதோவிபத்து நேரிட்டதைப்போல் விசேஷமாக ரோதனஞ் செய்தது. அப்பொழுது மகாராஜா குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு தன்னாலான வரையிலும் சாந்தப்படுத்தியும் அக்குழந்தை அழுதுக் கொண்டேயிருந்தபடியால் தன் மந்திரியை யவ்விடத்திற்குத் தக்ஷணமே வரும்படி உத்தரவளித்தார். அதற்கு மந்திரி ஓட்டமாய் வந்து விஷயமறிந்து குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டுவந்து ஆடிப்பாடியும், அநேக யுக்திகள் செய்தும் சாந்தப்படுத்த முயன்று முடியாமற் போய்விட்டது. அவர் அந்தக் குழந்தை கையில் பொம்மைகளையும், கனகரத்தின கசிதமான ஆபரணங்களையும், அழகான வஸ்துக்களையும் கொடுத்து, வீணைகளைமீட்டி வேடிக்கைகள் செய்தும், அந்தக் குழந்தையை அநேக யுக்திகளால் சாந்தப்படுத்த முயன்றுங் கூட, பயன்படாமல் அது முன்போலவே அழுதுக்கொண்டேயிருந்தது. அதற்குமேல் மந்திரி மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் சில நேரம் யோசனை செய்து, அந்தக் குழந்தை அடிக்கடி ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் வீற்றிருக்கும் திருமலைப்புறமாக கைகளை நீட்டி அழுகிறதைக் கிரகித்துக்கொண்டு மகாராஜாவைப்பார்த்து, ஓ! பிர

புவே! இந்தக்குழந்தை ஹரி வரப்பிரசாதத்தினல் பிறந்தபடியால், இவன் மஹத்துவம் எப்பேர்ப்பட்டதா யிருக்குமோ தெரியவில்லை யென்று சொன்னர். பிறகு மந்திரவாதிகளும், வைத்தியர்களும், ஜோதிடர்களும், ஆயிரக்கணக்காய் வந்து தம்மாலானவரையிலும் எவ்வளவோ சிகிச்சைகள் செய்துபார்த்தும், அக்குழந்தை எப் போதும்போல் அழுதுக்கொண்டு திருவேங்கடப்பெருமான் மலையின் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தது. அதையெல்லாம் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த மந்திரி அரசனைநோக்கி, இக்குழந்தையை ஆலசியஞ்செய்யாமல் திருமலைக்குக் கொண்டுபோய் வெங்கடேசப் பெருமானை தரிசனஞ்செய்விப்பதே நலமான காரியமென்று என் மனதிற்குத் தோன்றுகிறது. அந்த ஜெகதீஸனுக்கு இப்பொழுதே குழந்தையை திருக்கோயிலுக்கு கொண்டுவருகிறதாக பிரார்த்தனை செய்துக்கொண்டால் மிகவும் சுகுணம் பிறக்குமென்று திண்ண மாய்த் தோன்றுகிறதென்று சொன்னன். இவ்வசனங்களைக்கேட்ட மன்னன், கடவுளை நோக்கி, "சுவாமீ! குழந்தை சாந்தப்படுமானல் நாளைதினமே உமது திருமலைக்கு கொண்டுவருகிறேன்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார். க்ஷணநேரத்திற்கு குழந்தை சாந் தப்பட்டு பூர்ணசந்திரனைப்போல் சிரிக்கத்தொடங்கினன். அரண் மனையில் மனங்கலங்கி யிருந்தவர்களெல்லாம் சந்தோஷமடைந்த னர். மறுநாள் காலையில் மகாராஜாவும் மகாராணியும் மந்திரி முதலிய பரிவாரங்களோடு குழந்தையை யெடுத்துக்கொண்டு திருமலைக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்பொழுது தைரியமுள்ள சிபாய்கள் பளபளவென்று பிரகாசித்துக்கொண்டிருக்கும் கட்கங்களைக் கையில் பிடித்துக்கொண்டு ராஜாவின் மஹால்முதல் திருமலை தேவஸ்தானம் வரையிலும் பாதையின் இருமருங்கிலும், கயிற்றில் கோர்க்கபட்ட முத்துக்களைப்போல் நின்றிருந்தார்கள். மகாராஜா நவரத்தின கசிதமான பல்லக்கின்மீது பட்டுப்பஞ்சணை விரித்து அதில் அமர்ந்து குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு புறப்பட்டு திருமலைக்குச் செல்ல, அவ்வூர் ஜனங்கள் ஆயிரக்கணக்காய்த் திரண்டு ஒருங் கேகூடி குழந்தையின் ரூபலாவண்யங்களைப் பார்த்து ஆனந்தம் பொங்க புஷ்பமாரி பொழிந்தனர். மகாராஜா பரிவாரங்களோடு திருவேங்கடன் திருக்கோயிலுக்குச் செல்லுகையில், கோயிலின்



அதிகாரிகள் அவரை அநேகவித மரியாதைகளோடு அழைத்துக் கொண்டுபோய் மூலஸ்தானத்தில் எழுந்தருளிய திருவேங்கட பரப்பிரம்மத்தைத் தரிசிக்கச் செய்தார்கள். அப்பொழுது மகா ராஜா குழந்தையான வெங்கடதேவராயரை எடுத்து நித்திய மங்கள மூர்த்தியான ஜகதீசனை தரிசனஞ்செய்து நமஸ்கரிப்பா யென்று சொல்ல ஆச்சரியமாக அந்தக்குழந்தை கலகலவென்று சிரித்துக்கொண்டு கைகளைச்சேர்த்து தேவதேவனைக் கும்பிட்டுக் கொண்டு கண்ணுடாமல் அமிருதகளா பூரிதனைப் பார்த்துக் கொண்டு கண்களில் நீர் பெருகச் சாந்தமாயிருந்தான். இவ் வாச்சரியக் காக்ஷியைக்கண்ட இராஜபரிவாரங்களும், தேவஸ் தான அதிகாரிகளும், ஹரி ஹரி இந்தக் குழந்தைக்கு உன் பக்தியை எவ்விதமாய் ஏற்படுத்திவிட்டாய். இவன் பிரஹ்லா தனைப் போன்ற மகாபக்த சிரோமணியாய் உலகத்தின்கண் மேன் மையை யடைவானென்று சொல்லிக்கொண்டு தாங்களும் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பக்தி பெருக்கினல் ஆனந்த பாஷ்பங்களைச் சொரிந்து தேகம் புளகாங்கித மடைந்து தங்களை மறந்து அசை வற்று நின்றிருந்தார்கள். இப்படியிருந்து சிலநேரமான பின்பு அவரவர்கள் தங்களிடம போய்ச்சேர்ந்தார்கள். மகாராஜா அவர் கள் சந்திரகிரிக்குச் சென்று வெங்கடதேவராயரின் பக்திக்கு ஆச் சரியப்பட்டுக் கொண்டு, அவரை கடவுளைப் போலெண்ணி மிகுந்த பிரேமாதிசயங்களோடு வளர்த்துக் கொண்டு அக்குழந்தை அழும் போது சர்வஜீவ தயாபரனை திருவேங்கடன் தரிசனம் செய்வித்து அநுதினமும் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் பெருமையைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்.

இப்படி நடந்தேறிவர வெங்கடதேவராயர் வளர்பிறைச்சந் திரனைப்போல் வளர்ந்துக்கொண்டு மகாசௌரிய தைரிய சாகஸ சம் பன்னராய் வஜ்ஜிரதேகமுடையவராய் சுகுணங்களென்னும் ஆபர ணங்களினல் அலங்கரிக்கப்பெற்றவராய் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பக்தி யென்றும் கிரீடத்தைத் தரித்தவரைப்போல் அநுதினமும் திருவேங் கடனை அந்தக்கரண சுத்தத்தோடு தியானித்துக்கொண்டு திவ்ய மான கீர்த்தியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தார். சிறுவயதிலேயே அவர் பானம்செய்தபோதிலும், உண்டபோதிலும், வேறு எவ்வித

மான வேலை செய்தபோதும் முன் அவைகளை ஸ்ரீசேஷாசலேஸ்வரர்க்கு அர்ப்பணஞ்செய்து பிறகு அவைகளை அவர் பிரசாதமென்றெண்ணிப் புசிப்பார். நிற்கும்போதும், நடக்கும் போதும், பேசும் போதும், விளையாடும்போதும், உறங்கும்போதும், சர்வேஸ்வரனை தியானம்செய்துக்கொண்டு விசேஷ காலம் பக்தவச்சலனை கடவுள் சிந்தனையிலேயே யிருப்பார். அவர் மகா பக்தனென்றும் சத்தியம், சுசி, இந்திரிய நிக்கிரகம் சர்வஜீவகாருண்யமு முள்ள புண்ணியனென்றும், அவ்வூரிலிருக்கும் ஜனங்களெல்லோரும் அவரைக் கொண்டாடிக் கொண்டு அவரைக் கண்டபோதெல்லாம் ஸ்ரீவெங்கடேஸப் பெருமானைக்கண்டதைப்போல் பக்தி பூர்வகமாக நமஸ்கரிப்பார்கள். சாதுக்களும், வித்வான்களும், தபோவ்ருந்தர்களும், ஞான சிரோமணிகளும் வெங்கடதேவராயரைக் கண்டபோதெல்லாம் பூர்ணாயு ராரோக்கிய அஷ்டைஸ்வரிய சம்பன்னராய் வாழ்வாயென்று ஆசீர்வாதஞ் செய்வார்கள். இங்ஙனமிருக்க, மகாராஜாவுக்கு விருத்தாப்பியம் நேரிட்டபடியால் அவர் ராஜ்யபாரங்களை விடுதலைசெய்துக் கொண்டு, மற்ற ஜீவித காலமெல்லாம் ஸ்ரீ வெங்கடேஸப் பெருமானைத் தியானஞ்செய்துக்கொண்டு சத்கதியை யடையவேண்டுமென்று நிச்சயித்து, சகல அரசர்களையும் வரவழைத்து அநந்தவைபவத்துடன் வெங்கடதேவ ராயருக்கு மகுடாபிஷேக மகோற்சவத்தை நடத்தித் தான் தவமாதரிப்பதற்காக ஸ்ரீ வெங்கடசைல ஆரண்யம் போய்விட்டனர்.

வெங்கடபதிராயர் மகுடாபிஷேக தினத்தில் சகல தேச அரசர்களும், முனீஸ்வரர்களும், பண்டிதர்களும், பிரபுக்களுங் கூடியிருந்த மகாசபையைப்பார்த்து, சிம்மாசனத்திலிருந்து மேலெழுந்து கைகளைச்சூட்டி தெண்டனிட்டு ஓ! பிரபுக்களே! இந்த ராஜ்ய பாரத்தை நிர்வகிப்பதற்கு நான் அருகனாவேனோ? பூர்வத்தில் செய்த சுபாசுபகர்மங்களைப்பற்றி இந்த ராஜ்ஜியபாரங்களை வகித்துத் திருவேங்கடனுடைய சேவைசெய்ய நேரிட்டது. நான் ஸ்ரீ வெங்கடேஸ்வருடைய சேவகனாகும். அடிமையாகும். அவர் உத்தரவின்படியே நடந்துகொள்வதற்கு அடியேனாயிருக்கிறேன். இந்த சகலசராசரங்களும், நீங்களும், நானும் சகல ஜீவகோடிகளும் அந்ததேவ தேவனுடைய குழந்தைகளா யிருக்கிறோம். அவரால்



கொடுக்கப்பட்ட வஸ்துக்களைப் புசிக்கிறோம். அவர்கள் கர்மத்துக்குத்தக்கபடி அவரால் விதிக்கப்பட்ட சுகதுக்கங்களை யனுபவிக்கிறோம். ஓர் விசாலமான விடத்தில் அநேககோடி பொம்மைகளைச்செய்து அவைகளுக்கு உயிருண்டாக்கி தன தான்ய கிரக புத்திர பௌத்திர மித்திர களத்திரங்களை யுண்டாக்கி சுபாசுப கர்மங்களுக்குத் தக்கபடி சுகதுக்கங்களை, நேரிட்ச்செய்து உலாவுவதற்கு ஏற்படுத்தி, தான் கேவல சாக்ஷிபூதமாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் ஓர் மகாபுருஷனைப்போல், கபடநாடக சூத்ரதாரியாயிருந்து சர்வேஸ்வரன் நம்மை யெல்லோரையும் ஆட்டிக்கொண்டுவருகிறார். மேலும் சிலரை அரசர்களாகவும், சிலரை மந்திரிகளாகவும், சிலரை சன்பயோர்களாகவும், சிலரை குடிகளாகவும் அவாள் புண்ணியங்களுக்குத் தக்கப்படி ஏற்றகுறைச்சலையும் குணபேதங்களையும் அமைத்து கற்பகவிருக்ஷத்தைப்போல் நல்லோருக்கு சகல பலன்களையுந் தருகிறார். இப்படியிருக்க அந்த பொம்மைகளில் சிலது அவிவேகத்தால் மதித்து துக்கப்பட்டும், புண்ணியவசத்தால் நேரிட்ட சம்பத்துகளுக்குதானே சுதந்தரதாரியென்று பிரமையடைகின்றன. அந்த சம்பத்துகளுக்குத் தாங்களே பிரபுக்களென்றும், இந்த வீடு வாசல் தனதான்ய சுகபோகங்கள் தங்களுடையதென்றும், தாங்களே சர்வாதிகாரிகளென்றும், மமதையடைந்து, சர்வேஸ்வரனுடைய சுதந்திரமும், பிரபுத்துவமும் அறியாமல் அகங்கார மமகாரங்களினால் அஞ்ஞான இருட்டில் உலாவுகிறார்கள். வீந்தபோகமும் புண்யத்தின் அளவுக்கேநிற்கும். சர்வேஸ்வரன் ஒருவனே எல்லாவற்றிற்கும் பிரபுவாகும். அவர் புரபுத்துவத்திற்கு மிஞ்சி நான் பிரபுவென்னும் ஜீவர்களைப் போல் மூடமதிகள் உலகத்திலில்லை. இவ்வுலகத்தில் சர்வேஸ்வரனுடைய சுதந்திரத்தை யறியாமல் நான் பிரபுவென்று அரசாக்ஷிசெய்த மாந்தாதாதி அரசர்கள் எவ்வளவோ கோடிபேர்கள் இருந்து பட்டுப்போனார்கள். இன்னும் அப்பேர்ப்பட்டவர்கள் எத்தனை கோடி வருவார்களோ நாம் அறியோம். இதன்றி ஓர் சபையில் உட்கார்ந்த அரசன் தன் உத்தரவினால் ராஜ்யத்தில் சகலத்தையும் நடத்திக் கொண்டுவர, மந்திரியும் சேவகர்களும் தாங்கள் நடத்துகிறதாக பிரமை யடைகிறதைப் போல், நாமெல்லோரும் உலகத்தில் செய்யும் காரி

களுக்கு கர்த்தர்களென்று அவிவேகத்தால் எண்ணுகிறோம். நாம் எதற்கும் கர்த்தாவல்ல. ஈசுவரன் ஒருவனே சகலத்திற்கும் கர்த்தவாகும். பிரபுவாகும். நாமெல்லோரும் அவருடைய ஆயுதங்களாயிருக்கிறோம். ஓர் வேலைக்காரன் தனக்கிஷ்டமான ஆயுதத்தால் வேலைசெய்து அது வேண்டியதில்லாதபோது அதைப்போட்டுவிட்டதைப்போல், சர்வேஸ்வரன் சகல ஜீவர்களை அவ்விதமாகவே ஆட்டிக்கொண்டு வருகிறார். மஹான்களென்னும் ஆயுதங்களால் மெய்ஞ்ஞானமென்றும் பிரகாசத்தை யுண்டாக்குகிறார். புண்ணியர்களால் புண்ணியமும், பரோபகாரிகளால் உலகத்திற்கு நன்மையும், பெரியோாகளால் மேன்மையும், பண்டிதர்களால் வித்தையும் அவரே யுண்டாக்குகிறார். அஸ்வத்தின் மேலேறிப் போகிறவனுடைய மனக்கருத்து அஸ்வமறியுமோ? மேலேறினவன் நடத்துகிறபடிக்கு குதிரைபோக வேண்டியதா யிருக்கிறது. அவ்விதமாகவே திருவேங்கடன் சகலத்திலும் அந்தர்யாமியா யிருந்து சகல காரியங்களையும் நடத்திக்கொண்டு வருகிறார். நமக்கு இவ்வுலகத்தில் சுதந்திரமும் கர்த்தத்துவமும் கிடையவே கிடையாது. எவன் இவைகளுண்டென்று யெண்ணுகிறானோ அவன் அவிவேகி. அவனுக்குத் திருவேங்கடன் நடவடிக்கையின் ரகஸ்யமும், அவரை யறிந்துக் கொள்ளும் மெய்ஞ்ஞானமும் உண்டாகாது. அவன் சாணிப்புழு சாணியில் பிறந்து சாணியில் வளர்ந்து சாணியிலிருந்து சாணியில் மடிந்து போகிறதைப்போல் பொய்யான மாயை விடாமல் அதிலேயே குடிக்கொண்டு வாடுவான்.

"தமீஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம்
தம்தெய்வதானாம் பரமஞ்ச தெய்வதம்
பதிம்பதீனாம் பரமம் பரஸ்தாத்
விதாமதேவம் புவனேஸமீட்யம்"

ஜகதீசன் உலகத்திலுள்ள பிரபுக்களுக் கெல்லாம் மகாப் பிரபுவாயிருக்கிறார். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் மகா தேவனாயிருக்கிறார். அதிபதிகளுக் கெல்லாம் மகா அதிபதியா யிருக்கிறார். ஜீவர்களுக்கு மேலான பரமாத்மாவா யிருக்கிறார். பதினான்கு லோகங்களுக்கும் அரசராயும் பிரகாசம் பொருந்தியவராயுமிருக்கிறார். ஆகையால் அவர் ஒருவரே ஸ்தோத்திரம் செய்



யத்தக்கவரா யிருக்கிறார். ஓ பக்தர்களே! அந்த பகவானுக்கு சமானமான பிரபு கிடையாது. மற்றோரெல்லாம் புண்ணிய வசத்தால் சிற்சில தினமே பிரபுக்களாய் வாழ்ந்து புண்ணியமும் முடிந்தவுடனே அந்த பிரபுத்துவத்தை மகாபிரபுவாகிய ஸ்ரீநிவாச சார்வபௌமனுக்கு ஒப்புவித்தும் போய் விடுகிறார்கள். யோசித்து பாருங்கள். தனக்கு பிரவும் ரக்ஷகரும் பிராணதார மூர்த்தியுமாகிய கடவுளால் கொடுக்கப்பட்ட வஸ்துக்களுக்கு தான் பிரபுவென்று அகங்காரமடைந்து இந்த ஜீவகோடிகள் என் வேடிக்கைகள் செய்கின்றது. விவேகமுள்ளவன் உடல் பொருள் ஆவிமூன்றையும் ஜெகதீசனுக்குச் சமர்ப்பித்து துரையே! இது உனக்கு, உன்னை தியானிப்பதும், உன் சேவகனாயிருப்பதும் எனக்கு கடமையென்று திருவேங்கடனை தொழுவது அவர் மனதுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாகும். அந்த விவேகியை ஜெகதீசன் மறுபடியும் ஜெனனமரண சுகதுக்க ஜாலங்களுக்கு ஸ்தான பூதமாகிய இவ்வுலகத்தில் வைத்து பொம்மை யாட்டங்களில் ஒருவனாகச் செய்வாரா? ஆகையால், நாமெல்லோரும் அவருடைய சேவகர்களாகும். இவ்வுலகத்தில் சகலபோக சம்பத்து, பிரபுத்துவம் முதலியன அவருடையதேயாகும். நமக்கு அவர் அருளால் உண்டாயிருக்கும் உடல் பொருள் ஆவி அவருடையதேயாகும். நாம் அவருடைய கேவலமான அடிமைகளாகும். அவருடைய காரியங்களை நாம் செய்கிறோமேயன்றி, நமக்கு வேறு சுதந்திரமும், அதிகாரமும், பாத்தியதையும் கிடையவே கிடையாது. ஆனதால் இன்றுமுதல் நீங்களெல்லோரும் ஈஸ்வரனுடைய காரியங்களை பக்தி பூர்வமாக செய்யவேண்டும். சகல ஜீவகாருண்யமும், தர்மமும், சத்தியமும், பரோபகாரமும் உங்களுடைய முக்கியகுறிகளா யிருக்கவேண்டும். இக்குறிகள் குறையுமானால் ஈஸ்வரனுக்கு நாம் துரோகம் செய்தவர்களாவோம். அப்பொழுது அவர் இந்த அரசை நம்மிடம் வைக்கமாட்டார். நாம் செய்த குற்றங்களுக்கு தண்டனை செய்வார். ஓ பக்த ஜனங்களே! நீங்களெல்லோரும் சந்ததம் ஸ்ரீநிவாஸனை தியானம் செய்துக்கொண்டு அவர் காரியங்களாகிய இந்த ராஜ்யகாரியங்களை பக்தி சிரத்தையுடன் நடத்திக்கொண்டு வாருங்கள். நான் அணுவாகிலும் பிசகில்லாமல் அவ்விதமாகவே

நடப்பேன். பிராணனுக்கு விபத்து நேரிட்ட போதிலும் தர்மத்திற்கு குறைவேற்படாவண்ணம் பரிபாலனம் செய்வேன். எனக்கு அதற்குத்தக்க சக்தியும் பக்தியும் பொறுமையும் அடக்கமும் அருளிச் செய்யும்படி திருவேங்கடனுடைய செந்தாமரையினையொத்த திருவடிகளை வணங்குவேனென்று சொல்லி கண்களைமூடி கருணாநிதியாகிய ஸ்ரீநிவாஸ மூர்த்தியை தியானிக்கத் தொடங்கினான்.

சுலோகம்.

ப்ரம்மாதி வந்தித பதாம்புஜ சங்கபாணே
ஸ்ரீமத்சுதர்ஸன சுசோபித திவ்யஹஸ்த
காருண்ய சாகர சரண்ய சுபுண்யமூர்த்தே
ஸ்ரீ வெங்கடேஸ மமதேஹி கராவலம்பம் ''

பிரம்மருத்ராதியர்களாலும், முப்பத்து முக்கோடி தேவர்களாலும், நாற்பத்தெண்ணாயிரம் இருஷிகள் முதலியவர்களாலும், நிருதி, இயமன், வாயு சூரிய சந்திரர்களாகிய தேவகணங்களாலும், அஷ்டதிக்குப் பாலகர்களாலும் கின்னர, கிம்புருட, யக்ஷர்முதலியவர்களாலும் ஸதாதுதிக்கப்பெறும் ஸ்ரீமானே! செங்கமலபாதனே! சங்கு சக்ரசுதர்ஸனாதி ஆயுதங்களைத் தரித்த பெருமானே! புருஷோத்தமனே! கருணையாளனே! லோகரக்ஷகனே! துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனே! ஸ்ரீநிவாசனே! வெங்கடசைலவாஸனே! தபத்திற்கிரங்கும் தயாநிதியே! தரணீதர மூர்த்தியே! தயாநிதியே! அபத்திற்கிரங்கும் அண்ணலே! ஆதாரமூர்த்தியே! அச்சுதானந்தனே! சுத்த சாம்பிரதாயனே! மகத்தானமாயனே! சித்திவிலாஸனே! ஸ்ரீமந்நாராயணனே! பாபரஹிதனே! பாண்டுரங்கனே! பரந்தாமனே! என்று துதித்துக்கொண்டிருக்க அந்த சபையிலிருந்த பிரபுக்களெல்லோரும் எழுந்துநின்று திருவேங்கடனை தியானம் செய்து விட்டு அவரவர்கள் உத்தியோகங்களுக்குப் போய்விட்டார்கள். அந்த பக்த சிரோமணியான மஹாராஜா அரசாக்ஷி செய்யுங் காலத்தில் காலத்தின் மழை கிரமமாக பெய்துக்கொண்டு வந்தது. பயிர்கள் பத்துபங்கு அதிகமாய் வளர்ந்து வந்ததினால் சகல ஜீவர்களுக்கும் ஆகாரம் அளவற்றதாயிருந்தது. பசுக்கள் விசேஷமாக பால் கொடுத்துவந்தது. அந்த தேசத்தில் ரோகமும் பஞ்சமும் அடியோடு தொலைந்து போய்விட்டது. அகாலமிருத்யு தலைகாட்டாமல் ஓடிப்போய்விட்டது.



ஆரோக்கியமும் சம்பத்தும் சந்தோஷமும் மென்மேலும் அதிகரித்தபடியால் ஜனங்களெல்லோரும் திருப்தி யடைந்தவர்களாய் திருவேங்கடனை யனுதினமும் பஜனை செய்துக்கொண்டும் வெங்கடதேவராயருடைய பெருமையைக் கொண்டாடிக் கொண்டு மிருந்தார்கள்.

இப்படியிருக்க, எப்பேர்பட்ட கடவுளின் அன்பர்களுக்கும் பூர்வஜன்ம சஞ்சிதம் அனுபவத்தின் வழியாய்த் தீரவேண்டியதாயிருப்பதினால் அந்த மகாராஜனுக்கு சிலகாலத்திற்குப் பிறகு பக்கசூலை ரோகம் ஒன்றுண்டாயிற்று. அதனால் அந்த மகாத்மா மிகுந்த உபாதைகளை யடைந்துகொண்டுவந்தார். அவர் அந்த வியாதியின் கொடுமையை பூர்வ ஜன்மத்தில் தான் செய்த பாவங்களுக்காக கடவுளால் விதிக்கப்பட்ட சிக்ஷையென்றும், அந்த சிக்ஷையை அனுபவிப்பது தர்ம காரியமென்றும் ஆலோசித்திருந்தார். அப்பொழுது மந்திரிகளும், பிராமணசிரேஷ்டர்களும், வைத்தியசிரேஷ்டர்களும், பந்துமித்திர ஜனங்களும், ராஜாங்க பிரபுக்களும் மகாராஜா அவர்களைப் பார்க்கவந்து அவர் நலி நீங்கக்கூடிய நல்ல ஔஷதங்களை யுண்ணும்படி பிரார்தித்தார்கள். அதைக்கேட்டு மஹாராஜா மந்தஹாஸத்தோடு அவர்களைப்பார்த்து தனக்கு ஔஷதங்களால் சுகுணம் பிறக்காதென்றும் தான் பூர்வத்தில்செய்த வினைகளுக்குத்தக்க சிக்ஷையை அனுபவித்தபிறகு தன்பிராணநாதனான திருவேங்கடன் அந்தநலியை நீக்கிவிடுவாரென்றும் சகல ரோகங்களுக்கும், விஷங்களுக்கும், பாவங்களுக்கும், பயங்களுக்கும் அவர் தியானத்தைப் பார்க்கிலும் பெரும் ஔஷதம் வேறில்லையென்றும், தன்னை சிக்ஷிப்பதற்கும் ரக்ஷிப்பதற்கும் திருவேங்கடனைப் பார்க்கிலும் வேறு கதியில்லையென்றும் சொல்லி கீழ்வருமாறு அவர்களுக்கு போதனைசெய்யத் தொடங்கினார்: கருணாநிதியாகிய திருவேங்கடன் எந்த ஜீவனையும் வீணாய் தண்டிக்கமாட்டார். அவர் நமக்கு விதிக்கும் சிக்ஷைகள் நம்முடைய கர்மங்களைப்போக்கி பரிசுத்தர்களாகச் செய்வதற்கேயாகும். அழுக்குப்படிந்த தங்கத்தை தட்டான் உருக்குவதைப் பார்த்து அவன் அதை கெடுக்கச்செய்கிறானென்று எண்ணலாமோ? அழுக்குள்ள துணிகளை வண்ணான் ஆவியில்வைத்து பாறையின் பேரில் அடிக்க அதை கிழிக்கச்செய்கிறானென்று எண்ணலாமா?

அவன் அதை வெளுக்க அல்லவோ செய்கிறான். அவ்விதமாகவே சர்வேஸ்வரன் நம்முடைய பாவங்களைப் போக்குவதற்கு ரோகங்களை உண்டாக்கி அவைகளின் அநுபவவழியாக நிவாரணஞ்செய்து நம்மைப் பரிசுத்தம் செய்கிறாரென்று சொன்னார். அதைக்கேட்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டுக்கொண்டு இவ்விதமான வார்த்தைகள் சாமான்யர்கள் சொல்லத்தக்கதல்ல. திருவேங்கடன்பேரில் இவ்வளவு உறுதியான நம்பகமுள்ள இந்த மகாத்மாவுக்கு வியாதி நீங்குவதற்கு ஓர் சமயம் கட்டாயம் நேரிடுமென்று எண்ணியிருந்தார்கள்.

வெங்கடதேவராயர் ஆண்டுக்கொண்டிருக்கும் சந்திரகிரி ராஜ்யத்திற்கு அருகேயிருக்கும் ஓர் நரபதியென்னும் அரசன் கருணையில்லாதவனாய் ஜனங்களுக்கு அயுக்தமாக வரிகளை விதித்து பாதைசெய்துக்கொண்டும் தர்மபுத்தி ஜீவகாருண்யம் கொஞ்சமாவது இல்லாமலிருந்தான். ஆகையால் அந்த தேசத்திலிருந்த ஜனங்கள் அந்த உபாதையை பொறுக்கமுடியாமல், சிலர் வெங்கடதேவராயர் ஊருக்குவந்து சுகமாயிருந்தார்கள். அந்த சங்கதியை அரசன் தெரிந்துக்கொண்டு தன் ஊரிலிருந்துவந்த ஜனங்களை மறுபடியும் தன் ஊருக்கே துரத்திவிடாமல் ஆதரித்தபடியால் வெங்கடதேவராயரின்பேரில் கோபமும் விரோதமுடையவனாய் அவரை எவ்விதமாகிலும் கொன்றுவிடவேண்டுமென்றெண்ணி தன் மந்திரியுடன் ஆலோசனை செய்துகொண்டுவந்தான். வெங்கடதேவராயர் திருவேங்கடன் திருக்கோயிலுக்கு அடிக்கடி வருவதைத் தெரிந்துகொண்டு அந்த கோயிலிலிருக்கும் ராஜதுரோகியும் தெய்வத்துரோகியுமான ஓர் அர்ச்சகனுக்கு பத்து லக்ஷம் வராகன் லஞ்சங்கொடுத்து திருவேங்கடனுக்கு நைவேத்தியமாகும் தீர்த்தத்தில் கொல்லக்கூடிய பாஷாணத்தைக் கலந்து மகாராஜா ஸ்ரீ வெங்கடேஸ்வரர் தரிசனத்திற்கு வரும்போது விஷம்சேர்ந்த தீர்த்தத்தை அவருக்குக் கொடுத்தால் அதை அவர் உண்டு மடிந்துபோவாரென்று நிச்சயித்து அதற்குத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவைத்தான். சுவாமி கோயிலில் இருக்கும் அர்ச்சகன் அந்த துஷ்டகாரியத்துக்கு சம்மதித்து தீர்த்தத்தில் கோரமான பாஷாணத்தைக் கலந்து அதை சுவாமிக்கு நிவேதனஞ்செய்து மகாராஜா வருங்காலந் தெரிந்துகொண்டு எல்லாவற்றையும் கிரமமாகவைத்து வெங்கட



தேவராயரை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தான். மகாராஜா பரிவாரங்களோடு சந்திரகிரியிலிருந்து புறப்பட்டு திருவேங்கடனைத் தியானஞ்செய்துக்கொண்டு, தெய்வமே எல்லாம் உன் மயமே. உன்னைப்பார்க்கிலும் வேறொன்றையும் நான் காணேனென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் சந்நிதிக்குள் பிரவேசித்து ஜெகதீசனை மனமுருகத் துதித்துக் கலிதீர தரிசனம்செய்துக் கண்களில் ஆனந்தபாஷ்பம்பொங்க பரவசனாய் அசையாமல் நின்றிருந்தான். அதைப்பார்த்து பரிவாரங்கள் ஆ! ஹா!! இவரெவ்வளவு புனிதன் எப்பேர்ப்பட்ட கடவுளுடைய அன்பன் குணசீலன், தர்மசீலனென்று அவர் பெருமையைத் துதித்துத் தாங்களும் கடவுளை பக்தி பூர்வகமாக தரிசனம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் அர்ச்சகன் இவ்வளவுவரையிலும் வெகு தைரியத்துடன் தான்செய்ய எண்ணின காரியத்தை நிறைவேற்றுவதற்கு கல்மனமுடையவனாயிருந்தும், மகாராஜா அவர்களின் கம்பீரத்தையும் கடவுளின் பக்தியையும், நிஷ்டையையும் பிரகாசித்துக்கெண்டிருக்கும் முகாரவிந்தத்தையுங் கண்டமாத்திரத்தில் மதிகெட்டு தைரியசூனியனாய் பயத்தால் பிடிக்கப்பட்ட மனமுள்ளவனாய் தீர்த்தத்தின் பாத்திரத்தை தொட்டமாத்திரத்தில் கிடுகிடுவென்று நடுங்கிக்கொண்டு தேகமெங்கும் பயத்தால் சிலிர்க்க கை கால்கள் உதறிக்கொண்டிருக்க மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் தடுமாறிக்கொண்டிருந்தான். அப்பொழுது ராஜசேவகர்கள் அரச்சகனைப்பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு நீ யேன் இவ்விதம் தடுமாறுகிறாயென்று வெகுதடவை கேட்டுக்கொண்டிருக்க, அவன் பேச வாய்வராமல் நடுங்கிக்கொண்டிருந்தான். அந்தசமயத்தில் மகாராஜா அவனுக்கு சாந்த வசனங்களைச்சொல்லி அவன் அவ்விதமாயிருப்பதற்கு என்ன காரணமென்று கேட்டார். அப்பொழுது அர்ச்சகன் மகாராஜா அவர்களின் பாதங்களின் பேரில் சாஷ்டாங்கமாய் விழுந்து கும்பிட்டு, ஓ! பரமதயா நிதியான மகாத்மாவே! உன் மஹத்துவத்தை நான் அறியாமல் உமக்கு அபசாரம் செய்யப் புகுந்தேன். அடுத்த தேசத்து அரசன் எனக்குப் பத்துலக்ஷம் வராகன் லஞ்சங்கொடுத்து இந்த தீர்த்தத்தில் பாஷாணத்தைக்கலந்து உமக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான். நான் அதற்கு சம்மதப்பட்டு இந்த

தீர்த்தத்தில் பாஷாணம் கலக்கி வைத்திருக்கிறேன். தாங்கள் மகாதயவுள்ளவர்கள். நான் செய்த குற்றத்தை மன்னித்து உபாயமான சிக்ஷையை விதிக்கவேணுமென்று பயபக்தி வணக்கத்துடன் கெஞ்சி பிரார்த்தனை செய்துக்கொண்டான். அதைக்கேட்டு பரமபுருஷரான மகாராஜா பூர்ண சந்திரனைப்போல் கலகலவென்று நகைத்துக் கொண்டு எல்லாம் வாசுதேவனுடைய மகிமை! அவனன்றி ஓரணுவும் அசையாது என்று சொல்லி அர்ச்சகனை நோக்கி அர்ச்சக! பாஷாணங்கலந்த தீர்த்தம் திருவேங்கடப் பெருமானுக்கு நிவேதனஞ் செய்தாய் விட்டதாவென்று கேட்டார். அதற்கு அர்ச்சகன், துரையே! ஆய்விட்டதென்று பதில் சொன்னான். அப்பொழுது மகாராஜா பகவானுக்கு ஆராதனை செய்யப்பட்ட எந்த வஸ்துவாகிலும் அமிர்தத்துக்குச் சமானமானதென்றும் அதற்கு விஷ தோஷம் கிடையாதென்றும், அதைதான் அங்கீகாரஞ் செய்ய வேணுமென்றும் கையை நீட்டி தீர்த்தத்தை விடுமென்று கேட்டார். அப்பொழுது மந்திரியும் பரிவாரங்களும் ஆக்ஷேபித்து விஷங்கலந்த அந்த தீர்த்தத்தை அங்கீகரிக்க கூடாதென்று பிரார்த்தனை செய்தார்கள். மகாராஜா ஒரே பிடிவாதமாக அந்த தீர்த்தம் மகாபரிசுத்தமானதென்றும் மூன்று லோகங்களிலும் அகப்படக்கூடாத திவ்விய பிரசாதமென்றும் சொல்லி கேட்டுக் கொண்டேயிருந்தார். அப்பொழுது ராஜ சேவகர்கள் எல்லோரும் ஒல்சயிட்டு அழுதுக்கொண்டு ஓ! துரையே நீர் அதை புசிக்கக்கூடாதென்று பிரார்த்தனை செய்தார்கள். அந்த சங்கதி வேங்கடசைலத்தில் தபஞ்செய்துக்கொண்டிருந்த சாதுக்களெல்லோருக்கும் கேட்க, ஓட்டமாய்வந்து அரசனைநோக்கி மன்னவனே பிராணனுக்கு அபாயத்தை விளைவிக்கும் விஷங்கலந்த இந்த தீர்த்தத்தைப் புசிக்கவேண்டாமென்று கெஞ்சிக்கொண்டார்கள். சந்திரகிரியிலிருக்கும் ஜனங்களும் சுற்றுபக்கத்திலிருக்கும் ஜனங்களும் ஓடிவந்து வெங்கடதேவராயரைப் பார்த்து, ஓ! பரமதயாபரனே! நீங்கள் இந்த விஷ தீர்த்தத்தை சாப்பிட வேண்டாமென்று கண்களில் நீர் பெருக அழுது வேண்டிக் கொண்டார்கள். இப்படி எத்தனை பேர் சொல்லியும் மகாராஜா கேளாமல் பகவானுடைய பிரசாதத்தை உண்பதினால் யாதொரு விபத்தும் நேரிடாதென்று உறுதியாய்ச்



சொல்லிக் கொண்டு பிடிவாதமாய் தீர்த்தத்தைக் கையில் விடும்படி கேட்டார். அந்த மகாப் பிரபுவின் கட்டளையை மீறி நடப்பதற்கு யாரால் முடியும். ஆகையால் முடிவில் அர்ச்சகன் நடுநடுங்கிக் கொண்டு தன் கையினால் தீர்த்தத்தை யெடுத்து வெங்கடதேவராயர் கையில் விட்டான். மகாராஜா அதை சாப்பிட்டு சகஜமாக தீர்த்தத்தை ஸ்வீகரிப்பதைப்போல் மூன்று தடவை தீர்த்தத்தைப் பெற்றுக்கொண்டு உண்டவராய் யாதொரு விபத்து மடையாமல் அவ்விடத்தை விட்டு வெளியில் வந்தார். அப்பொழுது எறும்பு புத்துகளினின்றும் புறப்படுவதைப்போல் ஜனங்கள் அந்த மாகாத்மாவைப் பார்க்க வந்தார்கள். அவர் யாதொரு விபத்துமின்றி சந்திரகிரிக்கு போவதைப் பார்த்து அவர் திருவேங்கடனுடைய அவதாரமே யன்றி, நரனல்லவென்று கீழ்விழுந்து கும்பிட்டார்கள். சிலர் வெங்கடேசா! இவரைக் காத்தருளுமென்று பிரார்த்தனை செய்தார்கள். இப்படியிருக்க மகாராஜா அவர்களுக்கு அந்த தீர்த்தத்தின் பெருமையினால் தேகத்திலிருந்த சூலை நீங்கிவிட்டது. தேவேந்திரனுடைய வஜ்ஜிராயுதத்தைப் போல் திடமான ஆரோக்கியம் உண்டாயிற்று. அதை யெல்லாம் பார்த்த ஜனங்கள் ஆச்சரியம் மடைந்தவர்களாய் திருவேங்கடனைப் பார்க்கிலும் வேறு தெய்வமில்லை யென்றும், மகாராஜாவைப் பார்க்கிலும் வேறு மன்னவனில்லை யென்றும் இருவருடைய பெருமையை மிகவும் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

சின்னாளைக்குப் பிறகு அந்த ஊருக்கு அருகேயுள்ள சில கிராமங்களில் காட்டு மிருகங்கள் வந்து கிராமவாசிகளுடைய பசுக்களைக் கொன்று அவர்களுக்கு துன்பத்தை விளைவித்துக் கொண்டு வந்தது. அந்த கிராமாதிகாரிகள் தம்மால் இயன்றவரை அநேக விதயுக்திகள் செய்து அவைகளைக் கொல்லப் பாடுபட்டும் முடியாமற் போனபடியால் அவர்களெல்லாங் கூட்டமாய் சேர்ந்து மகாராஜா அவர்களுடைய சன்னிதானத்திற்கு வந்து தம்முடைய பசுக்களை காட்டு மிருகங்கள் நாசம் செய்கிறதென்று முறையிட்டார்கள். அதைக்கேட்டு அரசன் மந்திரியை வரவழைத்து என்ன செய்யலாமென்று ஆலோசனை செய்கையில், அவர் அந்த காட்டு மிருகங்களை கத்திகளாலும், ஈட்டிகளாலும், பாணங்களாலும் கொன்று விடலா

மென்றும் அதற்காக யுத்தவீரர்களை அனுப்புகிறேனென்றும் சொன்னார். மகாராஜா அந்த கொடூரமான காரியத்திற்கு சம்மதப்படாமல் ஆலோசனை செய்து பிறகு மந்திரியை நோக்கி காட்டிலிருக்க வேண்டிய மிருகங்கள் ஊரின்பேரில் ஏன் வருகிறதென்று கேட்டார். அதற்கு மந்திரி, துரையே! அவைகள் ஆகாரத்திற்காக வருகிறதென்று சொன்னார். அதற்கு மகாராஜா கடவுள் அவைகளுக்கு காட்டுக்குள்ளாகவே ஆகாரம் வைக்கவில்லையா? ஏன் அவைகள் ஊரின்பேரில் வரவேண்டும்? நானே அவைகளிடத்துக்குப் போய் இனிமேல் ஊருக்கு வரவேண்டாமென்று சொல்லுகிறேன் என்று சொல்லி அன்றையதினம் மாலை கையில் எவ்விதமான ஆயுதமுமில்லாமல் கடவுளைப்போன்ற அந்த மகாத்மா புறப்பட்டுப்போனார். அப்பொழுது மந்திரியும் ராஜ சபையோர்களும் கைகளைக்கூப்பி மகாராஜாவுக்கு தண்டனிட்டு, ஓ! மன்னவனே! நீங்கள் நிராயுத பாணியாகவும் ஏகாந்தமாகவும் காட்டு மிருகங்களிடம் போவது நன்றாயில்லை. அதனால் பிராணனுக்கு அபாயம் நேரிடலாம். குரூரமிருகங்களுக்கு தயவு பாராட்டுவது வேண்டுவதில்லை. அவைகளை கொடூரமான ஆயுதங்களால் கொன்று விடுவதே நலமானது. ஆகையால் தாங்கள் போக வேண்டாமென்று கண்களில் நீர் பெருக அழுதுகொண்டு பிரார்த்தனை செய்தார்கள். பிரியாது செய்த ஜனக்கூட்டங்கள் மகாராஜா அவர்களுடைய எண்ணத்தை யறிந்துக் கொண்டு ஆ! ஆ! தெய்வமே நாம் செய்த பிரியாதினால் என்ன பாவம் நேரிட்டதென்று பயந்து அழுதுக்கொண்டு, ஆகாயத்தில் மேகங்கள் கூடி வந்ததைப்போல் வீதிகளில் மகாராஜா அவர்களுக்குப் போவதற்கு வழிவிடாமல் கீழ்விழுந்து சாஷ்டாங்கமாகக் கும்பிட்டுக் கொண்டு ஓ! கருணையுள்ள பிதாவே! உங்களைப்போல் கருணையுள்ள பிரபுக்கள் உலகத்தின் கண் பிறந்திருக்க மாட்டார்கள். இனிமேலும் பிறப்பது அரிது. தாங்கள் இவ்விதமான எண்ணம் கொள்வீரென்று எங்களுக்கு தெரியுமானால் எங்கள் பசுக்கள் போனாலும், எங்கள் சொத்துக்கள் போனாலும், எங்கள் உயிர்கள் போனாலுங்கூட நாங்கள் பிரியாது செய்திருக்கமாட்டோம். தாங்கள் தனியாய் காட்டு மிருகங்களிடம் போகிறதை எண்ணிமாத்திரத்தில் எங்கள் மனம் பயத்தினாலும் கவலையினாலும் துடித்துக்



கொண்டிருக்கிறது. ஆ! ஹா! காட்டு மிருகங்களிடம் போனால் விபத்து நேரிடாதா? எங்கள் ஐயனே இதற்கா நாங்கள் பிரியாது செய்தோம். தாங்கள் போகவே கூடாது. நாங்களெல்லோரும் போய் பிராணனை யிழந்து விடுகிறோமென்று ஓசையிட்டுக்கொண்டு அழத்தொடங்கினார்கள். அப்பொழுது மகாராஜா ராஜ பக்தியுள்ள அந்த புண்ணியர்களைப் பார்த்து, ஓ! அன்புள்ள குடிகளே! நீங்கள் துக்கப்படுவதற்குக் காரணம் ஒன்றும் காணோம். அத்திமுதல் எறும்பீறான சகல ஜீவர்களிலும் திருவேங்கடன் ஒருவனே பிராண பீஜமாயிருக்கிறார். அவர் எனக்குள்ளும் உங்களுக் கெல்லோருக்குள்ளும் கொடூரமான காட்டு மிருகங்களுக்குள்ளுமிருக்கிறார். ஆகையால் நான் எதனிடம் போனாலும் அல்லது எவ்விடம் போனாலும் அந்த சர்வேஸ்வரன் எனக்கருகிலேயே யிருக்கிறார். அவருக்கருகிலிருக்கும் எனக்கென்ன பயமிருக்கிறது. அவருடைய திருவடிகளில் மனம் புத்தி முதலியவற்றை நிலைநிறுத்தி அவர் தியானத்தை மறவாமலிருக்கும் எவர்களுக்கும் பயம் கிடையாது. அவர்களுக்கு சமானமும் எதிரியும் கிடையாது. எந்த லோகத்துக்குச் சென்றபோதிலும் பயமில்லை. இதை உறுதியாய் நம்புவீர்களாக. ஆகையால் நீங்கள் உங்கள் நிவாஸங்களுக்குச் சென்று சுகமாயிருங்களென்று சொல்லி மகாராஜா காட்டு மிருகங்களிடம் புறப்பட்டுப் போனார். அப்பொழுது குடிகளில் முக்கியமானவர்களும் மந்திரியும் சபையோர்களும் அரசனைப் போல் நிராயுத பாணிகளாகவே பின்சென்று போய் கொஞ்ச தூரத்தில் நின்றிருந்தார்கள். இப்படியிருக்க, மகாராஜா காட்டு மிருகங்கள் வருமிடத்திற்குச்சென்று அவைகளை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார். சிலநேரத்திற் கெல்லாம் அந்த மிருகங்கள் வானத்தில் இடிக்கிறதைப்போல கர்ஜனை செய்துக்கொண்டுபயங்கரமாக கூரான கோரைப்பற்கள் கூடிய வாய்களை திறந்துக்கொண்டு வாயுவேகமாய் வந்தன. அப்பொழுது சுபலக்ஷணங்களென்னும் பூஷணங்களை தரித்திருக்கும் புண்ணியனான வெங்கடதேவராயர் அவைகள் அருகில் ஓடிப்போய், ஓ புலிகளே! ஓ கரடிகளே! ஓ சிங்கங்களே! உங்களுக்கு திருவேங்கடன் நீங்களிருக்கு மிடத்திலேயே ஆகாரம் வைத்திருக்க, நீங்களேன் என் குடிகளுடைய பசுக்களைக் கொல்ல

வருகிறீர்கள். அப்படி வேண்டுமானால் என்னைப் புசித்துப்போங்கள். இனிமேல் இவ்விடம் வரவேண்டாமென்று சொல்லி அவைகளுக்கு நிரம்பவும் நெருங்கிப்போனார். இவ்வளவு சமீபத்தில் மனிதர்கள் எப்பொழுதும் வந்ததைப் பார்த்திராத அந்த மிருகங்கள் அவரைப் பார்த்தமாத்திரத்தில் பயத்தால் தடுமாறிக் கீழ்விழுந்து திக்கென்று எழுந்து ஓடத்தொடங்கிற்று. அப்பொழுது மகாராஜா அவைகளுக்கு பின்சென்று உங்களுக்கு பசியாயிருந்தால் என்னைப் புசித்துப் போங்கள் இனிமேல் இவ்விடம் வரவேண்டாம். வாருங்கள் வாருங்களென்று பின்தொடர்ந்து ஓடினார். அப்பொழுது அந்த மிருகங்கள் அந்த சப்தத்தைக்கேட்டு இன்னும் கொஞ்சம் பயந்து வேகமாக காட்டுக்குள் ஓடத்தொடங்கிற்று. மகாராஜாவும் பின்தொடர்ந்தே ஓடினார். காட்டு மிருகங்கள் கொஞ்ச தூரம் அவ்விதமாக ஓடி இனி யாதொரு பயமில்லையென்று திரும்பிப் பார்க்கையில் ஓடிவந்துக் கொண்டிருந்த மகாராஜாவைப் பார்த்து பயந்தவைகளாய் வாயுவேகமாக ஒரே பாய்ச்சலாய்க் காட்டுக்குள் பாய்ந்து பள்ளங்களையும், மேடுகளையும், செடிகளையும், புதர்களையும், கால்வாய்களையும், ஆறுகளையும் ஒரே தாண்டில் தாண்டிக்கொண்டு மறுபடியும் திரும்பிப் பார்க்காமலே மறைந்து போய் விட்டன. இவைகளெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் ஆச்சரியத்தால் மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் சிலநேரம் நின்றிருந்து பிறகு ஓடிப்போய் மகாராஜா அவர்களை க்ஷேமமாக தங்கள் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுவர ஊர் ஜனங்களுக்கு அச்சேதி முன்னதாகவே தெரிந்து விட்டபடியால் அவர்கள் வீதிகளிலும் மெத்தைகளின்பேரிலும் செடிகளின்பேரிலும், கூட்டமாய் ஏறிக்கொண்டு அந்த மஹாத்மாவைப் பார்த்து அவர்பேரில் பூமாரிபெய்தார்கள். சுமங்கல்ய ஸ்திரீகள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான்பேரிலும் மகாராஜாவின் பேரிலும் ஸ்துதிகள் பாடி மங்கள ஆலத்தி கொடுத்தார்கள். பெரியோர்களும் பிராம்மண சிரேஷ்டர்களும் ஆசீர்வாதஞ் செய்தார்கள். ஊர் ஜனங்களெல்லோரும் மகாராஜாவை திருவேங்கடனுடைய அவதார புருஷனென்று புகழ்ந்தார்கள். ஆச்சரியகரமாக அன்றையதினம் முதல் காட்டு மிருகங்கள் ஒன்றாகிலும் அந்த ஊருக்கு வராமற் போயிற்று. குடிகளுக்கு சுகம் மேலிட்



டது. திருவேங்கடனுடைய பெருமையும் மகாராஜாவின் மஹத்வமும் சகலமான ஜனங்களால் அநுதினமும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது.

இங்ஙனம் நடந்துக்கொண்டு வர, அடுத்த தேசத்து அரசன் வெங்கடதேவராயர் மகத்துவங்களைக் கேட்டு மனந்தாளாமல் அவரை எவ்விதமாகக் கொல்ல வேண்டுமோ அதற்கு வேண்டிய யோசனைகளை செய்துக் கொண்டிருந்தான். அந்த ராஜன் தனக்குள்தான் ஆ! ஹா! வெங்கடதேவராயர் விஷம் சேர்ந்த தீர்த்தத்தை யுண்டும் சாகாமல் போய் விட்டாரல்லவா? அவரை எப்படியாவது கொல்ல வேணுமென்று நிச்சயித்து மகாசாமர்த்திய முள்ளவனும், தைரிய பராக்கிரமமுள்ளவனாகிய பீமசேனனென்னும் ஓர் வீரனைதன்னிடத்தி லழைத்து வெங்கடதேவராயரைக் கொன்று அவர் சிரசை தன்னிடம் கொண்டுவர வேணுமென்று உத்தரவு செய்தான். அதைக்கேட்ட வீரன் சம்மதித்து கையிலிருந்த கத்தியைமேல் எறிந்து மறுபடியும் அதைப் பிடித்துக்கொண்டு ஆனந்தக்கூத்தாடி அவ்விடத்தினின்றும் புறப்பட்டு சந்திரகிரிசேர்ந்து சகஜமானி மனிதனைப்போல் மாறுவேடம் பூண்டு தன் உடுப்பில் கொடூரமான ஆயுதங்களை ஒளித்து வைத்துக்கொண்டு ராஜ வீதியில் திரிந்துக்கொண்டிருந்தான். இவ்வண்ணம் சிலநாள் திரிந்துக்கொண்டு மகாராஜாவின் அரண்மனைக்குள் செல்வதற்கு உபாயம் தேடிக்கொண்டிருந்து முடிவில் அரண்மனைக்குப் பின்புறமிருந்த ஓர்பெரிய விருக்ஷத்தின் பேரிலேறி அவ்விடத்திலிருந்து வெகு யுக்தியாய் ராஜகிரகத்திற்கு கயிறுகளைக்கட்டி அதைப் பிடித்துக்கொண்டு சத்தமின்றி சாகஸத்துடன் உட்புகுந்தான். அவன் பளபளவென்று மின்னிக்கொண்டு வெகு கூராயிருக்கும் கட்கத்தைக் கையில் பிடித்துக்கொண்டு மகாராஜா எவ்விடத்திலிருக்கிறாரோ வென்று ஒவ்வொரு அறையிலும் புகுந்து பார்த்துக்கொண்டு வந்தான். இப்படியிருக்க மூன்று அவஸ்தைகளிலும் கடவுளை மறவாமல் கோவிந்தாவென்று சுவாஸங்கூட தியானம் செய்கிறதைப்போல் உடலுக்குள்ளும் வெளியும் உலாவிகொண்டிருக்க, தர்மகுணம், ஜீவகாருண்ணியம், சத்தியம், பரோபகாரம் என்னும் குணங்களே நற்பூஷணங்களாக அலங்கரிக்கப்பட்டு திருவேங்கடப் பெருமான் பக்தியும் ஞானத்தால் பிர

காசித்துக் கொண்டிருக்கும் முகமுமுள்ள வெங்கடதேவராயர் ஓர் அறையில் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது பீமசேனன் அடிமேல் அடிவைத்துக் கொண்டு இப்புறம் அப்புறம் யாராவது வருகிறார்களாவென்று பார்த்துக்கொண்டு சத்தமின்றி வெகுஜாக்கிரதையுடன் அந்த அறைக்குள் ஓர் அடிவைத்து மகாராஜாவை எட்டிப் பார்த்தான். தங்கத்தைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மோகனாகாரமான மகாராஜாவின் முகத்தைக் கண்டவுடன் ஆ! ஹா! என்ன சொல்லலாம். மகாசத்தியினுடைய ஆகர்ஷணையினால் உலகம் நடுநடுங்குகிறதைப்போல் பீமசேனனுடைய தைரிய பராக்கிரமங்கள் வீணாய்ப்போயிற்று. அவன் சக்தி அசக்தி ஆயிற்று. ஜீவம் சத்து இல்லாமல் மறுத்துவிட்டது. அவனுக்கு அந்த இடம் விட்டு அசையக்கூடாமற் போய்விட்டது. கத்தியைப் பிடித்திருக்கும் கையை எடுக்கவும்முடியவில்லை. கத்தியைக் விட்டுவிடவும் முடியவில்லை. வாய்திறக்கமுடியவில்லை. காது கேழ்க்கவில்லை. கண்பார்க்கவில்லை. புத்திமனங்களுடைய ஓட்டங்கள் நின்றுவிட்டது. மலம்ஜலம் தேகத்திலிருந்து தனக்குத்தானே வெளிவந்துவிட்டது. தேகமெங்கும் வேர்வை நிறைந்து விட்டது. ஆ! ஹா! என்ன ஆச்சரியம். இங்ஙனம் மூன்று ஜாமம்வரையிலும் நின்றிருந்த பீமசேனனை யவ்விடத்திலிருந்த காவற்காரர்கள் தெரிந்துக்கொண்டு விளக்குகளை ஏற்றிக் கொண்டுவந்து பார்த்து அவன் கையிலிருந்த ஆயுதத்தைப் பிடுங்கிக்கொண்டு கையிலிருக்குமட்டும் அடித்து மிருகத்தின் சவத்தை இழுத்துக் கொண்டு போகிறதுபோல் அவன் உடல் தேய காலைப் பிடித்துக் கொண்டு காராக்கிரகத்திற்குக் கொண்டுபோ யடைத்து அந்த விஷயத்தை மந்திரிக்குத் தெரிவித்தார்கள். காலையில் மந்திரி பீமசேனனை விசாரணை செய்து மகாராஜாவைக் கொல்ல வந்தவனென்று தீர்மானஞ்செய்து அவனை கண்ட துண்டஞ்செய்து எறியும்படி கொலையாளிகளுக்கு உத்திரவளித்து அவ்விஷயத்தை மகாராஜாவுக்குத் தெரிவிக்க, அவர் பீமசேனனைக் கொல்ல வேண்டாமென்றும், தன்னெதிரில் அழைத்துக் கொண்டு வாருமென்றும் உத்திரவு செய்தார். அரசனுக்கிணைப்படி ராஜ சேவகர்கள், சென்று பீமசேனனை யழைத்துக்கொண்டு வர, மகாராஜா அவனைப் பார்த்து கலகலவென்று சிரித்துக்கொண்டு



"அவனன்றி யோரணுவுமசையுமோ" வென்று சொல்லி, பீமசேனனுக்கு ஸ்நாநம் செய்வித்து மேலான உடைகளையும் ஆபரணங்களையுங்கொடுத்துத் தரிக்கச்செய்து, வேண்டிய வெகுமானங்களைக் கொடுத்து ஊரெங்கும் அலங்காரம் செய்வித்து மேளதாளத்துடன் அவனைப் புறப்படச்செய்து தானே அவனிடம் சென்று, அப்பா, இனியாகிலும் நற்குணங்களுடையவனாய் திருவேங்கடனுடையபக்தியுள்ளவனாய் வாழ்வாயென்று ஆசீர்வதித்துப் போனார். அச்சமயம் அவ்வூரில் நடந்த வேடிக்கைகளை சொல்ல வியலாமல் அத்துணைச்சிறப் பெய்தியிருந்தது. தவிர, ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவனைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது பீமசேனன் தலையைக் குனிந்து கொண்டு மனதிற்கு ஒன்றுந் தோன்றாமல் யோசித்துக்கொண்டு வெங்கடதேவராயரைப் போல் மகாபிரபுக்களுண்டோ? அவர் குணத்தை என்ன சொல்லலாம். அவர் தெய்வமேயாகும். நரன் அல்லவென்று யோசித்துக்கொண்டு போனான். பிறகு ஊர் ஜனங்களும் ராஜ சேவகர்களும் அவனை வழிவிட்டு வந்து விட்டார்கள். பீமசேனன் பிறகு தன் அரசனிடஞ் சென்று நடந்த சங்கதிகளை வெகு ஆச்சரியத்துடன் சொன்னான். அதைக்கேட்டு அந்த அரசன் சந்தோஷப்படாமல் விரோதத்தினாலும் கோபத்தினாலும் அடா அவன் என்ன வேலை செய்தான். அவன் நற்குணத்தால் இவ்விதமாகச் செய்தவனல்ல? என்னை அவமானஞ் செய்வதற்காகவே இவ்விதம் செய்தான். நான் அவனை இலேசாய் விடப் போகிறதில்லை. அவனிடம் ஏதோ ஒரு மந்திரசக்தி யிருக்கிறது. அந்தக் காரணத்தாலே தான் பீமசேனன் பிரம்மை யடைந்து விட்டான். ஆகட்டும் மற்றொரு தடவை நான் நாலாயிரம் வீரர்களை யனுப்புகிறேன். அப்பொழுது அவன் எப்படி தப்பித்துக் கொள்ளுவானோ அறிகிறேன். அவனிடம் தனியாய் ஒருவனேபோனால் காரியம் முடியாதென்று சொல்லி உடனே ரகஸியதூதர்களை வரவழைத்து வெங்கடதேவராயரைக்கொல்வதற்கு நல்லசமயம் எதுவோ அதைக் கண்டு பிடிக்கும்படியாகவும், அவரைத் தனியாய் எவ்விடத்தில் சந்திக்கலாமென்றும் விசாரிக்கும்படியாக உத்தரவு செய்தான்.

மகாராஜா உத்தரவின்படியே அவர்கள் மாறுவேடம் பூண்டு சந்திரகிரிக்குச் சென்று அங்கே வீதிகளில் திரிந்துக்கொண்டு, அவ்வூர்

ஜனங்களோடு சிநேகிதம் செய்துக்கொண்டு தினந்தோறும் மகா
ராஜா அவர்கள் சங்கதிகளை விசாரணை செய்துக்கொண்டு சில
காலத்திற்குப்பின் தங்கள் அரசனிடஞ்சென்று, அரசே! வெங்கட
தேவராயர் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தனை தரிசிப்
பதற்காகத் தனியாய் நடந்து செல்கிறார். அவர் போகும் வழியா
னது சந்திரகிரியினின்றும் திருமலைக்குப் போகும் ஒற்றையடிப்
பாதையாகும். அச்சமயம் அவரைக்கொல்வது வெகு சுலபம். அச்
சமயம் தவறினால் வேறுசமயம் கிடைக்காது என்று சொல்லக்
கேட்ட அரசன் சந்தோஷமுள்ளவனாய் தன் சேனையிலிருந்து நாலா
பிரம் வீரர்களை பொறுக்கி அவர்களுக்கு வெங்கட்தேவராயரைக்
காட்டின் வழியில் மடக்கிக்கொன்று விடும்படி உத்திரவுசெய்ய, அந்த
வீரர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் நான் கொல்லுகிறேன், நான்
கொல்லுகிறேனென்று கர்ச்சிக்கும் சிங்கங்களைப்போல் அட்டகாசஞ்
செய்துக்கொண்டு கத்திகளை கைகளில் பிடித்துக் கொண்டுபோய்
திருமலை வழியின் ஓர் ரகஸ்யமான விடத்தில் ஒளித்துக்கொண்டு
மகாராஜாவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்படி
யிருக்க வெங்கடதேவராயர் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை தரிச
னஞ் செய்வதற் கென்றெண்ணி, ஓர் சுபதினத்தில் அதிகாலையில்
புறப்பட்டு நித்யகல்யாண மங்கள மூர்த்தியின் பிரபாவங்களைப்
பாடிக் கொண்டாடிக் கொண்டு அவர் குணானுபவங்களை அநேக
விதமாய் வருணித்து வாசுதேவா! தீனபந்தோ! ஆதிமத்யாந்தர
கிதா! சுயம்பிரகாசா! பரந்தாமா! புருஷோத்தமா! சர்வேஸ்
வரா! வெங்கடேஸ்வரா! என்று திருவேங்கடனைத் தியானஞ் செய்
துக்கொண்டு காட்டின் வழியாய் நடந்து கொண்டு ஆனந்த பாஷ்பங்
கள் கண்களிற் பெருக பரவசமடைந்தவராய் ஓரிடத்தில் உட்கார்ந்து
நித்ய சத்ய சச்சிதாநந்த பரப்பிரம்மமான திருவேங்கடன் திரு
வடிக்கமலங்களில் மனதை லயப்படுத்தி தியானத்தில் மூழ்கிய
வராய்த் தன்னை மறந்து நிஷ்டையிலிருந்தார். இப்படியிருக்க நாலா
யிரம் வீரர்கள் வெகுநேரம் மகாராஜாவை எதிர்ப்பார்த்து அவர்
வராமற்போனபடியால் புறப்பட்டு அவரைத் தேடிக்கொண்டுவந்து
கொஞ்சதூரத்தில் நிஷ்டாரூடராய் இருந்த மகாபக்தனையும் அவருக்
கருகே பெரும்பர்வதத்தைப்போன்ற பெருத்த ரூபத்தோடு விசால



மான பட்டை நாமங்களைத் தரித்துக்கொண்டிருந்த ஓர் வராகத்தை
யும் கண்டார்கள். அந்த வராகம் ஆகாயம் பூமி நிறைந்து போகச்
செய்யும் அவ்வளவு பெரிதாயிருந்தது. அதன் கோரைப் பற்கள்
அதிகம் நீண்டு கூராகவும் வெள்ளியைப்போல் பள பள வென்று
மின்னிக்கொண்டும் எப்பேர்பட்ட தைரியவந்தர்களுடைய இரு
தயங்களையும் நடுநடுங்கச் செய்யத்தக்கதான அவ்வளவு பயங்கர
மாயிருந்தது. அதன் கண்கள் காலாக்கினியைப்போல் சிவந்து
ஜொலித்துக்கொண்டு நெருப்புப் பொறிகள் பறக்கிறதைப்போல்
பயங்கரமாயிருந்தது. அப்பேர்ப்பட்ட பயங்கரமான வராகத்தைக்
கண்டு அந்த வீரர்கள் தேகம் ஆதியந்தம் நடுங்க பயமடைந்தவர்
களாய் மனதிற்கொன்றும் தோன்றாமல் மரங்களைப்போல் நின்றிருந்
தார்கள். இவ்வண்ணம் சிலநேரமிருந்தபின்பு அந்த வீரர்களில்
மகா தைரியமுள்ள சிலர் பயந்தெளிந்தவர்களாய் மற்றோர்களைப்
பார்த்து, சகோதரர்களே! நாம் க்ஷத்திரியர்களாயிருந்து கேவலம்
வாரகத்திற்கு பயப்படலாமோ? அது எவ்வளவு பெரிதாயிருந்தாலும்
வராகமேயன்றி வேறல்ல. இந்த மகாராஜன் வளர்க்கும் வராகம்
போல் இருக்கின்றது. அவரையும் அதையும் இருவரையும்
கொன்று ராஜாவினிடம் கொண்டுபோனால் நமக்கு எவ்வளவு கௌர
வம் உண்டாகும். இராஜா நமக்கு கௌரவ சின்னங்களையும் அபார
மான வெகுமதிகளையும் கொடானோ? ஆகையால், நாம் வீராவேசத்
துடன் போகலாமென்று சொன்னான். அதைக்கேட்டு மற்ற வீரர்க
ளும் தைரியமுள்ளவர்களாய் கைகளில் பளபள வென்று மின்னிக்
கொண்டிருக்கும் கத்திகளைப் பிடித்துக்கொண்டு அவைகளை காற்
றில் வீசிக்கொண்டு, சவால்செய்து கூச்சலிட்டு அந்த மாயவராகத்
திற் கருகிற் சென்றார்கள். ஆ! ஹா!! அவர்கள் கூச்சலைக் கேட்
டவுடனே பிரளயகாலத்து உருத்திரனைப்போல் கர்ஜித்து அந்த
வராகம் சீறி சிப்பாய்கள் கூட்டத்தில் வாயுவேகமாய்ப் பாய்ந்
தது. அப்பொழுது அந்த வராகத்தின் கோரைகளின் குத்துகளால்
சம்மட்டியால் அடிக்கப்பட்ட தேங்காய் ஓடுகள் உடைகிறதைப்
போல் அவர்கள் சிரங்கள் தவிடுபொடியாயிற்று. அவர்கள் தேகங்
கள் துணிகள் கந்தைகளானதைப்போல் கிழிந்து ரக்தம் நிறைந்த
தாய்விட்டது. அந்த வராகத்தின் கர்ஜனையைக்கேட்ட காது பிளந்து

ரக்த ஓட்டம்வர, அநேகர் மூர்ச்சை யடைந்தார்கள். அந்த வீரர்கள் கலகலத்து, நான்கு திசையிலும் பயந்து ஓடத்தொடங்கினார்கள். அப்படி ஓடுகையில் அநேகர் மலைச்சாரல்களில் கால் நடை தவறி பள்ளங்களில் விழுந்து தலைகள் உடைந்து பரலோகம் சேர்ந்தார்கள். அநேகருடைய தேகங்கள் பந்துகளைப்போல் காற்றில் அடித்துக் கொண்டுபோகப்பட்டது. அவர்கள் கைகளிலிருந்த ஆயுதங்கள் அவரைப் பார்க்கிலும் உயரமாய் பறக்கத்தொடங்கியது. அநேகர் பயத்தால் ராக்ஷதரைப்போல் கூவிக்கொண்டு இரத்தங்களை கக்கிக் கொண்டு மடிந்தார்கள். அநேகர் தரையோடு தரையாய் நசுங்கிப் போனார்கள். சிலர் திசை தெரியாமல் ஓடிப்போனார்கள். அநேகர் காட்டு மிருகங்களுக்கு இரையாய்விட்டார்கள். இப்படி நடக்க தப்பித்துக்கொண்டவர்களில் ஒருவர் அரசனிடஞ்சென்று நடந்த சங்கதிகளை யெல்லாம் தெரிவித்தான். இத்தகைய விஷயங்கள் நடந்தபின் வெங்கடதேவராயர் நிஷ்டை தீர்ந்தவராய் திருமலைக்குச் சென்று திருவேங்கடனைத் தரிசனஞ்செய்து எப்பொழுதும்போல் தன் ஊரைச் சேர்ந்தார்.

அடுத்த தேசத்தரசன் தன் வீரர்கள் மடிந்ததைக்கேட்டு ஆற்றொணாக் கோபத்தால் பரிதபித்துக்கொண்டு சண்டைசெய்தாவது வெங்கடதேவராயரைக் கொல்லவேணுமென்றும், அவர் ஊரை கொள்ளை யடிக்கவேணுமென்றும், அவர் ஊர் ஜனங்களை பழிக்குப் பழிவாங்கவேண்டு மென்றும், தண்டு தளங்களோடு புறப்பட்டு சந்திரகிரிக்குவந்து அந்த ஊரின்பேரில் பாணங்களை மழையைப்போல் பொழிந்தான். அப்பொழுது வெங்கடதேவராயரின் மந்திரி அரசனிடஞ்சென்று தனக்கு உத்திரவளித்தால் சைனியங்களை ஒன்று சேர்த்துக்கொண்டு சத்துருவைத் துரத்திவிடுகிறேனென்று சொன்னார். ஊர் ஜனங்களும் ஒன்று சேர்ந்து ஆயுதபாணிகளாய் தங்கள் மகாராஜாவினிடம் வந்து உத்திரவளித்தால் அந்தச் சத்துருவைத் துரத்திவிடுகிறோமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது, மகாராஜா அவர்களெல்லோரையும் பார்த்து, ஓ தைரியவான்களே! திருவேங்கடன் இந்த அரசாக்ஷியை மாற்றிவிடவேண்டுமென்று எண்ணுவானாகில் நான் எவ்வளவு கொடிய யுத்தஞ் செய்தபோதிலும் ஜெயம் பெறமாட்டேன். என்ன காரணத்திற்காகவோ கடவுள் இந்த சத்து



ருவை யனுப்பினார். யுத்தம்செய்து என்போன்ற அநேக ஆயிரம் உயிர்களை கொலைசெய்து இந்த அரசை ஆளுவதற்கு எனக்கிஷ்டமில்லை. ஆகையால் இந்த அரசைத் தேடிவந்த அவனுக்கே இந்த ராஜ்யத்தை ஒப்புவித்துவிடுகிறேனென்று சொல்லி, ராஜ சின்னங்களை யெடுத்துக்கொண்டு தனியாய் சத்துருவிடம் போகப்புறப்பட்டார். அப்பொழுது மந்திரியும் சகல ஜனங்களும் அவர் அபிப்பிராயத்தை மாற்றிவிடுவதற்கு கூடிய பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. ஜனங்களுக்குண்டான கவலை என்னவென்று சொல்லலாம். இஃதிங்ஙமிருக்க, மகாராஜா தனியாய்ச்சென்று ராஜசின்னங்களைச் சத்துருவிடத்தில் கொடுத்துவிட்டார். அதைப்பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சத்துரு ராஜாவும் ஆச்சரியத்துடன் ஆ! ஹா!! இதென்ன விநோதம். இந்த ராஜன் என்ன காரணத்திற்காக இவ்விதம் செய்தானோ நானறியேன். ஆனால் இவன் பூமியிலிருக்கும் பரியந்தம் என்போன்ற அரசர்களுக்கு கீர்த்தியுண்டாகாது. இவனேபெரிய சத்துரு. மகாவீரர்களையும் கொன்றவன். பாஷாணத்தையுண்டு சாகாதவன். இவனை இலேசில் விடக்கூடாதென்றெண்ணி மகாராஜாவை கைதியாகச்செய்து தன்ஊருக்குக்கொண்டு போய் உயிருடன் புடமிட்டுக் கொளுத்திவிடும்படி வுத்தரவுசெய்தான். சேவகர்கள் அரையனதாணைப்படி வெங்கடதேவராயரை கால் கைகளைக் கட்டி அக்னிகுண்டத்தில் படுக்கவைத்துக் கொளுத்திவிட்டார்கள். அப்பொழுது மகாராஜா சத்தாமாத்திர சரீரனான திருவேங்கடனது பரஞ்சோதிதத்துவத்தில் மனதை நிறுத்திக்கொண்டு தன்னை மறந்து ஜெகதீசன் திருவடி நிஷ்டையிலிருந்தார். அக்னி ஜுவாலைகள் மேலெழும்பி விசேடமாக எரியத் தொடங்கியது. வெகுநேரம் தீ படர்ந்து எரிந்து அதுவே அணைந்துபோயும், வெங்கடதேவராயர் யாதொரு துன்பமுமின்றி ஜெகதீசன் திருவடிகளில் வைத்த மனதை விடாமலிருப்பதைப்பார்த்து ராஜசேவகர்கள் ஆச்சரியமடைந்து மேல்மூச்செறிய ராஜனிடம்சென்று சங்கதியைத் தெரிவித்தார்கள் இவ்வசனங்களைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டு தன் மந்திரியை வரவழைத்து ஆலோசனை செய்கையில், மந்திரி சில நேரம் மௌனமாயிருந்து, பிறகு அரசனைநோக்கிக் கூறுவான். இவரோ தெய்வ சக்தியுள்ளவராயிருக்கிறார். சர்வ ஜனங்களும்

அவரை தெய்வம்போல் கொண்டாடுகிறார்கள். அவர் மஹத்துவம் எப்பேர்ப்பட்டதோ நாம் அறியோம். இவர் விஷத்திலும் சாகாதவர். மகா வீரர்களாலும் கொல்லுவதற்கு முடியாதவர். நெருப்பிலும் மடியாதவர். இப்பேர்ப்பட்டவரை கொல்லுவதற்கு எனக்கு தெரிந்த உபாயம் ஒன்றே இருக்கிறது. அது ஏதெனில் நம்முடைய யானைக் கூட்டங்களில் விக்ரவந்தன் என்னும் ஓர் துஷ்டயானை வல்லமையானதாயும் கொடூரமானதாயும் எப்பேர்ப்பட்ட சத்துருவையும் நிமிஷத்துக்குள் கொன்றுவிடக்கூடியதாயுமிருக்கிறது. ஆகையால், அதன் முன் இவ்வரசனை விடுத்தால் கொன்றுவிடுமென்றுசொல்ல, ராஜன் திக்பிரமையினால் குழறிய வார்த்தைகளோடு அப்படியே யானையினால் மகாராஜாவைக்கொல்ல உத்தரவுசெய்தான். அதன்படி ராஜசேவகர்கள் வெங்கடதேவராயரை ஓர் விசாலமானவிடத்தில் வைத்து விக்ரவந்தன் என்னும் யானைக்குக் கோபம் மிகுதியாய் உண்டாகச்செய்து அவர்மேல் விட்டுவிட்டார்கள். மழை காலத்தில் வானத்தில் இடிகளோடு கூடிய கறுத்தமேகங்களைப்போல் பயங்கரமான உருவத்தோடு கூடிய அந்த யானை கர்ஜித்துக்கொண்டு மகாராஜாவின்மேல் பாய்ந்தது. அச்சமயம் ராயர் திருவேங்கடனுடைய தசாவதாரங்களைத் தியானம் செய்துகொண்டேவந்து நரசிங்க மகாரூபத்தை மனதில் நினைத்தார். அப்படி நினைத்தமாத்திரத்தில் அந்த யானையின் கண்ணுக்கு ஆகாயத்தைப்போன்ற பெருத்த பயங்கரமான ஓர் சிங்கத்தின் ரூபம் தோன்ற, அதைக் கண்டமாத்திரத்தில் யானை பயந்து நடுநடுங்கி கூச்சலிட்டுக்கொண்டு புறங்காட்டி யோடிற்று. அப்பொழுது பாகன் அதன் நிஜஸ்திதியை அறியாமல் குறுக்கே ஓடியதால் அது அவனை இரண்டுதுண்டாகக் கிழித்து எறிந்துவிட்டு ஊருக்குள் நுழைந்தது. அப்பொழுது ஊர் ஜனங்கள் நடுநடுங்கி வீட்டுக் கதவுகளை மூடிக்கொண்டு ஊரைவிட்டு ஓடத்தொடங்கினார்கள். அகஸ்மாத்தாக வீதிகளில் எதிர்ப்பட்டவர்களை வாழைமட்டைகளைக் கிழித்து எறிகிறதைப்போல் கொன்றும், குறுக்கேவந்த இராஜசேவகர்களைக்கொன்றும் செண்டாடுகிறதைப்போல் ஆகாயத்திலெறிந்துக்கொண்டு தோட்டங்களையும், நந்தவனங்களையும், ராஜாவின் சிருங்கார வனங்களையும், அரண்மனையையும் பாழாக்கிவிட்டது. இராஜாவும் அவர் முக்கிய வீரர்களும் அநேக யுக்திகள்செய்து



அதை பிடிப்பதற்குள்ளாக அநேக ஆயிரம் ஜனங்களையும், ராஜசேவகர்களையும், பந்துக்களையும், மித்திரர்களையும், பிள்ளைகளையும், சகோதரர்களையும், தாய் தந்தைகளையும் கொன்றுவிட்டது. ஆகையால் ஊரெங்கும் பிணக்குவியல்கள் நிறைந்திருப்பதைப் பார்த்து இராஜன் கையினால் தலையின்பேரில் மோதிக்கொண்டு பெருங்குரலோடு அழுதுக்கொண்டு ஐயோ! தெய்வமே! இது என்ன அநியாயம்! அந்தப் பாழான ராயரை ஊருக்குக்கொண்டுவந்த பலன்போதும் போதும். ஐயோ நானேபோய் அவரை யழைத்துக்கொண்டு வந்தேனே. அவன் விஷத்திலும் சாகான். நெருப்பிலும் சாகான். யானையினாலும் சாகான். எமனுக்கு அவன் சாவானென்பது திண்ணம். இனிமேல் ஒரு க்ஷணமாவது அவனை நம் நாட்டில் வைக்கக்கூடாதென்று சொல்லி வெங்கடதேவராயரை தன்னிடம் அழைத்து வரச்செய்து, அவரைப்பார்த்து இராஜனே! உன்னை கொண்டுவந்த பலன் போதும். நீ நல்ல நாராயணனாயிருக்க வேண்டும். நீ இனி இவ்விடமிருந்தால் எங்கள் உயிரையுங்கூட வாங்கிவிட்டுப்போவாயென்பதற்கு சந்தேகமில்லை. உயிரைமாத்திரம் பாக்கியாய் விட்டிருக்கிறாய். ஆனாலும் பெரிதல்ல. கேவலம் எங்களைப்போல் நரனாயிருக்கும் உமக்கு இப்பேர்ப்பட்ட மஹத்துவமுண்டாவதற்கு என்ன காரணமோ? அதை எனக்கு அறிவிப்பாயென்று கேட்டான். அதற்கு மகாராஜா திருவேங்கடசைலத்தானை மனதிலெண்ணி அவர் திருக்கோயிலின் திசையில் திரும்பி தன் ஆள்காட்டி விரலினால் திருக்கோயிலைச்சுட்டி காட்டினார். அதற்கு அந்த அரசன் அவர் வார்த்தையை நம்பாமல் கால் கைகளை கட்டி காட்டுக்குள் வெகுதூரம் கொண்டுபோய் முட்கள் புதையின்பேரில் போட்டுவிடும்படி சேவகர்களுக்கு உத்திரவுசெய்து தன்னை நிந்தித்துக்கொண்டு, ஓ தெய்வமே! சும்மாயிராமல் அந்த அரசனை யழைத்துக்கொண்டுவந்து என் ஊரெல்லாம் பாழாக்கிக்கொண்டேன். பந்துக்களையும் என் அன்புள்ள புத்திரர்களையும், மித்திரர்களையும் இழந்துவிட்டேனேயென்று துக்கித்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, சந்திரகிரியில் ஜனங்கள் தங்கள் ராஜாவுக்கு நேரிட்ட விபத்துகளைத் தெரிந்துக்கொண்டு அளவற்ற துயரமுள்ளவர்களாய் திருவேங்கடனை நோக்கி எங்கள் பிரபுவுக்கு யாதொரு

தீங்கில்லாமல் மறுபடியும் அவர்வந்து எங்களை யாளும்படி அருளிச் செய்வாயென்று அனுதினமும் பிரார்த்தனை செய்துக்கொண்டிருந்தார்கள். காட்டில் போடப்பட்ட மகாராஜன் தான் முட்களின்பேரில் படுத்துக்கொண்டிருக்கும் நிலைமையிலேயே யோகாசன மென்றெண்ணினவராய் திருவேங்கடனை ஒரே மனதோடு தியானம்செய்துக் கொண்டிருந்தார். இப்படியிருக்க, ஸ்ரீ திருப்பதிக்கு யாத்திரை போவதற்கு ஓர் பைராகிகளுடைய கூட்டம் பாலாஜி பஜனைகள் செய்துக்கொண்டு அந்த காட்டுவழியாய் வந்துக்கொண்டிருந்து முட்களின்பேரில் படுத்திருந்த மஹாத்மாவைப்பார்த்து இவர் யாரோ சாது வென்றெண்ணி அவர் கட்டுகளை யவிழ்த்து தாங்கள் கொண்டு வந்த பிரசாதங்களைக்கொடுத்து, பிறகு அவர் அந்த விடத்தில் படுத்திருப்பதற்கு என்ன காரணமென்றுகேட்க, மகாராஜா திருவேங்கடமுடையான் கோவில் திசையைக் காட்டி மௌனமாயிருந்தார். அதைப்பார்த்து பைராகிகள் இவர் யாரோ பரமசாது வென்றெண்ணி அவரை யழைத்துக்கொண்டு திருவேங்கடமலையை யடைந்து அவ்விடத்தில் அவரைவிட்டு தாங்கள் சர்வேஸ்வரனுடைய தரிசனஞ்செய்து தன்னியர்களாய்ப் போனார்கள். வெங்கடதேவராயர் இளைத்தும், தூசிபடிந்தும் சுகம் மாறிப்போனதினால் ரூபலாவண்யங்கள் குறைந்து நீறுபூத்த நெருப்புப்போல் மாறினதேகமுள்ளவரா யிருந்தபடியால், அவரை மகாராஜாவென்று கோயிலிலுள்ள ஒருவரும் அறியமாட்டாமல் ஓர் பைராகி யென்றே யெண்ணி யிருந்தார்கள். வெங்கடதேவராயரும் தன் வரலாற்றை யாரிடமும் சொல்லாமல் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் புல்லின் பேரில் படுத்துக்கொண்டு உண்ணவும், ஜலபானம் பண்ணவும், தன் கைகளையே பாத்திரமாக நினைத்துக்கொண்டு கந்தைகளாயிருந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு மானாபிமானங்களில்லாமல் ஸ்ரீநிவாஸனுடைய பக்தி ஒன்றையே திடமாகயெண்ணி பிரதிதினமும் பன்னிரெண்டுமணிக்கு திருவேங்கடன் கோயிலுக்குவந்து சில காட்டுபுஷ்பங்களை ஹரிக்குச் சமர்ப்பித்து சுவாமி எழுந்தருளிய மூலஸ்தானத்திற் கெதிரில் உட்கார்ந்து பரமகல்யாண மங்களமூர்த்தித் தியானஞ் செய்துக்கொண்டிருந்தனர். இவ்வண்ணம் தினந்தவராமல் மகாராஜா ஸ்ரீ ஹரி தியானம் செய்துக்கொண்டுவந்தார்.



அடுத்ததேசத்து நரபதி ராஜன் ராயர் திருவேங்கடனுடைய கோவில் திசையைக்காட்டின நாள் முதல் பரமாச்சாரியரின் தீக்ஷை பெறுவதினால் மனம் புத்தி கலக்கமற்றுப்போகிறதைப்போல் சகல துர்ப்புத்திகளையு மிகழ்ந்தவனாய் தான்செய்த பாபகர்மங்களுக்காக மிகவும் சிந்தித்துக்கொண்டு வெங்கடதேவராயர் பெருமையைக் கொண்டாடிக்கொண்டு அவரை மறுபடியும் பார்க்க ஆவலுடையவனாய் அநேக வீரர்களைக் காட்டுக்குள் அனுப்பி அந்த மகாமதியைத் தேடி அழைத்துக்கொண்டுவரும்படி கட்டளையிட அவர்கள் தம்மாலியன்றவரையிலும் காடு மேடுகளைச் சுற்றித்தேடியும் மகாராஜா அகப்படாமற் போனபடியால் முடிவுக்கு நரபதி ராஜனிடம்வந்து தங்கள் பிரயத்தினம் கைக்கூடவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் நரபதி ராஜன் நாளுக்குநாள் மிகவும் பாவபயம் உண்டானவனாய் இளைத்த சரீரத்தோடு கவலையில் அழுந்தியிருந்தான். அப்பொழுது மந்திரியும் சபையோர்களும் அவரைப்பார்த்து ஓ ராஜனே! நீ துக்கப்படுவதில் யாதொரு பயனுமில்லை. உமக்கு திருவேங்கடனுடைய திருக்கோயில் திசையைக்காட்டின ராயர் உனக்கு தீக்ஷா குருவாயிருக்கிறார். ஆகையால், நீ திருவேங்கடனுடைய பக்தியுள்ளவனாய் அவரை சரணமடைந்திருந்தால் உன்னுடைய பாவங்களெல்லாம் நசித்துப்போகும். அதைப்பார்க்கிலும் வேறு உபாயமில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்டு நரபதி யரசன் திருவேங்கடனை மனதிலெண்ணி கண்களில் நீர்பெருக தியானித்துக் கொண்டு, ஓ தெய்வமே! நான் பெருத்த அபசாரங்களைச் செய்தேன். உன் பக்தர்களிடம் வெகு கொடியவனாய் நடந்தேன். அதற்காக உமக்கு எவ்வளவு கோபமுண்டாயிற்றோ? நானறியேன். பிரகலாதனிடஞ்செய்த அபசாரத்திற்காக பராவதாரனாய் இரண்யகசிபை தூண்டுதுண்டாய்க் கிழித்துக்கொல்லவில்லையா? ஓ பிதாவே! நான் உம்மை சரணமடைந்தேன். புத்திக்குறைவினால் நான்செய்த அபசாரங்களை மன்னித்துக் காத்தருளவேணுமென்று அநேகவிதமாய்க் கொண்டாடிக்கொண்டு ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை தரிசனம் செய்வதற்கெண்ணி அநேக நவரத்தின கசிதமான தங்க ஆபரணங்களைச் செய்வித்து திவ்யமான பட்டு பீதாம்பரங்களைத் தயார் செய்து அவைகளை முன்னதாக அனுப்பி திருவேங்கடனுக்கு அலங்

கரிக்கச்செய்து பின்னால் தான் பரிவாரங்களோடு சுவாமி தரிசனத்
திற்காகப் புறப்பட்டுவந்தான். அந்த சமயத்தில் பைராகியைப்
போலிருந்த மகாராஜன் சில காட்டுப் புஷ்பங்களை திருவேங்கட
னுக்குச் சமர்ப்பித்து பத்மாசனசீலனாய் மூலஸ்தான மண்டபத்திற்
கெதிரில் உட்கார்ந்துக்கொண்டு ஜகதீசனுடைய திருவடியை தியா
னஞ்செய்துக்கொண்டு தன்னையும் உலகத்தையும் மறந்தவராயிருந்
தார். நரபதி ராஜன் சுவாமி தரிசனத்திற்கு வருகிறபடியால் கோயி
லுக்குள் அந்நியர்கள் யாருமிருக்கக்கூடாதென்று ராஜ சேவகர்கள்
உத்தரவு செய்தார்கள். அப்பொழுது கோவிலுக்குள் பைராகி
யைப் போலிருந்த மகாராஜன் தவிர, வேறு ஒருவருமில்லை.
ஆகையால் ராஜ சேவகர்கள் கோவிலுக்குள் பிரவேசித்துத்
தன்னை மறந்து நிஷ்டையிலிருந்த பைராகியைக்கண்டு கோபித்துக்
கொண்டு, அவரை எழுந்து வெளியில்போகும்படி அநேகதடவை
சொல்லியும் அவர் போகாததினால் அவ்விஷயத்தை அரசனிடம்
தெரிவித்தார்கள். அதைக்கேட்டு அரசனும் கோபங்கொண்டவ
னாய் அந்த பைராகியை அடித்து கோவிலுக்குப் பின்புறத்தில் தள்
ளிவிடும்படி உத்திரவுசெய்தான். அந்தப்பிரகாரம் ராஜசேவகர்கள்
பைராகியைக் கொண்டுபோய் கோவிலுக்குப் பின்புறத்தில் தள்ளி
விட்டார்கள். அவர் திருவேங்கடனுடைய செந்தாமரை களொத்த
தும் அமிர்தரஸபூரிதமானதுமாகிய திருவடிகளில்வைத்திருந்த மனம்
புத்தி பிராணன்களை அசைக்காமல் தேகத்துக் குண்டான அடிகளை
யும் சஞ்சலத்தையும் தெரியாமலிருந்தார். பிறகு ராஜன் பரிவாரங்
களோடு உட்சென்று சுவாமியைத் தரிசிக்கப்போகையில் திருவேங்
கடப் பெருமான் பின்புறமாய் திரும்பிக் கொண்டு கோவிலுக்குப்
பின் தள்ளியிருக்கும் வெங்கடதேவராயர் திசையாகவே தரிசனம்
கொடுத்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்து ராஜனும் பரி
வாரங்களும் கோவில் அதிகாரிகளும் அதிக ஆச்சரியத்தினால் திக்
பிரமையடைந்து மரங்களைப்போல் சிலநேரம் நின்றிருக்கையில்
ராஜன் திருவேங்கடன் திரும்பி யிருக்கும் காரணத்தைக் கண்டுக்
கொண்டு தெய்வமே! நானென்ன செய்வேன். மறுபடியும் உம்
முடைய அன்பனுக்கு அபசாரம் செய்தேனேயென்று கவலையால்
தத்தளித்துக்கொண்டு ஓட்டமாய்ப்போய் கோவிலுக்குப் பின் தள்



ளியிருக்கும் பைராகி மகாத்துமாவைப் பட்டு பல்லக்கில் ஏற்றிக்
கொண்டு கோவிலுக்குள் அழைத்துக் கொண்டு வந்தான். அப்
பொழுது திருவேங்கடப் பெருமான் எப்பொழுதும் போல் தரிசனம்
தந்தார். அச்சமயம் நரபதிராஜன் சமர்ப்பித்த சகல பூஷணங்
களும் பட்டு பீதாம்பரங்களும் புஷ்பங்களும் கீழ்விழுந்து கிடந்தது.
பைராகி சமர்ப்பித்த சில காட்டுபுஷ்பங்களைத் தரித்துக்கொண்டு
திருவேங்கடப் பெருமான் ஜெகத்ஜோதியாய் பூர்ண சந்திரனைப்
போல் பிரகாசித்துக் கொண்டிருந்தார். அதை யெல்லாம் பார்த்த
நரபதிராஜன் துக்கம் பெருக அடக்கமுடியாமல் பெருங்குரலோடு
அழத்தொடங்கினான். அப்பொழுது அவ்விடத்தில் நேரிட்ட மஹாத்
துவத்தைப் பார்க்கவந்த சிலமகாத்மாக்கள் ராஜனை நோக்கி ஓ! அர
சனே! நீ துக்கப்படவேண்டாம். திடமான உள்ளன்பைப் பார்க்கி
லும் கடவுளுக்கு வேறொன்றும் பெரிதல்ல. நீ இவ்வளவு வரை
யிலும் திருவேங்கடனைத் தொழுதுக் கொண்டிருந்த புண்ணியத்
தால் இந்த மஹாத்துமாவான பைராகியைக் காணநேரிட்டது. நீ
இவரை யடுத்தால் கடவுளை யடுத்தவனாவாய். இவர் கடாக்ஷம்
உனக்குக் கிடைக்குமானால் கட்டாயம் நீ திருவேங்கடனுடைய அரு
ளுக்காளாவாயென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ராஜன் அந்த
பைராகி பாதங்களின்மேல் விழுந்து அவரை தன் பட்டணத்திற்கு
வரும்படி பிரார்த்தனைசெய்து, அவரை சம்மதப்படுத்தி புஷ்பவிமா
னத்தின் பேரில் எழுந்தருளச் செய்து சகல ஜனங்களும், ஜே! பை
ராகி மகாராஜ்! என்று பூமாரிபொழிந்து ஜெயசங்கீர்த்தனங்களைப்
பாட, அவரைத் தன் ஊருக்கு அழைத்துக் கொண்டு போனார்.
பிறகு ராஜாவின் உத்தரவினால் பைராகிக்கு மங்கள ஸ்நானங்களைச்
செய்வித்து, இராஜசபைக்கு அழைத்துக்கொண்டுவர சபையிலிருந்த
பிரபுக்களும் இராஜனும் அவரை வெங்கடதேவராய ரென்றறிந்துக்
கொண்டு, தூசி படிந்த தங்கமானது பிரகாசமின்றி யிருப்பதைப்
போல் ரூபம் மாறியவராய் பைராகியைப்போல் இது வரையிலு
மிருந்தாரென்று தெரிந்து பிரம்மையுடன் பார்த்துக் கொண்டிருந்
தார்கள். பிறகு நரபதியரசன் மனதை தைரியப்படுத்திக் கொண்டு
சிம்மாசனத்திலிருந் தெழுந்து வந்து வெங்கடதேவ்ராயரை ஆலிங்
கனஞ் செய்துக்கொண்டு அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து

கண்களில் நீர் தாரைதாரையா யொழுக, அவரை நோக்கி, ஓ! உத்தம அரசரே! நீர் மகா கண்யராகும். நீர் எவ்விடமிருக்கினும் அவண் திருவேங்கடப் பெருமான் பிரத்தியக்ஷமாயிருப்பார். உம்மை நினைத்தாலும் தெய்வம் சகாயஞ்செய்யும். உம் சரித்திரத்தைக் கேட்டால் சகல பாபங்ககளும் விமோசனமாகுமென்று சொல்லி அவர் வலது கரத்தைத் தன்னிரண்டு கரங்களாலும் பிடித்து அழைத்துக் கொண்டுவந்து சிம்மாசனத்தின் மீது எழுந்தருளச்செய்து அவர் சிரத்தில் நவரத்தின கசிதமான கிரீடத்தைத் தரித்து ஓ! கிருபாகரனே! நீரே இனி எனக்கு அரசன், பிரபு, தாய் தந்தை, குரு, தெய்வம், இரக்ஷகர் ஆகும். நான் அஞ்ஞானத்தால் செய்த சகல குற்றங்களையும் மன்னித்துக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து சிம்மாசனத்தின் கீழ் உட்கார்ந்துக்கொண்டான். அப்பொழுது சபையோர்களெல்லோரும் எழுந்து வெங்கடதேவராயரின் மஹத்துவத்தை அநேகவிதமாகக் கொண்டாடி பூமாரி பெய்தார்கள். ஊர் ஜனங்களும், சந்திரகிரியிலுள்ள ஜனங்களும் வெங்கடதேவராயரின் பெருமையையும், திருவேங்கடப் பெருமானின் பிரபாவத்தையும் அநேக விதமாகக் கொண்டாடிக் கொண்டு; பஜனை கோஷ்டிகளாய்ச் சேர்ந்து ஊர்வலஞ் செய்தார்கள். எங்கு பார்த்த போதிலும் மகரதோரணங்கள் முதலிய அலங்காரங்களோடும், மங்களவாத்திய கோஷ்டங்களுடனும், ஜெய சங்கீர்த்தனங்களுடனும் ஜனங்கள் ஆனந்தக்கடலில் அலைகளைப்போல், சந்தோஷத்தால் நிரம்பினவர்களாய் வீதிகளில் உலாவிக் கொண்டிருந்தார்கள். வெங்கடதேவராயர் சகலமான பிரபுக்களாலும், ராஜாக்களாலும், ஜனங்களாலும், ரிஷிகளாலும், சாதுக்களாலும் கொண்டாடப்பட்டவராய் நரபதிராஜனுக்கே அவன் ராஜ்ஜியத்தை ஒப்புவித்து சந்திரகிரியைச் சேர்ந்து கடவுளைப்போல் ஜனங்களால் கொண்டாடப்பட்டு தர்மபரிபாலனம் செய்துக்கொண்டு வந்தார்.

இங்ஙனம் வெங்கடதேவராயர் ராஜ்ய பரிபாலனஞ் செய்துக் கொண்டு ராஜ்ய காரியங்கள் முடிந்த மற்ற காலங்களில் திருவேங்கடனுடைய நிஷ்டையில் கழித்துக்கொண்டு வந்தார். தன் இராஜதானியாகிய துர்க்கம் மலையின்பேரிலுள்ள கோட்டையின் சாளர வாயிலில் வட கிழக்காய்ப்பார்க்கும் சமயம் திருவேங்கடப்பெருமான் திருக்கோயிலின் தங்கச்சிகரங்கள் காணப்படுகிறபடியால் அத்திசையை யடிக்கடிபார்த்துக் கொண்டும், கருணாநிதியான வெங்கடேசனை நினைத்துக்கொண்டும், பக்தியினால் கும்பிட்டுக்கொண்டும் திருவேங்கடன் பிரபாவங்களைப்பாடியும் கொண்டாடியும் சுவாமியின்பேரில் அத்தியந்த பக்தி பிரமையினால் கட்டுப்பட்டு மனதை நிலைநிறுத்தி அசைவற்று நிஷ்டையிலிருப்பார். திருவேங்கடப்பெருமான் பூர்வத்தில் வாமனாவதாரராய் உலகத்தை யளந்ததைப்போல் திருவேங்கடமலையிலிருந்து க்ஷணத்துக்குள் ஓர் அடியாக துர்க்கம் மலையின் மேலிருக்கும் கோட்டைக்கெழுந்தருளி மகாராஜாவுக்கு சங்குசக்கர கதாதாரராய் சகலதேவ கணங்களுடன் நக்ஷத்திரங்களினிடையில் பிரகாசியாநின்ற பூர்ணசந்திரனைப்போல தரிசனந்தருவார். அந்த தேஜோன் மயமான பரப்பிரம்மத்தைக் கண்டு அடங்கா மகிழ்ச்சியால் பரவசமுற்று புஷ்பங்களிலுள்ள தேனை யுண்ண வந்த வண்டுக்கூட்டங்கள் விசேஷமாக மதுவை யுண்டு மதிமயங்கி அந்தப் புஷ்பங்களின் மீதே அசைவற்றிருப்பதைப்போல் திருவேங்கடநாதன் தரிசனமென்னு மமிர்தத்தை யளவின்றி யுண்டவராய் மன்னன் தன்னை மறந்து ஆனந்தத்தால் இரவு பகல் தெரியாமல் திருவேங்கடனது பரஞ்சோதி தத்துவத்தில் கலந்து நிஷ்டையிலிருப்பார்.



இவ்வண்ணம் காலங்கழித்துக்கொண்டு வெங்கடதேவராயர் திரிகாலங்களிலும் சேஷசைலத்திலெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வேங்கடப்பெருமானுக்கு திருமஞ்சன அபிஷேக அலங்கார தூபதீபாராதன நைவேதனங்கள் செய்யும் காலங்களில் சப்திக்கும் பிரணவநாத கண்டாநாதம் தனக்குக்கேட்கும்படி சிலஏற்பாடுகள் செய்தார். திருமலையிலிருந்து சந்திரகிரி வரையிலும் சிலமஜிலிகள் ஏற்பாடு செய்து அவ்விடத்தில் கண்டஸ்தம்பங்களை ஏற்படுத்தி காவலாளர்களையும் நியமித்தார். சுவாமி திருக்கோயிலில் கண்டாநாதம் வாசித்தவுடனே காவல்காரர்கள் அந்தந்த விடங்களி லிருக்கும் கண்டங்களை வாசிப்பார்கள். அந்த நாதம் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து மகா ராஜாவின் மஹாலுக்குக் கேட்கும். மகாராஜாவும் அதற்கு முன்னதாகவே திருவேங்கடன் பூஜைகளைச்செய்துக் கொண்டு கண்டாநாதம் கேட்டவுடனே ஸ்ரீநிவாஸமூர்த்திக்குக் கற்பூர நீராஞ்சன மங்கள ஆலத்திகளைக்கொடுத்து பிரசாதங்களை நைவேத்தியஞ் செய்து

அவைகளைக்கடவுளின் அன்பர்களுக்கு விநியோகஞ்செய்து தானும் உண்டு சர்வம் நாராயணமயமென்று தியானஞ் செய்துக்கொண்டிருப்பார். நாளதுவரையும் வெங்கடதேவராயரால் ஏற்படுத்தப்பட்ட கண்டாநாதஸ்தம்பங்களுள்ள மஜிலிகள் திருமலையில் அநேக விடங்களில் காணப்படுகிறது. ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் ஓரே அடியாய் தூர்க்கம் மலைக்கு வருவதினால் ஏற்பட்ட ஸ்ரீஹரி பாதமும் காணப்படுகிறது. வெங்கடதேவராயர் தான் அரசாக்ஷி செய்த காலத்தில் திருவேங்கடன் கோயில் பிராகாரவீதிகளை தங்கத்தகடுகளால் அமைத்து எவ்விடம் பார்த்தபோதிலும் தங்கமயமாக இருக்கச் செய்தார் அந்த தங்க ரேக்குகளைப் பாறைகளுக்குச்சேர்த்து அடித்திருக்கும் தங்கநிறமுள்ள ஆணிகள் திருக்கோயிலுக்குள்ளிருக்கும் வீதிகளில் அநேகம் காணப்படுகின்றது. வெங்கடதேவராயர் காலத்தில் ஏற்படுத்திய திண்டு பாவி என்னும் கிணறு சந்திரகிரியிலிருக்கிறது. அதன் தீர்த்தம் மிகவும் உருசியுள்ளதாகவும், ஆரோக்கியமுண்டாகக் கூடியதாகவு மிருக்கிறது. இந்தக்கிணற்றின் தீர்த்தம் பூர்வத்தில் டில்லியில் அரசாக்ஷிசெய்த சக்ரவர்த்திகளான நவாபுகளால் உபயோகிக்கப்பட்டுள்ளது. பூர்வத்தில் ஆகாய ராஜனுடைய புத்திரியான பத்மாவதி தேவியை திருவேங்கடப்பெருமான் பாணிக்கிரகணம் செய்துக்கொண்டு லக்ஷ்மி பத்மாவதிகளை யழைத்துக் கொண்டு பிரம்மருத்திராதிகளுடன்கூடி சந்திரகிரியிலிருக்கும் தூர்க்கம் மலையின் மீதுள்ள அகஸ்தியர் ஆஸ்ரமத்துக்குவந்தார். அப்போது அகஸ்தியர் அவர்களுக்கு வேண்டிய மரியாதைகள் செய்து விவாகமான ஆறுமாதகாலம் மலை ஏறக்கூடாதென்றும் அந்தக் காரணத்தால் தன்னுடைய ஆஸ்ரமத்திலேயே யிருக்கவேணுமென்றும் வேண்டிக் கொண்டதால் ஸ்ரீநிவாஸமூர்த்தி லக்ஷ்மி பத்மாவதி சமேதராய் ஆறுமாத மளவும் வெங்கடதேவராயரது கோட்டையுள்ள தூர்க்கம் என்னும் மலையின்மீது எழுந்தருளியிருந்தார். சுவர்ணமுகி யென்னும் புண்யநதி சந்திரகிரிக்கு சமீபத்தில் ஸ்ரீ வெங்கடசைலத்தில் பிறந்து பிரவகித்துக் கொண்டிருக்கிறது. பூர்வகாலத்தில் இதுவிசேஷ பிரவாகமுடையதாயிருந்தது. சந்திரகிரியில் அகஸ்திய மாமுனிகள் தபம்செய்துக்கொண்டிருக்கையில் இந்த நதி பெரும் பிரவாகத்துடன் ஓடி அகஸ்தியமா முனிவர் தபத்திற்கு



விக்கினமுண்டாகிற்று. ஆகையால் அவர் கோபித்துக் கொண்டு சுவர்ணமுகி இனி சில விடங்களில் பூமிக்குமேல் பிரவஹிக்காமல் பூமிக்குள் ஓடும்படி சபித்தார். இந்த புண்யநதி காளத்தியில் மாத்திரம் ஜீவநதியாய் சிலதூரம் செல்கிறது. திருவேங்கடப் பெருமான் கோவிலில் வெங்கடதேவராயர் விக்கிரகமும், அவரது பத்தினியாருடைய விக்கிரகமும், இவர் சந்ததியாரான ஸ்ரீ கிருஷ்ண தேவராய வேங்கடபதிராயர்களுடைய விக்கிரகங்களும் இன்றைக்கும் காணப்படுகின்றன.

## சமாப்த ஸ்தோத்ரம்.

ஓ! அக்ஷயமங்கள பரமேஸ்வரரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமானே! பக்தர்களின் மீது அளவற்ற அன்பும் பிரீதியுங்கருணையும் ஆசையுமுள்ள ஜகதீஸ்வரனே! எல்லா ஜீவகோடிகளுக்கும் உன்னுடைய பக்தியையே யுண்டாகக்கடவது. மாயையினால் மூடப்பட்டு சம்சாரமென்னும் பயங்கரமான காட்டில் பிரம்மையடைந்து குருடாய்த்திரிந்துக் கொண்டும், ஆசாபாசங்களென்னும் மிருகங்களினால் கடிக்கப்பட்டும், கிலேசமென்னும் அனலினால் தகிக்கப்பட்டும், சுகதுக்கங்களென்னும் முட்களால் தைக்கப்பட்டும் அலைந்துக்கொண்டிருக்கும் ஜீவகோடிகளுக்கு உன்பக்தியென்னும் வழியைக்காட்டி உன் தியானமென்னும் அமிர்தத்தையூட்டி உன்தரிசனமென்னும் சூரியப்பிரகாசத்திற்குப் போகச்செய்து ஆதரிப்பாயாக. துரையே! வழிதெரியாமல் அலைந்துக்கொண்டிருக்கும் ஆடுமாடுகளை இடையன் தேடி கண்டுபிடித்து ஓட்டிக்கொண்டு வந்து மறுபடியும் மந்தையில் சேர்த்துக் கொள்வதைப்போல், வழிதெரியாமல் அஞ்ஞானத்திலே அலைந்துக்கொண்டிருக்கும் எங்களனைவரையும் கிருபையென்னும் ஒளியினால் வழியைக்காட்டி ஆதரிப்பீராக. ஓ! கருணா சமுத்திரனே! பரப்பிரம்மஸ்வரூபனே! அளவுகடந்த கிருபையுள்ள ஸ்ரீவெங்கடேஸப்பெருமானே! உன் திருவடிகளே சரணம். உம்மை நாங்கள் விடாமல் போகக்கடவது. எங்களை நீர் விடாமல் போகக்கடவது. ஓம் தத் சத்.

### சுலோகம்.

கல்யாணாத்புத காத்ராய காமிதார்த்த ப்ரதாயனே
ஸ்ரீமத் வேங்கடநாதாய ஸ்ரீநிவாசாய மங்களம்.

14762

## ஸ்ரீ வெங்கடேச பெருமான் பக்தி.

இது-ஸ்ரீ அரங்கப்ரகாஸ சுவாமிகள் அன்பர்களுக்கு செய்த உபன்னியாஸத்தின் சுருக்கம் இதில் வேதாந்த தத்துவ ரகஸியங்களும் தாய் கெற்பத்தில் உண்டாகும்போதே ஜீவன் கடவுளுக்கு செய்து கொண்ட விண்ணப்பங்களும் திருவேங்கடமுடையான் பக்தியை செய்யவேண்டிய இதாயகமும் இருக்கின்றது. இதன்விலை 0-1-6

## வினை தீர்த்த வெங்கடேசன்.

இதில் திருவேங்கடனுக்கு பிரார்த்தனை செய்துக்கொண்டு நற் பலங்களை அடைந்த அநேக சரித்திரங்களுண்டு மகாராஜாக்களும் தாஸஜனங்களும் நாஸிகளும் அன்னிய மதத்தாரும் பிரார்த்தனை செய்துகொண்டு பலன்களை பெற்ற விவரங்களுண்டு அதற்கு அத்தாக்ஷியாக இன்றைக்கும் திருமலையில் அநேக தர்மங்களும் கட்டடங்கள் முதலிய சின்னங்கள் காணப்படுகின்றன. இதன்விலை 0—1—6

## திருவேங்கட வைபவம்.

இதில் அநேக சிறிய கதைகளைப் போன்ற திருவேங்கடப் பெருமான் பக்தியை பற்றிய விஷயங்களுண்டு. அவைகள் சாமான்னியமான யாத்திரை வாஸிகளுக்கு தெரியமுடியாதவை ஆகையால் கட்டாயம் ஒவ்வோர் அன்பரும் படித்து பார்க்க வேண்டியது இதில் க்ஷேத்திர மஹத்துவமும் திருவேங்கடன் மஹத்துவமும் இன்னும் அபூர்வமான விஷயங்களுண்டு. இதன் விலை 0—4—0

## ஸ்ரீமத் திருப்பதி ஸ்தலபுராணம்.

இதில் ஸ்ரீவராக சுவாமியும் வெங்கடேச பெருமாளும் பூமியில் அவதரித்த பெருமையும் பத்மாவதி வெங்கடேஸ்வரர் திருக்கல்யாண மகோர்ச்சவமும் திருமலையிலிருக்கும் தீர்த்தங்களின் விவரமும் இன்னும் அநேக முக்கியவிஷயங்களுண்டு இதன் விலை 0—1—6

## திருவேங்கடலீலை.

இந்த புத்தகத்தின் பெருமை படித்து தெரிந்து கொள்ள வேண்டியதே தவிர எழுதிமுடியாது திருவேங்கடனுடைய பக்தியினல் நேரிட்ட அநேக ஆச்சரியகரமான விஷயங்கள் இந்த சிறு கிரந்தத்தில் இருக்கின்றது திருவேங்கடன் அன்பர்கள் எல்லோருக்கும் இது அவசியம். இதன் விலை 0—1—6

மேல் கண்ட புத்தகங்களை வேண்டுபவர் சென்னை மின்ட் போஸ்டு, பரமானந்த முதலி தெரு 9-வது நெம்பர், சி. ஆர். நாயுடுக்கு எழுதவும்.

G. C. AND CO.,—MADRAS.

232 468
TL-4